உ

கடவுள் துணை

பெரியெழுத்து

# நளச்சக்கிரவர்த்திகதை

இஃது

ஸ்ரீநிவாஸராகவாசாரியரவர்களால்
பார்வையிடப்பட்டது.

OFFICE OF THE REGISTRAR
17 DEC 1926



B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்,
திருமகள்விலாச அச்சியந்திரசாலை,
சென்னை.

1926.

O31,8:G1P0,N
N26
22321

DEC 1926

உ
கடவுள் துணை.

# நளச்சக்கிரவர்த்தி கதை

ஒருகொம்பிரண்டுசெவி மும்மதநால்வாயோ டொண்
படைகள், மருவெங்கரமும் வயங்குறும்வாரண மாமுகத்
தோன், உருநின்றசெம்பது மத்தாளையுன்னி யுலகளைத்
துந், திருநின்றிலக வரசாண்ட நளன்கதை செப்புதுமே

### வியாசபகவான் தோத்திரம்.

### சமஸ்கிருத சுலோகம்.

வியாசம்வசிஷ்டநப்தாரம் சக்த்தேபவுத்ரமகல்மஷம்
பராசரத்மஜம்வந்தே சுகதாதம்தபோநிதம்.

### இதன் பொருள்.

வியாசம்-வியாசபகவான், வசிஷ்டநப்தாரம்-வசிஷ்டருக்கு இரண்டாம்பேரனை, சக்தேபௌத்ரம்-வசிஷ்ட புத்திரனாகிய சத்திமகாரிஷிக்கு, முதற்பேரனை, அகல்மஷம்-களங்கமற்றவனை, பராசரத்மஜம்-பராசரமகாரிஷிக்குப் புத்திரனை, சுகதாதம்-சுகப்பிரம்மரிஷிக்குப் பிதாவானவனை, தபோநிதம்-தவங்களுக்கு உற்பத்தி ஸ்தானமானவனை, வந்தே-நமஸ்கரிக்கிறேன் எ-று.

## முதலாவது பாண்டுபுத்திரர் நளச்சரித்திரங்கேட்க விரும்பிய அத்தியாயம்.

இவ்விதமாய் முனிசிகாமணியாகிய வேதவியாசரைத் தோத்திரம்பண்ணி வைசம்பாயனர் ஜெனமேஜெய மகாராசனுக்குச் சொன்ன ஐந்தாம்வேதமான பாரதக் கதையில் சாரமாயிருக்கப்பட்ட நளச்சக்கிரவர்த்தி கதையை கீர்த்திஸ்வாமியான ஸ்ரீ அரிக்கு அனந்தமான தெண்டஞ் சமர்ப்பித்துச் சொல்லுகிறேன். இந்தக் கதையை ஆசந்திரார்க்கமாகப் பூலோகத்திலே சகலமான ஜனங்களும் தரித்துக்கொள்ளுகிற பூஷணங்களில் ஓர் பூஷணமாகிய நளபதக்கமென்று ஒப்பத்தக்கது இந்த நளமகாராஜா கதையை ஆர்படித்தாலும் ஆர்

கேட்டாலும் ஆரெழுதினாலும் ஆர் ஒருவருக்குச்சொன்
னாலும் ஆரொருத்தர் அந்த நளமகாராசாவை நினைத்
தாலும் அவர்களை இந்தப் பூலோகத்திலே நவக்கிரகங்
கள் குரூரஞ்செய்யமாட்டாதுகள் சகலமான தேவர்களு
ஞ் சந்தோஷப்படுவார்கள். பின்னும் அந்த நளமகா
ராஜாவைத் தோத்திரம்பண்ணிக்கொண் டிருக்கிறவர்க
ளண்டையிலே சனீஸ்வரபகவான் என்றைக்குஞ் சே
ரான் இந்தக் கதையைக்கேட்ட புண்ணியபுருஷர்களை
பாவங்களணுகாது இந்தக் கதையை எழுதிப் படித்து
அதிலுள்ள அர்த்தசாரங்களை யறிந்து இந்த நளமகா
ராசாவைத்தோத்திரஞ்செய்து பயபக்தி விசுவாசத்துட
னே நினைத்துக்கொண் டிருக்கிறவர்களை கலிபுருடன்
அணுகமாட்டான் அவர்க ளிருக்கிறதிக்கையும் நோக்க
மாட்டான் ஸ்ரீமகாவிஷ்ணு அம்சமில்லாதவன் ராசா
வாக மாட்டான் ஆனபடியினாலே நளச்சக்கிரவர்த்தி
கதை விவரமாய்ச் சொல்லுகிறேன் வித்வாமிசர்கள்
தயவுசெய்து அங்கீகரிக்கக்கடவீர்கள் துவாபரயுகத்திலே
சந்திரவங்கிஷோத்தமரான பாண்டுமகாராஜன் புத்திரர்
கள் தருமராசா வீமசேனன் அர்ச்சுனன் நகுலசகாதேவ
ர்கள் இவர்களைந்துபேர்களுங் கௌரவ தாயாதிகளாகிய
திருதராட்டிரன் புத்திரர்களான துரியோதனன் துற்சா
தனன் முதலான நூறுபேர்களுடனேயும் கர்னன் சகுனி
யுடனே கூடிச் சூதாடி சகுனியினுடைய மாயப்பாச்சி
கையிலே அஸ்தினாபுரம் இந்திரபிரஸ்த முதலான பட்
டணங்கள் பரிவாரங்கள்முதலிய சமஸ்தமுந் தோற்றுத்
தீனர்களாய் இந்தக் கௌரவர்கள் செய்த குற்றங்களை
யெல்லாம் பொருத்துக்கொண்டு தங்கள் பெண்சாதி
யான திரௌபதையுடனே பதினாயிரம் பிராமணர்களுட
னேயும் சிறிது ரதங்களுடனேயும் அஸ்தினாபுரத்தை
விட்டுப் புறப்பட்டு பயங்கரமான காட்டுக்குள்ளேபோய்
அங்கங்கே வாசம்பண்ணிக் காய்களின் கிழங்குகளைப்
பட்சித்துக்கொண்டு அந்தப் பதினாயிரம் பிராமணர்கட்
கும் போசன கிர்த்தியங்களை நடப்பித்துக்கொண்டு சிறி
து காலம் காமியவனம் துவைதவனம் இந்திரசாலம்
இவை முதலான புண்ணியபூமிகளெல்லாம் வாசம்பண்
ணி அங்கங்கேபட்ட பிரயாசைகள் தீரத்தக்கதாக மார்க்



கண்டேயர் நாரதர் முதலான முனீஸ்வரர்க ளாசீர்வா
தங்களைப் பெற்று கடினமான வாசஞ்செய்து கடைசி
யிலே துவைதவனத்தில் தானே நின்று அவ்விடத்தில்
ஒரு சுத்தபூமியைப்பார்த்து உறுதியாய் மழைக்குங் காற்
றுக்கும் வெய்யிலிற்கும் பனிக்கும் பயப்படாமலிருக்க
வேடிக்கையான பர்னசாலைகளைக் கட்டிக்கொண்டு அப்
போதைக்கப்போது ரிஷீஸ்வரார்கள் முனீஸ்வரர்களிட
த்தில் கதாப்பிரசங்கங்களைக்கேட்டு அதினாலே பொழுது
போக்கிக்கொண்டு கேளிவிலாசமாகத் துரௌபதையுட
ன் கூடியிருந்தார்கள்.

## பிருகுதச்சுவமகாமுனிவர் பாண்டவருக்கு நளச்சரித்திர முரைத்தது.

அப்போது தர்மராசாவைப் பார்க்கவேண்டுமென்
கிறதாய் துவைதவனத்துக்கு பிருகுதச்சுவரென்கிற முனீ
ஸ்வரர் சிவந்த சடைகளைச் சுருட்டி மண்டலாகார
மாய் கட்டிக்கொண்டு விபூதி ருத்திராட்சந் தரித்து கிரு
ஷ்ணாசலம் சபமாலை கமண்டலங் கையிற்கொண்டு
பாதக்குரடணிந்து யிருபுரமும் முனிவர்கள் சூழ்ந்து
வர விநோதமாக யெழுந்தருளி வருகிறதைக்கண்டு
தருமபுத்திரர் தம்பிமாருடனேயும் எதிர்கொண்டுபோய்
பக்தி விசுவாசத்துடனே பிரதட்சண சாஷ்டாங்க
நமஸ்காரம்பண்ணி அம்முனீஸ்வரரை கைலாகுகொடு
த்து அழைத்துக்கொண்டுபோய் தர்ப்பாசனத்தி லுட்
காரவைத்து அர்க்கியபாத்திய ஆசமனங்களிலே பூசை
பண்ணி கைகளைக் கட்டிக்கொண்டு சொல்லுகிறார்கள்
ஓமுனீஸ்வரரே திவ்யமான காந்தியினால் பிரகாசிக்கிற
வரே சரணமடைந்தபேரை ரட்சிக்கப்பட்டவரே பிர
மத்தி முதலாகிய பாதகங்களையெல்லாம் நாசமாக்கப்
பட்டவரே தீனதயாபரரே ஓ சுவாமி நீங்களும் உம்
முடைய சிஷர்களும்சுகமாயிருக்கிறீர்களாவென்று நமஸ்
காரம்பண்ணித் தர்மராசர்கேட்டபோது அம்முனீஸ்
வரர் மிகுந்தகிருபையுடனே புன்சிரிப்புகொண்டு ஒரு
வசனஞ்சொல்லுகிறார் ஓதர்மராசாவே எங்களுக்குச்
சுகமேது துக்கமேது சுகதுக்கமிரண்டும் எங்கட்குச் சரி
யாயிருக்கும் உங்களுடைய தயவினாலே நம்முடைய
சிஷர்களும் நாமுஞ் சுகமாயிருக்கிறோம் நீர்மெத்த நற்


குணமுடையவர் ஆனபடியினாலே தர்மபுத்திர ரென்கிற நாமதேயம் உமக்கேதகும் நீர் புண்ணியபுருஷர் சகல தர்மமும் உம்முடைய ஆதீனமாயிருக்குமன்றோ ஆகையினால் நீரும் உம்மிட தம்பிமார்களும் சுகத்தையடைந்திருக்கிறீகளா வென்றுகேட்க தர்மராசா வெட்கப்பட்டுக் கைகளைக்குவித்து தெண்டனிட்டு முனீஸ்வரருடனே சொல்லுகிறார் ஓ முனிநாதரே எங்களுடைய சுகதுக்கங்களை என்னவென்று சொல்லுவேன் ஆனால் தேவரீரவர்கள் கேட்டபடியினால் விவரமாய் விண்ணப்பஞ்செய்கிறேன் தேவரீர் கிருபாகடாட்சம் வைத்து சாவதானமாய்க்கேளும் துஷ்ட சிந்தனான துரியோதனன் நாங்கள்சந்தோஷங்களையடைந்து புத்திரபௌத்திரர்களுடனே சுகமாய் வாழ்ந்துகொண்டிருப்பதைப் பார்த்துப் பொறுக்காமல் துற்புத்தி மந்திரிகளாகிய துரியோதனன் துற்சாதனனிவர்களுடனே ஆலோசனைபண்ணி துன்மார்க்கனான சகுனியனுடைய மாயப் பாச்சிகையினாலே கள்ளச் சூதாடுவித்து எங்களுடைய பாக்கியமெல்லாம் பறித்துக்கொண்டான் பின்னையும் அந்தக் குரூரகர்னன் எங்களையும் எங்கள் பத்தினியையும் பண்ணின அவமானங்களனேகமுண்டு அவைகளையெல்லாம் பக்தவச்சலனான ஸ்ரீகிருஷ்ணபகவான் திவ்வியகிருபாகடாட்சத்தினால் நீங்கினோம் ஓமுனிநாதரே சகல பதார்த்தங்களின் மேலேயும் மனதை வெறுத்துவிட்டு அவனே யனுபவிக்கட்டென்றும் இவனோடு போராட்டமென்னத்துக்கென்றும் சத்தியத்தையெண்ணிநானுமென் தம்பிமார்களும் பெண்சாதியும் புறப்பட்டுவந்து இப்படிக்காட்டில் துன்பத்துடனே வெய்யில் குளிர் பனி மழை இவைகளையும் பொறுத்து பிள்ளைகளையும் பந்துஜனங்களையும் விட்டு விசாரப்பட்டுக்கொண்டு திரிகிறோம்புஜபலத்தினாலே திக்குப்பாலகர்களைச் செயிக்கத்தக்க சாமார்த்தியமுள்ள தம்பிமார் என்னிமித்தியமாகத் தங்களுடைய சௌரியங்களை அடக்கிப் பொறுத்துக்கொண்டு இப்படி தபசிகளாயிருக்கிறார்கள் எங்கள் தாயாரான குந்திதேவிவெகு பிரியத்துடனே அறுசுவை பதார்த்தங்களைச் சமைத்து சாப்பாடு போடச் சாப்பிட்ட நாங்கள் இக்காட்டில் தபசிகளாயிருக்கிறோம்



இதுவல்லாமல் பழங்களையும் கிழங்குகளையும் உதிர்ந்தயிலைகளையுந் தேடிப்பொறுக்கிச் சாப்பிட்டுக்காலங்கழித்துக்கொண்டிருக்கிறோம் வேடிக்கையுடனே காட்டில் மெத்தைகளில் புட்பங்களைப்பரப்பி அதின்பேரில் படுத்துக்கொண்டு நித்திரைபோகிற என் தம்பிமார் இப்போது நரிநாய்களுடைய கூச்சலைக்கேட்டுக்கொண்டு புழுதியிலலைந்து நிலத்திலே படுத்துக்கொண்டு நித்திரையில்லாமல் பிர்மதேவன் விதிப்படி பிரயாசைப்பட்டு காலங்கழித்துக்கொண்டிருக்கிறோம் எங்களுடையயிருப்பம் ஒருயிருப்போ ஓ சுவாமி எங்களைப்போல ஆபத்துகள் படுகிறபேரை எங்கேயாகிலும் கண்டதுண்டோ அல்லது கேள்விப்பட்டதுண்டோவென்று தாரைதாரையாய்க் கண்ணீரைவிட்டு மெத்தவும் பிரலாபிக்கிற தர்மராசாவைப் பார்த்து முனிநாதர் தம்முடைய கையினால் அவர் கண்ணீரைத் துடைத்துநல்லவசனத்தினாலே அவரது சோகத்தைத் தீர்த்துச் சிறிது வசனங்களை அறியச்சொல்லுகிறார் ஓ தர்மபுத்திரரே நீர்சகல தர்மங்களையு மறிந்திலாதவரைப்போ லிப்படி துக்கப்படுகிறீர் இது உமக்கு ஞாயமல்ல உம்முடைய தம்பிமாரும் பெண்சாதியும் பிரதாபமுள்ள பதினாயிரம் பிராமணர்களும் அதிதிகள் இருடிகள் மகாத்துமாக்களான பெரியோர்க ளெல்லாரும் உம்மிடத்தில் எப்போதுமிருந்து புண்ணிய கதைகளைச்சொல்லிக்கொண்டு பொழுதுபோக்குவிக்கிறார்கள். அல்லாமலும் புண்ணிய காலமறிந்து புண்ணிய தீர்த்தமாடி பரமவித்திரராய் சுகமாயிருக்கிறீர்கள் ஆகையினாலே ஏதொரு துக்கமென்று தம்முடைய மனதி லெண்ணியிருக்கிறீரோ பூர்வகாலத்திலே ராசாக்கள் பட்ட துக்கத்துக்கும் இப்போது நீர் படுகிற துக்கத்திற்குஞ் சரிபார்த்தால் ஆனையும்அணிலுமாயிருக்கும். ஆகையினாலே நீர் இப்படி சுகமனுவித்துக்கொண்டிருந்தும் துக்கப்படுகிறது தருமமல்ல ஓ தர்மபுத்திரரே இந்த ஆரண்யத்தில் நீரடைகிற சுகம் அஸ்தினாபுரத்தில் வருமோ இப்படிக்கொத்த நல்லயிடத்தில் வாசம்பண்ணிக்கொண்டிருந்தும் தாபந் தரியப்படுகிறது எனக்கு மெத்தவும் ஆச்சரியமாயிருக்கிறது முன் நளச்சக்கிரவர்த்தி பட்டபாடுகளில் கிஞ்சித்

சொல்லுகிறேன் கேளுமென்று முனிநாதர் சொல்லத் தொடங்கினார். எப்படி யென்றால் வெகு காந்தியுங் கீர்த்தியு முடையவனான நிடததேசத்து ராசாவாகிய வீமசேனனுடைய குமாரன் சத்தியத்தையே செல்வமாக நினைத்திருக்கப்பட்டவன் அவன் பெயர் நளமகாராசா வென்று சொல்லுவார்கள். அந்த ராசா பூலோகத்தில் சப்ததீவுகளையும் ஒருகுடை நிழலின்கீழே யாண்டவன் அவன்பெண்சாதிபேர் தமயந்தி அவளோ பயபக்தியை பூஷணமாகதரித்த மகாபதிவிரதை அவளுக்கு ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணுமுண்டு அந்தராசரும் உம்மைப்போலவே அனியாயமான சூதாடித் தன்னுடைய ராச்சியங்கள் பூமிகள் ரதகஜ துரக பதாதிகளெல்லாம் புஷ்கர ராசாவுக்குத் தோற்று பட்டணத்தையும் விட்டு பெண்சாதியைக் கூட்டிக்கொண்டு பரதேசியைப்போலப் புறப்பட்டு அன்னவஸ்திரங்களு மரிதாய் தன் பிள்ளையும் பெண்ணையும் விட்டுப்பிரிந்து. பெண்சாதியுந் தானும் ஏகவஸ்திரத்துடனே குரூரமான காடுகளிலேபோய்உதிர்ந்து கிடக்கிற இலைகளையுங் காய்கனிகளையும் பொறுக்கித் தின்று. அனேகமான துக்கப்பட்டு கடைசியிலே பெண்சாதியையும் விட்டுப்பிரிந்து நானாவிதமான விகாரத்துடனே தன்னைச்சேவித்த ராசாக்களைத்தான் சேவித்துக்கொண்டிருந்து சிறிதுகாலத்திற்குப் பிறகு மகாவிஷ்ணுவினுடைய கிருபையினாலே எப்போதும்போல ராச்சியந் தன்வசமாக பெண்சாதி பிள்ளைகளுடனே கூடிச் சுகத்தை யடைந்திருந்தான்.

ஆகையாலே அந்த நளமகாராசாபட்ட துக்கத்திலே நீர் படுகிறதுக்கம் எம்மாத்திரம் அது வுமக்குத் தெரியாதா அதனைப்போல துக்கப்பட்டு நீரும் சிறிது நாளைக்குள்ளே செல்வத்தை யனுபவிக்கப் போகிறீர் மனஞ்சலிக்க வேண்டாமென்று முனிநாதர் சொல்லத். தர்மபுத்திரர் ஆச்சரியப்பட்டு முனிநாதரே நளச்சக்கிரவர்த்தியும் எங்களைப்போல் சூதாடி ராச்சியமெல்லாந் தோற்று தானுந் தன் பெண்சாதியுமாய் புறப்பட்டாரல்லவா இந்த சூது அந்நாளிலு மிருந்ததா அப்படியானால் அந்தத் துரியோதனனை நாம் ஏன் நிந்திக்கவேணும் நாம் பண்ணின பாவபுண்ணியங்களை நாமே யனுப



நிடதநாட்டின் நகரச்சிறப்பு.



விக்கவேணுமென்று மனந்தேறி ஓ சுவாமி தம்முடைய அமிர்தமான வசனங்களினாலே எங்களுடைய துக்கங்களெல்லாம் பறந்துபோச்சுது அதற்குச் சமுசயமில்லை தேவரீர் இப்போது சொன்ன நளமகாராசா கதையை நான் பூர்வீகமாய் இன்னமும் நன்றாகக்கேட்கவேணும் நீர் சவிஸ்தாரமாய் என்பேரில் கடாட்சம் வைத்துச் சொல்லவேணுமையாவென்று கேட்க அந்த முனிநாதர்சந்தோஷப்பட்டு நளமகாராசாவினுடைய கதையை பூர்வீகமாய் சொல்லத்தொடங்கினர்.


நிடதநாட்டின் நகரச்சிறப்பு.

கேளுமையா தர்மராசரே முன்னமே மகாலட்சுமி கிருபையினாலே சமைத்த மகாவிந்தபுரமென்றொரு பட்டணமுண்டு அந்தப் பட்டணத்தைப் பார்த்தபேர்கள் அமராபதியும் அளகாபுரியும் இந்த ரூபமாக வந்திருக்கிறதோவென்று சொல்லிக்கொள்ளுவார்கள். பார்க்க பார்க்க மனோரம்மியமாய் வேடிக்கையாகயிருக்கும் தெருவுகளிலே ரத்தினத்தோரணங்களும் மாடங்களில் கற்பூரவிளக்குகளும் நிறைந்தும் மகாலட்சுமி எந்நேரமுந் தாண்டவ மாடுகிறதுபோல் அப்பட்டணம் விளங்கியிருக்கும் அதல்லாமலும் நவரத்தின மயமாகவும் சுவர்ண மயமாகவும் அப்படி யனேகவித வேடிக்கைகளாகச் செய்திரா நின்ற மாடமாளிகை கூடகோபுரங்களுஞ் சூரிய மண்டலத்தை யளாவியிருக்கும் மேருகிரியைப்போல விளங்கி இருக்கப்பட்ட ரதங்களும் நிலகிரிகளைப்போல விளங்கிய மதயானைக்கூட்டங்கள் நல்ல காந்தியும் லட்சணங்களும்சூரியன்தேரிற்கட்டிய குதிரைகளைப்பார்க்கிலு மதிகவேகமுள்ள அனேகமாயிர உத்தம அஸ்வங்களு மத்தியில் மிகுந்த யமனுடனே எதிர்த்து போராடப்பட்ட கோடானகோடி பதாதிகளும் அங்கங்கே அணியணியாய் நிறைந்திருக்குங் கற்பக விருட்சங்களுக்கொப்பான விருட்சங்களும் மல்லிகைமுல்லை செண்பகம் இருவாட்சி முதலான புட்பஜாதிகள் நிறைந்து பண்டுபலாதிகளுடனே விநோதமாயிருக்கப்பட்ட அனேக சிங்கார வனங்களுண்டு அளவில்லாத ஐஸ்வரியங்களைப் படைத்த பிர்ம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களு முண்டு மனதிலே நினைத்த பதார்த்தங்களெல்லாம் நிறைந்திருக்கிற

கடைவீதிகளும் மகா பதிவிரதைகளாகிய ஸ்திரீகளும் அரம்பை ஊர்வசி மேனகை திலோர்த்தமையைப்போ லொத்த அழகுடைய தேவாதிகளும் வீணை வாத்தியங் களும் வேணுநாதங்களும் கேளிக்கைகளும் மிகுந்த நித்தியோற்சவங்களும் பிரமோற்சவங்களும் எங்கும் நிறைந்திருக்கும் இத்தியாதி சிறப்புகளும் பொருந்தி யிருக்கப்பட்ட அந்த மகாவிந்தபுரிபட்டணத்திலே சதா காலமும் அரிபக்தியை யுடைய வீரசேன மகாராஜன் தவத்திற்கிரங்கி ஸ்ரீ மகாலட்சுமி சமேதராகிய அரி வாசு தேவர் கிருபா நோக்கத்தினால் அவதரித்த தரும சொ ரூபனாகிய நளச்சக்கிரவர்த்தி மனுமுறை தவறாமல் நீதி யுடனே ராச்சியபரிபாலனம் பண்ணிக்கொண்டிருந்தான் அந்த நளச்சக்கிரவர்த்தி ராச்சியத்திலிருக்கிற ஜெனங்க ளெல்லாம் அவரவர்கள் குலாச்சார தர்மங்கள் தப்பாமல் இராசாவினுடைய ஆக்கினையைக்கடவாமல் பயபக்தி விசுவாசத்துடனே நடப்பார்கள் அரியாதிகளை இந்த ராசர் பூசித்துத் தேர் திருநா முதலான காரியங்களையும் அலங்காரமாக நடப்பித்துக்கொண்டு வருவார் வியாதி களும் தரித்திரங்களும் அந்தப் பட்டணத்திலே பரிசுத் தமில்லை அந்த இராச்சியத்தில் விளைகிற தானியத்தில் பத்துக்கொருபங்கு வாரங்கொடுத்து ஒன்பது பங்கை யும் குடிகளானவர் தானதருமங்கள் செய்துக்கொண்டு சுகமாகவே யிருப்பார்கள் பால் கரக்கின்றபோது பசுக் கள் எருமைகளிலே கன்றுக்கு ஒருபக்கம்விட்டு தங்களு க்கு ஒருபக்கங்கறந்துக் கொள்ளுவார்கள் கன்றுகள் தங் கள் தங்கள் தாய்களைக்கண்டபோது தங்கள் பக்கமாக வே ஊட்டும் எருதும் புலியும் ஒரு கரையில் தண்ணீர் குடிக்கும் அப்பிரமாணந்தப்பாமல் ஸ்ரீலட்சுமி பதியின் சக்கராத்தினுக்கினையால் சகல காரியங்களுக்கும் குறைவு வாராமல் நடக்கும்.

கர்வித்துப்பேசின புலியின்தலையைச்
சக்கரஞ் சங்கரித்தது.

கேட்டீரோ தர்மநந்தனரே அப்படிசத்தியந்தப்பா மல் நடக்கிறபோது ஒருநாள் காட்டில் ஒரு குளத்திலே எருதும் புலியும் ஒரு துறையிலே தண்ணீர் குடிக்கிற போது எருது தன்னுடைய வாலைச்சுழற்ற அப்போது


கர்வித்துப்பேசின புலியின் தலையைச் சக்கரஞ் சங்கரித்தது.

அந்தப் புலியின்மேலே தண்ணீர் தெரித்தது புலி எருதைப்பார்த்துக் கோபித்துக்கொண்டு ஓ எருதே சற்றாகிலும் பயமில்லாமல் இந்தகாட்டில் ஒருகுளத்திலே என்னோடுகூட தண்ணீர்குடித்து வாலை விசிரிக்கொண்டு என்னை சட்டைப்பண்ணாமல் மதயானைபோலே கெருவித்திருக்கிறாய் உன்னுடைய பலம்எம்மாத்திரம் ஏன் துள்ளுகிறாயுன்னை யிப்படி நடக்கும்படியாக செலவுகொடுத்தவன் நவராசாவல்லவா இந்தராஜா எத்தனைகாலம் ராச்சியம் ஆளப்போகிறான் முன்னே ராச்சியம் ஆண்டபேர்களிலே எவன்பிழைத் திருக்கிறான் நல்லதர்கட்டும் சமயம் பார்த்துக்கொண்டிருந்து உன்னைக் கொல்லாமற் போகிறேனாவென்று சொல்லி கெருவித்தது உடனே திக்குகள் நடுங்கத்தக்கதாக அட்டகாசம் பண்ணிக்கொண்டு அனேக காந்தியுடனே ஸ்ரீலட்சுமிபதியினுடைய சக்கரம்வந்து புலியின்தலையை அறிந்துக்கொண்டு போச்சுது சகலமான ஜனங்களும் ஆச்சரியப்பட்டார்கள் அப்படி அந்தராஜா தன்னுடைய நீதிப்பிரதாபத்தினாலே சக்கரமே ஆக்கினை செய்துவர சகலஜெனங்களும் ஒருபாவமுஞ்செய்யாமல் அசத்தியமென்கிறதை சொற்பனத்திலும் நினைக்காமல் சுகஜீவிகளாய் மாதமும்மாரிபெய்ய சகலபதார்த்தங்களையும்விற்றுக்கொண்டு சகலகாரியங்களிலேயும் தர்மமென்கிற நினைவையுமறவாமல்வாழ்ந்துக்கொண்டு ராச்சியபரிபாலனம் பண்ணினான்.

உ-வது அன்னத்தைக் கண்ணுற்ற அத்தியாயம்.

இப்படி நீதியாய் நடந்துவருங்காலத்தில் சித்திரை வைகாசி மாதமான வசந்தகாலத்திலே பௌர்ணமியினன்று சாயங்கால வேளையிலே வேடிக்கையாய் அந்த நளமகாராஜாவானவன் காமத்தை விளைவிக்கிற புட்பவனத்திலே ஒண்டியாய்ப் பிரவேசித்து பாரிசாதமல்லிகை முல்லை இருவாட்சி சண்பகம் மருக்கொழுந்து குருவேர் வெட்டிவேர் இதுகள் வாசனைவீசவும் அன்னங்கள் ஒய்யாரமாய் நடக்கவும் குயில்கள் கிளிகள் தொனிகள் செய்யவும் வண்டுகள் தும்பிகள் ஆர்ப்பரிக்கவும் சகலமான பட்சிகள் சலசலவென்று தொனிக்கவும் இளந்தென்றலானது மெதுவாய் விசிறியினாலே வீசினாற்

போலே வரவுங்கண்டு சந்தோஷப்பட்டு ஆனந்தமாயிருக்கிறபோது சந்திரன் உதயமாகி மறுவில்லாமல் பட்டப்பகலைப்போல எரிக்க அர்த்தராத்திரிவேளையிலே நளமகாராஜா மெத்தையின் பேரிலேவீற்றிருந்து அப்போதைக்கப்போது விரகமிஞ்சி மன்மதகிரீடையை நினைத்துக்கொண்டு தமயந்தி யென்கிறபெண் தனக்குத் தகுந்தபெண்சாதியென்று சகலஜெனங்களும்சொல்லக் கேட்டிருந்தபடியினாலே அவள் ரூபத்தை வர்ணித்து ஓ லட்சுமிபதியான சுவாமிபக்தர்களை ரட்சிக்கிறபடியால் பக்தவச்சலரென்று பெயரையுடையவரே அடியார்க்கடியாரிருந்து அவர்கோறின கோறிக்கையை ஈடேற்றுகிறவரே முதலையின் வாயிலே அகப்பட்டுக் கொண்டு விடுவித்துக்கொள்ளமாட்டாமல் உம்மை நினைத்து ஸ்தோத்திரம்பண்ணின கஜேந்திரமூறைக்கு யிரங்கி வைகுந்தத்தில் இருந்துவந்த முதலையைச் சங்காரம்பண்ணி கஜேந்திரனை ரட்சித்த மகாபுருஷர் நீரல்லவோ ஓசுவாமி நான் வெகுநாளாய் என்மனதுக்கேற்ற பெண்சாதி எங்கேயாகிலும் அமரவேணுமென்றுகோரி விசாரிக்குமிடத்தில் வீமராஜா மகளாகிய தமயந்தியே உன்மனதுக்கேற்றவளென்று அனேகர் சொல்லக்கேட்டிருக்கிறேன் அவள் என்னுடனே கூடிச் சகலபோகங்களையும் அனுபவித்திருக்கும்படியாகத் தயவுபண்ணி ரட்சியும் ஐயா சுவாமியென்று அந்த நளமகாராசா லட்சுமிபதியை ஸ்தோத்தரித்துக்கொண்டிருந்தான். பொழுது விடிந்தது அந்தச் சமயத்தில் திருமாலுடைய கடாட்சத்தினால் ஆகாயத்திலே யிருந்து முத்துமாலைகளுதிர்ந்தாப்போலே சிறிது அன்னபட்சிகளிறங்கி வந்து ராஜாவின் முன்னே வேடிக்கையாகவிளையாட அதைக்கண்டுராஜாசந்தோஷப்பட்டு அதிலே ஒரு பெரிய ராஜா அன்னத்தைப்பிடித்துக்கொண்டான் மற்ற அன்னங்களெல்லாம் அந்த அன்னத்தைவிட்டுப்போகமாட்டாமலங்கேதானேசுத்திக்கொண்டிருந்ததுகள் அகப்பட்டவன்னம் மெத்தப் பயந்து நடுங்கி ராசாவைப்பார்த்து ஓ ராஜாவே நீர்சகல ஞாயமு மறிவீர் உமக்குத் தெரியாதது வேறொன்றில்லை என்னைப் பிடிக்கச்சொல்லி வேத சாஸ்திரங்களிலே சொல்லி யிருக்கிறதோ? நீ



ரென்னை ஏன்பிடித்துக்கொண்டீரென்றுகேட்கநளராஜா சந்தோஷப்பட்டு புன்சிரிப்புடனே அதிசயித்து அந்த அன்னத்தைப்பார்த்து பட்சி ஜாதிகளுக்குள்ளே உத்தமமா யிருக்கப்பட்ட ஓ இராஜ அன்னமே! வேடிக்கையாக விளையாடுகிற நிமித்தம் உன்னை நான் பிடித்தேன். நீ என்னை சந்தோஷப் படுத்துவாயென்று சொல்லக் கேட்டு, அந்தராஜாவினுடைய இருதயத்திலே எண்ணிக்கொண்டுயிருக்கிற காரியங்களை அறிந்து ஓராஜேந்திரா! உம்மைப்பார்த்தால் மன்மத பாணத்தினாலே அடிபட்டு நொந்துஉம்முடைய இருதயத்திலே காமவிகாரமிஞ்சி தமயந்திஎன்கிற பெண்ணை நினைத்து விசாரப்படுகிறாப் போல்காண்கிறது. இம்மாத்திரங் கதைக்கு உம்மைபோலொத்த மகாராஜா விசாரப்படலாமோ? மன்மதன்செய்தகாரியத்துக்கு நீர்தானென்னசெய்வீர்? திரிமூர்த்திகளாலேயுஞ்ஜெயிக்கப்படாத மன்மதனை உம்மாலே ஜெயிக்கத்தரமோ? நல்லது ஆகட்டும், உம்முடையமனதிலே நினைந்திருக்கிற கோறிக்கைப்படிக்கு அந்த தமயந்தி யென்கிற பெண்ணை உமக்கு பெண்சாதியாகப் பண்ணிவைக்கிறேன் என்னை விட்டுவிடுமென்று சொல்லக்கேட்டு, நளமகாராஜா அதிகசந்தோஷத்தை யடைந்து புன்சிரிப்புடன் சொல்லுகிறார் ஓஅன்னமே இப்போது நீ சொன்னதெல்லா மென்னிடத்தி லுண்டான காரியந்தான், அதற்குப் பிசகில்லை, நீ நிஜமாக அறிந்துசொன்னபடியால் உன்னை தெய்வபட்சியென்றுசொல்லலாம், ஆனால் நானினைத்த காரியத்தை ஆகப்பண்ணி வைக்கிறேனென்று சொன்னாய், நீ மனுஷனுமல்ல தேவனுமல்ல பட்சிரூபமா யிருக்கிறாய் உன்னாலே எப்படியாகு மென்று கேட்க, அன்னம் நளமகாராஜாவைப்பார்த்து ஒரு வார்த்தை சொல்லுகிறது, ஓ ராஜாவே! இவ்வுலகத்தில் சஞ்சரிக்கிற அன்னத்தைப்போல் என்னைப் பார்த்தீரோ நான் தெய்வலோகத்துப் பட்சி நான் சஞ்சரியாத விடமில்லை மனிதருடைய மனோபலங்களும் முன்னடந்த காரியங்களு மெனக்குத் தெரியவரும் நீர் சமுசயப்படத் தேவையில்லை அத் தமயந்தியினுடைய குணரூபங்களுக்குத்தகுமான புருஷர் நீரே உம்முடையகுணரூபங்களுக்கு அத்தமயந்தி தகுமான பெண்சாதியே, அதையா

லவளை உம்முடைய உடமையாகப் பண்ணிவைத் திர
ண்டுபேருங்கலந்தபின் உம்முடைய கையினாலே செலவு
வாங்கிக்கொண்டு போகிறேன், நான் பொய் சொல்லுகிற
தில்லை, தெய்வலோகப்பட்சி சொன்ன பேச்சுத்தப்பு
கிறதில்லை, அதை யும்முடைய மனதில் வைத்து என்னை
விட்டு விடும், என்வார்த்தையைக் கெட்டியாய் நம்பும்,
இப்போதே நான் தமயந்தி யண்டைக்குப் போய்
உம்முடைய குணரூபவங்களை வர்ணித்துச் சொல்லி
அவளும்மைக் கலியாணம் பண்ணத்தக்க சந்தோஷ
செய்தி யுமக்குச் சொல்லுகிறேனென்ன, அதுகேட்ட
நளமகாராஜா சந்தோஷமா யன்னத்தை நிலத்திலே
விட்டு ஒருவார்த்தை சொல்லுகிறார் ஓ, அன்னமே உன
க்குத் தெரியாதது ஒன்றுமில்லை யல்லவோ ஆகையா
லந்தத் தமயந்தியினுடைய ரூபலாவண்யமெப்படிப்பட்
டது நீ எனக்கு நன்றாகச்சொல்லவேணும் என்னு
டைய காதுகுளிரக்கேட்கவேணுமென்று விரகவேதனை
பொறுக்கமாட்டாமல் நளமகாராஜா கேட்க, அன்னஞ்
சிரித்து கெம்பீரத்துடனே சொல்லுகிறது.

### தமயந்தியினுடைய பிறப்புவளப்பை உரைத்தது.

கேளுமையா நளமகாராஜரே, சூரியன் சந்திரன்
அக்கினி இவர்களுக்குச் சமானமான காந்தியும் பிரதாப
முடைத்தானவனுகிய விதர்ப்பதேசத்து ராஜாவான
வீமராஜருக்குப் புத்திரரில்லாமல் செபம் தபம் ஓமம்
விரதம் அனுஷ்டானங்கள் எக்கியங்கள் பிராமணர்களா
ல்செய்வித்தும் அதனாலேயும் புத்திரரில்லாதபடியினால்
கொலுவில் சிங்காரமாக யிருந்து கொண்டு மந்திரிகள்
பிரதானிகள் சேனாதிபதிகள் புரோகிதர்கள் மற்றுமுண்
டானபெரியோர்களை யெல்லாமழைப்பித்து அவர்களைப்
பார்த்து, கேளுங்கள் மந்திரிகளே பிரதானிகளே மற்று
முண்டான சபையோர்களே, பூலோகத்தில் மனிதர்களு
க்குப் பிள்ளைகளுண்டானால் புண்ணியலோக முண்டெ
ன்றும் வேதங்கள் சொல்லியிருக்கிறதாய் பெரியோர்கள்
சொல்லக் கேள்விப்பட்டேனாகையால் பிள்ளைவேணு
மென்கிற அபேட்சைஎனக்குமெத்தயிருக்கிறது, புத்திர
சோக மெத்தப்பெரிதானபடியால் பூலோகத்திலொரு
வரை யொருவர் யோகக்ஷேமம் விசாரிக்கும்போது தன



தானியசம்பத்துக்களைக் கேளார்கள், பிள்ளைகளெத்தனை
பெண்களெத்தனையென்று கேட்பார்கள், அதுவல்லா
மல் குழந்தைபேச்சுக்குரல்கேட்டாலென் காதுகளுக்கு
வேணுநாதம்போ லின்பமாயிருக்கிறது, பிள்ளைகளைப்
பெற்றவர்களே கனவான்களாகையால் நாங்கள் சதிபுரு
ஷர்களிருவருந்தபசுபண்ணும்பொருட்டுராஜ்யத்தைமந்
திரிவசம்பண்ணிகாட்டுக்குப்போகிறோம் அவர்கள் ஆக்கி
னையைக்கடவாமல் நீங்கள் நடவுங்களென்று நல்லவச
னத்தினாலே உபசாரமாய்ச் சொல்லி அவர்கையிலே செ
லவுவாங்கிக்கொண்டு ராஜா தன்னுடையபெண்சாதியுந்
தானுங்கூடச் சடைமுடியு மரவுரியுந்தரித்துப் பிரயாண
மாகப் போகச்சே பிறகே சகலமான ஜனங்களும் தாபந்
திரியப்பட்டுக்கொண்டுவர ராஜா அவர்களின் துயரம்
நீக்கி நிறுத்திப்போட்டு காட்டுக்குப் போனார்.

அங்கே வால்கில்லிய மகாமுனீஸ்வரருடைய குமா
ரர் தமனமுனீஸ்வரரைக்கண்டு சாஷ்டாங்கமாக தெண்
டன் சமர்ப்பித்து அவருக்கு ஆராதனை செய்து சிறிது
நாள் அவரைச் சேவித்து பயபக்திவிசுவாசத்துடனே
பக்திபண்ணிக்கொண்டு அவருக்கு மனதுவர நடக்கிற
போது அவர் வெகு சந்தோஷத்துடனே ஒருநாள்வீம
ராஜாவைப்பார்த்து, ராச்சியபரிபாலனம் பண்ணமல்
இப்படி தபசியாய்ச் சதியுடனேகூட வந்ததென்னவெ
ன்றுகேட்டார், அப்போது வீமராசாவும் ஐயாமுனீஸ்
வரா, எங்களுக்குச் சகலபாக்கியங்களுமிருந்தும் புத்தி
ரர் இல்லாமல் விசாரத்துடனே இப்படி தபசிகளாய்ச்
சகலத்தையுந் துறந்து உங்களைச் சேவித்துப் பிழைப்
போமென்று நாங்கள் சதியும்பதியுங்கூடி வந்துவிட்
டோம், ஆகையினாலே எங்கள் விசாரந்தீர்க்கத்தக்கதாக
சந்தானமுண்டாகும்படி அனுக்கிரகம்பண்ணிரக்ஷிக்க
வேணுமென்று அந்தராசா மெத்தவும்பிரலாபப்படுகிற
போது அந்த முனீஸ்வரருக்குத் தயவுவந்து அவர்கள்
பேரிலே கடாக்ஷம்வைத்து சகலபாவங்களையும் பரிகரி
த்து ஓ ராசாவே, உனக்குத் தபனியென்றொருபிள்ளை
யும் தமயந்தியென்றொரு பெண்ணும் உண்டாகப் போ
கிறது, அவர்களால் உன்வங்கிஷம் பவுத்திரயாகப்
போகிறது, நீ உன் பெண்சாதியை அழைத்துப்போ

வென்றுசொல்லிச் செல்வுகொடுத்தார். இராசாவும்ராச பத்தினியும் வெகுசந்தோஷத்தை அடைந்து அவருக்குத்தெண்டனிட்டுத் தோத்திரம்பண்ணி அவர் இடத்தில் செலவு பெற்றுக்கொண்டு தங்கள் பட்டணத்துக்கு வந்து சகல வேடிக்கைகளுடனேயும் ராச்சியபரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கிறபோது சிறிதுநாளைக்குப் பிறகு முனீஸ்வரர் சொன்னபடியே ராசாவினுடைய தேவிகெர்ப்பமாய் நல்லசுப முகூர்த்தத்திலே ஒருபிள்ளையையும் ஒருபெண்ணையும் பெற்றாள். அப்போது வீமராசா புத்திரோச்சவம்பண்ணிசகலதானமுங்கொடுத்து சந்தோஷப்பட்டுக்கொண்டு சந்திரோதயம் போலேயும் ஸ்ரீ மஹாலட்சுமிபோல பாக்கியவான்கள் இல்லையென்று நினைத்து அந்த மகாரிஷிசொற்படி அந்தப் பிள்ளைக்குத் தபனியென்றும் பெண்ணுக்குத் தமயந்தியென்றும் நாமகாணஞ்சூட்டி மகாவைபோகத்துடனே இருந்தான் கேட்டீரோ நளமகாராஜரே அந்ததமயந்தி பிறந்து வளர்ந்த பூர்வோத்திரமும் நன்றாயறிவேன், ஆகையினாலே எப்படியும் அந்தப்பெண்ணை உமக்கே கூட்டிவைக்க மாட்டுவேன் நீசந்தேகபடத் தேவையில்லை என் சொல்லைக் கெட்டியாக நம்பும் உம்முடைய கோறிக்கை ஈடேறும் என்னை அனுப்புமையாவென்று அன்னம்சொல்லக்கேட்டு, நளமகாராசாசந்தோஷித்துச் சொல்லுகிறான் ஓ உத்தமஜாதியான ராஜ அம்சமே நான் உனக்கு என்ன வுபகாரம் செய்யப்போகிறேன் பூமிக்கு உபகாரஞ் செய்கிற மேகத்துக்குத் திரும்பி அந்தப்பூமிபதில் உபகாரஞ்செய்கிறதோ அப்படிப்போலெண்ணிக்கொண்டு எப்படியும் அந்தபெண் என்னைக்கூடி சந்தோஷத்தை யடையும்படிக்குத் தயவுசெய்து சீக்கிரமாகப்போய் காரியத்தை அனுகூலம் பண்ணிக்கொண்டுவா என்றுசொல்லி அன்னத்தைகட்டி அணைத்துச் செலவுகொடுத்தான்.

அன்னத்தை தூதுவிட்ட அத்தியாயம்.

உடனே அந்த அன்னப்பக்ஷிதன்கூட்டத்துடனே ஆகாயமார்க்கத்திலே எழும்பிப் பிரயாணப்பட்டு எங்கேயும் நில்லாமல் நளமகாராசாவுக்கு எந்தவிதத்திலேயும் அந்தப்பெண்ணைக் கூட்டிறவுபண்ண வேணுமென்கிற




அன்னத்தை தூதுவிட்டது.

தயவினாலே சீக்கிரமாகபோக, வழியிலிருக்கிற தாமரைக்குளங்களைக்கண்டு அதுகளிலேயும் வாசம்பண்ணாமல் நிழல்களிலும் நிற்காமல் அதிவேகத்துடனே போய் விதர்ப்பபுரமே சேர்ந்து சிங்காரவனத்திலே பாரிசாத மரத்தின்கிழே புஷ்பமெத்தையின் பேரில் படுத்துக்கொண்டு நளமகாராசாவினுடைய சவுந்தரியத்தை ஜனங்கள் சொல்லக் கேட்டிருந்தபடியினாலே அந்த ராஜாவை நினைத்து விரகம் பொறுக்கமாட்டாமல் சோர்ந்து வருத்தப்படுகிற தமயந்தியைக்கண்டு தன்கூட்டத்துடனே அன்னப்பக்ஷி அந்தநிலத்திலே யிரங்கி வேடிக்கையாகவந்து சூழ்ந்துக்கொண்டு தமயந்தியிடத்திலே நடை கற்றுக்கொள்ள வந்தாப்போல அவள்முன்னே வினோதமாய் நடந்துவிளையாடக்கண்டு தமயந்திஎன்னை விரகதாபம் பண்ணிவைக்கிற மன்மதன் இதுகளை அனுப்பிவைத்தானோ வென்று மனதிலே நினைத்து அந்த அன்னப்பக்ஷிகளுக் கெல்லாம் முதன்மையான ராசாவாய்ப் பெரிதாய் வந்திருக்கிற பக்ஷியைப்பிடிக்க நினைத்துப் பாங்கிமாரும் தானுங்கூட அன்னங்கள் சிதறிப் போகாமல் முந்தானை நழுவ ஸ்தனங்களசைய முத்துமாலைரத்தினப்பதக்க முதலான ஆபரணங்கள் பிரகாசிக்க கொண்டைகலைந்து மயிர்கள் சரிந்து அசைந்தாடச் சரீரத்திலே வேர்வை தாராளமாய்ப் புறப்படவேகமாகநடந்து போகும்போது பாங்கிமார்களில் ஒருத்தி முன்னேவிட அதிலே தான்முன்னே நினைத்த ஒரு பெரிய அன்னத்தைப் பிடித்துக்கொண்டு தன்கையினாலே அதன்முதுகில் தடவச் சரீரமெல்லாம் வேர்த்திருக்கிறது கண்டு ஓ அன்னமேஉனக்கித்தனை வேர்வை வருவானேன் வெகு அவசரமான காரியமாக வந்தாற்போல காணுகிறது உனக்கும் இப்படிப்பட்டகாரியமும் உண்டோவென, அதைக்கேட்டு அன்னம்சிரித்து• ஒரு வசனஞ் சொல்லுகின்றது.

ஓ அம்மா, மன்மதனுடைய பாணம்போலேயும் கிரீடம் போலேயும் உறைகழற்றின கட்டாரியைப்போலேயும் காந்தியுள்ளவளே! வீமராச குமாரத்தியேகேள் உனக்குச் சமானமான சவுந்தரியமுள்ளபெண்ணை எந்த ராச்சியத்திலேயும்நான்கண்டதில்லைஆகையினாலே உன

க்கேற்ற புருஷன் நளராசாவே யல்லாமல் மற்றொருவ ரில்லை, அப்படிப்பட்ட ராஜகுமாரன் உனக்குக்கிடைக் கப்போகிறான், நளமகாராஜாவுக்கு நீ தகும், உனக்கு அந்த நளராஜா தகும், அவனே உனக்குப் புருஷனாக வேணும், ஓ பெண்ணே! நான் பார்க்காத தேசமில்லை, நானறியாத ராசாக்கள் இந்தப் பூமியிலில்லை, அந்த நளமகாராசரைப்போலே மற்றராசாக்களை இப்படியாக வர்ணித்துச் சொல்லக்கூடாது, அம்மா உம்முடைய அழகுக்கேற்ற புருஷர் அவரேயல்லாமல் வேறொருவ ரில்லை, ஆகையினாலே ஆயிரம்பேச்சுக ளென்னத்திற்கு அந்த புருஷன் இந்தபெண்ணைக் கலியாணம் பண்ணு வானென்று எனக்கு நன்றாகத்தெரியும், நான் தெய்வ லோகத்துப்பக்ஷி, எனக்குத் தெரியாத தொன்றுமில்லை அந்தநளமகாராசர்கையிலே பரிதானம் வாங்கிக்கொண்டு வந்தவனுமல்ல, நீர் கொடுக்கிறீரென்றாலும் வாங்கு வதில்லை, எனக்கு என்ன வேண்டியிருக்கப்போகிறது நீர் சொல்லும், உனக்கே தயவுபிறந்து வந்தேன், நீ நினைத்திருக்கிறகாரியம் ஆகப்பண்ணமாட்டுவேன், குர ங்கின் கையிலே பூமாலை அகப்பட்டாற்போல நீர்எந்த ராசா கையிலே அகப்பட்டுப் போறீரோயென்று என் மனதிலேஐயமுண்டு, அதனால் உம்மைக்கண்டவுடனே திகிலடைந்து புத்திசிதறிப்போகுதம்மா, லோகத்திலே பெண்ஜனங்கள் விரதங்கள், உபவாசங்கள், தவங்கள், தானங்கள் பண்ணுகிறது நல்ல புருஷன் கிடைக்கவே ணுமென்றல்லவோ, அதிலேயும் அந்த நளமகாராசா வைப்போல் சௌந்தரியமும் சௌரியமும் சம்பத்தும் உள்ளவர்கள் இந்த உலகத்திலே கிடையாது, அந்த நளமகாராசாவினுடைய சொருபத்தை விபரமாகச்சொ ல்லுகிறேன் அம்மாவென்று அன்னஞ் சொல்லத் தொடங்கியது.

அந்த நளமகாராசா மன்மதனைப் பார்க்கிலும் சவு ந்தரியம் உள்ளவர், அந்த மன்மதனுக்குச் சரீரமில்லை அந்தராசாவுக்குச்சரீரமுண்டு, இதுவுமல்லாமற் புருஷ லக்ஷணங்களில் அந்த ஸ்ரீமகாவிஷ்ணுவுக்குச்சமானமா னவர், மன்மதன் அந்த ரூபத்தைப்போல பிறக்கவே ணுமென்று தபசு பண்ணுவான், பூரண சந்திரனைப்



தமயந்தி அன்னத்தைக்கண்டு பிடித்தது.

பழிக்கப்பட்டமுகமும்சூரியனைப்போலகாந்தியும்லட்சுமி கடாட்சமுமுள்ளவர், அவர் அழகையும் குணத்தையும் சரஸ்வதியம்மனாலும் ஆயிரம் நாவையுடைய ஆதிசேஷனாலும் வர்ணிக்கக்கூடாதென்றால் நான்வர்ணிக்கமாட்டுவேனா,பூமிக்கெல்லாம் அவரே உத்தமராசரென்று புண்ணியபுருஷர்களெல்லாம் புகழுகிறார்கள், பராக்கிரமத்தினாலே தேவேந்திரன் முதலிய திக்குப்பாலகரையும் ஜெயிக்கவல்லவர், தேவர்களெல்லோரும் அவருடைய பிரதாபத்திற்குச் சந்தோஷப்படுவார்கள், ஓ அம்மா யாதோகாரணமாக ஸ்ரீ மகாவிஷ்ணு அம்சையினாலேபிறந்தவர் அந்தநளமகாராஜர், பெண்களைமெச்சுகிறதேயில்லை, உம்முடைய சௌந்தர்யத்தையுங் குணத்தையுங் கேட்டு வெகு சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கிறார், தைரியத்தில் மிஞ்சினவர், பராக்கிரமசாலி, கெம்பீரபுருஷர், சத்தயகீர்த்தி, கெர்வித்த ராஜாக்களுக்குச் சிங்கத்தைப்போலொத்தவர்,பெரியோர்கள்,ரிஷி, தபோதனர் சந்தோஷப்பட்டு அவர் குணாதிசயங்களைப் புகழ்வார்கள், அவர் ஆளுகிற ராச்சியங்களிலுள்ளபேர்கள் அதர்மங்கள் செய்தால் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் சக்கரத்தினாலோ ஆக்கினைசெய்யப்படுவார்கள். அவருக்குக் கப்பங்கட்டாத ராஜாக்கள் பூமியிலொருவரு மில்லை, அம்மா! அப்படிப்பட்ட ராஜாவைச் சேராதபெண்ஜெனனம் விருதாவல்லவோ, உம்முடைய சரீர லட்சணங்களைப்பார்த்தால் அந்த நளமகாராஜருக்கே பெண்சாதியாவாயென்று தோற்றப்படுகிறது,மன்மதனும்ரதிதேவியின் சுகத்தைக் கோருவான், இரதியும் மன்மதன் சுகத்தைக் கோருவாள்,அந்த மன்மதன்கரும்பு வில்லினாலே சகலலோகத்தையும் ஜெயிக்கிறான். அப்படிப்போலஇவரும் தம்முடைய வில்லினாலே சகலரையும் ஜெயிக்கிறார், ஓ அம்மா! லோகத்தில் இரண்டுபேர் மன்மதர்களிருக்கிறார்களென்று சொல்லலாம், இப்படி சகல லட்சணங்களும் சகல மரியாதைகளுமுண்டான நளமகாராஜாவை நீரெப்போது கூடப்போகிறீரோ தெரியாதென்று அன்னம் சொல்லத் தமயந்தி அந்தவார்த்தைகளை யெல்லாங்கேட்டு சந்தோஷ சாகரத்திலே மூழ்கிப்பரவசமாய் ஆனந்தக்கண்ணீர் சொரியச் சரீரமெங்கும் புளகிக்கத்

தலையசைத்து அந்த அன்னத்தைப்பார்த்து ஒருவார்த்
தை சொல்லுகிருள், ஓ அன்னமே! அந்த நளமகாராச
ருடைய ரூபமும் சௌந்தரியமும் சௌரியமும் சம்பத்
தும் சகலமானபேருசொல்ல நானுங்கேட்டு ஐயப்பட்
டிருந்தேன் நீ! தெய்வப்பட்சியென்கிறதற்குச் சமுசய
மில்லாமையால் இப்போது நீ சொன்ன மாத்திரத்
தில் எனக்கு நிச்சயமாச்சுது, மன்மதபாணங்களினலே
மெத்த நொந்திருக்கிறேன், அந்த நளமகாராசருக்கே
பெண்சாதி ஆக வேணுமென்று ஏழுவயது முதற்
கொண்டு சரஸ்வதியம்மனைப் பிரார்த்தனை பண்ணிக்கொ
ண்டிருக்கிறேன் நான் படுகிறமன்மதவேதனையெல்லாம்
அவருக்குத் தெரியச்சொல்லி நானும் அவருங்கூடி ரதி
கேளியனுபவிக்கத்தக்கதாககூட்டுறவுபண்ணி வைக்கிற
மனுடரை இந்தராச்சியத்திலேஒருவரையுங் காணேன்,
என்ன செய்யப்போகிறேன் நிர்ப்பலமான ரூபமுள்ள
எனக்கும் நளமகாராசருடைய அழகுக்குந் தகுமென்று
நீயல்லவோசொன்னய், இப்பவும் நளமகாராசரண்
டைக்கு நீசீக்கிரமாகப்போய் அவருடனே என்னுடைய
சேதிகளெல்லாம் தெரியப்படச்சொல்லிஅவரைஎன்னு
டனே சேர்க்கவேணும், நீ அல்லாமல் வேறே என
க்கு நம்பிக்கையான பேரில்லை, இதல்லாமல் என்னு
டைய துக்கத்தைச் சொல்லி ஆறுவோமென்ருல் என்
வார்த்தையைக் காதுகொடுத்து கேட்கத்தக்கினதோ
ழிமாருமில்லை எனக்கான மனுடர் இந்தப் பூமியிலேயு
மில்லை. ஆகையினலே, நீயே என்னுடற் பிறப்பாக
வெண்ணி உன்னுடனே என்மனதிலுண்டானபடி நாண
மில்லாமற்சொன்னேன் இனிமேல்நான்சொல்லவேண்
டியதில்லை எனக்கு நீ இந்தவுபகாரஞ் செய்யவேணும்
செய்யாமல் செய்த உபகாரத்திற்குப் பூலோகமுந் தெய்
வலோகமும் கொடுத்தாலும் தீராது, மேகத்திற்குப்
பிரதியுபகாரம் பூலோகத்தார் செய்யமாட்டார்கள் அப்
படிபோல நானும் உனக்குப்பிரதியுபகாரஞ் செய்யமாட்
டேன். நீ எனக்கிந்த வுபகாரஞ்செய்தால் என்சரீர
முள்ளமட்டும் மறவேன், ஓ அன்னமே! நான் கபடமா
கச்சொல்லவில்லை எப்படியும்அந்த நளமகாராஜருக்குத்
தரியச்சொல்லி என்னை ரக்ஷிக்கவேணும், ஓ அன்ன



மே! என்மனதிலிருக்கிற எண்ணத்தை உன்னுடன
சொல்லுகிறேன்கேளென்றுபின்னுஞ் சொல்லுகிருள்,

என்னவென்ருல்,அந்தநளமகாராசா என்னைக்கலி
யாணஞ் செய்தாலாச்சுது இல்லாவிட்டால் என் சரீரத்
தை விட்டுவிடுகிறதே யல்லாமல் மறுபடியும் ஒரு தேச
த்து ராசாவைநான் கலியாணம் பண்ணிக்கொண்டுவா
ழப்போகிறேனே, அவரை நினைத்த, மனதிலேமற்
ெருருராசாவை, நினைக்கப்போகிறேனே, பிரம்மாவினு
டைய எழுத்து தப்பிப்போனலும் என்னுடைய வாக்
குத்தப்பாது, ஓ அன்னமே! அத்தனைகாரியங்களுக்கிட
மாகாமல், மன்மத பாணக்கினியினலேயும், வண்டுகள்,
தும்பிகள், குயில்கள், கிளிகள் இதுகளின் கீதங்களின
லேயும், பூரணச்சந்திர காந்தியினலேயும், இளந்தென்
றலினலேயும், கடல் ஒலியினலேயும், நான்நோகாதபடி
க்கு நளமகாராசாவுடனே மெத்தவுந் தெரியச்சொல்லி
என்னைச் சேரத்தக்கதாகச் செய்து பூமியிலே என்னை
உயிருடனே நிறுத்தி ரட்சிக்கவேணுமென்றுசொன்ன
உடனே, அன்னங்கேட்டுத் தான்வந்தகாரியம் நிறை
வேறிற்றென்று, தன்மனதிலே சந்தோஷமாய் அந்தத்
தமயந்தியைப் பார்த்து ஒருவார்த்தைசொல்லுகிறது.

ஓ அம்மா!சகலத்திற்கும், நானிருக்கிறபோது நீதா
பந்திரியப்படக் காரியமென்ன, நீ என்னுடைய உடற்பி
றப்பென்று எண்ணியிருக்க, நான் உனக்கு இம்மாத்திரங்
காரியஞ்செய்யாவிட்டால் நானிருந்து பலனென்ன உம்
முடையதாயார் உம்மை நொந்துபெற்ருள், என்னைநோ
காமல்பெற்ருளாகையினலே ஓ தமக்கையரே! நீதுக்கப்
படவேண்டாம் அம்மா, அந்தராசாவை உம்முடனே
எப்படியுங் கூட்டிவைக்கிறேன், அதுபரியந்தம் எனக்கு
நித்திரைவாராது, நீ மனது சந்தோஷமாயிரும் என்னை
நம்பும் நான் தெய்வலோகப்பக்ஷி, அபத்தம்சொல்லுகி
றதேயில்லை அம்மா வென்று சொல்ல, தமயந்தியும் ஓ
அன்னமே எப்படியும் இந்தக் காரியத்தைச் சீக்கிரமாக
அனுகூலம்பண்ணி என்னை ரக்ஷிப்பாயென்று சொல்லி
அனுப்பிவைக்க, கூட்டங்களுடனே கூடிக்கொண்டு
மனேவேகமாய்ப் பறந்துபோய் நளமகாராசா பட்டண
த்திலே சேர்ந்தது. அங்கே அந்த நளமகாராஜாவான

வன் மன்மதபாணங்களிலே அடிபட்டு தமயந்தியை நினைத்துக்கொண்டு மல்லிகைக்கொடியால், படர்ந்திருக்கிற புன்னைமரப் பந்தலின்கீழேயிருக்கிற சந்திரகாந்தத் திண்ணையின்பேரிலேயும் பன்னீர்குளத்து ஓரத்திலேயும் பிரதாபத்துடனே புஷ்பமெத்தையின்பேரிலே படுத்திருந்து அன்னப்பக்ஷி எங்கேபோச்சுதோ? வழியிலே போகிறபோது தாமரைத்தடாகங்களைக்கண்டு அதுகளிலேயிருந்து விளையாடுகிறதோ என்னமோ என்றுவிசாரப்பட்டுக்கொண்டிருக்க, அப்போது கூட்டத்துடனே அந்த அன்னம் வந்து ராஜாவைக்கண்டது, நளமஹாராசாவும் மனது சந்தோஷமாய் அந்த அன்னத்தைப் பார்த்து, ஓ அன்னமே! சீக்கிரமாய்ச் சந்தோஷ சமாச்சாரம் என் காதுகுளிரச் சொல்லுவாயென்று சொல்லக்கேட்டு அந்த அன்னம்புன்சிரிப்புடனே சொல்லத் தொடங்கினது.

### அன்னம் தமயந்தியின் இலக்ஷணங் கூறல்.

ஓய் நளமகாராஜரே! கேளும், நான்போன லக்கினம் நல்ல லக்கினமானபடியினாலே அந்தத் தமயந்தியென்கிற பெண் உம்முடைய ரூபத்தைக்கேட்டு அதிக சந்தோஷப்பட்டு உம்முடைய கைவசமானாள், உம்முடைய கோரிக்கை ஈடேறிற்று, இதற்குச்சமுசயமில்லை, அந்தப்பெண்ணுக்கு ஒப்பானபேரை இவ்வுலகத்திலே ஒருத்தரையுங்காணேன், யட்சஸ்திரீகள், கந்தர்வஸ்திரீகள், தெய்வகன்னிகைகள், ரம்பை ஊர்வசி முதலான பேர்களும் அவளுக்குச் சமானமல்ல, ஓய் நளமகாராசரே! பிர்மதேவன்சந்திரனுக்குப் பதில்சந்திரன் பூலோகத்திலே இருக்கவேணுமென்கிற எண்ணங்கொண்டுபிறப்பித்தானோதெரியாது, நான் முகப்பிரீதியாகசொல்லவில்லை, அவள் சௌந்தரியம் பிரமாவே அறியவேணும், சிவந்த தளிரைப்போல பாதங்களும். முத்துகள் பதித்த பவளக்காணைகள்போல விரல்களும், அன்னங்களைப் போலே முழங்கால்களும், இளவாழைபோல தொடைகளும், உடுக்கைப்போலஇடையும், நீர்ச்சுழியைப்போல தொப்புளும், எறும்புத்தாரை விட்டாற்போல ரோமரேகையும், பத்தரைமாற்றுக் தங்ககலசங்களைப்போல ஸ்தனங்களும், காந்தட்பூவைப்போல கைகளும், சங்கைப்



போல கழுத்தும், செந்தாமரை இதழ்களைப்போல கண்களும், சிங்காணிவில்லுகளைப்போல புருவங்களும், வள்ளைத் தண்டுகள்போல காதுகளும், மூன்றாம்பிறையைப் போல நெற்றியும், வண்டோடுபோல தலைமயிரும், குமிழம்பூவைப்போல நாசியும், கோவைப்பழம்போல அதரமும், நட்சத்திரங்களைப்போல பற்களும், பூரணச்சந்திரனைப்போல முகமும், நூறுமாற்று அபராஞ்சி பொன்னைப்போல மேனியும்உடையவள், சித்திரப்பதுமைபோலவிளங்கப்பட்டவள், நடையினாலே மயில்களையுங் கிளிகளையுஞ் ஜெயித்தவள், நகையினாலே மின்னலை ஜெயித்தவள், நீதியினாலே சாஸ்திரங்களை ஜெயித்தவள், நடத்தையினாலே பதிவிரதைகளை ஜெயித்தவள், இனிமேல் உன் தயவினாலே மன்மதனை ஜெயிக்கமாட்டுவாள், இப்படிப்பட்ட பெண்ணான தமயந்தியினுடைய சௌந்தரியத்தைச் சூட்சுமத்திலேசொன்னேன், இரண்டாயிரம் நாக்குள்ள ஆதிசேடனும் அந்தத் தமயந்தியினுடைய சௌந்தரியத்தை வர்ணிக்க மாட்டானென்றால் நான் ஒரு நாவுள்ளபக்ஷி வர்ணிக்கமாட்டுவேனோ? ஓய் நளமகாராஜரே! உம்முடைய ரூபத்தை அவள் முன்னே சொல்லிக் கொண்டாடினேன், அந்தப்பெண் மன்மதவாதையினாலே மிகுதியும்நொந்து அந்தராஜா என்னை சேர்ந்தாலாச்சுது, இல்லாவிட்டால் என் சரீரத்தை விட்டுவிடுகிறேனென்று பிரதிக்கினை செய்துக்கொண்டிருக்கிறாள், நான் பொய் சொல்லவில்லை, இதற்குச் சர்வாந்திரியாமியாயிருக்கப்பட்டவராகிய ஸ்ரீமந் நாராயணரேசாக்ஷி, இதுவல்லாமல் அவளும் நீருங் கூடியிருக்கிறபோது யான் சொன்ன சகலமும் உமக்குச் அப்போது தெரியவரும், ஓ நளமகாராஜரே! நீர் சீக்கிரமாகப்போனால் அவளுக்கு பிராணன் நிற்கும், இல்லாவிட்டால் நிற்கமாட்டாது, அதிசீக்கிரமாய் நீர்போமென்று சொல்லி அந்த நளமகாராசா கையிலே செலவு வாங்கிக்கொண்டு அந்த அன்னம் தன் கூட்டங்களுடனே கூடி எழும்பி ஆகாயமார்க்கமாய்ப் பறந்துபோய் பிர்மாவினுடைய மானதசரசிலே சேர்ந்தது.

கேட்டீரோ தர்மநந்தனரே! அப்புறம் அந்த நளமகாராசா அன்னத்தையனுப்பிவைத்து மன்மதனைக்

கோபித்துக்கொண்டு விரகம் பொறுக்கமாட்டாமல் களைத்துவிழுந்து நித்திரைபண்ணுகிறபோதுமன்மதன் வந்து தன்னைத் தட்டியெழுப்பித் தமயந்தியினுடனே சேர்த்துவிட்டாற்போல சொற்பனங்கண்டு எழுந்திருந்து கலவரப்பட்டு விழித்துப்பார்த்து ஒருவருடனேயும் பேசாமல் மன்மதபாணங்கள் சுறுக்குசுறுக்கென்று தைக்கிறபடியினாலே மிகுதியும்நொந்து ஆகாரம் நித்திரைஇல்லாமல் அரிகீர்த்தனைகளைப் பாடிக்கொண்டு ஒருக்ஷணம் ஒருயுகமாகக் காலந்தள்ளிக்கொண்டு நளமஹாராசா இருந்தான். அங்கேதமயந்தியும் அன்னம்தன்னை விட்டுப்போன நாள்முதற்கொண்டு அதிகவிரகதாபத்தினாலேமனதுநொந்து பொறுக்கமாட்டாமல் பேய்பிடித்தவர்களைப்போலபார்த்ததையேபார்த்துக்கொண்டுசொன்னதையேசொல்லிக்கொண்டு நளமஹாராசா என்கிற பெயரையே மனதில் நினைத்துக்கொண்டுஆர்சொன்னாலுங்கேளாமல் திடுக்கிட்டுகலையைப்பிரிந்த மான்போல மிரண்டு பார்த்துக்கொண்டு வீணை வாத்தியங்களைத் தொடாமலும் நல்ல வஸ்திராபரணங்களைத் தரிக்காமலும் சுகந்த புஷ்பங்களை முடிக்காமலும் நல்லபரிமள வஸ்துக்களைத் தொடாமலும் ஆகாரமும் நித்திரையில்லாமல்கிளிகளுடனே பேசாமலும் எந்நேரமும்விசாரத்தினால்பாங்கிமாருடனே பேசாமலும் சிங்காரவனத்துக்குப்போகாமலும் சலக்கிரீடைபண்ணாமலும் முகத்தில் குடங்கையைஊன்றிக்கொண்டு நளமஹாராசா என்கிற வசனமே அல்லாமல் வேறேவசனமும் நினைவுமில்லாமல் கண்ணீருடனே, நளமஹாராசாவின்மேலே சித்தையாயிருந்தாள், பின்னை ஒரு புருஷரையும்நினையாள் ஏறெடுத்துபாராள், தோழிமாரை கோபமாய்பேசுவாள் ஒவ்வொருவேளை, மன்மதபாணத்தினாலே களைத்துவிழுவாள், ஒரு வேளை தோழிமாருடனே பரிகாசப்படுவாள், வண்டுகள், கீதங்களைக்கேட்டு தூறிக்கொள்ளுவாள்ஒருவேளை கிளிகளைப்பார்த்துசீறிக்கொள்ளுவாள் அன்னப்பக்ஷிபோய் நளமகாராசாவுக்கு என்னுடைய சேதிகளை எல்லாஞ்சொல்லினதோ இல்லையோவென்று நினைப்பாள் அன்னஞ்சொல்லி இருந்தால்அவர்தாமசமாயிருப்பாரா அவருக்கு என்னைபோலொத்த ஸ்திரீ



கள் இருக்கிறார்களோஎன்னமோ தெரியாது, அவரும் என்னுடைய ரூபத்தைக் கேட்டு விரகதாபப்படுகிறாரென்று அன்னப்பக்ஷிசொல்லிற்றே ஆகையினாலே சீக்கிரமாகவரமாட்டாரா ஆனாலந்த பட்டணம்எத்தனை தூரமிருக்கிறதோ தெரியாதென்று பலவிதமாக எண்ணி இதுகளைச் சொல்லிக் களையாறுவோமென்று தோழிமாரைக் கூப்பிட்டால்சீக்கிரமாகவந்தாலாச்சுது வாராவிட்டால் அடி நீங்களெல்லாருங் கூடிக்கொண்டு என்பேரிலே ஒட்டாரம் பண்ணுகிறீர்களோஎன்று கோபிப்பாள் ஒருவேளை சிங்காரவனத்திற்குப் போயிருக்கும்போது புஷ்பங்களுதிர்ந்தால் அயர்ந்துபயப்படுவாள் நிலவைக்கண்டால் வாடியிருப்பாள் சிங்காரமான பாட்டுகளைக் கேட்டால் வெறுத்துப்பாங்கிமாரை திட்டுவாள் ஆராகிலும் பரிகாசமான வார்த்தைகளைச்சொன்னால் அவர்களைக்கதும்புவாள் என்புருஷன்வாராதபடியினாலே அல்லவோ நீங்கள்பரிகாசம் பண்ணுகிறீர்களென்று தூறிக்கொள்ளுவாள் ஒருதோழிபேரைச்சொல்லி ஒருதோழியை அழைப்பாள், ஒரு தோழியை வேலைக் கனுப்பிப் பின்னை ஒருதோழியை அந்தவேலையைக்கேட்பாள் ஒரு வஸ்துவைக்கொண்டுவரச்சொல்லி அதுகொண்டுவந்த பிறகு இதுவேண்டாமென்று பின்னை ஒருவஸ்துவைக் கேட்பாள் இப்படியெல்லாம்பிரலாபப்பட்டுக் கொண்டிருக்கிற வேளையிலே தோழிமார்களெல்லாரும் தமயந்தியைப்பார்த்து அம்மா நீ இப்படி பிரலாபிக்கக் காரணமென்ன எதனாலே இப்படி இளைத்துப்போகிறாய் உன் மனதிலே எண்ணி இருக்கிற ஆலோசனையை எங்களுடனே சொன்னால் நாங்கள் உன்மனதைச் சந்தோஷப்படுத்திவைக்கிறோம் என்றுசொல்லி, அந்தத்தமயந்தியைத்தேற்றித் தோழிமார்கள்தங்களுக்குள்ளே தாங்கள் ஒருத்திக்கொருத்திகேட்டையோ பெண்ணே மன்மதன் கபட வேஷமாய் அன்னப்பட்சியைப்போலவந்து நளமகாராசாவினுடைய குணாதிசயங்களையும்அந்தப்பெண்ணுடனே வர்ணித்துச்சொல்லி அவர்பேரிலே நினைப்புண்டாக்கி வைத்து காமவிகாரத்திலே ருசிக்கப்பண்ணிப்போயினாற்போல காணுகிறது இல்லாவிட்டால் தண்ணீரிலே இருக்கிற தாமரைத்தண்டைப் பக்ஷிக்கிற

ஒரு அன்னப்பக்ஷி இந்தமாயைசெய்யுமா இந்தப்பெண் அதிலே அகப்படுவாளா இதென்னமோ தெரியவில்லை ஆச்சரியமாயிருக்கிறது, மன்மதபாணத்தினாலே நொந்து உண்ணாள், உடுக்காள், பேசாள், தோழிமார்களுடனே விளையாடாள், நகையாள், நளமகாராசாவென்கிற பேரைமறவாள், ஆபரணம்பூணாள், அன்னபானாதிகள் வேண்டாள், நித்திரையுமில்லை, ஆகையினாலே காரியபாவங்கள் எப்படியிருக்குமோதெரியாது, நாம் இனிஎன்ன செய்வோமென்று ஆலோசனைசெய்து இந்தச் சங்கதிகளையெல்லாம் நம்முடைய ராசாவுடனே சொல்லாமற்போனால் நாம் இராசாவினாலே ஆக்கினைகள் பண்ணப்படுவோமென்று தாதிகளெல்லாம் பயப்பட்டுக் கூட்டமாய்கூடிக்கொண்டு முன்னாகத்தானே விதர்ப்பதேசாதிபதியாகிய வீமராசா அண்டைக்குப்போய் நமஸ்காரங்கள்செய்து கைகளைக்கட்டி நின்றுகொண்டு அவருடனே சொல்லுகிறார்கள்.

கேளுமையா ராசசேகரா! தேவரீர் எங்கள்கையில் உம்முடையகுமாரத்தியை ஒப்புவித்தீர், நாங்களும்இதுவரைக்கும் அவளை எங்களாலே கூடினமட்டும் நன்றாய் போஷித்தோம், அவளும்பரிபக்குவமானாள், இனிமேல் அந்தப் பெண்ணைப் போஷிக்க எங்களாலே ஆகாது, அதேனென்று கேட்டீர்களானால் சொல்லுகிறோம்கேளும், நேற்றையதினம் சிலது அன்னப்பட்சிகள் ஆகாயமார்க்கமாகவந்து நம்முடைய பெண்ணண்டையிலே இறங்கிச் சிறிதுநேரம் விநோதமாக விளையாடிக்கொண்டிருந்ததுகள் அதில் ஒரு அன்னம், நான் நளமகாராசாதூதனென்று சொல்லிற்று, அப்போது இந்தப்பெண் தன்னைக் கட்டக் கயிறு தான் சம்பாதித்துக்கொண்டாற்போல அந்த அன்னத்தைப் பிடித்துக்கொண்டாள், அந்த அன்னமும் பயப்படாமலிருந்துக்கொண்டு மனுஷ பாஷையினாலே நளமகாராசாவை வெகுவாய் வர்ணித்து அவளுக்கு ஆசையை மூட்டி சிந்தைகலங்கப் பண்ணி வெகுமானம்பெற்று நளமகாராவின்ரூபத்தைப் பெண்ணின் மனதிலே மறவாமலிருக்கும்படி செய்துவிட்டுப் போச்சுது, அதுமுதற்கொண்டு அந்தப்பெண்விரகதாபப்படுகிறதை நாங்கள் கண்ணிலே பார்க்கமாட்




டோம், இப்படிப்பட்ட விரகதாபம் நாங்கள் பார்த்ததுமில்லை, கேள்விப்பட்டதுமில்லை, ஓ சுவாமி! நாங்களறிந்திருக்கிறமட்டும் வெகு உபசாரங்களுஞ் செய்துபார்த்தோம், என்ன சயித்தியோபசாரம் பண்ணினாலும் மாறவில்லை, புஷ்பமெத்தைகள் மருக்கொழுந்து தாமரைப் புஷ்பங்கள் இதுமுதலானதுகள் காய்ந்துபோகிறதுகள், குளிர்ந்த ஜலத்தில் நிறுத்தினால் அந்த ஜலமுந்தளதளவென்று கொதிக்கிறது, சரீரமும் இளைத்துப்போச்சுது, இவை அபத்தமானவார்த்தைகளல்ல, முத்துத்தாழ்வடமும் சந்தனசீதளமும் பன்னீரும் பொறுக்கவில்லை, ஆகையினாலே யோசனை செய்துபார்த்தால் ஸ்ரீ மகாவிஷ்ணுவே வந்து நளமகாராசாவாய்ப் பிறந்திருக்கவேணும், ஆனபடியினாலே இந்தப் பெண்ணுக்கு அந்த நளமகாராசாவின்பேரிலே மிக்க பிரியமாயிருக்கிறது, இனி க்ஷணநேரமானாலும் பொறுக்கமாட்டாள், ஆகையினாலே ஓ சுவாமி! இந்தப்பெண்ணுக்கு இப்போதுதானே சுயம்வரஞ் சாற்றிவைத்தால் சகலதேசத்துராசாக்களும் வருவார்கள், அவள் பாக்கியம் யாருக்கிருக்கிறதோ அவர்கள் கலியாணம்பண்ணிக்கொள்ளுகிறார்கள், நளமகாராசரும் வருவார். அவர்பேரிலே அந்தப்பெண்ணுக்கும் பிரியமேயொழிய மற்றொருராஜாவின் பேரிலில்லை, நீங்கள் இனிமேல் பெண்ணைச் சும்மாவைத்திருக்கலாகாதென்று சொல்ல, தோழிமார் சொன்னபடியே சகல தேசத்து ராஜாக்களுமறியும்படிக்கு விதர்ப்பராஜாவும் ஓலையெழுதி யானையின் பேரில் தமயந்திக்குச் சுயம்வரமென்று பேரிகையறைவித்தான். அதுகேட்டு, அங்க-வங்க-கலிங்க-காஸ்மீர-காம்போஜ-நேபாள-மலையாள-பாஞ்சால-மச்ச-பாண்டிய திரிகர்த்த-மாளவ-கோசல-சிங்கள-கொங்கண-வங்கண-சிந்து-மத்திர-அவந்தி-காசி முதலான ஐம்பத்தைந்து தேசாதிபதிகளாகியராசாக்களும் தங்கள் தங்கள் ரதகஜதுரகபதாதிகளுடனேயும் வஸ்திராபரண அலங்கிருதராய் குடை-கொடிகள்-ஆலவட்டங்கள்-வெண்சாமரைகள் இதுகளுடனேயும் நாகசுர மேளங்கள்-வசந்தாமேளங்கள்-சங்கீதமேளங்கள் முதலான பதினெட்டு மேளவாத்தியங்களுடனேயும் ஜெயத்தொனிகளுடனேயும்

வந்து விதர்ப்பபுரி பட்டணத்தைச் சுற்றிலும் தங்கள் தங்கள் விருதுக்கொடிகளுடனே வெவ்வேறே தண்டிறங்கினர்கள், அப்போது நிடததேசாதிபதியான நளமகாராஜாவுந் தம்முடைய ரத கஜ துரகபதாதிகளுடனே சகல வேடிக்கைகளுடனே வந்து ஓரண்டையிலே தண்டிறங்கித் தன் இஷ்ட தெய்வமான ஸ்ரீமந்நாராயணமூர்த்தியை நோக்கி, அந்தத் தமயந்தி இந்த ராசாக்கள் பங்கிலே போகாமல் என்பங்கிலே வரத்தக்கதாகத்தயவு பண்ணி ரக்ஷிக்கவேணுமென்று தியானம் பண்ணிக் கொண்டிருந்தார்.

நளமகாராஜன் தூதுசென்ற அத்தியாயம்.

இங்ஙனம் இப்படியிருக்கையில் மிகவுங் கலகப் பிரியரான நாரதமகாமுனி கேட்டு சந்தோஷப்பட்டு நாம் ஒரு கலகமுண்டாக்க வேணுமென்று மனதிலே நினைத்து அதிசீக்கிரமாகத்தெய்வலோகத்திற்குப்போய் சகல தேவர்களுடனேயும் நிறைந்து கொலுவாயிருக்கிற தேவேந்திரனைக்கண்டு அவருக்கு ஆசீர்வாதம்பண்ணி அவர்செய்த பூசைகளைக்கைக்கொண்டு அவர்போடுவித்த ஆசனத்திலே உட்கார்ந்து அவருடனேசொல்லுகிறர், ஓ தேவேந்திரனே! பூலோகத்திலேதாகிலும் விந்தையுண்டானல் வந்து சொல்லச்சொன்னீ ராகைகையினலே நான் இப்போது ஒரு விந்தை சொல்லுகிறேன் கேளும், விதர்ப்பதேசத்து ராஜாவாகிய வீமராஜாவின் குமார்த்தியான தமயந்திக்குச் சுயம்வரம்சாட்டிஞர்களென்றுஐம்பதைந்துதேசராஜர்களும்அங்கேபோனர்கள், அந்தப்பெண்ணினுடைய அழகுக்குச்சரியான பெண்கள் தெய்வலோகத்திலும் பூலோகத்திலும் ஒருவரையுங்காணேன், நான் அறியாத லோகங்களில்லை, இந்த லோகத்திலேயும் அந்த தமயந்திக்கீடான பெண்களில்லை, உம்முடைய பெண்சாதியாகிய இந்திராணியும் அவளுக்கு ஈடல்லவென்று சொல்லி நாரதர் தம்மிச்சையாய்ப்போனர், தேவந்திரனும் அதுகேட்டு காமாந்தகனுய் மயக்கமுற்று அந்தக்ஷணத்தில்தானே தன்னுடனேகூட மூன்றுபேர் திக்குப்பாலகர்களைக்கூட்டிக் கொண்டுவெகுசந்தோஷத்துடனே நவரத்தினமயமான விமானத்திலேறிக்கொண்டு வந்து ஆகாயமார்க்கத்தி



நாரதர் தேவேந்திரசபையில் சம்பாஷிக்கிறது.

லே நின்று பூலோகத்து ராஜாக்களையெல்லாம்பார்த்து சௌந்தர்யமான தமயந்தியையும் நன்றாகப்பார்த்து அதிகமோகத்துடனே மயங்கி அந்தப்பெண்ணைத் திக்குப்பாலகர்களுக்கு காண்பித்து பார்த்தீர்களோ திக்குப் பாலகர்களே! என்று தேவேந்திரன் சொல்லுகிறான்.

இந்தப்பெண் பொற்பதுமையோ, மன்மதனுடைய புஷ்பபாணமோ அல்லது மின்னற் கொடியோ. சித்திரப்பதுமையோ, இப்பெண்ணினுடைய அழகைப் பாருங்கள், இந்தப்பெண் எவர்களுக்கு லபிக்கப்பாக்கியமிருக்கிறதோ என்று சொல்லி இப்பால் வந்து நளமகாராஜாவைப் பார்த்து திக்குப்பாலகர்களுடனே தேவேந்திரன் சொல்லுகிறான், அதோ வந்திருக்கிற நளமகாராஜா இந்தப்பூலோகத்து மனுஷர்களுக்குள்ளே மன்மதனைப்போலவும் இளஞ் சூரியனைப்போலவும் இருக்கிறான், இந்த நளமகாராஜாவை தேவதாஸ்திரீகள் பார்த்தாலும் தேவர்களை வேண்டார்கள், சந்திரனுக்கும் இத்தனை அழகுண்டோசொல்லுங்கள், சந்திரவட்டக்குடையின்கீழே ஒருபூரணச்சந்திரன் உதித்தாற்போலேயிருக்கிறான், இவனுக்கு ஸ்ரீ மகாவிஷ்ணு அம்சமில்லாமல் இந்தரூபம் வாராது, இந்தப்பெண்ணுக்கு இவனே புருஷன். யானைகள் போகிறவழியிலே எறும்புகள் தாரையிட்டாற்போலே இந்த ராஜாக்கள்ஏன்போகிறார்கள், தமயந்திஇவர்களைப்பார்க்கப் போகிறாளோ ஆனால் நாம் ஒரு உபாயம் பண்ணுவோம், நளராஜாவைத்தானே அந்தப்பெண்ணண்டைக்கு நம்முடைய தூதனாக அனுப்பி நம்மிலேஒருத்தருக்கு பெண்சாதியாகச் சம்மதிக்கச்சொல்லுவித்தால் நளமகாராஜா வெட்கிப்போய்விடுவான், எனக்கு ஒருவேளை வாய்த்து நான் அந்தப்பெண்ணை அமராபதிக்கி அழைத்துக்கொண்டு போனால்இந்திராணிகர்வமடங்குமென்றுதேவேந்திரன் சொல்லிக்கொண்டுவந்து அநேகம் ராஜகூட்டமத்தியிலே, நக்ஷத்திரங்களுக்கு நடுவாகச் சுக்கிரபகவான் எப்படி பிரகாசிப்பானோ அப்படி பிரகாசிக்கிற அந்த நளமகாராஜாவைக்கிட்டி, வாராய்நளமகாராசாவே யென்று தேவேந்திரனழைக்க, அந்தநளமகாராசா எழுந்திருந்துதேவேந்திரன்முதலிய மற்றநால்வரையுஞ்சேவித்துக்

கைகட்டிக்கொண்டு நான் என்னபாக்கியம் பண்ணினேனோ உங்களை இன்றைக்குக் கண்டேன், என்னுடைய ஜென்மம் பவித்திரமாச்சுது, என்னுடைய கோரிக்கைகளும் ஈடேறினதுகள். தன்னியனானேன் என்பேரிலே தயவுவைத்து என்னை உங்கள்ஊழியசகாயனாகக் கைக்கொண்டு உங்கள்சித்தத்திற்கு வேண்டினகாரியங்கள் என்ன உண்டோசெய்வித்துக் கொள்ளுங்களென்று சொல்லிப் பின்னும் உங்களுக்குப்பணிவிடை செய்தால் என்னுடையசென்மசாபல்யமாமென்றுசொன்னான். நளமகாராசா அப்படிச் சொன்னவுடனே தேவர்கள் சொல்லுகிறார்கள்.


ஓ நளமகாராசரே! நீர் ஒரு காரியம் எங்களுக்குச் செய்தீராகில் உபகாரமாக எண்ணிக்கொள்ளுவோம். அந்தகாரியம் உம்மாலே ஆகவேணும் பின்னை ஒருவராலேயுமகாது, அதென்னவென்று கேட்கில் நாங்கள் இந்தத் தமயந்தியின்பேரில் மோகத்தினாலே யிங்குவந்தோம் நீர் எங்கள் தூதனாகப்போய் அவளுக்குத் தெரியப்படச்சொல்லி எங்களுக்குள்ளே ஒருத்தரைக் கலியாணம் பண்ணத்தக்கதாகப் பேசி சம்மதிக்கச் செய்துவரவேணும், நான் எப்படி போவேனென்று நீசிந்தனைப்படவேண்டாம். உம்முடையரூபம், ஒருத்தருக்குந்தெரியாமல் அவளுக்குமாத்திரம் தெரியும்படிக்கு மந்திர உபதேசம் பண்ணுவோம். எப்படியுமந்தப்பெண்ணை எங்கள் வசமாகும்படிக்குப் பண்ணிக் கொண்டுவாரும்போம் என்றார்கன், அதைக்கேட்டு அந்த நளமகாராசாவானவன், திடுக்கிட்டு, ஓஒ நமக்கு என்ன ஆபத்துவந்ததென்று நினைத்து அறிவுகலங்கி அவர்களுடனே ஒருவார்த்தை சொல்லுகிறான், ஓ தேவர்களே லோகத்திலே வேஷதாரிகள் பாவங்களுக்குப் பயப்படார்கள் நீங்களும் அந்த வேஷதாரிகளே ஆனீர்கள், இந்தபாவமுண்டோ நானும் உங்களைப் போலதான் அந்தப்பெண் எனக்கு அகப்படுமென்று யெண்ணிவந்திருக்கிறேன், இதுவல்லாமல் நான் கொஞ்சமான ஊழியக்காரனைப் போலேயும் தூதனைப் போலேயும் பொய்பேசி இந்தக்காரியம் நிருவாகம் பண்ணமாட்டுவேனோ யென்னிடத்திலிருக்கிறதெல்லாம் வாய்வலு



வான பேச்சுகளும் ரோஷமும் கனமான வார்த்தைகளுமே அல்லாமல் ஸ்திரீகள்மனமிறங்கப்பேசுகிற இனிய சொல்லுகளில்லை இந்த இந்திரர் அமராவதி பட்டணத்தை ஆளப்பட்டவராயிருந்தும் தேவர்களுக்கெல்லாம் கிரீடாதிபதியாயிருந்தும் உங்களுடனே கூடிக்கொண்டு இப்பேர்ப்பட்ட வார்த்தைகளை எனக்குச்சொல்லத் தகுமா? இது ஒரு ராசதர்மமா? நீங்களறியாத தர்மமிருக்கிறதா? என்னைவிட்டால் இந்தப்பூலோகத்திலே உங்களுக்கு ஆள் கிடையாதா? ஓ தயாபரர்களே! இப்படிப்பட்ட காரியங்களுக்கு என்னைப்போலொத்தவன் எங்கேயாகிலுந்திரியச்சேகண்டீர்களோ? இது தர்மந்தானா? நான் இந்தப்பெண்ணுக்கு மனதுவரப் பேசமாட்டுவேனோ? ஏ சுவாமிகளே! என்பேரில்தயவுசெய்து என்னை ரக்ஷியுங்களென்றுசேவித்து வேண்டிக்கொள்ளுகிற நளமகாராசாவைப்பார்த்து தேவர்கள் பின்னுஞ்சொல்லுகிறார்கள்.

ஓ நளமகாராசரே! நீர் சத்தியகீர்த்தி யாச்சுதே, எங்களுக்கு இஷ்டமான ஊழியஞ் செய்கிறேனென்று சொல்லி நீர் வாக்குத் தப்பலாமா? பூலோகத்து ராசாக்களுக்குத் தப்பலாமென்றுஞாயமுண்டோ? சொல்லும் இதுவல்லாமல் அந்தப்பெண் உம்முடைய பேரிலே அதிக பிரியமானபடியினாலே நீர்சொன்ன பேச்சுத்தள்ளாமற் கேட்பாள், எப்படியுங் காரியானுகூலமாகும், நீர் அவளுடைய மோகத்தினாலே தப்பித்துக்கொள்ளுகிறீர், எங்களுக்கு தூதுக்கு ஆள் கிடையாதா? ஆதிசிவன் முதல் யாவர்களும் எங்கள் பேச்சைத் தள்ளிப்போடமாட்டார்கள், நீர் அதிக்ரமித்துப்பேசுகிறீர், என்கையிலாகாதென்கிறது பெருமையோ? தேவர்களுக்குச் சொன்னவார்த்தை தள்ளாமற் செய்கிறதே பெருமை, எங்களுக்கு இந்த உபகாரம் பண்ணினால் சகல ராசர்களும் உன்பேரில்சந்தோஷப்படுவார்கள், அது உமக்கும் கனமல்லவா? ஓ நளமகாராசரே! தேவர்களுக்குக் கலியாணம் பண்ணிவைத்தால்உம்முடையகீர்த்தி மகமேருகிரியின்பேரிலே இட்ட திருவிளக்குப்போல சாஸ்விதமாய்ப் பிரகாசித்துக்கொண் டிருக்கும், தேவர்களுக்கு ஒரு உபகாரம் பூலோகத்திற்பண்ணினால் கோடிகன்னி

காதானம் பண்ணினபலன் வரும், நீர் தர்மங்களையறி
யாத ராசருமல்லவே, தேவர்கள் வார்த்தையைத் தள்
ளப்போகாது போமென்றார்கள். அதைக்கேட்டு அந்த
நளமகாராசா ஆலோசனைபண்ணிக்கொண்டு தேவானு
கூலம் எப்படியிருக்குமோ, என்னத்திற்கு தேவர்களு
டைய வார்த்தையைத் தள்ளவேண்டுமென்று நினைத்து
நல்லதென்று சம்மதித்தான், பின்னும் தேவர்கள் சொ
ல்லுகிறார்கள், ஓ நளமகாராசாவே! நீர் அங்கேபோன
வுடனே தமயந்தியும் அவள் தோழிமாரும் உன்னு
டைய ரூபத்தைக்கண்டு வர்ணிப்பார்கள், நீர் எங்களு
டைய தூதனென்று சொல்லும், அந்தத் தமயந்தி உம்
முடைய வார்த்தைக்கு உடன்படாமற்போனால் எங்களு
டைய பெருமை அவளுக்கு நன்றாகத் தெரியப்படச்
சொல்லி எங்களில் ஒருவரைக் கலியாணம் பண்ணும்
படியாகப் பேசி சம்மதிக்கச்செய்து வாருமென்றார்கள்.
அதைக்கேட்டு அந்த நளமகாராசா தேவர்களைப்பார்த்
து என்னாலே வஞ்சனையில்லாமற் பேசுகிறேன், அவள்
மனதையும் நானறியமாட்டுவேனோ? உங்களுக்குத்தெரி
யாதது ஒன்றுமில்லை, நான் போய்வருகிறேனென்று
விடைபெற்றுக்கொண்டு ஒருவர்கண்ணிலும் புலப்படா
மல்தமயந்தியிருக்கிற அந்தப்புறத்துக்குப்போய்அவள்
முன் நின்றவுடனே தமயந்தி மெத்த திகிற்பட்டு அவ
ருடையரூபத்தைப்பார்த்து, இவர் ஸ்ரீமந்நாராயணரோ
மன்மதரோ தெரியாதென்று தன் சரீரம் புளகிக்கப்
பாங்கிமார் பக்கத்தில் ஒளித்திருந்து, இவர் நளமகா
ராசரே யாகவேணும், மற்றொருத்தர் இங்கே வரப்பய
படுவார்களென்று பாங்கிமாருடனே சைகையாய் அவ
ருக்கு சிங்காதனம் போடுங்களென்று சொல்ல, அவர்
கள் போட இவர் உட்கார்ந்தபிறகு சற்றுநேரம் பொறு
த்து எங்கேயிருந்து வந்தீரென்றுகேட்க, தமயந்தியை
பார்த்து அந்த நளமகாராசன் ஓ பெண்ணே! நான்
நிடததேசத்தையாளப்பட்ட ராசன், என்பெயர் நளன்
நான் வந்த காரியஞ் சொல்லுகிறேன், தேவேந்திரன்,
குபேரன், வருணன், எமதர்மராசன் இவர்கள் நான்கு
பேரும்தூதனுப்பவந்தேன், உன்பேரிலவர்கள்மோகப்
பட்டுவந்தார்கள் அவர்களில்யாரைகலியாணம்பண்ணிக்



நளமகாராசா தமயந்தியிடம் தூதுசென்றது.

கொள்ளுகிறாயென்று உன்னைக்கேட்டு எங்களிலொருவருக்கு அனுகூலப்படுத்தி வாவென்று என்னையனுப்பினார்கள், ஆகையாலுன் அந்தப்புரத்திற்கு நான் வந்தேன், அவர்கள் மெத்த நல்லவர்கள், தேவர்கள் திக்குப்பாலகர்கள், அவர்களை ஒருவரும் செயிக்கமாட்டார்கள், அப்படிப்பட்ட தேவர்கள் உன்னைச் சேரவேணுமென்று நினைத்திருக்கிறார்கள், அப்படிப்பட்ட மகாபுருடர்தபசுபண்ணினாலும் உனக்குக்கிடைக்கார்கள், உன்னுடைய பாக்கியத்தை என்னவென்றுசொல்லப்போகிறேன், ஓ பெண்ணமிர்தமே! என்பேச்சுக்குச் சம்மதிப்பாயேயானால் நீ சாவ்வதமாயிருக்கலாம், தெய்வலோகத்தில் உன்னைப்போல் குணரூபமுள்ள பெண்களில்லையாம், பூலோகத்துப்பெண்களுக்கு தெய்வலோகத்தார் தபசுபண்ணினாலும் கிடைக்கார்கள், உன்னுடைய பாக்கியவசத்தினாலே கிடைத்தார்கள்.

இதுவல்லாமல் காமதேனு, கற்பகவிருக்ஷம், பாரிஜாதம், சிந்தாமணி, சங்கநிதி, பதுமநிதி, உச்சைச்சிரவம், ஐராவதம், அலங்காரமாயிருக்கிற உப்பரிகைகள், சித்திரச்சாலைகள் இதுகளெல்லாங் குறையில்லாமல் தேவேந்திரனுக்குண்டு, மற்ற மூன்று தேவர்களுக்கும் இப்படியே குறைவில்லாமல் செல்வங்களும் பராக்கிரமங்களுமுண்டு, இதுவல்லாமலுன்னைக் கலியாணம் பண்ணினால் தங்கள் பட்டபு தேவியைத் தேடுகிறதேயில்லையாம் நீயுமவர்களுங்கூடியிருக்கிறதென்றுசொல்ல சொன்னார்கள், பின்னும் தேவேந்திரன் சொன்னது நான் தேவர்களுக்கெல்லாம் ராஜா, என்சொல்லை சகலமான பேர்களுந் தள்ளுகிறதேயில்லை, அப்படிப்பட்ட நான் தமயந்திபேச்சையழிக்கிறதில்லை, இந்திராணிமுதலான சகல தேவதாவ்திரீகளெல்லோருஞ் சேவித்துக்கொண்டிருப்பார்களென்றும் திரிலோககர்த்தாவாகிய்தம்மையே கலியாணம் பண்ணிக்கொள்ளச்சொல்லி தேவேந்திரர்சொல்லச்சொன்னார், எமதர்மராஜா புண்ணியபாவங்களை விசாரிக்கிற தர்மகர்த்தனாயிருக்கிறேன், எனக்கு ஒன்றுங் குறைவில்லையென்றும் இனிமேல் தன் பெண்சாதிபேரிலே மனம்வைக்கிறதில்லை யென்றும்சொல்லச்சொன்னார், வருணன் தான் மேற்றிசைக்கு ராஜாவென்

றும்சொல்லச்சொன்னார், குபேரன் தன்வீட்டிலேநவநிதி
களாகியஒன்பதுவகைரத்தினங்களும்ராசிராசியாய்கிடை
க்கிறதென்றும் நீ தன் வீட்டிற்குவந்தால் தன்னுடனே
சகல வேடிக்கையுடனேயும் கூடியிருக்கிறதேயல்லாமல்
ஒரு பெண்பேரிலேயும் ஆசைப்படுகிறதில்லையென்றுஞ்
சொல்லச்சொன்னார். ஆகையினாலேஓபெண்ணே! என்பே
ச்சைத்தட்டாமல் இவர்களிலொருவருக்கு நீ பாரியாக
வேணும் என்னை அவர் மெச்சத்தக்கதாக நடப்பித்துக்
கொண்டு மேன்மையாயிருக்கிற தேவபோகங்களை அடை
வாயென்றும் இவர்களிலுனக்குச் சம்மதியானபேர் ஆ
ரென்று நளமகாராசர்கேட்க. அதுகேட்டுதமயந்திபுன்
சிரிப்புடனே தலையையசைத்து ஒருவார்த்தை சொல்லு
கிறாள், ஓராசேந்திரா! நீர் அன்னப்பட்சியுடனேசொல்
லியனுப்பி எனக்கு மையலெழுப்பிவைத்துமன்மதபாண
ங்களினாலே என்மனதைக் கலக்கிவைத்ததுமல்லாமல்
இப்போது ஏதோ ஒரு விந்தையான வார்த்தைகளைச்
சொல்லவந்தீரோ ஓஓ உமக்குதர்மமா, நீரிங்கே வருகிற
நிமித்தியம் சகலமானராசாக்களையும் என்தகப்பனழைப்
பித்தார் என்புத்தி ஸ்திரீபுத்தி யென்று அன்னப்பட்சி
சொன்னதினால் உமக்கு என்னுடைய சுபாவங்களெல்
தெரிந்திருந்தும் என்மனதைச்சோதிக்கவந்தீரோ ஆனா
லும் என்னமாயிற்று நான் பூலோகத்து மானிடஸ்திரீ
அவர்கள் தேவர்கள், இப்படி யென்னைக்கோரி உம்மை
தூதனுப்புவிக்கலாமா? தேவர்களுக்குநான் மகள்மரியா
தையாச்சுதே அவர்களை நான்எப்போதும் என்கோரிக்
கையை யீடேற்றச் சொல்லி சேவித்துக்கொண் டிருக்கி
றேன் அவர்களைநான் தகப்பன்மார்களாகஎண்ணியிருக்
கச்சே அவர்களும்மை எவ்விதமாகத்தூதனுப்பினார்கள்,
நீர் சகலதருமங்களு மறிந்தவராயிருந்தும் இப்படித்
தூதுமார்க்கமாய் வந்தீர்கள், அவர்கள்புத்திமயங்கிஉம்
மைப்போகச்சொன்னால் நீர் எப்படி வருவீர், ஆனால்
என்ன தேவர்களென்றல்லவோதூதுவந்தீர், அந்ததே
வர்கள் தெய்வலோகத்து யக்ஷஸ்திரீகளைக் கூடியிருக்
கின்றபேர்கள் பூலோகத்திலே தங்களால் பிறந்த பெண்
கள் பேரில் ஆசைப்படலாகாது, ஆகையினால் அவர்கட்
கிதுஞாய மல்லவென்று சொல்லும், இப்போது நீர்



என்னைக்கலியாணம் பண்ணிக்கொண்டு சகல வேடிக்கை
களுடனே என்னைக் கூடவேண்டும் மன்மதபாணங்களு
டைய வேதனை பொறுக்கக்கக்கூடவில்லை, இந்தக்ஷணத்
தில்தானே என்கோறிக்கையை யீடேற்றும், அல்லவெ
ன்றால் என்பேரில் உமக்கு மனதில்லாவிட்டால் அதை
யும் இப்போதே சொல்லும் நான் சரீரத்தை விட்டுவிடு
கிறேன் ஓ மன்மதராசரே! ஒரு விசேஷஞ் சொல்லுகி
றேன் கேளும், அதன்னவென்றால் உம்மை யல்லாமல்
மற்றொருபுருஷர் எனக்குச் சம்மதமில்லை உம்மிடபாத
சாக்ஷியாகஇப்பூலோகம்தெய்வலோகம்இவைகளில்இரு
க்கப்பட்ட புருஷர்களெல்லாம் எனக்குத் தகப்பன்மா
ரென்று சொன்ன தமயந்தியைப்பார்த்துமெத்த ஆச்சரி
யப்பட்டு நளமகாராஜா, ஒருவார்த்தை சொல்லுகிறார். ஓ
பாக்கியவதியாகிய பெண்ணே! நான் தேவர்கட்காகத்
தூதாகிவந்தேன், நீ இப்படிப்பட்ட விசேஷஞ் சொன்
னால் நான் சம்மதிப்பேனோ, தேவேந்திரனனவர்தேவர்
களுக்குளசமானனவர்யமதர்மராசாலோகத்திலே துஷ்ட
நிக்கிரக சிஷ்டபரிபாலனம் பண்ணுகிறவர், குபேரர்நவ
நிதிகளும் படைத்துச் சகல பாவங்களையும் பரிகா
ரம் பண்ணத்தக்கவர், வருணதேவர் சகல காரியங்களி
லும் வல்லமையுண்டானவர். இப்படிப்பட்ட வல்லமை
களுள்ள தேவர்களைக் கலியாணம் பண்ணிக்கொள்ள
மாட்டேனென்று சொல்லி மனுஷர்யேல் மோகமாய்
கலியாணம் பண்ணிக்கொண்டால், சகல தேசத்துப்
பெண்களு முன்னையேசார்சளா யட்சர்கின்னரர் கிம்புரு
டர்காந்தருவர் முதலானபேர்கள் தொழத்தக்கதாகதேவ
ர்களை சேருகிறதே உனக்குநன்மை பூலோகத்து மனிதர்
தெய்வலோகம் வேணுமென்று தபசுபண்ணுவார்கள்.
அப்படிப்பட்டதெய்வலோகத்தார் பாததூளிக்குஞ்சரிப்
படாத என்னை நீகோறினால் உன்புத்தியை ஆர் மெச்சு
வார்கள். இதுநல்ல காரியமல்லவென்று நளமகாராசா
சொன்னார். அதைக்கேட்டு தமயந்தி வெகுகிலேசத்து
டனே கண்ணீர் சொரிந்து ஒருவார்த்தை சொல்லுகி
றாள், ஓராசாவே! எனக்குதேவர்கள், தகப்பன் மாயா
தையென்று முன்னமே சொன்னேனே மறுபடியுமந்த
வார்த்தை யெடுத்துப் பேசுகிறதுமக்குத் தர்மமா, நீரே

புருடன், நானே பெண்சாதி, இதற்கெவ்வளவும் பிச
கில்லை, நீர் இனி மறுவார்த்தை பேசவேண்டாம், என்
னுடன் கலந்திருந்தாலாச்சுது, இல்லாவிட்டால் உம்
மிட பாதசாட்சியாக நானென்பிராணனை வைத்திருக்
கிறதில்லை, அப்படி நான்செய்தால்ஸ்திரீயத்தி உம்மை
ச்சேராமற் போகாது ஓராஜனே பெண்கள் சீவனை விடு
கிறதற்குப்பயப்படமாட்டார்கள் நீருமறிந்திருப்பீர்விரு
தாவிலே ஸ்திரீயத்தியை ஏன்கட்டிக் கொள்ளுகிறீர்தே
வர்கட்கு அனந்தமான தெண்டம் பண்ணினேனென்
றும் அவர்களெனக்குத் தகப்பன்மார்கள் நானவர்களு
க்குப் பெண்ணென்றும் பூலோகஸ்திரீகளைப் பார்த்து
தேவர்களிச்சைப்படலாகாதென்றும் தமயந்தி சொன்னா
ளென்று, நீர் சொல்லிவிடு மென்றாள். நளமகாராசா
இதுகளைக் கேட்டுக்கொண்டு தேவர்க ளண்டைக்குப்
போய் நமஸ்காரம் பண்ணி அவர்களுடனே தமயந்தி
சொன்ன வார்த்தை யெல்லாம் ஆதியோடந்தமாகச்
சொன்னார். அதைக்கேட்டு தேவர்கள் நளமகாராசாதம
யந்தியுடனே பேசின வார்த்தையெல்லாம், அந்தரத்
தியானமாகப் போய் அவரையறியாமற் கேட்டிருந்து
வந்தவர்களான படியினாலே, நளபதியைக்கொண்டாடி
எங்கள் நிமித்தம் போகத்தகாத காரியத்திற்குப் போய்
வெகுபிரயாசைப்பட்டாய் உன்னுடைய மனதுக்குச்சரி
யான மனது எங்களுக்கும் வாராது எங்கள் பாக்கிய மிப்
படி யிருக்குமானால் நீரென்னசெய்வீர், உம்மைவெறுக்
கக் காரியமென்ன தூதரைக்கொண்டு ஒருகாரியமானால்
அவர்களை மெச்சுகிறதும், ஆகாவிட்டால் தூஷிக்கிற
தும் பெரியோர்கட்கு நல்ல காரியமல்ல நாங்களிந்தநன்
றியை மறக்கிறதில்லை, நீர்போமென்று சொல்லி அனு
ப்பிவிட்டு அவர்பின்னே, தேவர்கள் விதர்ப்பபுரிக்குவந்
தார்கள்.

### ௯-வது சுயம்வர அத்தியாயம்.

கேட்டீரோ தர்மநந்தனரே! அப்போது வீமராசா
பதினெட்டுவகை, மேளவாத்தியங்களுமுழங்கச் சகல
வேடிக்கைகளுடனேயும், அந்த ராசாதிராசனை நள
மகாராசாவை எதிர்கொண்டுபோய் அழைத்துவரச்சே
பட்டணத்து செனங்கள், வேடிக்கைப் பார்க்க உப்பரி



கைகளின் பேரிலிருந்து மங்கிலியஸ்திரீகளுங் கன்னிகா
ஸ்திரீகளும் மங்களசேஷைகளிறைத்தார்கள், புண்ணிய
ஸ்திரீகள் கற்பூர ஆலாத்திகள் நவரத்தின ஆலாத்திக
ளெடுத்தார்கள். சகல பெண்களும் அந்த நளமகாராசா
வைப் பார்த்து ஒருத்திக்கொருத்தி, சொல்லுகிறார்கள்,
எப்படியென்றால், அம்மா பார்த்தையோ, இந்தநளமகா
ராசா பூரணச்சந்திரன்போல முகமும் மன்மதனைப்போ
லழகும், சிறுவயதும் எவ்வர்ணமும் திவ்வியதேகமும்
படைத்திருக்கிறார், இப்படிக்கொத்த ராசாவை இதுவ
ரையிலும் எங்குங்கண்டதில்லை அநேகம் பெரியராசாக்க
ளிங்கே வந்திருக்கிறார்களே அவர்களிலே ஒருத்தரு
மிப்படிக்கொத்த அழகில்லை, பார்த்த கன்னிகா ஸ்திரீ
கள் மயங்கி பிர்மித்து, விழித்தகண் சிமிட்டாமல் பார்க்
கிறபோது அவர்கள் கட்டியிருக்கிற புடவைகள் தன்னி
ச்சையாய் நழுவிப்போக பெருமூச்செரிந்து இவருக்கிப்
படிப்பட்ட சொரூபத்தைபிரம்மா என்னமாயுண்டாக்கி
னானோ வென்றார்கள், பின்னும்ஒருவரோடொருவர்பார்
த்தீர்களோ, இவர்ராசாவல்ல சூரியன், சந்திரன், குபே
ரன், தேவேந்திரன், அக்கினிதேவன், மன்மதன்,இவர்
களிலாரோ ஒருவராக ஆகவேணுமென்றும் வெள்ளை
யானை யுண்டானால் தேவேந்திரனென்று சொல்லலா
மென்றும், சங்கு சக்கர சார்ங்கமும், வைசந்தி வனமா
லையும் உண்டானால், ஸ்ரீமந் நாராயணனென்று சொல்ல
லாமென்றும், கோழிக்கொடியும்,வேலாயுதமும்உண்டா
னால், குமாரசுவாமி யென்று சொல்லலாமென்றும் இப்
படிப் பலபலவிதங்களாகச் சொல்லிக்கொண்டாடி வே
டிக்கையாகத் தெருவீதியிலே வருகிற நளமகாராசாவை
வீமராசர்கண்டு,ஆனந்தத்துடனே யவருக்குத்தக்கவிடு
திகள் விடுத்து அதிலே ராஜாதிராஜாகிய நளமகாரா
ஜாயிறங்கி உச்சாகத்துடனே யிருந்தார்.

அப்போது ராஜாதிபதிகளான சேரராசா, சோழ
ராசா,பாண்டியராசா, கேரளராசா, காஸ்மீரராசா சித்தி
ராசா, சௌராஷ்டிரராசா, காசிராசா, அயோத்திராசா,
வங்காளராசா, பாஞ்சாலராசா,மகதராசா, ஈழத்துராசா
ஒட்டியராசா,அங்கராசா, காம்போஜராசா, விராடராசா,
கோசலராசா, கொங்கணராசா,அசுபதி,கெசபதி, நரபதி

இவர்கள்முதலான ஐம்பத்தைந்துதேசத்துராசாக்களும் அவரவர்களுக்கு, வீமராசாவிட்ட விடுதிகளிலே இறங்கினர்கள். அப்போது வீமராசாவும் கிரமத்துடனே அறுசுவை பதார்த்தங்கள் கச்சாய வகைகளுடனேயும் போஜனஞ் செய்வித்து கெந்த புஷ்ப பரிமளங்களும் தாம்பூலமுங் கொடுப்பித்து ஆடல் பாடல் சமஸ்தமும் குறைவுபடாமல் நடப்பித்து ஆனந்தத்துடனே தன் பட்டணமெல்லாம் நவரத்தின மயமாகவும் தங்கமயமாகவுஞ்சிங்காரித்து சந்தோஷத்துடனே மற்றுநாள் நல்லமிர்தயோகமும் சுபமுகூர்த்தமும் ஆனபடியினாலே தமயந்தியைச் சிங்காரித்து அழைத்துவாருங்களென்று தாதிகளுக்குச் செலவுகொடுத்தான்.

அப்படியே தாதிகளும் தமயந்தியண்டைக்குப் போய் வெகு சந்தோஷத்துடனே அம்மா யெழுந்து வாருமென்று சொல்லி யழைந்துவந்து தமயந்திக்கு அப்பியங்கஸ்நானஞ் செய்வித்துத் தலைமயிரையாற்றி கோதி சிணுக்கறுத்து வாசனை யூட்டி நவரத்தின மிழைத்த குச்சி,குப்பி, சடைபில்லையணிந்து, மல்லிகை, முல்லை, இருவாட்சி, சண்பகம், குருவேர், மருக்கொழுந்துகள் முடித்து, கண்ணுக்கு மைதீட்டி, நெற்றியிற் திலர்தமிட்டு வாசனையுடைத்தாகிய திவ்ய சந்தனம்பூசி நவரத்தினமயமான சரிகை ரவிக்கைதரித்து பொற்பட்டாடையுடுத்தி, மூக்குத்தி, சிந்தாக்கு, நெற்றிப்பட்டம், ரத்தினவாளி, ரத்தினவோலை, அஸ்தகடகம், வன்னசரம், முத்துமாலை, மாணிக்கபதக்கம், கவரிகளை, ஒட்டியாணம், காலாழி, பீலி, பாடகம், சிலம்பு, தண்டை, கொலுசு முதலான ஆபரணங்களெல்லாம் வேடிக்கையாக அலங்காரம் பண்ணிவைத்து நிலைக்கண்ணாடி நாட்டி, அந்தப்பெண்ணை முத்துப்பல்லக்கிலேற்றுவித்து முத்துக்குடைகள், நவரத்தினக்குடைகள், வெண்சாமரைகள், ஆலவட்டம், விருதுகளுடனே வேடிக்கையாக தாதிகள் பிடித்துவர, சகல வாத்தியங்களுடனே பெண்ணையழைத்துக்கொண்டு போய் வீமராஜா முன்விட்டார்கள்.

வீமராஜாவும் தன்குமாரத்தியைப்பார்த்து சந்தோஷமாய் ஓ அம்மா! உன் கோரிக்கைப்படிக்கு இதோ



நளமகாராஜா முதலான ராஜாக்களெல்லோரும் வரிசைவரிசையாகச் சிங்காதனத்தின்பேரி லிருக்கிருர்கள். ஆகையினல் அவர்களிலே உனக்கிஷ்டமானபுருஷனை கோரி மாலையிடலாமென்று மெதுவாய்ச்சொல்லி மந்திரி பிரதானியர்களையும் தன்குமாரனையும் பின்னேயனுப்பித் தானும் எச்சரிக்கையுடனே சர்வாயுத ரக்ஷணைகளுடனேயும் நடக்க, முன்னே தாதியர்களில் விவேகமுள்ள ஒரு தாதி தமயந்தியைப்பார்த்து, அந்தராசாக்களுடையபிரதாபகுணங்களை சொல்லுகிருள், ஓ அம்மா! இவர் குந்தல ராஜர், இவர்கூர்சரராஜர், இவர்கோஸல ராஜர், இவர் காம்போஜ ராஜர், இவர் காஸ்மீரராஜர், இவர் மணவாளராஜர். இவர் மகதராஜர், இவர் சௌராஷ்டிரராஜர், இவர் பாஞ்சாலராஜர், இவர் சோனகராஜர், இவர் மச்சராஜர், இவர் நிடதராஜர், இவர் குருராஜர், இவர் சிந்துராஜர், இவர் சோழராஜர். இவர் கொங்கணராஜர், இவர் திரிகர்த்தராஜர், இவர் அவந்திராஜர், இவர் நேபாளராஜர். இவர் மத்திரராஜர், இவர் அங்கராஜர் என்று இந்தப்பிரகாரம் ஐம்பத்தைந்து தேசத்துராஜாக்களுடைய பிரதாபங்களும் ஐஸ்வரியங்களும் நன்ருக வர்ணித்துப் பராக்கு எச்சரிக்கை அம்மாவென்று, தாதிகள் சொல்லிக்கொண்டு வரவும், தமயந்தி நளமகாராஜாவின் பேரிலே நினைவாய் எல்லாரையும் வரிசைவரிசையாக பார்த்துக்கொண்டுவந்து கடைசியிலே நிற்கிற நிடததேசத்து ராசாவாகிய நளமகாராஜாவைக்கண்டு தாதி வர்ணிக்கிறபோதுமுன்னே வந்திருந்த நாலுதேவர்களும் நளமகாராஜாவைப்போல்தாங்களும் உருவ மெடுத்துக்கொண்டு பக்கத்திலே தானே வரிசையாயிருந்தார்கள்.

அப்போது தமயந்தி சமுசயப்பட்டு பின்வாங்கி இதுதேவர்களுடைய மாய்கைபோற்காணகிறது, இதற்கோருபாயந் தேடவேண்டும், இல்லாவிட்டால் தேவர்களை நாம் சாதிக்கமுடியாது, எங்கேயாகிலும் ஐந்து நளமகாராஜாக்களுண்டோ? இவர்கள் தேவர்களே, இதற்கு சம்சயமில்லை, மாயரூபமெடுத்துவந்து இவர்கட்கு மாலையிடாவிட்டாலும் ஜயித்துப் போடுவார்களென்றெண்ணி ஆலோசனை பண்ணிக்கொண்டுபோய் உரு

மாறியிருக்கிற தேவர்களைப்பார்த்து இரண்டுகைகளையுங் கூப்பித் தெண்டனிட்டுச் சொல்லுகிறாள், ஐயா தேவர்களே! உங்கள் மாய்கையை நானறியமாட்டுவேனோ? ஒன்றுமறியாத சிறுபெண், தேவரீர்களெனக்குத்தகப்பன்மார்கள், நான் உங்களுக்குப் பெண் உங்களுடைய மாய்கைகளை என்னிடத்தில் காண்பிக்கிறது உங்களுக்குத் தர்மமல்ல,என்பேரிலேதயவுபண்ணிரக்ஷியுங்கள், நான் சுகமனுபவிக்கத் தக்கதாக என்கோரிகையை ஈடேற்றுங்களென்று சொன்னவுடனே தேவர்கள்சந்தோஷப்பட்டுத் தங்கள் மாயரூபத்தைவிட்டு நிஜரூபத்தைத் தரித்துக்கொண்டு அந்தரத்தில் நின்று தமயந்தியைப்பார்த்து ஓபெண்ணே! நீயும் நளமகாராஜாவும் கலியாணம் பண்ணிக்கொண்டு சுகமாயிருங்களென்று வாழ்த்திப் போயினார்கள்.

## தமயந்தி நளமகாராஜாவுக்கு மாலையிடுதல்.

அந்தச் சமயத்திலே சகலானராஜாக்களும் தமயந்தியைப்பார்த்து ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளுகிறதாவது ஓ, ராஜர்களே! மந்திரிகளே! சேனாபதிகளே! பார்த்தீர்களோ இவளழகைப் பிரமதேவன் என்னமாய் சிருஷ்டித்தானோ தெரியாது, இங்கிருக்கப்பட்ட சகலமானபேர் மனதுகளையும் உருக்கவந்தாளோ, பூரணச்சந்திரனோ, மின்னற்கொடியோ, மாணிக்கதீபமோ, மன்மதன் கணையோ, ரதிதேவியோ, அன்னப்பேடோ, இந்திராணியோ, கரும்புவில்லோ, ஜிதேந்திரியரையும்விரகமெழுப்புகிற மோகினியோ,அல்லவென்று சகலத்தையுமழைப்பிக்கிற மாய்கையோசிற்றின்பக் கற்கண்டோ, விரகசஞ்சீவியோ, வீமராஜா எத்தனைகோடி தபசுகளை பண்ணி பெற்றபெண்ணோ, இந்தச் சௌந்தரியாகிய பெண்ணைக் கலியாணம் பண்ணுகிறதற்கு இப்பூவுலகத்தில் வசிக்கின்ற இராஜக்கூட்டங்களில் நளமகாராசாவுக்கு பாக்கியம் நேரிட்டிருக்கிறுப்போல் காணுகிறது. அவனென்ன நோன்பு நூற்றிருக்கிறானோ, எத்தனை பாக்கிய சாலியோ தெரியாது, அதோ பார்த்தீர்களோ ஆகாயத்திலே யட்சகின்னரர், கிம்புருடர், கருடகாந்தருவர் முதலிய சகலதேவர்களும், கும்புகும்பாய்க் கூடிவேடிக்கைப் பார்க்கிறார்களென்று இப்படி சகல ராசாக்களும் ஒருவ



தேவேந்திரன் முதலானவர்கள் நளமகாராஜாவிற்கு வரங்கொடுத்தல்.



223211

ர்க்கொருவர் சொல்லிக்கொள்ள, அந்தச்சமயத்தில் தமயந்தியென்பவள் சீக்கிரமாக ராஜாதிராஜனை நளமகாராசரண்டையில்போய் தன் கையிலிருந்த மாலையை அவர்கழுத்திலேதரித்தாள்.


அப்போது ஆகாயத்தில் தேவதுந்துமிகள் திமிதிமியென்று முழங்கினதுகள், தேவர்கள் பாரிஜாதபுஷ்பங்களை சலசலவென்று வருஷித்தார்கள், வீணைகள் மீட்டி நாரதர் முதலானவர்பாடினார்கள், கந்தருவர்கள் கொண்டாடினார்கள், ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோர்த்தமை, தானியமாலி, கருணவதி முதலான எக்ஷஸ்திரீகள் நாட்டியம் பண்ணினார்கள், சகலதேவர்களும், அந்தப் பெண்ணுக்குத்தகுந்த புருஷன் நளமகாராஜாவேயல்லாமல் வேறொரு ராஜா தகாதென்று சொல்லி சந்தோஷப்பட்டார்கள், அப்போது அவ்விடத்தில்வந்திருந்த ராஜாக்களெல்லோரும் அதைப்பார்த்து ஒருத்தருடனே யொருத்தர் சொல்லாமல், ரணக்களத்தில் முதுகு கொடுத்து ஓடினாற்போல வெட்கப்பட்டு நாலு திக்கிலுஞ் சிதறிப்போனார்கள். அப்போது வீமராஜா தன்னுடையசதுரங்கபலத்துடனேயும்சகலவேடிக்கைகளுடனேயும் நளமகாராஜாவை எதிர்கொண்டுவந்து கொண்டாடினர்,

தேவேந்திரனும் நளமகாராஜாவைப் பார்த்து, ஓ ராஜாவே! நீர்பண்ணுகிற யாகம், எக்கியங்களெல்லாம் விக்கினங்கள் வாராமல் நிறைவேறத் தக்கதாகவும் நீர் தொடப்பட்ட பதார்த்தமானதுதேவாமிர்தத்துக்கொப்பான பாகமாகவேணுமென்றும் வரங்கொடுத்தேன், நீயுந் தமயந்தியும் அபிவிர்த்தியாய் வாழ்வீர்களென்று சொல்லி ஆசீர்வாதம் பண்ணினர். எமதர்மராசாவும் நீ பண்ணுகிற தருமம் அபிவிர்த்தியாய் விளங்கக்கடவதென்றுசொன்னர். வருணதேவன் உனக்குப்புண்ணிய தீர்த்தங்கள்எங்கேவேணுமென்று நினைக்கிறாயோ அங்கெல்லாம்உண்டாகக்கடவதென்று சொன்னர். சாம்பவமூர்த்தியும் பார்வதாதேவியும் ஓராசாவே! உனக்குச்சகல செல்வங்களும் சகல சுபங்களும் உண்டாகக் கடவதென்று ஆசீர்வாதம் பண்ணினர்கள். ஸ்ரீமகாவிஷ்ணுவும் லக்ஷ்மியும் ஓ ராஜாவே! உமக்கு சகல கீர்த்திப்பிர

திஷ்டையும் அஷ்ட ஐஸ்வரியங்களுமுண்டாகிச் சுக ஜீவியாயிருக்கக்கடவதென்று வாழ்த்தினார்கள்.

மணம்புரி அத்தியாயம்.

மன்மதனும் நளமகாராசாவைப்பார்த்து வெட்கப் பட்டு இவனைநாம்அழகிலே செயிக்கமாட்டோமென்று அசரீரி வாக்கியமாய் சுபம் சுபமென்று சொல்லிப்போ னான். இது நிற்க, அப்பால் வீமராசா மிகவுஞ் சந்தோ ஷப்பட்டு நளமகாராசாவை சகல சம்பிரமத்துடனே மிகவும் விமரிசையாக பதினெட்டுவகை மேளவாத்தி யத்துடனே யழைத்துக்கொண்டு தன்னரண்மனைகளெ ல்லாம் வேடிக்கையாகவும் மிக விநோதங்களாகவும் பசு மைதங்கிய பந்தல் போடுவித்து நவரத்தினமயமாக அலங்கரித்து பார்க்கப் பதினாயிரங்கண்கள் வேணுமெ ன்று அனைவரும் சொல்லிக்கொள்ளவும் கலியாணப்பந் தலிலே நவரத்தின மிழைத்த சிங்காதனத்தில் நளமகா ராசாவை சகலசம்பிரமத்துடனே உட்காரவைத்து சங் கீதமேளங்கள் நாகசுரமேளங்கள் கர்னா பூரி முதலான மேளவாத்தியங்கள், முழங்கப் பேரிகைசப்திக்கவும் குல குருவாகிய வசிட்டமகாமுனியும், தமனக மகாமுனியும் ஆக்யாபித்தபடி நளபதிக்குநலங்குவைத்து கெங்காதீர் த்தத்தில் ஸ்நானஞ்செய்வித்துபீதாம்பரம் அஸ்தகடக கிரீடாதிகளும் ஆபரணங்களாலும் சிறப்பித்து முகூர்த் தக்கால்நட்டு வாகனருடராய் கணபதி வாலயஞ்சேர் ந்து மகாகணபதிக்கு சோடசவுபசாரத்துடன் பூசைசெ ய்வித்து தூபதீபாராதனை தெரிசித்து சூரைதேங்கா யுடைப்பித்து அரண்மனை வாயில்முகப்பி லுரியவர்க ளால் வீரகண்டாமணி யணிந்திருக்கும் விரலுக்குமிஞ்சி யணியச்செய்து தமயந்திக்கு நலங்கிட்டு காவேரிதீர்த் தத்தால் மங்கள ஸ்நானஞ்செய்வித்து நூதனபீதாம்ப ரம் தரிக்கச்செய்து சகலவித ஆபரணம் பூட்டி பொற் சரிகை ரவிக்கை யணிவித்து மாலைதரிப்பித்து சால் கர கம்அரசாணி குடவிளக்கு அம்மிஇந்த பஞ்சமூர்த்திக ளுக்கும் சோடச உபசாரத்துடனே அர்ச்சித்து பாலி கை நவதானியங்களைப் பிரித்து தூபதீப யாராதனை செய்து தரிசித்தபின் பூமிதேவி வெட்கும்படியானபாத விரல்களுக்குக்காலாழிபூட்டி ஆலஞ்சமர்ப்பிக்க நளபதி



யையும், மேற்படி பஞ்சமூர்த்திகளுக்கு ஆராதனைசெய்
வித்து தமயந்தி வலப்புறத்திலும் நளபதியை யிடப்
புறத்திலும் அமரச்செய்து வசிஷ்டரும் தமனகமுனிவ
ரும் ஒரு ஓமகுண்ட மமைத்து நவக்கிரக தேவதைகளை
ஆவாகனஞ் செய்து நவசமித்துவகையாலும் நவதானி
யவகையாலும் பசுவின்நெய்யாலும்நவக்கிரக பூசைசெ
ய்வித்து தபனபியரசனைக்கொண்டு பொரியிடச்செய்து
அவருக்கு ஜீவரத்தின கணையாழி பூட்டி சகல உபசார
மூஞ் செய்து பின்பு வீமராசா, நளமகாராசருக்கு தரு
மார்த்தகாமிய மோட்ச சாம்பிராச்சியத்துடனே வாழ்ந்
திருக்க எனது குமாரத்தியாகிய தமயந்தியை தமக்கு
பாணிக்கிரகணம் செய்துக்கொள்ளகொடுத்தேனென்று
நளமகாராசன்கையில் தாரைவார்க்க அங்கீகரித்து மங்
கிலிய சூத்திரத்தை திரிமூர்த்திகள் தேவேந்திராதிகள்
ரிஷிகள் முதலாகிய பெரியவர்கள் தொட்டு ஆசீர்வதிக்
கக் கடலொலிபோல் வாத்தியம் சப்திக்க தமயந்தியை
பழமமிர்தம் உண்ணச்செய்து மங்கிலிய தாரணம்செய்
தார் பின்பு மணவரையில் தமயந்தியின் சுண்டுவிரலை
பிடித்துக்கொண்டு நளமகாராசன், அரசாணி சால்கரக
மான பஞ்சமூர்த்திகளை மூன்றுபிரதட்சணஞ் செய்வித்
து தமயந்திபாதம் அம்மி மிதிக்கவும், நளபதி கரங்க
ளில் எடுக்கவுஞ் செய்வித்து, நளபதி அப்பால் தமயந்
திக்கு அருந்துதியைக் காட்டச்செய்து தமயந்தியும்
தரிசித்தபின் இடப்புறம் தமயந்தியும் வலப்புறம்நளபதி
யுமாய், மணவரையி லிருக்கச்செய்து, பாலமிர்தம் கொ
டுத்து ஆலஞ்சுற்றி பின்பு மங்கிலியப் பெண்கள் சோப
னம் பாடினார்கள்.

அப்போது புண்ணியஸ்திரீகள் நவரத்தின சேஷை
யிட்டார்கள், பரம சொரூபியான சாம்பவ மூர்த்தி
யும் பார்வதாதேவியும் ஸ்ரீமகாவிஷ்ணுவும் ஆதிலட்சு
மியும் பிரமதேவரும் சரஸ்வதியும் தேவேந்திரனும்
இந்திராணியும், சூரியரும், சாயாதேவியும், சந்திரரும்,
ரோகணிதேவியும், முப்பத்து முக்கோடி தேவர்களும்,
நாற்பத்தெண்ணாயிர ரிஷிகளும், சப்தரிஷிகளும் திக்
குப்பாலகர்களும் அவரவர்கள் தங்களுடைய தேவிமா
ர்களுடன் நளமகாராசாவுக்கு சேஷையிட்டு ஆசீர்வா

தம்பண்ணினார்கள். பிறகுசகலமான பிராமணர்களுக்கும் தட்சணை தாம்பூலங் கொடுத்து அனுப்பிவிட்டு மற்றப் பேர்களுக்கெல்லாம் அறுசுவை பதார்த்தங்களுடனே ஜனங்களு மிடுவித்து சந்தனம்புஷ்பம்தாம்பூலங்களும் கொடுத்து வித்துவான்கள் புகழ தேவதாசிகள் நாட்டியம் பண்ண சகலசம்பிரமத்துடனே விளங்கினார்கள்.

## கலிதோன்று அத்தியாயம்.

தேவேந்திரன் நளமகாராசாவினிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு தன்னைத் தேவர்களுஞ் சேவிக்கத்தெய்வலோகத்திற்குப் போகிறபோது மகா பலசாலியாகிய சனீஸ்வரன், தமயந்தியைக் கலியாணம் பண்ணவேணுமென்று தன்மனதிலே தானே நினைத்து தலைமயிரவிழ அரையில்கட்டிய வஸ்திரம் நழுவச் சரீரமெல்லாம் வேய்வையோடப் பூமியதிர கிடுகிடுவென்று மகாவேகத்துடனே ஓடிவரச்சே தேவேந்திரன் கண்டு, கலகலவென்று நகைத்து ஓசனீஸ்வரரே! அதிவேகமாக ஓடிவருகிறபடியினாலே சரீரம் வேர்க்கிறது உத்தரீயம் கீழேபுரளுகிறது சிகை யசைந்தாடுகிறது பலத்த காரியத்தை உத்தேசித்துப் போகிறாப்போல் காணுகிறது அதென்ன காரியஞ் சொல்லுமென்று தேவேந்திரன் கேட்க, சூரிய குமாரனான சனீஸ்வரன் குஞ்சிரிப்புக் கொண்டு மகா சந்தோஷத்துடனே சொல்லுகிறான், ஓ தேவராசனே கேளும்பூலோகத்திலே வீமராசன் குமாரத்தியான தமயந்திக்கு சுயம்வரம் நாட்டுவித்தாரென்று இன்று நான்கேள்விப்பட்டேன், ஆகையால் தேவதாபெண்களும் அழகிலே அவளுக்குஒருவரு மொப்பில்லை, அவளழகைச்சொல்ல என்னால் முடியாது, காரிய மிஞ்சிப் போகிறது நான் சீக்கிரமாய்ப் போகவேணும் ஐயனே அந்த தமயந்தியைக்கலியாணம்பண்ணிக்கொண்டு இப்போதுதானே அழைத்துக்கொண்டு வரவேணும், அந்தப்பெண்ணுக்குப் எப்போது சுயம்வரம் நாட்டுவார்களோவென்று வெகுநாளாய்க் காத்திருந்தேன், இன்றைக்கு உங்களுடைய தயவினாலே என்கோரிக்கை யீடேரிற்று ஆகையால் என்னுடைய மனதுகுளிர சகல சம்பிரமத்துடனே கலியாணம் பண்ணிக்கொண்டு வருகிறேனென்று சொல்லிவிட்டு நடக்கிறபோது சனீஸ்வரன்



பின்னுஞ் சிறிது வசனஞ் சொல்லுகிறான், ஓ தேவர்களே நான் வருகிறபோது வழியிலேசிறிது அவசகுணங்களைக் கண்டேன் அதனாலே மெத்த விசனமாயிருக்கிறது, இந்த கலியாணத்திற்கு எங்கே விகாதம் வருகிறதோ பின்னை யாராகிலும் கலியாணம் பண்ணிக்கொள்ளுகிறார்களோதெரியாது, என்மனமானது ஐயனே நிற்கவில்லையே நான் எப்படியாகிலும் அந்தப்பெண்ணைக் கலியாணம்பண்ணி அழைத்துவந்து உம்முடைய வனத்திலேதான், மன்மதகிரீடை நடக்கவேணும், ஆனபடியினாலே ஓ தேவேந்திரரே! நீர் போகிறபோது உம்முடைய நந்தவனக் காவற்காரருடனே நாம்வந்தால்தடை பண்ணப்போகிறார்கள் என்று அனேகமாக வெறியன் பேசுகிறாப்போல் சநீஸ்வரன், சொல்ல அப்போது அவர்சொன்ன விசேஷங்களை யெல்லாம் தேவேந்திரன் முதலான திக்குப்பாலகர் கேட்டு ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்து படபடவென்று கைகொட்டி நகைத்துச் சொல்லுகிறார்கள்.

ஓ கலிராசாவாகிய சனீஸ்வரரே! நீர் எங்கேயிருந்தீர், இன்னம் அந்தப் பெண்ணினுடைய சமாச்சாரம், கேட்கவில்லையோ, பூலோகத்து ராசாவான நளமகாராசா அந்தப்பெண்ணைக்கலியாணம், பண்ணினான், நீர் ஏன் போகிறீர் வாரும், நாங்களுமந்தப் பெண்ணைக்கோரித்தான், எங்களாலே ஆனவுபாயஞ் செய்து பார்த்தோம், அதற்குட்படாம லந்தப்பெண் நளமகாராசாவைத்தானே,கலியாணம், பண்ணிக்கொண்டாள், நாங்களந்தப் பெண்ணினுடைய ஆசையைவிட்டு பிராப்தமில்லை யென்றெண்ணி இதோ போகிறோம் நீர் வாருமென்று சொன்னதைச் சனீஸ்வரன்கேட்டு மெத்தகோபித்து, ஓஓ எப்படியாச்சுது, பார்த்திரோவென்று பல்லை கடித்து மீசை துடிக்க முகத்தில் வியர்வைகாண, இரண்டுகண்களிலும், நெருப்புப்பொறி பறக்க, அட்டகாசம் பண்ணி தேவேந்திரன் முதலான தேவர்களைப்பார்த்து சனீஸ்வரன் சொல்லுகிறான், ஓ தேவர்களே! நளமகாராசா நம்மைப் பார்க்கிலும் அதிக அழகுள்ளவனோ, அதை யெண்ணிப் பாராமல் அந்தப்பெண் செய்ததைப் பார்த்தீர்களோ, நம்மைச் சற்றாகிலும் அவள் எண்ணா

மற்போனுள், தேவர்களான நம்மைப்பார்க்கிலும் அழ
கும் ஆண்மையும் ஐஸ்வரியமும் குணமும் உள்ளபேர்
கள் ஆரிருக்கிறுர்கள்.

ஆகையால் மனிதர்முன்னே, உன்னைப்பங்கப்படுத்
திவைத்து நளமகாராசாவைத்தானே கலியாணம் பண்
ணினுளல்லவா, நல்லது உங்கள் மனோபாவமும் அறி
ந்து இப்படிச்செய்தாள்பார்த்தீர்களோ, அவள்வேணு
மென்றே செய்ததேயல்லாமல்வேறில்லை, நல்லது இப்
படிச் சமுசயமாயிருக்கச்சே சகல நியாயங்களுமறிந்த
அந்த நளமகாராசாதான் எப்படிக்கலியாணம் பண்ணு
வான், அவனென்ன அவ்வளவு அதிகாரம் உள்ளவனு?
அவன் பிடித்ததே தனுசா? அவன் பிடித்ததே கொ
டையா? நல்லதாகட்டும் என்னுடைய பாராக்ரமத்தை
அவன் அறியானே? பிர்மருத்ராதி தேவர்களும் என்
முன்னே நின்று நிர்வகிக்கமாட்டார்களே, இவன் நர
புருஷன் எம்மாத்திரம், ஏன்பேர் சொன்னமாத்
திரத்திலே ஈரேழுபதினுலுலோக அண்ட சராசரங்க
ளெல்லாங் கிடுகிடுவென்று நடுங்கிப்போகச்சே இவனு
என்முன்னே நிற்கிறவன், நல்லது ஆகட்டும், உங்கள்
மனமானதை நான் குளிரப்பண்ணி வைக்கிறேன், அவ
னும் அந்தப்பெண்ணுங்கூடி சுகமனுபவிக்கப் போகி
றுர்களா? அவர்களிருவருங்கூடி சுகித்திருக்க நான்
பார்க்கப்போகிறேனே? ஆகையினுலே இப்போது என்
னுடைய பிரதிக்கினையைக் கேளுங்கள், என்னவென்
றுல், நான் இந்தக்ஷணத்திலே பூலோகத்திற்குப்போய்
அந்த நளமகாராசாவுடனே சூதாடத்தக்கதாக ஒருரா
ஜா வ ஏவிவிட்டு அவர்களை சூதாடுவித்து அந்த நள
மகாராஜனை உபாயத்தினுலே தோற்பித்து அவனு
டைய சீமையெல்லாம் பறிப்பித்து அவனுடையபெண்
சாதியைப்பிரிவித்து அந்தகாரமானநடுக்காட்டில் அலை
யச்செய்து அவனுடைய சொரூபத்தையும்மாற்றிவை
த்து ஓட்டைப் பானையைக் கையிலெடுத்துக்கொண்டு
தனக்கு பதுகிகட்டுகின்ற ராஜாவுக்கு சுயம்பாகியாய்ப்
பண்ணிவைக்கிறேன், ஓ தேவர்களே! நானிப்படிச்
செய்யாமற் போனேனுகில் நீங்கள் என்னை சூரிய
பகவான் குமாரனென்றுசொல்லவேண்டாம், நானெரு



காரியஞ்செய்ய நினைக்கிறதேயில்லை, வேணுமென்று
நினைத்தேனேயாமாகில் அது நிறைவேருமற் போகிற
தில்லை, என்னுடைய சமாசாரம் உங்களுக்கு நன்றுகத்
தெரியுமல்லவா? அந்த தமயந்தி என் கையிலே சிக்கிக்
கொண்டு தான் படப்போகிறபாடு அறியாமல் நளமகா
ராசாவைக் கலியாணம் பண்ணினுளல்லவா? அவளையும்
இனிமேல் என்னை நினைக்கும்படி அலையப்பண்ணிவைக்
கிறேன், எப்படி சுகப்படுகிறுர்களோ பார்ப்போம், ஆக
ட்டும் நீங்கள் என்னுடைய திராணியைப்பார்க்கப்போ
கிறீர்களென்று சபதஞ்சொல்லி சனீஸ்வரன் தேவேந்
திராதி தேவர்கள் கையிலே விடைபெற்றுக்கொண்டு
பூலோகத்தில் வந்து வீமராஜாபட்டணத்திலே யிருக்
கிற நளமகாராஜாரண்டைக்குப் பிராமணரூபமாய்ப்போய்
அவருடைய சாந்தகுணத்தையும் ஆசாரத்தையும் பூத
தயவையும் பெரியோர்களிடத்திற் பயபக்தியையும் சற்
சனரக்ஷையையுந் துற்சன சிக்ஷையையும் பார்த்து மன
துகலங்கி திகிலெடுத்து, நாம் நினைத்த காரியத்திற்கு
விக்கினம் வரும்போலிருக்கிறது, இப்படிப்பட்ட மகாத்
மாவை நாம் பீடிக்கமாட்டுவோமா என்று விசாரத்துட
னே சிந்தாக்கிராந்தனுய் காலம் வருமளவுங் காத்துக்
கொண்டிருந்தான்.

இப்படியிருக்கச்சே, நளமகாராஜா பெண்சாதியுந்
தானும் கலியாண வேடிக்கைகளெல்லாம் ஆனபிற்பாடு
ரதிக்கிரீடைகள் சந்தோஷத்துடனே அனுபவித்துக்
கொண்டிருந்து சிலதுநாளைக்குப்பிறகு தமயந்தியைப்
பார்த்து நளமகாராஜாவும் ஒருவார்த்தை சொல்லுகி
றுர், கேளும் பெண்ணே! என் பிராணநாயகி! நாமிவ்
விடத்திற்கு வந்து வெகுநாளாச்சுது, நம்முடைய ராச்
சியமென்னவாச்சுதோ தெரியாது, எத்தனை காலமானு
லும் நம்முடைய பட்டணத்தைவிட்டு இவ்விடத்திலே
யிருக்கலாமா? ஆகையினுலே நாம் இனியரைக்ஷணமா
கிலும் இங்கேயிருக்கக்கூடாது, நீ போய் உன் தாய்
தகப்பனுக்கு தெரியப்படச்சொல்லி அவர்கள் கையிற்
சந்தோஷமாக செலவு பெற்றுக்கொண்டுவா நம்மிட
ஊருக்குப் போவோமென்று சொன்னவுடனே தமயந்தி
கேட்டு எழுந்திருந்து தெண்டனிட்டு, ஓ பிராணநாதா!

தேவரீர் சொன்னபடியே என் தாய்தகப்பனிடத்தில்
செலவுபெற்றுக்கொண்டு நம்முடைய தேசத்திற்கு நாம்
போகவேண்டியதல்லாமல் அன்னியதேசத்திலே நாம்
ஏன் இருக்கவேணும் இதுமெய்தான், இப்போது நான்
போய் விடைபெற்றுக்கொண்டு வருகிறேனென்று சொ
ல்லிவிட்டு தமயந்தி தன் தாயாரண்டைவந்து அவர்க
ளுக்குத் தயவுவரும்படி கொஞ்சின வார்த்தைகளாகப்
பேசி பக்திவிசுவாசத்துடனே சேவித்துநின்று சொல்
லுகின்றாள், ஓ அம்மா! இந்தராச்சியத்தில் பெண்பிற
ந்தால் அவளுக்குப் பிறந்தவீடு சொந்தமில்லையென்ற
வார்த்தை நிஜமென்று இன்றைக்குத் தெரியவந்தது.
அதெப்படியென்றால், என்புருஷன் தங்கள் பட்டணத்
திற்குப் போகவேண்டுமென்று சொல்லி உங்களிருவரு
டைய கையிலே செலவுவாங்கிக்கொண்டு வரச்சொன்னா
ரென்று சொல்லி இரண்டு கண்களிலும் முத்துகளுதிர்
ந்தாப்போலே கண்ணீர் சொரிகிற தன் குமாரத்தியைப்
பார்த்துத் தாயானவள் தன் கண்களிலேயும் நீர் சொரி
ந்து துக்கித்துச் சொல்லுகிறாள்.

அம்மா மகளே! என் கட்டிக்கரும்பே! என் கரு
ணைக்கடலே! என் கண்ணாட்டியே! என் தாயே! இன்
றைக்கு என்னைப் பிரிந்துபோகும்படியாச்சுதே, நான்
பட்டணத்திற்குப் போய்வருகிறேனென்று சொல்கிறா
யே, உன்னைவிட்டு நான் அரைக்ஷணமாகிலும் பிரிந்தி
ருக்கமாட்டேன், இதற்கெப்படியென்று அந்த பாக்கிய
வதி புத்திரசோகம் பொருக்கமாட்டாமல் அடியுடனே
வெட்டிச்சாய்த்த மரம்போல நிலத்திலே தொப்பென்று
விழுந்து மூர்ச்சையடைந்தாள், தமயந்தியும் தன்தாயை
பார்த்து விசனத்தை நிற்வகிக்கமாட்டாமல் மூர்ச்சித்து
தானும் விழுந்தாள், பிறகுபாங்கிமார் செய்த சைத்தி
யோபசாரத்தினாலேஇருவரும் மூர்ச்சை தெளிந்துஎழு
த்திருந்து உட்கார்ந்துக்கொண்டு வெகு சோகப்படுகிற
தை பாங்கிமார் கண்டு அவர்களும் பொறுக்கமாட்டா
மல் பரிதாபப்பட்டிருக்கச்சே வீமராசா அவ்விடத்தி
ற்கு வந்து அவர்கள் துக்கப்படுகிறதைப் பார்த்துத்தா
னும் சற்றே புத்தி மயங்கி விசாரப்பட்டு உடனே தைர்
யசாலியானபடியினாலே சோகத்தைவிட்டு தன் குமாரத்



தியையும் பெண்சாதியையுந் தேற்றி அவர்கள் சோகத்
தை நீக்கி சந்தோஷப்படுத்தி பிறகு மருமகனாகிய நள
மகாராஜாவையழைத்து அவருக்குத் தக்க மரியாதை
பண்ணி தனகனகவஸ்து ரதகஜதுரகபதாதிகள் சதுர
ங்கசேனைகள், பல்லக்குகள், குலாரவண்டிகள், கனகதண்டி
சப்பிரகூட மஞ்சங்கள், சீதனாபரணங்கள், நவரத்தின
ங்கள், இவை முதலானவஸ்துக்களெல்லாம், நளமகாரா
சருக்குக் குறைவில்லாமல் வெகுமானமாகக் கொடுத்து
தன் குமாரத்திக்கு நவரத்தினமயமான அம்மனாரும்
பொன்மயமான பள்ளாங்குழிமனையும் உயர்ந்த ஆபர
ணங்களும் சரிகை ரவிக்கைகளும் தங்கமயமான வஸ்தி
ரங்களும், பின்னையும், என்னென்னவகை, வஸ்திரங்க
ளுண்டோ அவைகளெல்லாஞ் சீதனமாகக் கொடுத்து
விட்டு வீமராசன் மகளைப் பார்த்து ஒருவசனஞ் சொல்
லுகிறான்.

ஓ அம்மா, என்கண்மணியாகிய அதிக சவுந்தரிய
முள்ள தமயந்தியே நீ கோரினபடியே ஐம்பத்தைந்து
தேசத்து ராசர்களுக்கும் அதிபதியான நளமகாராசா
உனக்குப் புருஷனாகக்கிடைத்தார். நாங்களுன்னை தபசு
பண்ணிப்பெற்றதினால் ஐம்பத்தைந்துதேசத்துராசாக்க
ளையும் கண்டோம் சாஸ்வதமான கீர்த்தியையும் படை
த்தோம் பிரதிஷ்டையும் அடைந்தோம், உனக்கு அவ்
விடமும், இவ்விடமுஞ்சரியே, அங்குமிங்குமாய் வரப்
போகவிரு இவ்விடத்தை மறவாதே, நானுன்னுடனே
கூட ஆளனுப்பிவைக்கிறேன், மனதிலே கிலேசப்பட
வேண்டாம், எத்தனை காலமானாலும்உன்தாய் வீட்டிலே
தானேயிருந்தால் உன்சமுசாரம் என்னமாய் நடக்கும்
உங்களுடைய கோத்திரம் என்னமாய் விளங்கும் அது
தருமமல்ல அம்மா நீ உன் மாமியார் வீட்டிற்குப்போ
நான்தினமும் உன்சேதிகளைவிசாரித்துக்கொள்ளுகிறே
னென்று தகப்பனாகிய வீமராசா சொல்ல அப்போதவ
ளுடைய தமயன் தபனாபி என்கிறவன் மகாகிலேசப்பட
தமயந்தி தமயனைக் கண்டு தைரியத்தை விடாமல் தமய
னுக்கு உபசாரமாகக் குளிர்ந்த வசனங்கள்சொல்லு
கிறாள்.

ஓ அண்ணா! நம்முடைய தந்தைபேரில் பக்தியாய் பிரியமாய் அவர்சொல்லைத் தள்ளாமல் நடந்துகொண்டிரும் என் மனது மகா சந்தோஷமாகும்படியாய் தகப்பன்சொல்லை மீறாமல் நடந்துக்கொள். இதுவரையிலுமிருந்ததைப்போல விசாரமாயிராதே நாமறியாதபுத்தி இவளுக்குத் தெரியுமோயென்றெண்ணாதே நான் அண்டையிலே இதுவரைக்கு மிருந்தேன் இப்போது நான் தூரப்போகிறபடியினாலுமக்குச் சொல்லவேண்டியதுகளை இப்போது சொன்னேன், நீரறியாதபுத்திகள் நான் சொல்லப்போகிறேனா நான் ஊருக்குப்போகிறேனென்று நீர் விசனப்படவேண்டாம் அண்ணாவென்று சொல்ல வுடனே தபனுபி தலையை யிறங்கிக்கொண்டு கண்ணீரை உதிர்த்தான் அவன்பெண்சாதி வந்து அவன் கண்ணீரை தன் முந்தாணியாலே துடைத்து இப்படியுண்டோ எங்கேயாகிலும் பெண்ணைமாமியார் வீட்டுக்கு அனுப்பிவைக்கிறபோது விசாரப்படுவார்களோ சந்தோஷமாயல்லவோ அனுப்புவார்கள் நானுமிப்படி அருமை பெருமையாய் வந்தவளல்லவா உங்கள் வீட்டில்வந்துவாழவில்லையா எந்தகாலத்திற்கெப்படியோ அப்படி யிருக்கவேணுமென்றுதன் புருஷனுக்குத் தெரியச்சொல்லி தேற்றினாள்.

அப்போது வீமராசாதமயந்தியைத்தங்கப்பல்லக்கிலேற்றுவித்து மருமகனாகிய நளமகாராசாவை நவரத்தின மிழைத்த ரதத்தின்பேரில் ஏற்றுவித்து தானும் தன் சனங்களும் ரதகஜதுரக பதாதிகளுடனே கூடப் பட்டணத்தைவிட்டு வெளிப்பட்டு சகல மேளவாத்தியங்களு முழங்கப் பிராமணர்கள் ஆசீர்வாதம்பண்ணிக்கொண்டுவர வெகு ஆடம்பரத்துடனே சிறிதுதூரம் வந்து ஓராசேந்திரரே ஓராசவல்லபா சகலலோகதுரந்தரா பஞ்சாசதகோடி பூமண்டலத்தையும் பரிபாலனம் பண்ணப்பட்ட சக்கரவர்த்தியேயென்று கொண்டாடி வீமராசா ஒருவார்த்தை சொல்லுகிறார், ஓ நளமகாராசாவே இந்தப்பெண் பொற்கொடிபோல் வளர்ந்தது மாத்திரமேயல்லாமல் வயதுகொஞ்சம் மெத்த அறியாதவளாகையாலே என்னைப்பார்த்தந்தப் பெண்ணைரட்சியும் அரைநாழிகையாகிலும் பசிபொறுக்கமாட்டாள்; நான்



வெகு அருமையாக வளர்த்தேன் ஓ நளமகாராசாவே இந்தப் பெண்ணினுடைய தாயும் நானும் முனீஸ்வரரைச் சேவித்து அவர் வரப்பிரசாதத்தினாலே வந்த பெண் புத்திதெரியாது இவள் சரீர மிளைத்துப்போகாமற்படிக்கு பராமரித்துக் கொள்ளுமென்று சொல்லி தானும் அவருக்குச் செலவுகொடுத்து அவர்கையிலே தாங்களும் உத்திரவு பெற்றுக்கொண்டு திரும்பினார்கள்.

அப்போது நளமகாராசா தன் மாமியாருக்கும் மாமனாருக்கும் நமஸ்காரம்பண்ணி மைத்துனனையும் தழுவிக்கொண்டு அவன்கையிலேயும் செலவு வாங்கிக்கொண்டு அவர்களை அனுப்பிவிட்டுத் தானும் நமயந்தியுடனே சகலசேனைகளும் சூழ்ந்துவரச் சிறிதுதூரம் போனபிறகு நளமகாராசா பல்லக்கிலேயிருக்கிற பெண்ணைப் பாங்கிமாருடனேகூடி தன் ரதத்தின்பேரிலேற்றிக்கொண்டு தாம்பூலங் கொடுத்து சந்தோஷமாகச் செய்து காடுகள், மேடுகள், ஆறுகள் அகழிகள், கோட்டைகள் பட்டணங்கள், அக்கிராரங்கள் இதுமுதலான அதுகளெல்லாங்கடந்து நிடததேசத்துப் பட்டணத்துக்குச் சமீபத்தில்வந்து நளமகாராசா ரதம்விட்டிறங்கி மந்திரிகளுக்குத் தான்வந்த சமாசாரங்களைச்சொல்லி அனுப்பிவைத்தார். அதுகேட்டு மந்திரி பிரதானிகள் சகலமான பேர்களும்மகாசந்தோஷப்பட்டு பட்டணமெங்கும்வேடிக்கையாய் அலங்காரம்பண்ணிவைத்து தங்கத்தட்டுகளிலே பழங்கள், புஷ்பங்கள், தாம்பூலங்கள் கெந்தாட்சதை முதலான வஸ்துக்கள் காணிக்கையாக யெடுப்பித்துக்கொண்டு மேளவாத்தியத் தொனிகளுடனே பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுவந்து ராசாதிராசனாகிய நளமகாராசரைக் கண்டு தெண்டன் செய்து கைகட்டியிருந்தார்கள். 223211

அப்போது நிடததேசத்தை ஆளப்பட்ட நளமகாராசாவும் சந்தோஷத்துடனே மந்திரிமுதலான பேர்களை ஆதரணைபண்ணி அவர்கள் கொண்டுவந்த வஸ்துக்களை யெல்லாம் பிராமணர்களுக்கு கொடுப்பித்துவிட்டு அவர்களுடனேகூட நளமகாராசா சகல சம்பிரமங்களுடனே பட்டணத்தில் நல்ல சுபமுகூர்த்தத்தில் பிரவேசித்து வீதிகளி லலங்காரமாகப் புறப்பட்டு வரு

கிறபோது அந்தப் பட்டணத்திலே பொற்கோபுரங்களும் தங்கத்தினுலே கட்டிய மெத்தைவீடுகளும் நவரத்தின மயமாயிருக்கிற மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் பின்னையுமநேகமான விந்தைகளான வேடிக்கையானவைகளை நளமகாராசாதமயந்திக்குக் காண்பித்துக்கொண்டு வரச்சே பட்டணத்துச் ஜனங்களெல்லோரும் கும்புகும்பாய்க்கூடிக்கொண்டு கற்பூரவிளக்குகளும் நவரத்தின ஆலாத்திகளும் சுமங்கிலிய பிராமணஸ்திரீகள் கெந்தாட்சதைகள் இறைக்க பிராமணர்கள் ஐஸ்வரியமும் வெகுகீர்த்தியுமுண்டாய் சிரஞ்சீவிகளாய்விளங்கக்கடவதென்று சொல்லி ஆசீர்வாதம்பண்ணி அட்சதைகள் கொடுக்க பொற்பிரம்புக்காரர்கள் கட்டியக்காரர்கள் எச்சரிகை பராபரிபண்ணி·சந்தடிவிலக்கப் புலவர்கள்பாட பட்டுவான்களெதிர் நின்று பரப்பிர்மங்களைக் கொண்டாட இருபக்கத்திலேயும் ராசக்கூட்டங்கள் நெருங்கிவரமங்கிலியப்பெண்கள்புஷ்பசேஷைகளிறைக்கபிராமணர்க்ஷத்திரியர் வைசியர்சூத்திரர் முதலானபேர்களும் முத்துசேஷைகளிறைக்கச் சகல ஜெனங்களும் ஆனந்தமாய் வேடிக்கைப்பார்க்க புண்ணிய பெண்கள் முத்தாலாத்தி பவழாலாத்தி நவரத்தின ஆலாத்திகள் வெகுவாக யெடுக்க இப்படி உச்சாகங்களுடனே நளமகாராசா நிடதபுரத்தை பிரதட்சணம்பண்ணி தன் பெண்சாதியுந் தானும் அரண்மனைபோய் புண்ணிய பெண்கள் சோபனம்பாடபுண்ணியவசனங்கள் பண்ணிக்கொண்டு பிராமணருக்கு பலதானம் அபரிமிதமாக பூரிகொடுத்து வித்துவாமிசர் சகலருக்குஞ் சகலவெகுமானங்களுங்கொடுத்து மந்திரிகள் பிரதானிகள் மற்றுமுள்ள சேவகர்களுக்கும் அபரிமிதமானவெகுமானங்களுங்கொடுத்துச் சகல சம்பிரமத்துடனே வேடிக்கையாக யிருந்தார்கள்.

அப்பால் தமயந்திதேவியும் தன்கணவன் கட்டிவைத்த அரண்மனை அந்தப்புரங்களை நன்றாகப்பார்த்து தன் மனிதரைவிட்டுப் பிரிந்து வந்ததும் பாராமல் முன்னேவெகுநாளாய் சமுசாரம்பண்ணினவள்போலப் பழகி சந்தோஷத்துடனே தானுந்தன் கணவனுங் கூடிச் சுகத்தையடைந்திருந்தார்கள். இவர்களிருவரும்



ஒருத்தருக்கொருத்தர் பிரியாவிடையாய் பிராணனென்றும் பொந்தி யிரண்டுமாக ஒருமனதாகக்கலந்து தங்களுக்குச் சரியானபடிக்கு கேளிவிலாசமாகப் புட்பவனங்களிலே மன்மதகேளி நடத்திக்கொண்டு உல்லாசமாயிருந்தார்கள். நளமகாராசா லோகத்துஜனங்களையெல்லாம் தாம் நீதிதவறுமல் ரட்சித்துக்கொண்டு லோகத்துஜனங்கள் தங்களைக்கொண்டாட பிரதிஷ்டையாக தன் பெண்சாதியுடனே சுகமாயிருந்தார்.

வெண்பா.

தங்கத்தையிரத்தினத்திற் சாற்றினதுபோலுந்
திங்களுடன்ரோகணியுஞ் சேர்ந்ததுபோற்-செங்கை
மதனரதிபோலு மால்திருவைப்போலு
மிதமுடனே வாழ்ந்திருந்தார்.

கேட்டீரோ தர்மநந்தனரே, இதுவரையில் நடந்த சமாச்சாரங்களெல்லாஞ் சொன்னேன்·இனிமேல் நடக்கப்போகிற சமாச்சாரங்களைச்சொல்கிலுறேன்சற்றுவினவாகக்கேளும். இப்படிசகலசம்பிரமத்துடனிருக்கிற நளமகாராசாவை சநீஸ்வரன் கண்டு துக்கப்பட்டு சமயம்பார்த்துக்கொண்டிருந்து நளமகாராசாவினுடைய வைபவத்தைப்பார்த்து பொறுக்கமாட்டாமல் தன்னுள்ளே தானே நினைத்து யோசனைசெய்து விசாரப்படுகிறுன் அதென்னவெனில் ஐயையோ நான் கெர்வத்தினுல் கெட்டேன் விருதாவிலே தேவர்முன்பாக வெறும்பிரதிக்கினையைப் பண்ணிவந்தேனே யொழிய நினைத்த காரியம் நிறைவேறுமற்போச்சுது, இதற்கு நானென்ன செய்வேன், சகலபேர்களின் முன்பாகச்சொல்லிய என் வார்த்தைகள் தப்பிப்போகிறதுகளல்லவோ, இனிமேலென்னை யொருவரும் லட்சியமாக எண்ணமாட்டார்கள் இந்த அபகீர்த்திக்கென்னமாகத் தப்பித்துக்கொள்வேன் இந்த நளமகாராசாவை எம்மாத்திரமோ வென்றிருந்தேன் லோகத்திலேயிருக்கிற இராஜாக்களுக்கெல்லா மதிகமான ராஜாவாயிருக்கிறுன், அதுவுமல்லாமல் தர்மசொரூபியாயிருக்கிறுன், அதிலும் ஆசாரம், நீதிமார்க்கம், தயை, தாட்சண்யம், துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் இதுகளிலேயு மதிகமாயிருக்கிறுன். நியமந்தப்பி யிருக்கிறவேளையில் அவனை பிடிக்கவேணுமே

யல்லாமல் மற்றவேளையில் கூடாதென்றுசொல்லி எப்போது சமயங்கிடைக்குமோவென்று ஒரு நிமிஷமாகிலும் ஏமாறாமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

கேட்டீரோ தருமராசாவே சநீஸ்வரன் அப்படி கார்த்திருக்கிறபோது அநேக நாளைக்குப்பிறகு ஒருநாளந்தநளமகாராசா ஜலபாதைதீர்த்துக்கொண்டுகைகால் சுத்திபண்ணிக்கொள்ளுகிறபோது கணுக்காலிடத்திலே ஒருமுள்முனைப் பிரமாணம்நனையாமலிருந்தது. அது கண்டு சநீஸ்வரன் சந்தோஷித்து, இது நல்லசமயமென்றந்தயிடத்தில்போயிருந்தான் அப்போது இராஜாவுந் தப்பாமல் எப்போதும்போல நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சுகமாயிருந்தார்.

கட்டளைக் கலித்துறை.

சந்திரகாந்திதமயந்தி தானுந்தயவுடனே
சுந்திரநளராசனைக்கூடி சுதனொன்றுபெற்றுபட்சமொடு
அந்திரசேனனெனப்பேரு மிட்டிரண்டாண்டிற்புட்ப
கெந்தியென்றேயொருபெண் பெற்றுவாழ்ந்தனளே.

பிறகு தமயந்தி கெற்பவதியாய் பத்துமாதங்களுஞ் சென்று நல்ல சுபமுகூர்த்தத்தில் ஆண்பிள்ளையைப் பெற்றாள். அப்போது நளமகாராசா தனக்கு குமாரன் பிறந்தானென்று கேட்கவே மகா ஆனந்தங்கொண்டு வதிஷ்டமகாமுநீஸ்வரர்களை யழைப்பித்து புத்ரோற்சவம்பண்ணி சாதககர்மங்களை எழுதுவித்து செனங்களெல்லாரும் ஆனந்தங்கொள்ள பூதானம், கோதானம், கன்னிகாதானம், அன்னதானம் இவை முதலிய தானங்கள் அபரிமிதமாகக்கொடுத்து பின்னையும் பேதைஜனங்களுக்குத் திருப்தியாகத் தானியங்களைக் கொடுத்து மகோற்சவஞ் செய்வித்து சந்துஷ்டியாயிருந்தான். தமயந்தியும் இரண்டாவது கெற்பவதியாய் ஒரு பெண்ணைப் பெற்றாள். தாயைப்போல பெண்ணும் தகப்பனைப்போல பிள்ளையும் பிறந்தபடியினாலே சகல ஜனங்களும் சந்தோஷப்பட்டு ஆனந்தத்தை யடைந்தார்கள். சகல தேசராசக் கூட்டங்களும் நளமகாராசாவிற்கு பிள்ளையும் பெண்ணுமுண்டாச்சுதல்லவோவென்று கொண்டாடி சந்தோஷப்பட்டுக்கொண் டிருந்தார்கள். நளமகாராசாவுந் தமயந்தியும் பிள்ளையும் பெண்ணும் எல்லோரும்



சுகமாகவிருந்தார்கள். இப்படி நளமகாராசா நீதிதப்பாமல் சகலமான ராசாக்களும் பருதிகட்ட செங்கோல் நடாத்திக்கொண்டு சுகஜீவியாய் ராஜ்ஜியபரிபாலனம் பண்ணிக்கொண் டிருக்கிறபோது தலைவிதியை தள்ளக்கூடாமலிருக்கிறபடியினால் ஓர் ஜீவயிம்சையும் சொற்பனத்திலேயும் நினைக்காமலிருக்கிற ராசாவும் வேட்டைமார்க்கமாய்ப் போகவேணுமென்று நினைவுபிறந்து மந்திரிபிரதானிகளுடனே கூட அஸ்வாரூடராய் வேட்டைக்காரர்களையு மழைப்பித்துக்கொண்டு தமயந்திதேவியையும் ரதத்தின்பேரிலேற்றிக்கொண்டு காட்டில் போய் அவ்விடத்தில் வேட்டைக்காரர்களை வேட்டையாட உத்தரவு செய்தான். அவர்கள் வலையுங் கண்ணிகளையும் ஓட்டி வைத்து சில்லாக்கோலும், ஈட்டி, வல்லயம், கத்தி, சுரிகை, கதை, தோமரம், சிங்காணி, வில்லுகள்முதலான விந்தைகளான ஆயுதங்களு மெடுத்துக்கொண்டு டேகைகளும், சிவிங்கிகளும், வேட்டைநாய்களும் பிறகேவர சல்லடம் தட்டிகட்டி மீசைகளை முறுக்கிக்கொண்டு வேட்டைக்காரர்களெல்லாரும் நளமகாராசாவின் முன்னின்று தண்டம் பண்ணி தங்கள் சாதீனமான பேச்சுகளைப் பேசிக்கொண்டு ராசாவினிடத்தில் உத்தரவுபெற்றுக் காட்டுக்குள்ளேபுகுந்து ஒருத்தருக்கொருத்தர் அதட்டிப்பேசிக்கொண்டு யாளிகள், சிங்கங்கள், கட்டானைகள்முதலான மிருகங்களையெல்லாம் சிதறஅடித்துக் கொன்று சில துஷ்டமிருகங்களைப் பிடித்துவந்து ராசாவின் முன்னேவிட்டு அதுகளை உசிப்பேற்றிவைத்துத் துரத்தினார்கள். அப்போது நளமகாராசாவும் வேட்டைக்காரருடனே கூடித் தானும் ஜீவஇம்சையாகாதென்றிருந்தவன் சற்றாகிலு மெண்ணாமல் கால சிங்கங்களைப்போல வேதனைப்படச் செய்வித்த அந்த மிருகங்கள்பேரிலே அம்புகளைவிட்டுத் துரத்துகிறபோது அநேக மிருகங்கள் செத்துப்போச்சுதுகள், சிறிது மிருகங்கள் அசகாயம்பட்டு ஓடிப்போச்சுதுகள். அப்போது வேட்டைக்காரர்கள் யானையினுடைய கும்பமத்தகங்களை யுடைத்து மதியுயர்ந்தமுத்துக்களையுடைய நீண்டிருந்த யானைத்தந்தங்களையும் புனுகுபூனைகளும் பின்னையு முக்கியமான மிருகங்களைப் பிடித்துக்கொண்டு

வந்து ராஜாமுன்னேகாணிக்கையாக வைத்து தண்டன் பண்ணினார்கள்.

நளமகாராஜா சந்தோஷப்பட்டு அவர்கட்கெல்லாம் உசிதமான வுடைகள் கொடுத்து தனது யானை சேனை பரிவாரத்துடனேயும் பெண்சாதி பிள்ளைகளுடனேயும் புறப்பட்டுபட்டணம்வந்துசேர்ந்தார்களென்று பிருகுதச்சுவர்சொல்ல, தருமநந்தனர் வணங்கி அந்த நளபதிசூதாடி நாடுதோற்றதைக்கேட்கவியப்புள்ளவனாயிருக்கிறேனென சூதாடிய விபரத்தைச் சொல்லத் தொடங்கினார்.

௯-வது, சூதாடும் அத்தியாயம்.

இந்தப்பிரகாரம் தமயந்தியும் நளமகாராஜாவும் ரதியும் மதனும்போல சுகித்திருக்கிற நாளில் சநீஸ்வரன் பார்த்துக் கொதித்து நினைத்துவந்தகாரியம் அனுகூலமாச்சுதென்று சந்துஷ்டியுடன் முகாரவிந்தம் பிரகாசிக்க அதிசீக்கிரமாய் புஷ்கர ராசாவண்டைக்கு பிராமணனைப்போற் போய் அவனைக்கண்டு அவனுடனே ஒருவார்த்தை சொல்லுகிறார், ஓ புஷ்கராராசாவே நான் சூரியபகவான் குமாரன் என்பேர் சநீஸ்வரன் உம்மண்டை கொஞ்சம் காரியமாக வந்தேன் இப்பிராமணன் என்னகேட்பானோ வென்று சிந்திக்கவேண்டாம் உண்டான விசேஷமும் உடனே சொல்லுகிறேன்கேளும், அதென்னவெனில்தேவர்கள்,யக்ஷகர்கள்,கின்னரர்கள், மனிதர்கள் முதலானபேர்கள் என்பேர் சொன்னால் மிகவும் நடுங்குவார்கள் அவர்களுடைய மதங்களையெல்லாம் என்னுடைய மாய்கையினால் அடக்குவேன் இப்படி சகல லோகத்தார்களையும் நடுங்கப்பண்ணி வைக்கிறவன் சாயாதேவிக்கும் சூரியபகவானுக்கும் பிறந்தவன் சகல ஜயம்கொண்டவன் அனேக கீர்த்தியுள்ளவன் என்னை உத்தமர்கள் யெரியோர்கள் மிகவும் கொண்டாடுவார் ஆனபடியால் உம்மை ஒருராசாவண்டைக்கனுப்புகிற நிமித்தியமாக வந்தேன், நளமகாராஜாவென்கிறவன் என்மனதை மெத்தவும் நோகப்பண்ணினான், நான் கொள்ளலாமென்றிருந்த தமயந்தியை நமக்கேனென்றுசொல்லிச் சகலராசாக்களும் சும்மாயிருக்கஇந்த நளனுடைய அகங்காரம் எம்மாத்திரம் அந்தப்பெண்



ணைக் கலியாணம் பண்ணிக்கொண்டு சகலபோகங்களையுமனுபவித்துப் பிள்ளைகளும் பெற்றுச்சுகமாய் ராஜ்ஜியமாளுகிறான் நான் மன்மதனுடைய வலையிலகப்பட்டுக் கொண்டு விழிக்கிறேன் பார்த்தீரா சகல தேவர்களும் கோறியிருந்த பெண்ணைக் கொள்ள இவன் எம்மாத்திர மனிதன் அந்தத்தமயந்தி தேவர்களையெல்லாம் வேண்டாமென்று சொல்லித் தன்னைக்கோறின நளனை மாலையிட்ட கெர்வத்தினாலே பிரதாபமாய் விளங்கினான்.

அப்போது பிரஜைகளும் அவள் வாழ்வை மெய்யென்று நம்பியிருக்கிறார்கள். அந்தப்பெண் நளராஜாவினுடைய தந்திரத்தில் மோசம்போய் மோகித்து கலியாணம் பண்ணிக்கொண்டிருக்கின்றாளல்லவா?ஓ ராஜாவே! எங்கேயாகிலுமுண்டோ? நீர்தான் சொல்லும், இந்தப்பெண் எப்போது எவ்வனமாவாளோ வென்று காத்துக்கொண்டிருந்த என்னை மோசம் பண்ணினாள் இனிநான் மனம் பொறுக்கமாட்டேன் என்னை நீர் பொல்லாதவனென்றுசொன்னாலும் ஓராஜரேஉன்முன்னேதானே என்னை நீர் மெச்சத்தக்கதாக நளராசாவையுந் தமயந்தியையும் எவ்விதத்தினாலேயும் ஒருவருக்குந் தெரியாதபடிக்கு ஓட்டிவிடாமல்விடுவேனோ பெண்சாதியுந் தானும் பிள்ளைகளும் ஒருவர்முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு சந்தோஷமாயிருக்கப்போகிறார்களா எதோ பார்ப்போம் நீரிட்சணமே நளராஜனுடனே சூதாடும் அப்போது நானும்மிட பட்சமாயிருந்து பாச்சிகையைப்புரட்டி உம்மை கெலிக்கவைக்கிறேன் அவர் சம்பத்துகளையெல்லாம்பறித்து உமக்கேகொடுக்கிறேன் நளமகாராசா தன்ராச்சியத்தை விட்டுப் பெண்சாதியுந் தானும் ஒரு ஓட்டைப்பானையைக் கையிலெடுத்து சகல பாக்கியங்களையும் உம்மிடத்திலேவிட்டுவிடப்போகிறான் நீர் அவனுக்குப் பகுதிகட்டுகிறவன் எப்படி யவனுடனே மரியாதையில்லாமல் சூதாடுவேனென்று யோசனை செய்யவேண்டாம் என்னுடைய தந்திரத்தினாலே அவனை யுமக்குச் சிநேகம் பண்ணிவைக்கிறேன் என்வார்த்தையைத் தள்ளாமல் எழுந்திருந்து வாரும் சீக்கிரமாகப்போவோம் அவனுடைய ராச்சியத்தை அவசியம் வாங்கி உமக்குத்தருகிறேன் ராச நீதி தப்பாமல் பரிபால

னம் பண்ணுமென்று சொன்னவுடனே, புஷ்கராராஜா
சம்மதித்தெழுந்திருந்து சந்தோஷத்துடன் புறப்பட்டு
மந்திரிகளுடனே நடந்து நளமகாராஜாவின் மகாவிந்த
புர பட்டணத்தில் சேர்ந்து அப்பட்டணத்தினுடைய
சிங்காரங்களைப் பார்த்துக்கொண்டுவந்து கொலுவிலிரு
க்கிற நளமகாராசாவைக் கண்டு நமஸ்காரம்செய்து
அவருடைய ஆதரணையினால் உட்கார்ந்துக்கொண்டு
நளமகாராஜாவிருக்கின்ற கொலுமண்டப சிங்காரமும்
ஐம்பத்தைந்துதேசத்துராசாக்கள் கைகட்டி நிற்கிறவித
ங்களும் தம்புரு ருத்திரவீணைகள் முதலான வாத்தியங்க
ளெல்லாமுழங்க மத்தளத்தொனிகளுடனே சங்கீதங்க
ளைப்பாட பொற்பிரம்புக்காரர் பராமரிபண்ண பட்டு
வான்களெதிர்நின்று கொண்டாட நளராசா தேவேந்
திரனைப்போல் வீற்றிருக்கின்றதை புஷ்கராராஜா பிர்மித்
தெழுந்து அவரண்டைக்குப்போய் நின்று சேவித்து
அநேகவிதமாய் வர்ணித்துக்கொண் டிருந்தான். அத
ற்கு நளமகாராஜா சந்தோஷப்பட்டு தன்னருகாமை
யிலே நவரத்தின சிம்மாதனம் போடுவித்து அதின்பே
ரிலே புஷ்கராராஜனை உட்காரச்சொல்லி செலவுகொடுத்
தார், அப்படியே புஷ்கராராஜா உட்கார்ந்து, நளமகா
ராஜரே! உம்முடன் சற்றுநேரம் விநோதமாக சூது
விளையாடவேண்டுமென்று நினைத்து இவ்விடத்திற்கு
வந்தேன், தயவுசெய்து இந்தவரந்தரவேண்டும், இதற்
கொன்றுந் தேவரீர் யோசனைபண்ணவேண்டாம், பொ
ழுது போகத்தக்கதாக சிறிதுநேரம் விளையாட வாரு
மென்று வேண்டிகொண்டான், அதற்கு நளமகாராஜா
சொல்லுகிறார், புஷ்கராராஜரே! சூதாடுகிறது இராஜாக்
களுக்கடுக்குமா? அது மெத்தப்பொல்லாது, பெரியோ
ர்கள் சூதாடுகிறவர்களை மதிக்கமாட்டார்கள், அநேக
க்ரூரமான விசேஷங்கள்வருந் துவேஷ முண்டாகு
மென்று நளராஜா சொல்வதைக் கேளாமல் பின்னையும்
இரட்டித்து, ஐயா தேவரீர் இப்படிச் சொல்லவேண்
டாம், அந்தச் சூதினுடைய மகிமை எல்லோருக்குந்
தெரியவாராது, மகாத்மாக்களுக்குத் தெரியும், அதெப்
படியென்றால் சகல வித்தைகளும் பிர்மா உண்டாக்குகிற
போது இந்த சூதுவித்தையு முண்டாக்கி க்ஷத்திரியாள்•



வசத்திலே ஒப்புவித்து அதைப் பரிபாலனம் பண்ணச்
சொல்லி உத்தாரம் பண்ணினார்.

ஆனபடியால் சூதினுடைய மர்மங்களையெல்லாம்
அறிந்தால் நமக்குப் பிராணரக்ஷையாயிருக்கும், அத
னால் இப்போது உம்மை யழைத்தேன், நீர் சிந்தனைப்
படாமல் வாருமென்று புஷ்கராராஜா விடாமல் அழைக்
கிறபோது நளமகாராஜாசிரித்து, புத்திமயங்கி யோசனை
பண்ணி, ஓ புஷ்கராராஜாவே! சூதன் சூதனையே மெச்சு
வான், நானப்படிப் பட்டவனல்ல, ஆனாலும் நீரிது
நிமித்தியம் இத்தனைதூரம் வந்தேனென்று சொன்ன
தினால் உமது மனதை சின்னப்படுத்த லாகாதென்று
சொன்னார்.

புஷ்கர ராஜருடன் நளபதி சூதாடல்.

அதாவது சனீஸ்வர னுசுப்பேற்றுகிறபடியினாலே
நளமகாராஜா சிங்காதனத்தை விட்டு திடுக்கென்றெழு
ந்து அங்குள்ள ராஜாக்களுந் தம்முட மந்திர பிரதானி
கள் மற்றுமுண்டான பேர்களையும் நிறுத்தி வைத்து
புஷ்கர ராஜாவை வாருமென் றழைத்துக்கொண்டு
அந்தப்புரத்துக்குப்போய் அங்கேயிருவருமுட்கார்ந்து
பலவகையான சாரையுஞ் சொக்கட்டானையு மழைப்பித்
துக்கொண்டு பந்தயமுன்னே கைக்கடகங்களை வைத்து
சூதாடினார்கள், ஆடுகிறபோது முதல் புஷ்கர ராஜா
தோற்பாகினபடியால் சனீஸ்வரன் கோபித்துக்கொண்டு
புஷ்கரராஜா ஆடுகிற பாச்சிகையிலே புகுந்து கெலிக்
கப் பண்ணிக்கொண்டு வந்தான், புஷ்கரராஜா கெலிக்
கின்ற உபாயம் நளமகாராஜாவுக்குத் தெரியாமல் மயங்
கித் தன் அவ்ஸ்தகடகம்போயும் முத்துமாலை, பதக்கம்,
சரப்பளி, குண்டலம் முதலான ஆபரணங்களை யெல்
லாம் வைத்து ஆடித்தோற்றும் தம்முடைய பொக்கிஷ
பண்டாரங்களையெல்லாந்தோற்று மதிமயங்கி யிருந்தார்.

பட்டணத்துக் குடிகள் சூதாடுதல் கெடுதலென்று
நளபதியைத் தடுத்தல்.

அந்தச் சேதியைக் குடிகளெல்லாருங் கேட்டு அல
றிக்கொண்டு விசாரத்துடனே புறப்பட்டுவந்து அந்தப்
புறத்திலே யிருக்கிற நளமகாராஜாவைக் கண்டு சாஷ்
டாங்கமாகச்சேவித்துநின்றுசொல்லுகிறார்கள்,ஓசுவாமி

இராஜரே! கேளும் தேவரீர் தானதருமங்களுடனேயும்
துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனஞ்செய்து இந்த ராச்சி
யத்தை ஆண்டுக்கொண்டு வந்தபடியினால் ஏதுங் குறை
வில்லாமல் நாங்களுந் தாய் தகப்பன்கீழ் பிள்ளைகள்
வளர்ந்தாற்போல சுகத்தை யடைந்திருந்தோம். இப்
போது நாங்கள் பண்ணின பாவமோ என்னமோ தெரி
யாது, தேவரீர் சூது விளையாடுகிறதைப் பார்த்தால்,
ராஜ்யமெல்லாந் தோற்று தேசாந்திரம் போகிறவரைப்
போற் காணுகின்றது, அண்டையிலேயிருந்த கனமு
ள்ள வஸ்துக்களையெல்லாந் தோற்றீர், உம்மிட மந்தி
ரிகள், பிரதானிகள், பட்டவர்த்தனர்கள் முதலானபேர்
களுக்கும் ஒருயோசனையுந்தோற்றாமல் நீர் ஆடுகிறதைக்
கண்டுபிரமித்து வெகுவிசாரத்துடனே உமகொன்றும்
சொல்லாமல் இதற்கென்ன செய்யப் போகிறோ
மென்று திகைத்திருந்தார்கள், உம்மிட குலகுருவாகிய
வசிஷ்ட மகாமுனிவரும் பிரிந்துபோயினார், தேவரீர்
சொக்கட்டாடுகிறது பரிசுத்தமாகாதென்று சொல்லி
மனுவு பண்ணிக்கொள்ள வந்தோம், ராஜாக்களுக்கு
தம்மிட மந்திரி பிரதானியர்கள் சொல்லைப்பார்க்கிலும்
குடிகள் வசனிக்கிற வார்த்தை மிகவும் பிரியமாயிருக்
கும், அதைச் செவிதந்து கேட்பீர்களானபடியினாலே
எங்கள்பேரிலே தேவரீர் தயவுபண்ணி இந்தமட்டில்
ஆட்டத்தை நிறுத்தவேணும், ஓ ராஜேந்திரா! எங்
கட்கிது அவசகுனமாகவே காண்பிக்கிறது, என்னவிப
ரீதம் நேரிடுமோ தெரியாதென்று சொல்லி மிகவும்
வருத்தமடைகிற குடிகளைக்கண்டு நளமகாராஜா கோபி
த்து சேவகர்களை விட்டு இவர்களைத் துரத்தியடியுங்க
ளென்றும், நீங்களேன் இவ்விடம் வந்தீர்களென்றும்
உங்களை எனக்கு புத்தி சொல்லும்படி யார்சொன்னார்க
ளென்று சொல்லி சனீஸ்வரனுடைய மாய்கையால்
நளமகாராசா அந்தக் குடிகளையெல்லாம் அடித்துத்
துரத்திவிட்டார், குடிகள் துக்கத்துடனே தெய்வத்தை
நொந்துகொண்டு போனார்கள்.

விதர்ப்பபுரிக்குப் பிள்ளைகளை யனுப்பியது.

அந்தசமயத்தில் நளமகாராஜா தேவியாகிய தம
யந்தி இந்த விருத்தாந்தங்களை யெல்லாங்கேட்டு அதிக



விசாரப்பட்டு இது ஆபத்துக்கு மூலமாகக் காண்கிறது,
நம்மிட நிமித்தியம் லோகத்து சனங்கள்வந்து தாபந்தி
ரியப்பட்டுச் சூதாடுகிறதை விட்டுவிடச்சொல்லி மனு
வாய்க் கேட்டுக்கொண்டார்கள், அவர்களைத்தெரியாமல்
இப்படி துரத்திவிடலாமோ? அக்குடிகளென்ன கிராமச்
சாரம்போல் காணுகிறது, நல்லவர்களுக்குப் பொல்
லாதகுணம் வந்தால் அதனாலே ஆபத்துகள் ஏதோ
வரும் இந்த மகாராசருக்கு இப்படிக்கொத்த நினைவு
பிறந்தமட்டுக்கும் ஏதோ விபரீதம் பிறக்கப்போகிறது
அதற்கு சமுசயமில்லையென்றுயோசனைபண்ணி, ரதசார
தியையழைத்துத் தன்னுடைய இரண்டு பிள்ளைகளையும்
ரதத்தின்பேரி லேற்றித் தன்தாய் வீட்டுக்கனுப்பிவைத்
தாள்.பிறகு தமயந்திவிசாரத்தை விட்டுதைரியசாலியாகி
யினிமேலென்ன ஆபத்து வந்தாலும் அனுபவிக்க
வேணும் நம்மிட பத்தாவின் மனதின்படியே யாகட்டு
மென்று அந்தப்புரத்தி லிருந்தாள்.

பத்தாவது கான்புகு அத்தியாயம்.

கேட்டீரோ! தர்மநந்தனரே இப்படியிருக்கிறபோது
நளமகாராசா சமஸ்தமுந் தோற்று புஷ்கர ராசாவுக்கு
ஒப்புவித்துவிட்டு விசேஷவஸ்திரங்கள் தரியாமல் ஏக
வஸ்திரத்துடனே தன் பெண்சாதி யண்டைக்குவந்து
அவளை யழைத்துக்கொண்டு பட்டணத்துசெனங்களெ
ல்லாம் பிரமித்தாப்போல் சோர்ந்து முகம்வாடிச் சிந்
தாக்கிராந்தராய் துக்கப்பட்டு நிற்க, மந்திரிபிரதானிகள்
முதலானபேர்களெல்லாம் கண்ணீர்களுடனே விசாரப்
பட நளமகாராசா ஒருவருடனேயும் பேசாமல்தன்னைத்
தானே நிந்தித்துக்கொண்டு தன்னுடைய பட்டணத்
தைவிட்டு ஒன்றுந் தோன்றாமல் திகிலெடுத்து பட்ட
ணத்திற்குப் புறத்திலேவந்து மூன்றுநா ளிருந்தான்.

தமயந்தி நளபதிக்குத் தைரியங்கூறல்

அப்படி சோகப்பட்டுக் கொண்டிருக்கிற தமயந்தி
யானவள் புருஷனைப்பார்த்து புத்திசாலியானதால் ஒரு
வார்த்தைசொல்லுகிறாள், ஓ என்பிராணநாயகரே! ஆகிற
காரியம் ஆகாமற்போமோ தாம்பண்ணின கருமத்தின்
பலனைத் தானே யனுபவிக்க வேணுமேயல்லாமல் தள்
ளுகிறதற்கு ஒருவராலேயும் ஆகாது நீங்கள்ஏதாகிலும்


வேணுமென்று சூதாடப்போனீரா எங்கேயிருந்த புட்கரராசா அவரெங்கே வந்தார் சூதுயேனுடினீர் அது உம்மாலே வந்ததோ தெய்வசங்கல்ப மிப்படியிருந்தது நீரேன் வியாகூலப்பட்டிருக்கிறீர் பயப்படவேண்டாம் தலையெழுத்தை எவர்கள் தப்புவித்துக் கொண்டார்கள் முன்னேபிரமதேவர் சிரசு ஈஸ்வாருடைய கையினாலே கிள்ளப்பட்டு போகவில்லையா மகாபலிச் சக்கிரவர்த்தி ஸ்ரீமகாவிஷ்ணுவினுடைய பாதத்தின்கீழகப்பட்டு பூமியின்கீழே யடங்கிப் போகவில்லையா, சூரியசந்திரர் நிமிஷமாத்திரமாகிலும் நிலைகலங்கவில்லையா தேவேந்திரன் துறுவாசர் கையிலே என்னென் பாடுபட்டார், அப்படி யிருக்கிறபோது மற்ற மனிதர்களெம்மாத்திரம் சுகம் வந்தபோது சந்தோஷப்படுவர்கள் துக்கம் வந்தபோது விசாரப்படுவார்களிது ஞாயமல்ல சகல பிராணிகளும் சுகதுக்கங்களிரண்டும்சமமாக அனுபவிக்க வேண்டும் சகல பிராணிகளுக்கும் சுகதுக்கங்களிரண்டும் சரியாக பிரம்மா கற்பித்தார், நீர் சகல சாஸ்திர புராணம் கேட்டிருக்கவில்லையா இப்படி தேவரீரெந்நேரமும் தலையை யிரங்கிக்கொண்டிருப்பானேன் நீரறியாத ஞாயங்களும் புத்தியும் நானென்ன சொல்லப்போகிறேன் ஒ சுவாமி கண்ணீர்சொரிகிறது ஞாயமல்லஇவ்விடத்திலே நாமிரண்டு பேரைத்தவிர வேறுயாரிருக்கிறார்கள் ஒ ராசரே சிறியமனிதரைப்போல நீர் விசாரப்படலாமா விசாரத்தை விட்டுவிடும் இனிமேல் நடக்கவேண்டிய யோசனையை எனக்குத் தெரியச் சொல்லுமென்று அமிர்தபிந்துகள் சிந்தினாற்போல் சில வசனங்களை தமயந்தி சொன்னவுடனே நளமகாராசாவுக்குத் தெளிவுபிறந்து தன்பெண்சாதி முகத்தைப்பார்த்துஒரு வார்த்தை சொல்லுகிறார்.

ஒபெண்ணே பாக்கியசாலி நாம் ஊரைவிட்டு இன்னம் மூன்று நாளாகவில்லை இதிலே ஒருமனிதராகிலும் நம்மண்டைக்கு வராமற்போனார்கள் நீயும்மூன்று நாளாய் அன்னாகாரமில்லாமல் பட்டினியிருக்கிறாயே தாகத்திற்குத் தண்ணீர் முதலானதும்கிடைக்காமற்போச்சுது பார்த்தாயா ஒ நாயகி பூர்வசென்மத்திலே நாம் யாரை அன்னாகாரமில்லாமல் பட்டினிபோட்டு அலையப்பண்ணினோமோ தெரியாது அந்தவனுபோக மிப்போது அனுபவிக்கவந்தது இல்லாவிட்டா லித்தனை பெரிய பட்டணத்திலே ஒருபிராணிக்கு அன்னம் கிடையாமற்போமோ நாம் நமக்குப் பிரியமான வீட்டிற்குப்போனாலும்பிறகே நிந்தித்துக்கொள்வார்களானபடியினாலே ஓ பெண்ணே லட்சுமிகடாட்சம் பெறவேணும் குலமுங்குணமும் பார்த்து மதிக்கப்போகிறார்களா முன்னே என் வாழ்வைப்பார்த்து மந்திரி பிரதானியர்கள்வந்து சனங்களெல்லாந் தொடர்ந்துவந்து என்னைச் சூதாடவேண்டாமென்று வேண்டிக்கொண்டார்கள் நான் கேளாமற் சூதாடினேனித்தனைகாலமாய் அவர்களை ரட்சித்தேன் அப்படிப்பட்ட நான் அவர்களைக் கோபித்துக்கொண்டு துற்பாஷைகளைப்பேசித் துரத்தினேன் எல்லாரும் நல்லவனென்று சொல்ல என் ராச்சியந்தைப் பரிபாலித்தேன் பூவிற்றகடையிலே புல்விற்கவும் புலியிருந்த கானகத்தில் பூனையிருக்கவுமாச்சுதே ஆனாலினி என்ன செய்யலாம் ஈஸ்வரசங்கற்பத்தினால் வந்ததெல்லாமனுபவிக்கவேணும் நாம் செய்த பாவபுண்ணியம் நம்மைச் சேருமேயல்லாமல் மற்றொருத்தரைச்சேருமோ ஆகையினால் நாம்காட்டுக்குப்போய் அங்கே பர்னகசாலைகளைக் கட்டிக்கொண்டு தபசிகளாய் அங்கே கந்தமூலபலாதிகளையாகிலும் புசித்து அவ்விடத்திலேதானே வாசம் பண்ணுவோம் பிறவிச் செல்வமாயிருந்த நீ இந்த கோரங்களையெல்லாம் எப்படி பொறுக்கப் போகிறாய பொன்னுப்பரிகையின் பேரிலேயிருந்த நீ காட்டிலே பர்னகசாலையிலே எப்படி யிருக்கப்போகிறாய் இஷ்டமான பதார்த்தங்களைச் சாப்பிட்ட உனக்கு கந்தமூலங்கள் சாப்பிடலாச்சுதே அம்சதூளிகா மஞ்சத்தில் படுக்கிற உனக்குபயங்கரமானகாட்டிலேயும் புழுதியிலேயும்படுக்கலாச்சுதே நல்ல ரூபலாவண்ணியமான ஸ்திரீசனங்களுடனேயும் கூடியிருக்கிற உனக்கு இத்தனை ஆபத்துகள் கொண்டுவந்துவிட்டதே நாங்களினி எங்கே ஒளித்துக்கொண்டு இதை தப்பித்துக்கொள்ளப் போகிறோமென்று தெய்வத்தை நொந்துக்கொண்டு திரும்பி தமயந்தியைப் பார்த்து, ஓ பிராணநாயகி! அந்தக் காடுகளிலேவாசம்பண்ணுவையா கந்தமூலங்களைச் சாப்பிடுவை

யா மிருகாதிகளைக்கண்டு பயப்படாமலிருப்பையா ஏது யிருக்கமாட்டாய் ஆனபடியினாலே நான் சொல்லுகிற வார்த்தையைக்கேட்டு நீ உன் தாய் வீட்டிற்குப்போய் எனக்கு நன்மையைஎப்போதுங்கோரிக்கொண்டு சுகமா யிரு உன் தாய் தந்தையருடனே எனக்குவந்த ஆபத்து களையெல்லாம் அவர்களுக்குச்சொல் பிள்ளைகளைமாத்தி ரம் பத்திரமாய் விசாரித்துக்கொள் நான் காடுகளிலே திரிந்து காலத்தைக்கழிக்கிறேன் நீயுந் தாய்வீட்டுக்குப் போய்வா பெண்ணே என்றுசொல்லி நளமகாராசா புற ப்பட்டவுடனே தமயந்தியும் கணவனைப் பிரியமாட்டா மல் கூடவே தொடர்ந்துபோனாள் அதெப்படி யிருந்த தென்றால் தயை தாட்சண்யமுமில்லாத புஷ்கரராசா பண்ணின அனியாயத்தினாலே அந்த ராசாவைப் பார் த்து லட்சுமியண்டையி லிருக்கமாட்டாமல் நளமகா ராசாவின் பின்னே போகிறாப்போ லிருந்தது இப்படிப் பட்ட புருஷனும் பெண்சாதியும் அதிக பயங்கரமான காட்டிற்குள்ளே பிரவேசித்தார்கள்.

அன்னப்பட்சிகள் நளபதியின் கலையை அபகரித்தது.

இப்பால் சனீஸ்வரனேவலினாலே மகா அலங்கார மும் விநோத நிறங்களுமுள்ள இரண்டு அன்னப்பட்சி கள் முன்னேவரக்கண்டு அதுகளின்ரூபத்தைப்பார்த்து பிரமித்தாற்போல் பார்க்கவே அப்பக்ஷிகள் தன் சமீப த்தில் வந்திறங்கி முன்னே பழகின பட்சிகள் போல நளமகாராசா அண்டையிலே சேரப்போகிறதும் நிற் கிறதுமாய் விநோதங்களைக் காட்டிக்கொண்டிருக்கிறபட் சிகளைப்பார்த்து தன் பெண்சாதிக்குக் காண்பித்து வச னஞ் சொல்லுகிறார் ஓ பிராணநாயகி இதோ யிருக்கிற பட்சிகளின் ரூபங்களைப் பார்த்தாயா கண்களுக்கு வேடி க்கையா யிருக்கிறதுகள் இதுகளிப்படிவரக் காரணமெ ன்ன நாம் பசித்திருக்கிறதைப்பார்த்து ஈஸ்வரர் தயவு பண்ணி அனுப்பினாற்போலிருக்கிறது ஆனபடியினாலே நாமிதுகளைப் பிடித்து நெருப்பிலே போட்டு சுட்டுத் தின்றாகிலும் பசியாறுவோமென்று சொல்லி நளபதி அப்பட்சிகளண்டைக்குப் போனவுடனே அன்னப்பட் சிகள் மெள்ளமெள்ளச் சேரவருகிறதும் அகப்படுகிறாப் போலே நழுவிப்போகிறதுமாய்ச் செடிகளிலு முட்களி



அன்னபட்சிகள் நளபதியின் கலையை அபகரித்தது.

லுந் திரிந்து வேசாரப்பண்ணிவைத்து பின்னையும் சேர வந்து பட்சிகள் பேரில் நளமகாராசா கோபித்துக்கொண்டு இவைகளை இனி ஓடிப்போகாமற் பிடிக்கவேணுமென்று சொல்லி தன்பேரிலிருக்கிற வஸ்திரத்தை பட்சிகளின் பேரில்போட உடனே பட்சிகள் சிவுக்கென்றெடுத்துக்கொண்டு ஆகாயமார்க்கமே பறந்துப் போச்சுதுகள்.

இந்த ஆச்சரியத்தை நளமகாராசா பார்த்துக்கொண்டிருக்கச்சே அந்தப் பட்சிகள்போய் ஆகாயத்திலே நின்று மேகங் கர்ச்சித்தாற்போல் சிலவார்த்தைகள் சொல்லுகிறதுகள் ஓ நளமகாராஜரேகேளும்சூதாடுகிற போது புஷ்கராராசாவினுடையபாச்சிகையிலேயிருந்து உம்முடைய சம்பத்துக்களையெல்லாம் வாங்கி புஷ்கராராசாவுக்குக் கொடுத்தவர்கள் நாங்கள், எங்களைப்பிடிக்க நீரெண்ணவேண்டாம் நீர் சகல சாம்பிராச்சியங்களையுந் தோற்று யனாதியாய்க் காட்டிலேவாசம் பண்ணப்போகிறீர் இப்படித்தவசியாய்ப்போகிற உமக்கு வஸ்திரமென்னத்திற்கு இனிமேலும்முடைய சரீரத்தை கைகளாலே மூடிக்கொண்டுபோம் ஓ இராசாவே நீர் வித்வாமிசருக்கெல்லாம்வஸ்திரங்கொடுத்து கீர்த்திபெற்றிருக்கிறீரென்று கேட்டுவந்த எங்களுக்கு நீர் கட்டியிருந்தவஸ்திரத்தைக்கொடுத்தீரே இந்தசுகிர்தத்தினால் நீர் சுகமாகவாழக்கடவீர் உம்மைப்போல இப்படி யாருங்கொடுக்கிற பேரில்லை உம்மை மெச்சவேணும் நீர் மகாதானவினோதர் நல்லது நாங்கள் போய்வருகிறோம் நீர்சுகமாகயிருமென்றுசொல்லிபுறப்பட்டு சநீஸ்வராண்டைக்குப்போய் தெண்டனிட்டு சந்தோஷத்துடனே சொல்லுகிறது ஓ கலிராசரே நாங்கள் நளமகாராசாவினுடைய வஸ்திரத்தையும் வாங்கிக்கொண்டுவந்து அவனைக் கோமணாண்டியாக்கி காட்டிலே துரத்திவிட்டு வந்தோமென்று சொன்னவுடனே சநீஸ்வரன் மிகவுஞ் சந்தோஷப்பட்டு மெத்த நல்லகாரியஞ் செய்தீர்களென்று அவர்களைமெச்சி ராசாவினுடைய வஸ்திரத்தை அவர்களுக்குக்கொடுத்து சநீஸ்வரானுப்பிவிட்டார் பிறகுநளமகாராசா மிகவும் ஆச்சரியத்துடனே விசாரப்படுகிறபோது தமயந்திவந்து தன்முந்தாணியிலேகண்ணீரைத்துடை

த்து விசாரபடவேண்டாமென்று சொல்ல பெண்சாதி
யைப்பார்த்து நளபதி சோகத்துடனேசொல்லுகிறான்
ஓ பெண்ணே அந்தப்பட்சிகள் சொல்லிப்போன வார்
த்தைகளைக் கேட்டாயோ எல்லாஞ்சனிபகவான்செய்த
வஞ்சனைகளென்று தெரியலாச்சுது இன்னம் சுவாமி
யினுடைய கிருபை என்னமாயிருக்குமோ தெரியாது
எனக்கும்உனக்கும் கலியாணமானதும் சந்தானமுண்
டானதும் சநீஸ்வரன் பார்த்து மனம்பொறுமல் அப்
போதிந்த ஆபத்துகளெல்லாம் வரச்செய்தார் நாம் தப்
பித்துக்கொண்டுபோவோமென்றாலும் போகவொட்டா
மல் சநீஸ்வரன் பட்சிகளையேவி உபகாரமாய் என்
வஸ்திரத்தையும் பறித்துக்கொண்டு போகச் செய்தான்
நம்மை சநீஸ்வரன் வரச்செய்தசெய்திகளை அவனாலே
யேவப்பட்ட அந்த அன்னப்பட்சிகளே சொல்லிப்
போச்சுதுகள் இனி சந்தேகமில்லை பெண்ணே இன்ன
மென்னென்ன ஆபத்துகள் படவேண்டியிருக்கிறது
களோ நம்முடையதூதனும் வந்து பிள்ளைகளை உன்
தாய்வீடு சேர்ந்தசேதி சொல்லாமலும் போனான் ஒரு
காரியத்தை நினைத்தால் அபசயம்வருகிறது உன்னு
டைய துக்கமெல்லாம் பசிதாகத்தினாலே வதங்கிக் கறு
கறுத்து இருளடைந்து காண்கிறதுகள் வெய்யிலோ
உன்னைத்தகித்துப்போடுகிறது நிற்கநிழல்களுமில்லாமற்
போச்சுது குளங்களில் குடிக்கத் தண்ணீருங் கிடைக்க
வில்லை ஒருயிடத்திற் போவோமென்றால் வழிதெரிய
வில்லை கட்டின வஸ்திரமும்போச்சுது அனுதிகளைப்
போலேயாகிலும் பார்த்தையோவென்று கிலேசப்படு
கிற தன் புருஷனைப்பார்த்து தமயந்தி சொல்லுகிறாள்
ஓ பிராணநாயகா இனி துக்கத்தை விட்டுவிடும் இடி
வந்துமேல்விழுந்தாலும் தாங்குகிறோமென்கிற தைரிய
மும் என்னகாரியம் வந்தாலும் எந்தனுக்கில்லையென்
கிற தைரியமும் இராசாக்களுக்கிருக்கவேணும் தைரிய
மேதெய்வம் ஆனபடியினாலே தைரியத்தைக் கெட்டி
யாய் நிறுத்தும் ராச்சியத்தையும் பிள்ளைகளையும் வாழ்
வையும் நிலையாக நினைத்தால் தைரியம் போய்விடும்
ஆகையினாலே அதுகளை நினைக்கவேண்டாம், இன்ன
மென்ன ஆபத்துகள் வந்தாலும் வரட்டும் சந்தோஷ



மாயனுபவிப்போம் நாம்செய்தபூர்வகர்மங்கள் வந்தால்
நாம்தைரியம் விட்டால் அதுகள் போய்விடுமா முன்சன்
மத்தில் நாம் சம்பாதித்துக்கொண்டதை நாமல்லவோ
அனுபவிக்கவேணும் பூர்வவினைப்பயன் யோகிஸ்வரர்
களையும்விட்டதா புஷ்கரராசன்பேரிலேயும்சனீஸ்வரன்
பேரிலேயும் நாம் நிந்தைகளேன் சொல்லவேணும்நம
க்குப் புண்ணியபலன் உண்டானபோது அவர்கள் நம்
மையென்ன செய்தார்கள் காலபலனுண்டான போது
நாம் அவராலே நிந்திக்கப்பட்டோம், ஆகையால் இனி
துக்கமென்கிற அக்கினியைச் சாந்தமென்கிற நல்ல
தண்ணீரைவார்த்து அணைத்துப்போடும் ஸ்ரீமந்நாரா
யணரைத் தியானம்பண்ணும் அவர் நம்முடைய கஷ்ட
த்தை நிவர்த்திபண்ணுவார் நமக்குச்சகல செயமுமுண்
டாகும் அவருடைய அனுக்கிரகத்தினாலே புஷ்கரராசா
வையுங்கெலித்து சகல சாம்பிராச்சியங்களையும் நாமே
கைக்கொள்ளப்போகிறோம் தேவர்களுக்கும் ஆபத்துக்
கள்வரவில்லையா தேவேந்திரனைப்போலொத்தவர் நிடத
கிரியிலேயும் தாமரைத் தண்டிலேயுங்அநேககாலங்கஷ்
டப்பட்டு விஷ்ணுதேவர் கிருபையினாலே எப்போதும்
போல ராட்சதர்களைக் கெலித்து பிற்பாடு தம்முடைய
ராச்சிய பரிபாலனம்பண்ணவில்லையா அப்படிப்போல
நீரும் சிறிதுகாலம் இந்தக்காட்டிலே வாசம்பண்ணி
எப்போதும்போல சுவாமிஅனுக்கிரகத்தினாலே திரும்
பவும் ராச்சியம் தயவுபண்ணி நீர் பரிபாலிக்கப் போகி
றீர் சகலசாம்பி ராச்சியங்களையும் விட்டு ஒருவஸ்திர
நிமித்தியமாகக்கிலேசப்படுகிறீர்எப்போதும் போலசகல
ராசாக்களும் கைகட்டிநிற்க நீர்ராச்சியமாளச்சேதானே
பார்க்கப்போகிறேன் பயப்படவேண்டாம் நீர்தைரியந்
தைக் கெட்டியாய் நிறுத்தும் ஸ்ரீமந்நாராயணர் தயவுப
ண்ணுவார் சகலமும்நமக்கனுகூலமாகுமென்று சொல்
லித்தமயந்தி தான் கட்டியிருக்கிற புடவையை ஒருபுரம்
நளமகாராசாவின்பேரிலே போர்த்தினள்.

## நளபதியை தமயந்தி விதர்ப்பபுரிக்கு வரும்படி வேண்டல்.

இப்படியாக புருஷனும் பெண்சாதியு மினைபிரி
யாம லலைந்துகொண்டு காட்டிலே வெகுதூரம் நடந்

துபோகச்சே அவ்விடத்திலே நாலு வழிகள் பிரிந்து
போகிறதை நளமகாராசாகண்டு உடனேசொல்லுகிருர்
ஓ பெண்ணே இதோபோகிற வழி தெற்குசமூத்திர
மட்டும் போகலாம் இது விதர்ப்பபுரிக்குப் போகிறவழி
இது அயோத்தியாபுரி பட்டணத்திற்குப் போகிறவழி
இதில் எந்தவழி நடப்போம் சொல்லென்று கேட்டத
ற்குப் புருஷனைப்பார்த்து தயயந்தி சொல்லுகிருள்.
கேளும் இராசசேகரா மிருகங்கள்சஞ்சரிக்கிற காட்டி
லேநாமேன் விருதாவாய் அஞதிகளைப்போலவும் அந்த
மிருகசாதிகளைப்போலவுந் திரியவேணும் அப்படி
திரியாமல் நாமிரண்டுபேர்களும் உங்கள் மாமியார்வீட்
டுக்குப்போய்ச்சேர்ந்து சுகமாயிருப்போம் வாருமென்
று சொல்லுகிற பெண்சாதியைப்பார்த்து நளமகாராசா
வெட்கத்துடனே தலையை யிறங்கிக் கொண்டு சொல்லு
கிருர் ஓ பெண்ணே நான்மாமியார் வீட்டுக்குப்போனல்
பல்லக்கில் ஏரிக்கொண்டு ரதகஜதுரகபதாதிகளுடனே
பேரிகைமுழங்க அனேகம் வேடிக்கைகளுடனேயும்
போகிறதாச்சுதே இப்போது பாதசாரியாக எப்படிபோ
வேன் அந்த மாமனரை நான் எப்படி காண்பேன்,
அவர்சகல ராசாக்களுடனேயும் கொலுவமர்ந்து இருக்
கிறசபையிலே நாஞெண்டியாய்ப்போய் எனக்கு இந்த
ஆபத்துகள் வந்ததென்று எப்படிசொல்லுவேன் இது
வல்லாமலும் ஓ பெண்ணே கெட்டவர்கள் தங்கள்இன
த்திலேபோய்ச்சேரப்போகாதென்று சாஸ்திரங்களிலே
யிருக்கிறபடியினலே நான் வரக்கூடாது, நீமாத்திரம்
உங்கள் தாயார் வீட்டுக்குப்போய் என் பிள்ளைகளையும்
விசாரித்துக்கொண்டு சுகமாயிரு நானும் சிறிதுநாளையி
லே வந்துசேருகிறேன், இதுவல்லாமலும் நீவனத்தி
லே என்னுடனே மெத்த கஷ்டப்படுகிறையே எனக்கு
வெகு துக்கமாயிருக்கிறது என்பிறகே நடக்கமாட்டாய்
ஸ்திரீகள் காட்டிலே சஞ்சரிக்கக்கூடாது, நீ வீணைகப்
பூமியிலே விழுந்து கிடந்து வெகு தாபந்திரியப்படுவா
னேன் என் பேச்சைத் தள்ளாமல் உன்தாய் வீட்டுக்குப்
போயிரு நான் உன்மனது சோதிக்கிறேனென்று நினை
க்கதே ஸ்ரீமகா விஷ்ணுவறியச் சொல்லுகிறேன் நீ இப்
போதுதானேபோ இது உன் தாய்வீட்டுக்குப் போகிற



வழியென்று சொன்னவுடனே தமயந்தி பிரிந்து போக
வொட்டாமல் மெத்தவுந் துக்கப்பட்டுக்கொண்டு நள
மகாராசாவுடனே பிரலாபித்துஒருவார்த்தை சொல்லுகி
ருள். ஓ சுவாமி! என் பிராணநேசரே! உம்மையயங்கர
மானகாட்டிலே யலையச்செய்து நான் பட்டணத்திலே
போய்எப்படிமனம்பொறுத்துக்கொண்டிருப்பேன், நீர்
ஒண்டியாய் காட்டிலே கந்தமூலங்களைச் சாப்பிட்டுக்
கொண்டு புழுதியிலே புரண்டுகொண்டிருக்க நான்
திவ்வியஅன்னத்தைச் சாப்பிட்டுக் கட்டில் மெத்தை
யின்பேரிலே படுத்திருக்கவும் மனம் வருமோ, தண்ணீ
ரிலேயிருக்கிற மீன்குஞ்சைக் கரையிலே போட்டாற்
போலே உம்மைவிட்டுப் பிரிந்து நிமிஷநேரமாகிலும்
நான் சகிக்கமாட்டேன்,என்னைப்பார்த்துப் போகச்சொ
ல்லு கிறது உமக்கு ஞாயமாகுமாவென்றுபலவாறுசொ
ல்லி புலம்புகிற பெண்சாதியை ராசாகட்டிக்கொண்டு
கண்ணீரைத்துடைத்து நல்லவசனத்திஞலேதேற்றி, ஓ
பெண்ணே! உன்னைவிட்டு நான்போவேஞே அப்படி
போனல் சரீரத்தில் பிராணன் நிற்குமா நீ என்பிறகே
வந்தபடியினலே எனக்கு எப்போதும்போல பட்டண
த்திலே சுகமாயிருக்கிருப்போ லிருக்குது ஆயிரம்பேச்
சென்னத்திற்கு உன்முகத்தைப் பார்த்தால் ராச்சியம்
பந்துஜெனங்கள் சிநேகிதாள் இவர்களைப்பிரிந்து காட்
டிலே கிலேசப்படுகிறது எனக்கு தெரியவில்லை என்று
இப்படி பெண்சாதிக்கு நளமகாராசா உபசாரமானவார்
த்தைகளைச் சொல்லிக்கொண்டு அப்புரமுந் திடச்சித்த
மாய் நடக்கிறபோது இதுகளையெல்லாம்சூட்சமரூபமாக
க்கூடவந்து கேட்டுக்கொண்டிருக்கிற சனீஸ்வரன்பார்
த்து தன் மனதிலேயிருக்கிற மர்மம்விடாமல் அவர்களை
மேடுகளிலேயும், பள்ளங்களிலேயும், மூள்ளுகளிலேயும்,
செடிகளிலேயும், புதறுகளிலேயு மிழுத்து பயத்தை
யுண்டாக்கி வழிதெரியாமற் பண்ணிவைத்தான். ராசா
வும் தைரியம்விடாமல் விஷ்ணுத்தியானமே பண்ணிக்
கொண்டுபொருமையுடனே காடுகளில் சஞ்சரிக்கச்சே
அந்தகாரமாக யிருள் மூடிக்கொண்டிருக்கிற அந்தக்
காட்டிலே நளபதியுந் தமயந்தியும் ஏகாந்தமாய்அங்கே
குளங்களிலே தண்ணீர் குடித்துத் தாகத்தைத் தீர்த்துக்

கொண்டு திக்குகள் தெரியாமல் பிர்மித்துப் பார்த்துக் கொண்டிருக்கச்சே தமயந்திக்கு அதிக நித்திரைவந்து தரையில் படுத்துக்கொண்டு நித்திரைபோனாள்.

அப்போது நளபதிக்கு நித்திரை பிடியாதபடியினாலேயும் யாருமில்லாதபடியினாலேயும் தைரியத்தைவிடாமல் நளபதி சகல துக்கத்தையும் தன் மனதிலடக்கிக் கொண்டு களைத்து பூமியின்மேலேசாய்ந்து தனக்குவந்த ஆபத்தையும் புஷ்கரராசா பண்ணின கபடத்தையுமெண்ணிக்கொண்டு தன் பெண்சாதி பூமியின்பேரில் படுத்துக்கொண்டிருக்கிறதைப்பார்த்து நளபதி தனக்குள்ளேதானே விசாரப்படுகிறார். ஐயையோ பார்த்தையா சூரியகிரணத்திலே தங்கின தாமரைக்கொடியைப்போல துவண்டுகளையடைத்துஇவள் நித்திரைபோகிறாள், சகல ராசாக்களினுடைய பெண்களுமிவளுடைய கண் சைகையினாலேஊழியம்பண்ண இவள்மெத்தை யின்பேரில் படுத்துக்கொண்டு சுகமா யிருந்தாளே இப்பேர்ப்பட்டவளுக் கிப்போ பூமியே மெத்தையாச்சுது, மிருக சாதிகளே ஏவல்தொழில் செய்கிறவர்களைப்போல சூழ்ந்திருக்கிறதுகள் ஆகையாலே என்னிமித்தியம் படுகிற கிலேசத்தைச் சொல்லாமலிருக்கிற பெண்சாதியினுடைய கோரத்தை என் கண்களால் பார்க்கமாட்டேன், சுவாமி! இவளை யிங்கே காணாமல் உபாயமாய்விட்டு நான் ஒண்டியாய்ப் போய்விட்டாலும் இவளுக்கு நான் முன்னே விதர்ப்பபுரிக்குப்போகிறவழி காண்பித்தேன், அதை யறிந்து போகமாட்டுவாளோ என்னமோ தெரியாதே நல்லது சமாதானம் பண்ணியாகிலும் போகச்சொல்வோமென்றால் அப்படியும் போகிறவளல்லவேயென்று இப்படி பலவிதமாக எண்ணிக்கொண்டு சநீஸ்வரனுடைய மாய்கையினாலே மனந்துணிந்து ஒண்டியாகவே போய்விடுவோமென்று மெள்ள வெழுந்திருந்து அவள் கட்டியிருக்கிற சேலையில் நாலுமுழங் கிழித்துக்கொண்டு மனதிலே மிகுந்த வருத்தம்பொருந்தி எப்படி இவளை விட்டுப்போவேன் தெய்வமேஎன்று கொஞ்சதூரம் நடந்துபோய் அப்பால்போககாலெழாமல் திரும்பி பெண்சாதியண்டையிலே வந்து நின்று ஒருவார்த்தை சொல்லுகிறார், ஐயையோகோகிலாதேவி பெற்றபெண்ணே தேவே



ந்திரர் முதலான தேவர்களை எல்லாம் வேண்டாமென்று சொல்லி மகாபாவியான என்னை ஏன் கோரினாய்உன்னையுங் கூட்டிக்கொண்டு இந்த ஆரணியமான காடுகளிலே சஞ்சரிக்கவேணுமென்று நான் என்ன நோன்பு நோற்றேனோ பிரம்மாவினுடைய ஆக்கினையைத் தள்ள ஆருக்குங் கூடாதே அதை நான் தள்ளமாட்டுவேனோ தெய்வமே இந்தப்பெண் என்னிமித்தம் இந்த காடுகளிலே சஞ்சரிக்கலாச்சுதே பிரியமான பிள்ளைகளைவிட்டுப் பயங்கரமான காடுகளிலே அலையலாச்சுதே கடினமான பசியினால்களைத்து நித்திரை தெளியாமற் போச்சுதே இவள் தீராத சோகாக்கினியிலே முழுகலாச்சுதே என்ன செய்வேன் நான் எங்கேபோவேனென்று வெகு துயரப்பட்டுக்கொண்டு அவள் முந்தாணியை யெடுத்து அவள் சரீரமெல்லாமூடி அவளைப் பிரிந்து நாலடிதூரம் அப்பால்போய் மனது பொறுக்காமல் திரும்பிப்பார்த்து பெண்ணாசை யென்கிற பாசக்கயிற்றினாலே கட்டுப்பட்டு திரும்பவும் தன் பெண்சாதியண்டையில் வந்து மெத்தவுஞ் சோபித்து விழுந்து களைதெளிந்து பெண்சாதி குணங்களை வர்ணித்து அவள் முகத்தை சற்றுநேரம் உற்றுப்பார்த்து அவளுடைய முகக்காந்தியும் கண்களினழகையும் சரீரகாந்தியும் அவயவங்களினழகையும் வர்ணித்து பின்னையும் தான் முன்னே யவள் செல்வத்துக்கும் அவள் தன்னைப்பிரியாமல் தன்தாய்தகப்பனையுமறந்து தன்னையே திக்கென்று நம்பித் தன்னருகேயிருந்ததையும் தானுமவளுங்கூடி அனுபவித்த சுகங்களையும் நினைத்து நினைத்துப்பார்த்து அதிக விசாரப்பட்டு திரும்பவும் தைரியத்தினால் இவைகளெல்லாம் அற்பசுகமென் றெண்ணி நாம் மயங்கலாகாதென்று மனந்தெளிவுகொண்டு அவளைவிட்டப்புறம் புறப்பட்டு திரும்பவும் பெண்சாதி யண்டையிலே வந்து நின்று. நளபதி சொல்லுகிறார், அகிலாண்டகோடி பிர்மாண்டநாயகராகிய ஸ்ரீமந் நாராயணருடைய கிருபாகடாக்ஷத்தினாலே இக்காடுகளிலே யிருக்கிற சிங்கங்கள், யாளிகள், கண்டபேரண்டங்கள், புலிகள், யானைகள், செந்நாய்கள், பூதப்பிசாசுகள் முதலியவைகள் கையிலகப்படாமல் சுகமாய்ப்போய்ச் சேரப் [illegible]

நேரம் பெண்சாதியை நினைத்து அழுது திரும்ப நித்திரைபோகிற பெண்சாதியண்டையிலே வருவார், பின்னும்போவார், இப்படி ஒரு ஜாமபரியந்தம் ஊஞ்சலாடுகிற நளபதி அங்குமிங்குமலைந்து கடைசியில் மனம்பிரிந்து அவள் பாசத்தைவிட்டு காட்டுக்குள்ளே நடந்து வெகுதூரந் திரும்பிப்பாராமற்போனர். அந்த சனீஸ்வரன் பார்த்து நளபதியினுடைய சம்பத்தெல்லாம் பறித்து அவன் கட்டியிருந்த வஸ்திரத்தையும் பறித்துப் பெண்சாதி புடவையிலே பாதிகிழிந்து கட்டிக்கொண்டு அந்த கோரமான காட்டிலே பெண்சாதியை விட்டு ஒண்டியாய்ப்போகிற நளராஜாவின்பேரிலே பின்னும் அக்கினிதேவனை யழைத்துத் துன்பப்படுத்தச் செய்தான்.


### கக-வது வேற்றுருவமைந்த அத்தியாயம்.

அப்பால் கேட்டீரோ தர்மநந்தனரே! அக்ஷணமே அவன் சரீரத்தை பிர்மாண்டமாய் வளர்த்தி உக்ராகாரமாய் அக்காட்டுக்குள்ளே நுழைந்து மூங்கிற்புதறுகளின் கீழே உலர்ந்துகிடக்கிற சருகுகளிலே பற்றிச் செடிகளை சேர்த்து ஜொலிப்புடனே குபீல் குபீலென வெழும்பி விருக்ஷங்களையண்டிப் புகைகிளம்பிக் காடெல்லாம்பரவ நளமகாராஜன் சற்றுகிலுந் தைரியத்தைவிடாமல் கைகளினலந்த நெருப்பையணைத்து விலக்கிக்கொண்டு மிகவுந்தைரியத்துடனே அந்த அக்கினியைத்தாண்டி அப்புறம் நடக்கச்சே தன் பெண்சாதியாகியதமயந்திஎன்னவானளோ அவளை விசாரிக்கவேண்டுமென்று திரும்புகிறபோது.

### கார்க்கோடகன் நளபதி பாதத்தில் கடித்து உருமாறச் செய்தது.

அந்த சனீஸ்வரனுடைய பிரபாவத்தினலே கார்க்கோடகனென்கிற பாம்பு அந்த அக்கினி நடுவேயகப்பட்டுக்கொண்டு துன்பப்பட்டு மூங்கில் புதரின்மேல் குதித்தேறிக்கொண்டு பிராணபீதியினலே நளபதியை பார்த்து ஓ ராஜாதிராஜரே! சர்வஜீவதயாபரரே! சரணமென்கிறபேரைக் காக்கிறது உம்மிடத்தி லிருக்கிறபடியினலே உம்மைச் சரணமடைந்தேன், என்னைக்

இகோ அக்கினிதேவன் வந்து சுற்



நளமகாராஜா கார்க்கோடகனென்னும் ஸர்ப்பத்தால் தீண்டப்பட்டு உருமாறி ரிதுபர்ண ராஜனிடம் சேவகஞ் செய்தல்.

றிக்கொண்டு என்னை வெகு வேதனை பண்ணுகிறான், இந்தவேளையில் நீரென்னைரக்ஷியுமையாவென்று அநேகமாக கார்க்கோடகன் பரிதாபப் படச்சே நளபதி மிகவும் இரக்கமுள்ளவ ரானபடியினாலே தனது ஆபத்தையும்பாராமல் அப்பாம்பைரக்ஷிக்கத் தன்மனதிலே நினைத்து மேலேயிருந்த தன் புடவையைத் தன்னறையிலே கெட்டியாக வரிந்து கட்டிக்கொண்டு பூததயவுடனே இந்தஆபத்துக்காலத்திலேகார்க்கிறதேபிரதாபமென்று அத்தணலிலே புகுந்து பாம்பினுடைய வாலைப்பற்றியிழுத்துநெருப்புக்கப்புறம்போட்டவுடனே அப்பாம்பு திரும்பிக்கொண்டு எழும்பிவந்து நளபதியின் காலிலே கடித்தது, கடித்தவுடனே அந்நளபதியினுடைய திரேகமெல்லாங் கறுத்து விகாரமாய்க் காணப்பட்டது.

அப்போது ராஜா தன் பெண்சாதி சொன்ன வார்த்தையை நினைத்துக்கொண்டு அந்தப்பாம்பைப்பார்த்து நளபதி ஒருவார்த்தை சொல்லுகிறார், ஓ கார்க்கோடகா! நான்ராஜ்யத்தைவிட்டு, வஸ்திரமுமிழந்து, பெண்சாதியையும் விட்டுப்புறப்பட்டுவந்த பரதேசியாகிய என்னை நீ சரணமடைந்து கூப்பிட்டபடியினாலே நான் உன் ஆபத்தைத்தீர்த்தேன், எனக்கு நீ பிராமணஸ்திரீக்கு கீரிப்பிள்ளைபண்ணின உபகாரத்திற்கு பதிலுபகாரமாக அப்பிராமணஸ்திரீ அந்தக்கீரிப்பிள்ளையை உலக்கையாலடித்தாற்போல பிரதியுபகாரம் பண்ணினாய், யாராகிலும் இப்படி என்னைப்போல உபகாரம்பண்ணமாட்டுவார்களோயென்று சொன்னதற்கு கார்க்கோடகன் நகைத்துச் சொல்லுகிறான், ஓ ராஜரே! சிவனுடைய நெற்றிக்கண்ணிலே யிருந்து புறப்பட்ட காலாக்கினிக்குச் சரியான நெருப்பிலேவிழுந்து மடிந்துபோகிற என்னை ரக்ஷித்த மஹாத்துமாவான உமக்குநான் அபகாரம்பண்ணுவேனா? உமக்கு வராத ஆபத்துகளெல்லாம் வந்தது ஆகையினாலும்முடைய ரூபத்துடனே ஓரிடத்திற்குப்போனால் ரூபத்தைக்கண்டு எவனும் பயப்பட்டு உம்மை ஒருவேலைக்கும் வைத்துக்கொள்ளான், ஆனபடியினாலே வேறு ரூபமாகவேணுமென்று நினைத்துநானிந்தப் பிரதியுபகாரம் பண்ணினேன், உம்மிட ஆபத்து தீர்ந்தபிறகு என்னை நீர் நினைத்தால் நான்வந்துகடித்து

விஷத்தை வாங்கிக்கொண்டு எப்போதும்போல உம்முடைய சுயரூபத்தை யுண்டாக்குகிறேன், நீர் பயப்படவேண்டாமென்றுசொல்ல, கார்கோடகன்கையிற்செலவு பெற்றுக்கொண்டு கடினமான காடுகளிலேயும் குன்றுகளிலேயுந் திரிந்து அநேக ரிஷிகளாச்சிரமங்களையுங் கடந்து ஒருயிடத்திலும் நிலையாயிருக்கக்கூடாமல் நவகண்டங்களும் ஒருகுடையின்கீழாண்ட நளமகாராஜா நாலுமுழம் பழைய வஸ்திரந்தரித்து இரந்துண்டு தன்னைச் சகலஜனங்களும் பார்க்கச்சே வெட்கப்பட்டுக்கொண்டு போய் அளகாபுரிக்குமதிகமான செல்வமுள்ள அயோத்தியாபுரிப் பட்டணம் போய்ச்சேர்ந்தார்.

நளபதி ரிதுபர்னராஜனிடம் சாரதியாக அமர்தல்.

அந்தப்பட்டணத்தை யாளப்பட்ட ரிதுபர்னமகாராஜாவைக்கண்டு நளபதிதெண்டனிட்டு அவனுடனே ஒரு வசனஞ்சொல்லுகிறார், மகாராஜரே! நான் நிடதபுரத்திலே நளமகாராஜாவினுடைய அரண்மனையில் சுயம்பாகியாயிருந்தேன், அவர் எவ்வளவும் பேதமில்லாமல் தன்னைப்போல என்னையும் ரக்ஷித்துக்கொண்டிருந்தார், அவரிப்போது தன்னுடைய ராஜ்ஜியத்தை புஷ்கராஜாவினிடத்தில் சூதாடித் தோற்றுவிட்டுவனவாசமாய் புறப்பட்டு போய்விட்டபடியினாலே நானந்த புஷ்கராஜாவண்டையி லிருக்க மனதுவராமலிப்படி புறப்பட்டு உம்மண்டையிலேயிருந்து காலத்தைக்கழித்துப்போடுவோமென்று எண்ணிவந்தேன், ஓ சுவாமி! நான் சமையல் வெகு நேர்த்தியாகச் செய்வேன், ஒவ்வொருவேளை ரதசாரத்தியம் தேர்ப்பாக நிர்வாகம்பண்ணமாட்டுவேன், என்பெயர் பாகுகனென்று சொல்வார்கள், ஆகையினாலென்னை உம்மண்டையில் நிறுத்திக்கொண்டு ரக்ஷிக்கமாட்டுவீராவென்று கேட்க, உடனே அந்தராஜாவும் ரூபம் மாறுபட்டிருக்கிற நளமகாராஜாவைப்பார்த்து நகைத்து இப்படிக்கொத்தவன் நம்மண்டையிலிருந்தால் ஒருவேளையில் உதவியாவானென்று நினைத்து அவனை மரியாதையுடனே தன்னிடத்திலே வைத்துக்கொண்டிருந்தான். அங்கே நளமகாராஜாவும் வெகு பயபக்தியுடனே ரிதுபர்னமகாராஜாவுக்குச் சந்தோஷமுண்டாகும்படிக்கு ஏவற்றொழில்கள் செய்து



காலத்தைப் போக்கிக்கொண்டிருந்தான். அப்பால் நளமகாராஜாவுக்குச் சிநேகிதனும் விஷ்ணுபக்தனுமான பௌஷியனென்கிறவன் நளமகாராஜாநு பிள்ளைகளை யழைத்துப்போய் வீமராஜா பட்டணஞ் சேர்த்துவிட்டு திரும்பி மகாவிந்தபுரிக்குவருகிறபொது அவ்விடத்தில் புஷ்கராஜா இராஜ்ஜியபரிபாலனம் பண்ணுகிறானென்கிறதை அவன்கண்டு நளமகாராஜாவுக்குவந்த ஆபத்துகளையறிந்து மிகவும் வியாகூலப்பட்டு விதிப்பயனை நொந்துக்கொண்டு தானும் முன்னே சேவித்திருந்த ரிதுபர்னமகாராஜாண்டையிலே போய்ச்சேர்ந்திருந்தான். நளமகாராஜாவும் பௌஷியனைப்பார்த்து பேசாமலும் தன்பெயர் சொல்லாமலும் மௌனமாயிருந்தார், பௌஷியனும் நளமகாராஜாவென்றறியாமல் யாரோ சேவகனென்றெண்ணிக்கொண்டு அவனுடனே தானும் அந்த ரிதுபர்ன மகாராஜாவினிடத்தில் சேவகவிர்த்தி பண்ணிக்கொண்டிருந்தான்.

தமயந்தி நித்திரைதெளிந்து புருஷனைக்
காணாதினால் பரிதபித்தல்.

கேட்டீரோ தர்மபுத்திரரே! இன்னம் விஸ்தாரமாகக்கேளென்றுசொல்லுகிறார். முன் அந்தக்காட்டிலே நித்திரைபோன தமயந்தியானவள் நளமகாராசா பிரிந்து போய்விட்டவுடனே அவள் நித்திரை தெளிந்து எழுந்திருந்து பார்த்துந் தன்னண்டையிலே புருஷனைக்காணாமற் திகிலெடுத்து தன் புடவையிலே பாதி கிழித்திருப்பதையுங் கண்டு நாலுபக்கமுந் தேடிப்பார்த்து அல்லித்தண்டுபோலே சோர்ந்துவிழுந்து பூமியிற்புரண்டு புரண்டழுது கண்ணீர் ஆறாய்ப்பெருகக் கோவென்ற சத்தத்துடனே வாய்விட்டலறி முகத்திலறைந்துக்கொண்டு சொல்லுகிறாள், ஓ பிராணநாயகரே! இன்றையதினம் என்னைவிட்டுப்பிரிந்தீரே, இவள்கூடயிருந்தால் நமக்குக் கார்கட்டாயிருக்கிறதென்று நித்திரைபோகிறபெண்ணை ஆரண்யத்தில் வஞ்சனைபண்ணிவிட்டுப்பிரிந்தீரோ, ஓ கீர்த்திப்பிரதாபரே! ஓதயாபரரே! ஓ கலியாணகுண பரிபூரணரே! தீனரக்ஷகரே! ஓ சுவாமி! என்னை ஒண்டியாய் விட்டுப்போவது நீதியோ? இதுவரையில் நிமிஷநேரமாகிலும் நாம் பிரிந்திருந்த தில்

லையே, உயிரொன்றும் உடலிரண்டுமா யிருந்தோமே.
இப்படி லோகத்திலே ஸ்திரீ புருஷர்க ளுண்டோ
வென்று அவரவர்கள் ஆச்சரியமாய்ச் சொல்லிக் கொ
ண்ட வார்த்தையும் போய்விட்டது, அப்படி லோகத்
தார் சொன்னதும் என் மனது உம்மிடத்திலே யிருந்
தது மெய்யானால் உம்மைப் பிரிந்து என்ஜீவ னின்னம்
பொந்தியிலே யிருக்குமா? இத்தனை நேரம் நான் நித்
திரை செய்தது என்றாகிலுமுண்டோ? உம்மைப்பிரிகிற
நிமித்தியம் எனக்கொன்றுந் தெரியாமல் நித்திரை வந்
தது, அப்படியானாலும் நீரென்னை ஒண்டியாய்விட்டுப்
பிரியலாமோ? உம்மோடுகூட நானும் காடுகளிலுங் குன்
றுகளிலுந் திரிந்து காலங்கழிக்க மாட்டேனோ? இந்த
லோகத்திற்கெல்லாம் நீர் இராஜாவும் எனக்குப் புரு
ஷனுமா யிருந்தபடியினாலே என்னைவிட்டுப் போகமாட்
டீரென்று நம்பியிருந்தேனே யல்லாமல் இப்படிப்பட்ட
காட்டிலே என்னைவிட்டுப் பிரிந்துபோவீரென்று நானறி
யேன், ஆனால் உம்மைத் தூறுகிறது எனக்குத் தகாது,
முன்னாலே நான் என்ன நோன்பு நோற்றேனோ? அது
இப்போ பிரித்துவைத்தது, நான் மகா பாவியானபடியி
னாலே உமக்கு இந்த ஆபத்துகளெல்லாம் வந்தது, நீர்
நல்லகுணங்களை யுடையவராகையால் இத்துன்பங்கள்
உமக்கென்னத்திற்குவரும்? மகா பாவியான என்னை கை
பிடித்தபடியினாலே உமக்கிப்படிக்கொத்த ஆபத்துகள்
வந்ததுகள், கடைசியிலே என்னையும் விட்டுப்பிரிந்து
போனீர், இப்போதல்லவோ நான் ஒண்டியா யிருக்
கிறேனென்று எனக்கு பயந் தோற்றுகிறது, புருஷ
னுடைய இஷ்டமறியாத பெண்சாதி கடினமான முள்
ளுக்குச் சமானம், ஓ பிராணநாயகரே! உம்முடனெதிர்
த்து வார்த்தைகள் சொன்னேனோ, ஊழியத்திலே தா
ழ்வு பண்ணினேனோ, இப்படிப்பட்ட அக்கிரமம் என
னிடத்தி லுண்டானதாலல்லவோ நீரென்னை விட்டுப்
பிரியவேணும், ஆனாலும் பெண்சாதி யிடத்திலேயும்
சேவகனிடத்திலேயும் தப்புகளெத்தனை யிருந்தாலும்
துரைகளானபேர் பொறுக்கவேணும், இவர்களிடத்தி
லே குற்றஞ்சுமத்துவது அருமையல்லவே, நீர் சகலதர்
மங்களும் பரிபாலனம் பண்ணப்பட்ட மகாராஜா வாச்



சுதேயென்று இப்படி பலவிதங்களாகச்சொல்லி துக்கப்
பட்டு தெளிவுபிறந்து தன்னுடைய கர்மவசத்தினாலே
ராஜாவுக்கு தன்னைப்பிரிய இத்தனை துணிவு பிறந்ததெ
ன்று நினைத்து ஓ ஸ்ரீமகாலட்சுமி மனோகரரே! ஸ்ரீமந்
நாராயணரே! வைகுண்ட வாசகரே! காட்டிலே என்னை
விட்டுப்போனாரென்று என் பிராணநாயகரை வீணாகத்
தூறினேன், என் தப்பிதத்தைப் பொறுத்து கிருபை
பண்ணி ரக்ஷிக்கவேணுமென்று சொல்லி தமயந்தி
அநேகவிதமாகத் தோத்திரம்பண்ணிப் பகவானைவேண்
டிக்கொண்டு வெகுவாய்ப் பிரலாபித்து விசனமடைந்து
சற்றே தைரியமுண்டாகி யெழுந்திருந்து நடக்கச்சே
திரும்பவும் மனங்கலங்கி வாய்விட்டழுது சொல்லு
கிறாள்.

ஓ ராஜரே! பூரணச் சந்திரனைப்போன்ற உம்மு
டைய முகத்தை நானென்றைக்குக் காணப்போகிறேன,
ஓ பிராணநாயகரே! நானெத்தனை தப்புகள் பண்ணினா
லும் உமக்கு எத்தனை ஆபத்துகள் வந்தாலும் பெண
சாதியான என்னை இப்படி யலையப் பண்ணலாமோ?
முன்னே நாமிருவரும் சிங்காரவனத்திலே பேசிக்கொ
ண்டிருந்த பேச்சை நீர் மறந்துபோனீரோ? இன்றை
க்குப் தெய்வம் நம்மைப்பிரித்துவிட்டதோ, இனியென
க்கு புத்தியென்ன, நீர் சீக்கிரமாகவந்து சொல்லி என
னைக் காப்பாற்றாமற்போனால் என் ஜீவன் பொந்தியில்
நிற்கமாட்டாது, எங்கு ஒளித்திருக்கிறீரோ தெரியாது,
தேவரீர் ஓடிவந்து என் பிராணனைக்கொடுத்து ரக்ஷிக்க
லாகாதா சுவாமியென்று இவ்விதமாக புருஷனை நினை
த்துபிரலாபப்படுகிறபோது சூரியன் அஸ்தமனமானான்,
அந்தவேளையில் தமயந்தி அந்தக்காட்டிலே விசாரப்
படுகிறதைக்கண்டு அவ்விடத்திலிருக்கிற மிருகங்களெல்
லாம் மேய்ச்சலுக்குப் போகாமல் சுற்றிலும் பார்த்துக்
கொண்டிருந்ததுகள், கிளிகளும் அவளுடையஉதட்டை
யே உற்றுப்பார்த்துக்கொண்டிருந்ததுகள், இப்படியாக
தமயந்தி பிரலாபித்து புருஷனைக் காணாதபடியினாலே
அவ்விடம்விட்டு நடக்கச்சே புதறுகளிலேயும் செடிக
ளிலேயும் புகுந்து பட்சிகள், மிருகங்கள், விருக்ஷங்கள்
இவைகளைப்பார்த்து ஓ மிருகங்களே! பக்ஷிகளே! விரு

க்ஷங்களே! என் புருஷரான நளமகாராஜாவை காணீர்களோவென்று கேட்டுக்கொண்டு தேடுகிற தமயந்தியை சனீஸ்வரன் மாய்கையினால் ஒரு மகா பெரிய சர்ப்பம் தூரத்திக்கொண்டு ஓடிவந்து இரண்டுகாலையும் சுத்திக்கொண்டது. அதைக்கண்டு தமயந்தி பயப்பட்டு தன் புருஷனை நினைந்து ஓகோ மகாராஜரே! புண்ணியபுருஷரே! இந்தப்பாம்பின் வாயிலே அகப்படச்செய்து போய்விட்டீரே யென்று புலம்பினள். அந்தச் சங்கதி கேட்டு ஒரு வேடன் புதரிலேயிருந்து கையிலே அம்பும் வில்லும் பிடித்து, அரையிலே ஒரு துப்பட்டியும் தலையிலே ஆட்டின் சர்மத்தினுடைய குல்லாவும் நெற்றியிலே செந்தூரப்பொட்டும் சிவந்தகண்ணும் விகார மூக்கும் சிங்கப்பல்லுந் துலங்க, சீக்கிரமாகப் பாம்பினாலே இரண்டு காலுஞ் சுத்தப்பட்டு நளமகாராஜாவை நினைத்துப்புலம்புகிற தமயந்தியண்டையிலே ஓடிவந்து அந்தப் பாம்பின்வாலைப் பற்றியிழுத்து வெட்டிப்போட்டு அந்தத் தமயந்தியைப் பார்த்து அந்த வேடன் ஒரு வசனஞ் சொல்லுகிறான். ஓ மன்மதன் தேவிபோலிருக்கப்பட்ட ஸ்திரீயே, துஷ்ட மிருகங்களினாலே பயங்கரமாயிருக்கப்பட்ட காட்டிலே நீ ஒண்டியாய் இப்படியலைந்துக்கொண்டு யாரைத்தேடுகிறாய்? உன் பேரென்ன? நீ யாருடைய மகள் உன் புருஷன் பேரென்ன சொல்லுவாயென்று கேட்டவுடனே தமயந்தி அந்த வேடனைப்பார்த்து அண்ணா, விதர்ப்பதேசத்தையாளுகிற வீமராஜன் மகள் நான், என்பேர் தமயந்தியென்பார்கள், என் புருஷர் நளமகாராஜா, அவர் என்னை இந்தக் காட்டிலே விட்டு ஏதோ விசனத்தினாலே அவரெங்கேயோ போய்விட்டார், அவரை நானெங்குந் தேடினேன், என் கண்களிலே காணேன், அவர் மன்மதனைப்போல சொரூபம், தாமரை யிதழ்களைப்போல கண்கள், சந்திரவிம்பம்போல வதனமுமுடையவர், இப்பூலோகத்திலே யிருக்கிற நவகண்டங்களையும் ஆளப்பட்டவர், தேவப்பிராமண விசுவாசமுள்ளவர், அவரை நீ எங்கேயாகிலும் கண்டதுண்டோ அண்ணாவென்று கேட்டவுடனே நல்லுத்தரவு சொல்லாமல் அந்த வேடன்யோசனைபண்ணி நம்முடைய பாக்கியமே பாக்-



கியமென்று அதிக சந்தோஷப்பட்டு காமவிகார மிஞ்சினதால் ஒன்றுந்தோற்றாமல் அந்தவேடன் தமயந்தியைப்பார்த்து பின்னுஞ்சொல்லுகிறான், ஓ ஓ அதிக சௌந்தரியமுள்ள பெண்ணே! சற்றுமிரக்கமில்லாமற் பிரிந்துபோன உன்புருஷனைத் தேடுவானேன், அப்படிக்கொத்த புருஷன் பூலோகத்திலே கிடையானோ? உன்னுடைய சௌந்தரியத்துக்கும் என்னுடைய அழகுக்கும் சரியாயிருக்கும் என்னுடைய அவதானத்திற்குத் தேவதாஸ்திரீகளெல்லாம்மயங்கி என்கைவசமாவார்கள்.

ஆகையினாலே என்பெண்சாதியை நீ சொன்னபடிக்கு உனக்கு ஏவல்செய்து கைகட்டி உபசாரணை செய்து நிற்கப்பண்ணுகிறேன், அவள் மார்பிலடித்தாப்போல என்வீட்டிற்கு நீ வா, உனக்கொரு குறைவுமில்லாமல் நடப்பிக்கிறேன், என்னேரமும் உன்னைப் பிரியாமலிருக்கிறேன், என்னுடைய ஊரைப்பார்த்து நீ சந்தோஷப்பட்டு மெச்சப்போகிறாய், உன் மனதுக்கேற்றபடியே போகங்களை யனுபவித்துக்கொண்டிருப்பாய், சுவாமி பாதத்தாணை, இதற்குச் சமுசயமில்லை, விருதாவாய் நல்ல யௌவனகாலத்திலே புருஷனை விட்டுப்பிரிந்து மன்மத பாணங்களினாலே நொந்து அடிபட்டு நோக வேண்டாம், உன்னுடையபாக்கியவசத்தினாலேதானுனக்கு அகப்பட்டேன், நாமிருவரும் ஏகபோகமாய் விளையாடிக்கொண்டிருப்போம் வாராய்பெண்ணே, ஓ பிராண நாயகி, நான் சாமானியப்பட்டவனல்ல, உன்னுடைய புருஷனை மறப்பிக்கமாட்டுவேன், கன்னமிடவும் மூலையிலேயிருக்கிற முடிப்பை யெடுக்கவும், சொக்கு பொடி போடவும் ஒருத்தருக்குந் தெரியாமல் வீட்டிற்புகுந்து அவதானமாய்ப் பதுங்கவும் வழிமறித்துப் பறிக்கவும் வலைகள் கண்ணி ஓட்டிப் பக்ஷிகள், மிருகங்கள் பிடிக்கவும் இப்படிப்பட்ட சமர்த்துள்ளவன், சகலமானவேடரும் என்னை மெச்சுவார்கள், பெண்ணே, நீ என்னிடமேயிருந்து நல்ல ருசிகரமான மாம்சங்களைத் தின்று தேனையுங் குடித்துக்கொண்டிருப்பாய், நீ கஷ்டப்படாமலிருக்கத் தெய்வமுன்னை என் கண்ணின் முன்னே கொண்டுவந்துவிட்டது, எனக்கு யோகத்தை யுண்டாக்கிவைத்தது, ஆனபடியினாலே மன்மதபாணங்களுக்குத்

தப்பக்கூடவில்லை, உன்பேரிலெனக்கு வெகு மோகமா
யிருக்கிறது, என் பெண்சாதியை இனி விரும்பேன்,
உன்னுடனே கூடியிருக்கிறதேயெனக்குப்போதும், முன்
னே நான் செய்த பாக்கியவசத்தினாலே நீ இங்கே வந்
தாய், நாமிருவரும் நம்முடையவீட்டிற்குப்போவோம்,
நடநடவென்றுசொல்லி இந்தவிதமாக அந்த வேடன்
துன்மார்க்கமாகிய வசனங்களைச் சற்றுமஞ்சாமல் மகா
பதிவிரதா சிரோன்மணியாகிய தமயந்தியைப் பார்த்து
சொன்னான். அதைக்கேட்டு தமயந்தி அதிக கோபத்
துடனே அந்தக்குரூரமான வேடனை நீராக்கவேணு
மென்று நினைத்து திரும்பவும் அந்தக்கோபத்தை மன
திலே யடக்கிக்கொண்டு, ஐயையோ! தெய்வமே! இந்த
பாவியைக்கொண்டுவந்துஎனக்கெதிரேவிட்டுஇப்பேர்க்
கொத்த வார்த்தைகளைச் சொல்லுவித்தீர், இந்த அத
மன் இது பாவமென்று சற்றாகிலுமெண்ணாமற் போனா
னே, இவனுக்கு நல்லகதி கிடைக்குமோ? நல்லது
இவனை பிழைத்துப்போகத்தக்கதாக இன்னுஞ்சில புத்
திகள் சொல்லுவோமென்று நினைத்து தமயந்தி அந்த
வேடனைப்பார்த்துபின்னுஞ்சொல்லுகிறாள், ஓ அண்ணா
இப்படிப்பட்ட துன்மார்க்கமான வார்த்தைகள் சொல்
லுகிறது உமக்கு நியாயமா? ராஜபத்தினியுந் தாயுஞ்
சரியாச்சுதே, நீ இப்படியோசனையில்லாமல் சொன்ன
தினாலே வந்த பாவங்களெல்லாம் ஹரிஸ்மரணை பண்
ணினால்போம், அறிந்துசெய்த பாவங்களுக்குப் பிரா
யச்சித்தம் ஒன்றுமில்லை, அதனாலே முன்செய்த புண்
ணியங்களுமிழந்து நரகத்துப் போகவேண்டியிருக்கும்,
கெட்டுப்போவாய் ஆனபடியினாலே பரஸ்திரீகளைச்
சொற்பனத்திலேயும் விரும்பலாகாது, விரும்பினா லவர்
களுக்கு லச்சையும் கேடும் வந்து சேரும், பாக்கியம்
போய்விடும், கீர்த்திபோம், அபகீர்த்தியுண்டாம், சகல
மானபேர்களாலும் நிந்திக்கப்படுவார்கள், ஆயுசு ஜீர
ணமாகும், கடைசியிலே எமதூதர்கையிலே அகப்பட்ட
போது அவர்கள் கொண்டுபோய் அரணைகள், அட்
டைகள், பாம்புகள், கருந்தேள்கள், செந்தேள்கள் இது
களைவிட்டுக் கடிப்பித்து அக்கினித்தூணை யணைப்பித்து
உயிர் கழுவிலேபோட்டு, பாராங்கல்லுகளைக்கடிப்பித்து



செக்கிலே போட்டுத்திருப்பி எரிகிறநாராசங்களினாலே
கண்களிலே குத்திப் பின்னையும் அநேகமாயிரங்கோரங்
களைச்செய்து கடைசியிலே தூர்க்கந்தமான எழுபத்தி
ராயிரம் நரகங்களிலேயும் போட்டு விடுவார்களென்று
பெரியோர்கள் சொல்லுவார்களாகையினாலே பரஸ்திரீ
களைக் கண்ணினாலேயே பார்க்கலாகாது, பார்த்தால்
லோகமாதாவைப்போ லெண்ணிப் பார்க்கவேணும்,
ஓ அண்ணா! இதுவல்லாமலும் இராஜபத்தினி, குரு
பத்தினி, தமையன் பத்தினி, மாமன் பத்தினி, சிநே
கிதன் பத்தினி இவர்களைந்துபேர்களையுந் தாய்க்குச் சரி
யாகப் பார்க்கவேணும், அல்லவென்று விகாரமிஞ்சி
மோகித்துப்பார்த்தால் பண்ணின புண்ணியங்கள் அழி
ந்துபோய் ஐஸ்வரியமும் ஆயுசும் ஜீரணித்துப்போம்,
வாராத ஆபத்துகளும் வரும், புத்திகெட்டுப்போம்,
இதுவல்லாம லிப்போது நான் சொன்னபடி எமதூதர்
கையிலகப்பட்டுக் கெதை, சூலம், இருப்புத்தடி, குந்தம்,
சுரிகை, சுத்தி, சக்கரம், தோமரம், பாசு, பல்லயம்,
அஸ்திரப் பாசக்கயிறுகள் இதுகளினாலே வெகுவாய்
வருத்தப்படவேணும், கோரமான நரகத்திலேயிருந்து
கரைகாணமாட்டாமல் அதிலேதானே வாசமாயிருந்து
பசியினாலேநொந்து,மலமூலத்திரங்களிலேபுரண்டுகடை
சியிலே அயோக்கியமான ஜந்துகளாகப்பிறக்கவேணும்,
ஓ அண்ணா, நீ ஒருநாளாகிலும் நீதிசாஸ்திரங்களைக்
கேட்கவில்லையோ, பெரியோர் சாவகாசம் பண்ணவில்
லையோ, நீ பெண்களுடனே பிறக்கவில்லையோ? நானு
னக்குத் தங்கை, அதிலும் மகாபதிவிரதை, ஆகையினா
லே உனக்கு இப்படிப்பட்ட துற்புத்தி வேண்டாம்.
அண்ணாவென்று அநேகவிதங்களான நீதிகள் தமயந்தி
சொன்னாள், சொன்னவுடனே அவ்வார்த்தைகள் வே
டன் காதில் கடூரமாகக்கேட்டு ஒப்பாமல் மரணகாலஞ்
சம்பவித்தபடியினாலே தமயந்தியினுடைய சக்தியும்மகி
மையும் பின்வருகிறதுந் தெரியாமல் தன்னைத்தானறி
யாமல் கர்வித்து மதோன்மத்தனாய்ச் சொல்லுகிறான்,
அடி பெண்ணே! நீ இப்படி என்னை யலையப்பண்ணி
தான் வந்த காரியத்தைத் தடுக்கிறாய், நீ சொல்லுகிற
வார்த்தைகள் ஒன்றும் என் செவியிலே நுழையவேயி

ல்லை, இத்தனை உபாயமான வார்த்தைகள்என்னுடனே சொல்லவேண்டாம், பின்னை வருகிற காரியங்களை எண்ணுவானேன், யமதர்மராஜா கர்வித்து என்னண்டைக்குவந்தால் நிமிஷத்திற்குள்ளே அவன்கர்வத்தை நான் அடக்கிப்போடுவேன், எப்படிப்பட்ட பலசாலிகளானாலும் என் முன்னே நிற்கப்பயப்படுவார்கள், என்னுடைய சௌரியத்தை நீ அறியமாட்டாய், ஓ பெண்ணே! இத்தனை ஜாலம் என்னுடனே பண்ணவேண்டாம், எனக்கு விரகதாபப்பொறுக்கக்கூடவில்லை,ஆகையினாலே நல்ல சௌந்தரியமுள்ள பெண்ணுடனே ஒருநாள் கூடியனுபவிக்கிறதுபோதும் யமவாதையைக் கண்டவரார், ஓ லீலாவினோதியே! இனி மனம் ஒளிப்பானேன், காட்டிலே திரிகிற எங்களுக்கு வரிசை, தயவு இதுகள் உண்டாயிருந்தால் நாங்கள் பிழைக்கமாட்டோம், எங்களுடைய குலத்துவாழ்க்கையே அப்படிப்பட்டது, எங்களுக்கு புண்ணியமென்றும் பாவமென்றும்பார்க்க அக்கரையில்லை, எல்லாம் சரிதானாகையால் ஓ மகாரூபவதியே, இனிதடைபேசாமல் என்னையாண்டு கொள், நானினி பொறுக்க மாட்டேன், மகாரிஷி தபோதனர்களாயிருக்கிறவர்களும் ஸ்திரீகளைத்தனியே கண்டால் மனம்பொறுக்கமாட்டார்கள், அப்படியிருக்கிறபோது என்பேரில் குற்றஞ்சொல்லத்தகாது, உன்னை நானினி பொறுக்கமாட்டேன், உனக்கு அடிமையாகிறேன், ஆள்வாய் பெண்ணே, நம்முடைய ஊருக்குப்போவோம்என்றவுடனே தமயந்தியோசனைபண்ணி அதிககோபமாய் அந்த வேடனைப்பார்த்து, அடாபாவி எனக்குஉபகாரம் பண்ணின உனக்குஅபகாரம்பண்ணத் தகாதே, நீ பண்ணின உபகாரத்தினாலே நீ செய்த அபசாரமெல்லாம் நான் பொறுக்கவேண்டி வந்தது, இனிமேல் நான் பொறுக்கமாட்டேன், இப்படி துன்மார்க்கமான பேச்சுகள் பேசவேண்டாம், சுகமாக ஓடிப்பிழைத்துப் போய்விடென்று கண்டித்துச்சொன்னாள். அதை வேடன்கேட்டுச் சம்மதியாமல் கண்புருவத்தைநெறித்து விழித்துபார்த்துதமயந்தியைபோகிக்கிறதேயோசனையென்று சொல்லி அவ்வேடன்தமயந்தியைப்பிடிக்கக் கிட்டே வந்தான். அதுகண்டு மகாபுண்



ணியவதியாயிருக்கிற தமயந்தி தேவி அதிக ரோஷத்துடனே தன்கண்கள்சிவக்க மகாகிலேசத்துடனேமனம் நொந்து பகவானை நினைத்துச் சொல்லுகிறாள்.

### தமயந்தி வேடனைச் சபித்தல்.

ஓ அனாதரக்ஷகா, ஆபத்பாந்தவா, பக்தவத்ஸலா, பரப்பிரம்மஸ்வரூபா, ஓ சுவாமி நான் மனோவாக்குக் காயங்களிலேயும் என் புருஷனுக்கு வஞ்சனை பண்ணாதவளுமாய் சகலலக்ஷணங்களுமுள்ள பதிவிரதையுமாய் இந்த லோகத்து ஜனங்களெல்லாம் புகழப்பட்ட நள மகாராஜா எனக்குப் புருடனுமாய் நான் அவருக்குப் பெண்சாதியுமாய் என்னிடத்திலே ஒரு தப்பிதமுமில்லாமலிருக்கிறது நிஜமேயானால் இந்தவேடன் எரிந்து சாம்பலாய்ப் போகக்கடவதென்றுசபித்தவுடனே அவ்வேடன் இடிவிழுந்தாற்போல் ஒரு நொடிக்குள்ளே பக்கென்று எரிந்து சாம்பலாய் விழுந்து ரௌரவாதி நரகத்திற் சேர்ந்தான். அதன்பிறகு தமயந்திதேவியும் மெத்த கிலேசத்தையடைந்து என் புருஷன் என்னைப் பிரிந்துபோனபடியாலல்லவோ இப்பாவி என்னைப் பலவந்தப்படுத்தினான், புருஷன் என்னண்டையிலேயிருந்தால் இவன் என்னைத் தலையெடுத்துப்பார்ப்பானா? ஆண்திக்கில்லாதபெண் இப்பூமியிலே பிழைத்திருக்கலாகாது, ஸ்திரீயாப் பிறக்கிறது மெத்ததோஷம், தண்ணீரிலேயிருக்கிற ஜீவனை வெளியிற் பிடித்துப்போட்ட பாவனைபோல் நானிந்தப்பூமியில் என்புருஷனைவிட்டு ஒண்டியாய்ப் பிழைத்திருக்கமாட்டுவேனோ? ஒருநாளுங் கேளாத விந்தையான சொல்லுகள் இன்றைக்கு நான் கேட்கலாச்சுதே, இக்காட்டில் என் புருஷன் ஒருயிடமும் என் பிள்ளைகளொருயிடமும் போகும்படியாக யார் சபித்தார்களோ தெரியாது, இனிமேலிந்த வேடனைப் போல பாவிகளெத்தனைபேர் வழிமறிப்பார்களோ தெரியாது ஆகையினால் இனி நாம்பிராணனைவிட்டுவிடுகிறதே உத்தமம், பின்வாங்கப் போகாதென்று நினைத்து தமயந்தி தன் புருஷனை நன்றாக தியானம்பண்ணிக்கொண்டு தனக்கு எதிரே வருகிற மிருகங்களையும் பக்ஷிகளையும் எச்சரித்துக்கொண்டு வரச்சே, சனீஸ்வரன் அக்கினி

பகவானுடனே சொல்லித் தமயந்தியைவருத்தப் படுத்தச் சொன்னான். ப்போது ஆகாயத்திலே தேவர், யக்ஷர், கின்னரர், கிம்புருடர், கருடகாந்தருவர்களும் பன்னக ஸ்திரீகளுங் கண்டு கிலேசப்பட தமயந்திக்கு முன்பாக அக்கினிபிரவேசித்தபடியினால் தமயந்திதேவி அக்கினியைப்பார்த்து இதுசமயம் இப்பிராணனைவைத்திருக்கலாகாதென்று தன்மனதுக்குள்ளே யெண்ணி, அந்த அக்கினியிலேபோய்விழுந்தாள். விழுந்தவுடனே அக்கினிதேவன்பயந்துகுளிர்ந்தஜலம்போ லிருந்தான். தமயந்திதேவி அக்கினியில்விழுந்தும்சாவுவராமற் போச்சுதென்று திரிகிறபோது அவ்விடத்திலிருக்கிற மிருகங்கள் கையிலேயாகிலும் அகப்பட்டு சாவோமென்று எண்ணிக்கொண்டு போகச்சே புலிகள், யானைகள் இவைகளைக்கண்டு அதுகளண்டையிற்போய் கர்ச்சித்து நின்றாள், அதுகளும் பயந்து ஓடிப்போச்சுதுகள். இப்படி எவ்விதத்திலேயும் பிராணனைப் போக்கடித்துக் கொள்வோமென்று திரிந்தாலும் தமயந்திக்கு பிராணன் போகாமல் அலைந்து கண்ணீர்சொரிந்து பின்னையுஞ் சொல்லுகிறாள்.

### தமயந்திக்கு முனிவர் தைரியஞ்சொல்லி வழிகாட்டி யனுப்பியது.


இந்த உலகத்திற் ஜனங்கள் சாவுகிறதற்கு என்னென்ன மருந்துகளைத்தின்று சாவார்களோ தெரியாதே, நானென்னசெய்வேன் தெய்வமேயென்றுகண்டகண்ட இலைகளையும் வேர்களையும் மென்று தின்றுபார்த்தாள், அதிலுஞ் சாவுவராமல் பசியுமடங்கி பித்தம்பிடித்தவர்களைப்போல் பிர்மித்து தொங்குகிறமயிரும் சொரிகின்ற கண்ணீருமாய் நடக்கிறபோது நடைதள்ளாடித் தனித்துப் பெருமூச்செரிந்து தமயந்தி முனீஸ்வரனைக் கண்டு சேவித்துப் புலம்பிக் குரலுங்கம்மி கிலேசத்துடனே அக்காட்டில் போகச்சே அங்கே தபோதனர்களான முனீஸ்வரர்கள் ஆச்சிரமத்திலே சிஷ்யர்கள் சேவிக்க, வேதபாராயணங்களுடனேயும் இருக்கிறதைக் கண்டு சேவித்துத் தன் துக்கங்கள் எல்லாம் அவர்களுடனே சொல்லி, ஓ சுவாமிகளே! பசியாத்தாபமுள்ளவர்களே!



என்னை நளமகாராஜாவானவர் இந்த ஆரண்யத்திலே விட்டுப்போய்விட்டார், அவரை நான் காடெங்குந் தேடிக்காணாமல் உங்கள் சன்னிதியிலேவந்து சரணமடைந்தேன், நீங்களென்னை கடாக்ஷியுங்களென்று சொன்னாள், சொன்னவுடனே தங்கள் திவ்விய திருஷ்டியினாலேபார்த்து, ஓ ராஜகுமாரத்தியே! நீ பயப்படவேண்டாம், விசாரப்படாதே ஓ அம்மா! மகா குரூரமாய் சனீஸ்வரன் இத்தனைகாரியங்களுஞ்செய்தான் எப்போதும்போல் உன் புருஷனும் பிள்ளைகளும் நீயும் கூடி இராஜ்யலக்ஷ்மியினுடைய வைபவத்தை அனுபவிக்கப் போகிறீர்கள், சிந்தனைவேண்டாம் அம்மாயென்றார்கள். தமயந்தி அதைக்கேட்டவுடனே விசாரந்தீர்ந்து ஓ சுவாமிகளே! நீங்கள்சொன்னபடி நாங்கள் கூடியிருக்க எத்தனைநாள் செல்லுமென்று கேட்க, முனீஸ்வரர்களும் யோசனைபண்ணி அம்மா தமயந்தி, இன்னும் மூன்றுவருஷம் சென்றபிறகு உன் புருஷனும் நீயும் உன் பிள்ளைகளுங்கூடி சந்தோஷமாயிருக்கப்போகிறீர்கள், அப்படியிருக்கிறபோது நாங்கள் சொன்னவார்த்தையை நினைத்துக்கொள்ளப்போகிறாய், எங்களிடத்தில் அபத்தம் பிறவாது கெட்டியாய்நம்புமென்று அபயஸ்தங் கொடுத்தார்கள். அந்த வார்த்தைகளைத் தமயந்தி கேட்டு வெகு சந்தோஷத்துடனே நம்பித் தன்மனதை தேற்றிக்கொண்டு அவர்களண்டையிலே தானே சிறிதுநாள் அவர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள். சிலநாள் சென்றபிறகு தமயந்தியைப்பார்த்து ஓ அம்மா பாக்கியவதியே, நீ இன்றையவரைக்கும் எங்கள் வசத்திலிருந்தாயே, எங்கள் தபசு முடிந்தபடியினாலே எங்களிருப்பிடத்திற்கு நாங்கள் போகிறோம், நீ சுபாகு மகாராஜா பட்டணம் போய்ச்சேர்ந்திரு, இந்தக்காட்டிலே ஒண்டியாகத் திரியவேண்டாம், அந்தப்பட்டணத்திற்குப் போகிற மார்க்கம் இதுதானென்று சொல்லி அந்த ரிஷீஸ்வரர்கள் தமயந்தியை அழைத்துக்கொண்டு சிறிதுதூரம் போய் சுபாகுமஹாராஜா பட்டணத்திற்குபோகும்வழியைதமயந்திக்குக்காண்பித்து போகச்சொல்லிவிட்டு ரிஷீஸ்வரர்களெல்லாரும் தங்கள் கூட்டத்துடனேகேசரிமார்க்கத்தி லெழும்பிப் போனார்கள்.

## தமயந்தியை விட்டு பொதிமாட்டுக்காரரை யானைகள் மெரித்தது.

தமயந்திதேவியும் அங்கேயிருந்துபுறப்பட்டு பாட்டைவழியைக்கூட்டிக்கொண்டு சுபாகுமகாராஜா பட்டணத்தைப்பார்க்க நடந்துபோகச்சே, அந்த மார்க்கத்திலேபோகிற சிலபொதிமாட்டுக்காரர் அந்தராஜபத்தினியாகிய தமயந்தியைக்கண்டு சிந்தைகலங்கி ஒருத்தரைப் பார்த்து ஒருத்தர் சொல்லிக்கொள்ளுகிருர்கள், பார்த்தீர்களோ, அதோ யாரோதெரியாது, இவளழகைப் பாருங்கள், சேல்கண்டையைப்போல் விசாலமான கண்களும் சந்திரவிம்பம்போல முகமும் வல்லிசாதக் கொடியைப்போல் சிறுத்தயிடையும் ஜோதிமின்னலைப்போல காந்தியுள்ள சரீரமுடையவளாய் ஒரு ஸ்திரீயானவள் மகா விசனத்துடனேவருகிருள், இந்தக்காட்டிலே ஒண்டியாய் இப்படியிவள் வருவானேன், இது என்னகாரியமோ தெரியாது, இவள் பைத்தியக்காரியோ தெரியவில்லை, அதோ நம்மைப் பார்த்துக்கொண்டுவருகிருள், ஒருவேளை நமக்கு மோசம் வரப்போகிறது சீக்கிரமாய் நடவுங்களென்று சொல்லிக்கொண்டு பொதிமாட்டுக்காரர்களெல்லோரும் பயங்கரத்துடனே பொதிமாடுகளையும் விடுத்து ஓடிப்போகச்சே அதிலே ஒரு பொதிமாட்டுக்காரன் தைரியத்துடனே நின்று தமயந்திகிட்ட வந்தவுடனே தெண்டனிட்டுச் சொல்லுகிருன், ஓ அம்மா பாக்கியவதியே, நீயார்? ராக்ஷசியா? மனுஷியா? தேவகன்னிகையா? இந்த வனத்திலேயிருக்கிற துர்க்கையா? லக்ஷ்மிதேவியா? அல்லவென்று எங்கள் குலதேவதையா? உன் சேதிகளைத் தெரியச்சொல்லம்மா, தலைமயிரை விரித்துக்கொண்டு கண்ணீர் சொரிய இந்த பயங்கரமான காட்டுக்குள்ளே ஒண்டியாய் வருகிற காரணமென்ன? சொல்லம்மாவென்று கேட்க, தமயந்தி பொதிமாட்டுக்காரன் முகத்தைப்பார்த்துச் சொல்லத் தொடங்கினள், ஓ அண்ணு! நான் தேவதாஸ்திரீயுமல்ல, ராக்ஷசியுமல்ல, லக்ஷ்மிதேவியுமல்ல, பார்வதாதேவியுமல்ல, நான்மனுஷஸ்திரீதான், சகலதேசத்தரசரும் அறிய விஷ்ணு சக்கிரத்தினுல் ஜெயங்கொண்டு நவகண்டங்களுமாளப்பட்ட நளச்சக்கரவர்த்தி மகாரா




காட்டானை தமயந்தியைவிட்டு பொதிமாட்டுக்காரரை மிதித்ததும், தமயந்தி சுபாகுபுரி சேர்ந்தது.

ஜனுடைய பெண்சாதி நான்என்புருஷன்சகலசம்பத்துகளையும் சூதினாலே புஷ்கராராஜாவுக்குத் தோற்றுவிட்டு காடுகளிலேதிரிவோமென்றுஎன்னையுமழைத்துகொண்டு வந்தவிடத்திலே ராஜா என்னுடனே கூடியிருந்துகஷ்டப்படாமல் என்னைக் காட்டிலே தனியாய்விட்டு அவர் மாத்திரம் எங்கேயோ போனார், அந்த மகாராஜாவை நானெங்குந் தேடிக்காணாமல் இப்படி அனாதியாய் திரிகிறேனென்று நடந்த வர்த்தமானங்களெல்லாம் தமயந்தியம்மாள் சொல்லக்கேட்டு, அந்தப் பொதிமாட்டுக்காரன் வெகு தாபந்திரியப்பட்டுச் சொல்லுகிறான், ஓ அம்மா! இப்படி காட்டிலே திரிந்து வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது தர்மமல்ல, சுபாகு மகாராஜா பட்டணத்திற்குப் போய்ச்சேருகிறதே நல்லது,நாங்களந்த பட்டணத்திற்குப் பலசரக்குகள் கொண்டு போகிறோம், எங்கள்பிறகேவந்தால் உன்புருஷர் அந்தப்பட்டணத்திலே ஒரு வேளையிருந்தாலு மிருப்பார், காட்டிலே அவரியார், ஏன் விருதாவில் இவ்விடத்தில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறாய் வேண்டாம், எங்கள் பிறகே வா அம்மாவென்று மனதாரச்சொல்லி.தமயந்தியையழைத்துகொண்டுபோய் ஓடிப்போகிற தங்கள்ஜனங்களை நிறுத்தி அவர்களுடனே தமயந்திசொன்ன சேதிகளையெல்லாம் சவிஸ்தாரமாகச் சொல்லிக்கொண்டு போகிறபோது, கடினமான வெய்யலினாலேயும் காற்றினாலேயும் குடிக்கத் தண்ணீருங்கிடையாமல் மெத்த விசனப்பட்டு போகச்சே அங்கேயொரு குளத்தைக்கண்டு சந்தோஷமாகப் பொதிமாட்டுக்காரர் மரத்துநிழலிற்பொதிகளைத் தள்ளிப்போட்டு மாட்டுக்குத்தண்ணீர் குடிப்பித்து தமயந்திதடாகத்தின் அழகைப்பார்த்து சந்தோஷப்பட்டு அதிலேபோயிரங்கிகால்கையலம்பிக்கொண்டு தண்ணீர் குடித்துதாகமுந்தீர்ந்து மர நிழலிலேயிருந்து தன் புருஷனை நினைத்து துக்கப்படுகிறபோது அண்டையிலேயிருக்கிற பொதிமாட்டுக்காரர் அம்மாவென்றழைத்து நல்ல வசனங்களினாலே துக்கத்தைத் தீர்த்து மனது குளிரப்பண்ணினார்கள். அப்போது சூரியபகவானும் தன்னுடைய குலத்துப் பெண் படுகிற கிலேசத்தைப் பார்க்கமாட்டாமல் மேற்கே மறைந்துபோனானே என்

றுற்போல அவ்ஸ்தமயமானான். பின்பு அந்தராத்திரியி லே தமயந்தி பட்டகஷ்டத்தாலும் தன்புருஷன்பிரிந்த விசாரத்தினாலேயும்சரீரஸ்மரணையில்லாமல் அயர்ந்து நித்திரைபோனாள். பொதிமாட்டுக்காரரும் அலைச்சற் பட்டு வந்தவர்களானபடியினாலே அவர்களும் உடம்பு மறந்து நித்திரைபோனார்கள். அந்தச்சமயத்திலே இரா த்திரி பதினைந்து நாழிகை வேளையிலே அநேகக் காட் டானைகள் புறப்பட்டுவந்து நித்திரைபோகிற பொதி மாட்டுக்காரர்களையெல்லாங்கிழித்து பொதியெருதுகளை யெல்லாங் கொன்றுபோட்டு அந்த யானைகள் அங்கிரு ந்த தடாகத்திலேயிறங்கித் தாமரைகளையெல்லாம் பிடு ங்கி வெளியிலே போட்டுத் தண்ணீரை வாரி நாலுதிக் குகளிலும் இறைத்து, ஒன்றுக்கொன்று கூடி விளை யாடி ஆரவாரம் பண்ணச்சே தமயந்தி விழித்துக்கொ ண்டு செத்துக்கிடக்கிற பொதிமாட்டுக்காரரைப்பார்த்து ஐயையோ! அந்த யானைகள் மகாபாவியான என்னை மாத்திரங் கொல்லாமல்விட்டு இவர்களையெல்லாங் கொ ன்றுபோட்டதுகள், பார்த்தையோ இப்படிப்பட்ட சா வும்எனக்குக்கிடைக்காமற்போச்சுதே, நானிதற்கென்ன செய்வேன், தலைவிதி இன்னமென்னென்ன பாடு படுத் தப்போகிறதோ தெரியவராதே, என்றைக்கு என்கர்மந் தீர்ந்து என்னுடைய கோரிக்கை யீடேறுமோ வென்று சொல்லி வெகுவாய்ப் பிரலாபித்துக்கொண்டிருக்கச்சே சூரியபகவானுதயமானார். பிறகு வெளிச்சமேறி நக்ஷத் திரங்கள் மறைந்து கிழக்கே உதயகிரியிலே சூரியனுத யமாய்க் கிரணங்கள் எங்கும் பரவினதுகள்.

தமயந்தி சுபாகுபுரி பட்டணஞ் சேர்ந்தது.

அப்போது தமயந்தி எழுந்திருந்து புறப்பட்டு ராஜ மார்க்கமே ஒண்டியாய் நடந்துபோய் சுபாகுமகாராஜா பட்டணஞ் சேர்ந்து தான் சைந்திரியென்கிற பெய ருடைய தாதியென்று தன்னைக்கேட்கிற பேர்களுக்குச் சொல்லி பட்டணத்து வீதியில் தன் புருஷனைத்தேடிக் கொண்டுபோகச்சே சகல லட்சணங்களுள்ள தமயந்தி யைப் பட்டணத்து ஜெனங்களெல்லாம் பார்த்து ஆச் சரியப்பட்டு ஒருத்தருக்கொருத்தர் உச்சரித்துக்கொண்டு சொல்லுகிறார்கள்.



தமயந்தி சாபத்தால் வேடன் பஸ்மீகரித்தது.

ஓ அம்மா ஓ அக்கா ஓ தங்கை ஓ மச்சி ஓ அம்மணி ஓ மாமி பார்த்தையா அதோபோகிற புண்ணியவதி ரூபத்தை எங்கேயும் நாம் கண்டுமறியோம் கேட்டு மறியோம் அல்லது அவள் அருந்ததியோ சந்திரவதியோ ரதிதேவியோ அகலிகையோ தெரியாது பெண் பிறந்தாலிப்படிப்பட்ட ரூபவதியாயல்லவோபிறக்கவேணும் நம்முடைய ஜென்மங்களென்னத்திற்கு விருதாவான சரீரம் நாமெடுத்தோமென்று ஆச்சரியமாகப் பார்த்துச் சொல்லிக்கொண்டிருக்கச்சே தமயந்திதேவி ஒருத்தரையுங்கண்ணெடுத்துப்பாராமல்வீதியில்நடந்துபோகச்சே அப்போது சுபாகுமகாராசாவுடைய தாயார் கோமளாங்கிதேவி என்கிறவள் உப்பரிகையின்பேரிலிருந்து பார்த்து தன்பாங்கிமாரையழைத்து அதுயாரோதெரியாது மிகவுமழகும் சவுந்தரியமுமுள்ளபெண் வீதியிலேபோகிறாள் பார்த்தாலவ ளந்தப்புரத்திலிருந்தவள்போ லிருக்கின்றது சகல ராச லட்சணங்களுடனே போகிறாள் அவளிப்படி திரியக் காரணமென்னமோ தெரியவில்லை நீங்கள்போய் அந்தப்பெண்ணை யழைத்துக்கொண்டு வாருங்களென்று சொன்னவுடனே பாங்கிமார்கள் நல்லதென்று வீதியிலேபோகிற தமயந்தியைக் கண்டு வெகுவாய் பிரியவசனங்கள் சொல்லி அழைத்து வந்து தங்கள் ராசபத்தினி அண்டையிலே விட்டார்கள். விட்டவுடனே சுபாகுமகாராசவின் தாயார் கோமளாங்கிதேவி தமயந்தியைப்பார்த்துஉட்காரவைத்துக்கொண்டு நல்ல வசனங்களினாலே ஓ அம்மா உன்னுடைய லக்ஷணங்களைப் பார்த்தால் நவகண்டமுமாளப்பட்ட ராசாவினுடைய பட்டபுதேவிபோலயிருக்கிறது நீ இப்படி வாடியிருக்க காரணமென்ன சொல்வாயென்று கேட்டதற்கு சுபாகுமகாராசாவின் தாயாரைப்பார்த்து தமயந்திதேவியும் மெத்தவும் பிரலாபித்துச் சொல்லுகிறாள், ஓ அம்மா! நான்சைந்திரியென்கிறதாதிப்பெண் என்புருஷர் வெகு கீர்த்திப்பெற்ற கெந்தர்வராசா அவரென்னைப்பிரியாமற் கூடியிருந்தார் இப்போது அவர் சோகமென்கிற பெண் சாதியைக் கூடியிருக்கிறபடியினாலே நான் வாடியிருக்கிறேன் நீர் சொன்னபடிக்கு என்புருஷன் நவகண்டங்களுமாளப்பட்ட சாமர்த்தியமுள்ளவர்தான் நான் ராஜ

ஸ்திரீ என்கிறது மெய்தான், தெய்வ சங்கற்பத்தினாலே இப்படியானேன் தாதிகளிலே நான் வெகுசாமர்த்தியக்காரியென்று பேர்பெற்றிருப்பே னிதுவுமல்லாமல் பரிமளவஸ்துக்கள் என்னைப்போல ஒருவருங் கூட்டமாட்டார்கள் நான் நவரத்தினங்கள் விநோதமாகக் கோர்த்தால் சகலருமெச்சி எனக்கு வெகுமானங்கொடுப்பார்கள் பெண்களை மன்மதனுமெச்ச சிங்காரிப்பேன் பல்காட்டி நகையேன் பலபல வார்த்தைகள் பேசேன் அம்மா என்னை உங்கள்வீட்டில்தானே வைத்துக்கொள்ளுமென்று சொன்னாள். இதுகளை சுபாகுமகாராசா தாயார் கேட்டுச்சொல்லுகிறாள், ஓ அம்மா உனக்கிச்சையான படியே என் வீட்டிலே நீயிரு என்பெண்களுக்கு சரியாகப்பார்க்கிறேன் எத்தனை காலமிருந்தாலும் ஒரேசீராக நடப்பிக்கிறேன் ஸ்ரீ மகாலக்ஷ்மி எங்கள் வீட்டிலே விளங்கியிருக்கிறாப்போல நீ வாசமாயிருந்து எங்களுக்கெல்லாம் புத்திமதிகளைச் சொல்லிக்கொண்டிருமம்மாவென்று சொன்னவுடன் தமயந்தியும் அப்படியேசுபாகு மகாராசா தாயாரண்டையிலே வெகு மரியாதையுடனே ஒரு குறைகளுமில்லாமல் என்னேரமும் தன் புருஷனைக்கொண்டுவந்து தன்னுடனே சேர்க்கவேணுமென ஸ்ரீ மகாவிஷ்ணுவையே தியானம் பண்ணிக் கொண்டிருந்தாள்.

நளபதி தன் பத்தினியை நினைத்துப் புலம்பல்.

கேட்டீரோ தர்மராசரே! இப்படியாக இருக்கிறபோது அங்கே அயோத்தியில் ரிதுபர்னராசாவண்டையிலே சேவித்துக் கொண்டிருக்கிற நளச்சக்கிரவர்த்தி வாகுகனென்ற பெயருடனே நல்ல சுயம்பாகியென்று ரிதுபர்னமகாராசா கொண்டாட சமையலறுசுவையுடனேயும் சமைத்துப்போட்டு அந்தராசாவுக்கு மகா சந்தோஷமாகும்படி நடந்துகொண்டு தான் தண்ணீரும் சாதமுஞ் சாப்பிட்டு தாம்பூலமர்ச்சித்து அந்த புஷ்கரராஜா தன்ராச்சியத்தைப்பறித்துக்கொண்டதுக்கத்தையுந் தன்னைச் சேவித்தபேரைத் தான்சேவிக்கிற துக்கத்தையும் நினைத்து மனஞ் சோர்வுபட்டிருக்கிறநாளையில் ஒருநாள் இராத்திரிகாலத்தில் நிலவிலே சயனித்துக்கொண்டு தன்பெண்சாதியை நினைத்து தன்னில்தானே



தெய்வத்தை நொந்து சொல்லிக்கொள்ளுகிறார், ஐயையோ தெய்வமே! என் பெண்சாதியான தமயந்தியைக் காடுகளிலே கஷ்டப்படாமற்படிக்குத் தன் தாய்வீட்டுக்குப் போகச்சொன்னேன், அவளங்கேபோகாமல் எங்கேபோனாளோ, என்னமாயிருக்கிறாளோ நானுஞ்சபல புத்தியினாலே அந்தக்காட்டிலே விட்டுவந்தேன் நான் இனி ஏன்ன செய்யப்போகிறேன், அல்லவென்றுகிலேசப்பட்டு உயிரிழந்தாளோ, என்னைத்தேடவேணுமென்கிற ஆசையினாலே எங்கே சுற்றித் தேடுகிறாளோ, காட்டிற் திரியச்சே எவர்கையிலகப்பட்டுக்கொண்டு அலைகிறாளோ, காட்டிலே மகா குரூரமான மிருகங்கள் கையிலகப்பட்டுக்கொண்டாளோ, ஆஆ தெய்வமே! நான் மகா பொல்லாதவனுமாய் அக்கிரமனுமான என்னை இவளேன் கோறினாளோ, ஐயையோதெய்வமே! நான் பண்ணிக்கொண்ட அவரோதனைக்கு இப்படிப்பட்ட அலைச்சல் வராமற் போமோவென்று அநேகவிதமாகச் சொல்லி அழுதுக்கொண்டிருக்கிறதை ரிதுபர்னமகாராஜன் மறைந்திருந்து கேட்டுவந்து ராஜனாகிய நளமகாராசாவைப்பார்த்து ஒருவார்த்தை சொல்லுகிறான்.

நளபதியை ரிதுபர்னராசன் இகழ்தல்.

ஓ வாகுகனே! பிரீதியுள்ள உன்பெண்சாதியைக்காட்டிலே விட்டுவந்தாய் இன்றுதானினைத்தாயோ, இந்த காலத்திலே எப்படிப்பட்டவர்களும் ஸ்திரீகளை வேடிக்கையாக வைத்திருக்கிறார்கள், உனக்குக் குறையென்ன? இந்த லோகத்திலே அவரவர்களுக்குத் தக்கின ஸ்திரீகளுண்டாயிருப்பார்களென்று நினைத்துக்கொண்டுஉள்ளமுறுகிறஸ்திரீ உன்னிலு மழகுள்ளவளா யிருப்பாளல்லவோ, அவளுன்னை நினைத்து எத்தனை வேதனைப்படுகிறாளோ தெரியவராதே, அடிபெண்ணே! உன்னைக் காட்டிலே விட்டுவந்தேனென்று பிரலாபித்தாயே, நீ எந்தக்காட்டிலே விட்டுவந்தாயோ, உன்னுடைய பிராணநாயகியைப்பிரிந்து மன்மதபாணத்தினாலே எத்தனை வெதனைப்படுகிறாயோ பொறுக்கவசமா, ஏன் வாகுவாவென்றுபரிகாசமாகச்சொன்ன ரிதுபர்னமகாராஜாவை பார்த்து நளமகாராஜா சொல்லுகிறார், ஓ ஐயா ராசேந்திரா! பொழுதுபோகாமல் இந்தப் பூமியிலேயிருக்கிற

ராஜாக்களிலே ஒரு ராஜா கதையொன்றுண்டு, அந்தக் கதையை நினைத்துக்கொண்டேனல்லாமல் எனக்குப் பெண்சாதியேது என் ரூபத்தைப்பார்த்தால் எனக்கு எவளாகிலும் ஒருமித்து சேர்வாளோ? என்னைப்பார்த்தால் அவள் நகையாளோ, அல்லவென்று அவளெந்தனைச் சேர்ந்தாலும் இந்தலோகத்திலேஇப்படிப்பட்ட புருஷனை இவள் சேர்ந்தாளென்று சகல பேர்களும் அவளை நிந்திக்கமாட்டார்களோ, ஓ மகாராஜரே, நீர் என்னை பரிகாசம் பண்ணுகிறீர் ஐயாவென்று அந்த வாகுகன் சொன்னதைக்கேட்டு ராஜா மெய்தான் நமக்கேன் இந்தக்காரியமென்று நினைத்து அப்புறம்போனான்.

## ௧௩-வது வீமராஜா தேடவிட்ட அத்தியாயம்.

### வீமராஜா துக்கப்பட்டு தன் மகளையும் மருமகனையும் தேடியழைத்துவரும்படி தன் புரோகிதர்களை அனுப்பினது.

கேட்டீர்களோ பஞ்சவர்களே! பிற்பாடு நளமகாராஜா மிகவும்வெட்கப்பட்டுக்கொண்டிருந்தார். இப்படியிருக்கச்சே அங்கே வீமராஜா தன் மருமகனாகிய நளமகாராஜாவையுந் தமயந்தியையும் நினைத்து அவர்கள் தன்நாட்டைவிட்டு காட்டிலேபோனார்களென்கிற சேதி கேட்டு துக்கசாகரத்திலழுந்தி, ஐயையோ அவர்கள் காட்டிலேபோய் எங்கேயலைச்சற்படுகிறார்களோ, என்ன பாடுபடுகிறார்களோ, ஹரிஹரி நாராயணா, பிள்ளைகள் ஒருயிடமும் அவர்களிருவருமோரிடமுந்திக்கில்லாதவர்கள்போல மானத்துக்கு பயப்பட்டு இப்படியலையலாச்சுதே தெய்வமே, நானென்னசெய்வேன், இனிமேலவர்களை எங்கேதேடப்போகிறேன், எப்போது துக்கந்தீரப்போகிறதென்று விசாரப்பட்டு இனிமேல் நாம் சும்மா விருக்கலாகாதென்று நினைத்து நல்ல சாத்திரவிதிகளை அறிந்த பிராமணர்களை அழைப்பித்து அவர்களை வந்தனஞ்செய்து பூசைகள்பண்ணி அநேகதிரவியங்கள்கொடுத்து தன்மகளையும் மருமகனையும் இருக்கிறவிடந்தேடி அழைப்பித்து வரச்சொல்லி நாலுதிக்குகளிமனுப்பிவைத்தான். அவர்களும் நல்லதென்று புறப்பட்டு காடுகள், மேடுகள், குன்றுகள், பட்டணங்கள், கிராமங்கள், அக்கிராரங்களெல்லாந் தேடிக்காணமல்



எங்குந்திரிந்து வேசாரிவந்து விதர்ப்பபுரஞ் சேர்ந்தார்கள். அதில் வீமராசா புரோகிதருடைய குமாரன் கிருஷ்ணவர்ணன் என்கிறபிராமணோத்தமன் சகலசாஸ்திரவேதசம்பன்னன்ஜோஸியத்திலே நிபுணனாயிருக்கப்பட்டவன் அந்த பிராமணன் ஒரு ஏழை பிராமணனைப்போலே வேடம்பூண்டுக்கொண்டு சுபாகுமகாராசாபட்டணம்போய்ச்சேர்ந்துஜோஸியத்திலே தன்னைப்போல இனி யாருமில்லையென்று சொல்லத்தக்கதாக நித்திய பஞ்சாங்கமும் ஜோஸியமும் சகலபேரும் மெச்ச சொல்லிக்கொண்டு பிரகஸ்பதி பகவான் வந்தவதரித்தாற்போலேபிராமணருடன்கூடி அந்தப்பட்டணத்தில்வாசமாயிருந்து சுபாகுமகாராசாவினுடைய காவற்காரரைச் சினேகித்து ஒருபாயமாய் அரண்மனைக்குப் போகவரப் பஞ்சாங்கமுஞ் சாஸ்திரங்களுஞ் சொல்லிக்கொண்டு சிறிதுநாளிப்படியாக யிருந்துவந்தான்.

### தமயந்தி புரோகிதகுமாரனைக் கண்டது.

ஒருநாள் சுபாகுமகாராசன் தகப்பன் திதிவந்தது. அந்த திதிக்கு அந்த கிருஷ்ணவர்ணனென்கிற பிராமணனையழைக்க அந்தராசாவினுடைய அரண்மனையின் உள்வாசலிலேயிருக்கிறபோது அங்கேசித்திரப்பதுமையைப்போலநடமாடுகிற தமயந்தியைக்கண்டு வெகு துயரப்பட்டு, பார்த்தையா ஐயையோ தெய்வமே சகலலக்ஷணங்களுமுள்ளவள் தாமரைப் புஷ்பத்தில் வீற்றிருக்கின்ற மகாலக்ஷ்மி போன்றவள், தன் புருஷனை ஒரு நிமிஷமாகிலும் பிரியாதவள், இந்த நவகண்டங்களையாளுகிற நளச்சக்கரவர்த்தியினுடைய பட்டபுதேவி, இவளை அநேகம் பெண்கள் சூழ்ந்திருக்கப்பட்டவள், மகாபாக்கியவதி, அப்படிப்பட்டவளிப்போது தன்புருஷனைப் பிரிந்து ஒண்டியாய் அதிநையைப்போல் மயிர்கள் சடைபற்றியிருக்க, உடம்பெல்லாம்புழுதியடைந்து சரீரமிளைத்துப் போர்த்துக்கொள்ளப் புடவையு மெட்டாமல் உருமாறியிருக்க என்கண்ணிலே பார்க்கலாச்சுதேயென்று வெகுவாகப் பரிதாபப்படுகிறபிராமணனைத் தமயந்திதேவி கிட்டவந்துபார்த்து தன் தகப்பனார்வீட்டுப் புரோகிதருடைய குமாரனென்றறிந்து தன் தகப்பனைக்கண்டாற்போல சந்தோஷத்துடனேகண்டு தெண்

டனிட்டு ஐயா,நான் பிறந்துவளர்ந்த அருமையை நீங்
களறிவீர்களே, இதோ தெய்வமிப்படி என்னைப் பண்
ணிப்போட்டது நானென்னசொல்வேன் சுவாமியென்
றுசொல்லித் தமயந்தி அவர்முன்னே நின்று கண்ணீர்
ஆறாய்ம்பெருக கிலேசப்பட்டாள், இந்தசங்கதி சுபாகு
மகாராசா தாயார் கேட்டுத்தானுந்தோழிமாருடன் கூடி
தமயந்தியண்டைக்குவத்து இதென்னவென்று ஆச்சரி
யத்துடனே பார்க்க, அந்தப்பிராமணன் தமயந்தியைத்
தேற்றி அவளுடன் ஒரு வசனஞ் சொல்லுகிறான், ஓ
அம்மா, நீ இப்படி மாறுவேடமானதென்ன? இந்தப்
பூமியில் நவகண்டங்களையு மாளப்பட்ட நளமகாராசா
உன்னைவிட்டெங்கேபோனார், நான்கூட உன்னடையா
ளந் தெரிந்துகொள்ளமாட்டாமல் போனேன், உன்
செல்வ மெங்கேபோச்சுது? பிர்மா உன் தலையிலிப்படி
எழுதினானே, உன்புருஷன் நளமகாராசா புஷ்கரராசா
வினுடைய மாயச்சூதினாலே தன் ராச்சியமெல்லாந்
தோற்று அலைந்து நீயும்அவரும் காட்டுக்குப்போனீர்க
ளென்று சேதிகேட்டவுடனே உங்கள் தகப்பனார் தா
யார், தமயன், பிள்ளைகள் பந்துக்களெல்லோரும் வெகு
கிலேசப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள், நானிதே வேலை
யாகப்புறப்பட்டு எங்குந் தேடியலைந்து இங்கே பார்க்க
வந்தவிடத்திலே உன்னைக்கண்டேன், இனிநமது பட்
டணத்துக்குவா அம்மாவென்று தன் புரோகித குமார
னழைக்க அவ்வார்த்தையைக் கேட்டுத் தமயந்தி சற்றே
விசாரந்தீர்ந்து சொல்லுகிறாள்.

ஓ ஐயா! எங்கள்பேரிலே என்னதப்பு? சூதினாலே
புஷ்கரராசாவுக்கு ராச்சியமெல்லாந்தோற்று சகலபாக்
கியங்களையும் போக்கடித்துக்கொண்டு அனாகதர்களாகி
வந்து நான் மாத்திரம் என் தாயாரைச் சேர்ந்திருக்கி
றேன், என் புருஷர் எங்கேபோனாரோ நானறியேன்
சுவாமியென்று தமயந்தியானவள் தன் புரோகித குமா
ரனுடனே சொல்லச்சே, சுபாகுமகாராஜா தாயார்கேட்
டுத்தமயந்தியைக் கட்டிக்கொண்டு அடிமகளே! பெண்
கள் நாயகமே! உன்தாயார் கோகிலாதேவியும் நானுங்
கூடப்பிறந்தவர்கள், என்னையறியாயோ அம்மா, என
க்கு நீ மாறுபாடாகச்சொன்னபடியினாலேயும் உருமாறி



யிருந்தபடியினாலேயும் எனக்குத்தெரியாமற்போச்சுதே,
அம்மாசௌபாக்கியவதியே! இத்தனை ஆபத்துகளெல்
லாம் நீ பட்டாயோவென்று வெகுவாய்த்தாபந்திரியப்
பட்டு நல்ல வஸ்திராபரணங்களழைப்பித்து புரோகித
குமாரனுக்கு முன்னே கொடுத்து சோடச வுபசாரத்து
டனே அந்தப்புரோகிதரைப் பூஜைபண்ணச்சொல்லி
தயயந்திதேவிக்கு அநேகபூஷணங்களும் நல்ல வஸ்தி
ரங்களும் கந்த கஸ்தூரி பரிமளாதிகளெல்லாங் கொ
ண்டுவரச்சொல்லி அந்தப்பிராமணர் கையிலே கொடுத்
துத்தமயந்திதேவிக்கு ஆசீர்வாதம்பண்ணிக்கொடுக்கும்
படி சுபாகுமகாராஜா தாயார் சொன்னாள் அப்படித்
தானே அதை வாங்கித் தமயந்திதேவிக்கு அந்தப்பிரா
மணன் கொடுத்தபோது அவளதை வாங்கிக்கொண்டு
தன் சிறியதாயாருடன் சொல்லுகிறாள், அம்மா பிரா
மணர் கொடுத்ததை வேண்டாமென்று சொல்லப்போ
காது ஆகையினாலே நான் வாங்கிக்கொண்டேனம்மா,
புருஷனைக் கண்ணாரக்கண்டு நான்சுகமாயிருக்கிறநாளை
யிலே இப்படிக்கொத்த வஸ்திராபரணங்கள், கந்த கஸ்
தூரி பரிமளாதிகளெல்லாம் நான் யோக்கியமாகத் தரி
ப்பேன், எனக்கிப்போது அயோக்கியமான வஸ்துக்க
ளாகவுமிருக்கின்றதாகையால் நான் தரிக்கிறதில்லை,மன்
மதனுக்குச்சரியான ரூபமுள்ளவருமாய் சகல தர்மங்க
ளும் பரிபாலித்தவருமான என் புருஷர் வருகிறபரியந்
தம் நான் தலைமயிரை முடியேன், மஞ்சள் குளியேன்
சந்தனம் பூசேன், தாம்பூலந் தின்னேன், கட்டிலின்
பேரில் படுக்கேன், பூஷணங்கள் தரிக்கேன், நல்லவஸ்
திரங்களுடுக்கேன், ஒரு அழகுஞ் செய்துகொள்ளேன்,
அதென்னவென்றால் புருஷன் அருகேயில்லாத பெண்
சாதிக்கு இந்தச் சம்பிரமங்களெல்லா மென்னத்திற்கு?
பாங்கிமார்களேன், தாதிமார்களேன், கிளிகளேன், குளி
க்கிறது, பூசுகிறது, சந்தோஷம் விளையாட்டு, நகைப்பு,
இதுகளெல்லாம்என்னத்திற்கு அம்மாவென்றுசொல்லி
கிலேசப்படுகிற தமயந்திதேவியைப் பார்த்து சுபாகு
மகாராஜா தாயார் தேற்றி, அப்படியல்ல தாய் தகப்
பன், தமயன், பிள்ளைகள் இவர்கள் முகத்தைப் பார்த்
தாகிலு மிவளுடைய துக்கந் தீருமென்று சிறியதாயார்

யோசனை பண்ணிக்கொண்டு அன்றையதினம் போய் மற்றுநாள் தமயந்திதேவியை மூடுபல்லக்கிலேற்றி அவளோடுகூடச் சில தாதிகளையும் சிறிது ராணுவங்களையும் கூட்டி அவளுடையதாய்தகப்பனிருக்கிற விதர்ப்ப நகரத்திற்கு அனுப்பிவைத்தாள். புரோகிதரும் வெகு சந்தோஷத்துடனே தமயந்தியை விதர்ப்பபுரத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் அரண்மனைக்குள்ளே யனுப்பிவைத்து கொலுவிலிருக்கிற வீமராஜனுக்கு சேதி சொன்னார்.

### தமயந்தி விதர்ப்பபுரியில் வந்துசேர்ந்து தன் வரலாற்றைக் கூறுதல்.

அதுகேட்டு வீமராஜா வெகுசந்தோஷத்துடனே கொலுச்சாவடிவிட்டு அரண்மனைக்குள்ளே போனான். தமயந்தி தகப்பனையுந் தாயாரையுஞ் சேவித்து பிள்ளைகளைக்கண்டு கண்ணீர்வடியத் துக்கப்படுகிறதைப் பார்த்துத் தாயுந்தகப்பனும் பயப்படாதே யம்மாவென்று சொல்லித்தேற்றி விசாரந்தீர்த்தார்கள். தமயந்தி தான் பட்டபாடெல்லாம் சொல்லத்தொடங்கினாள்.

ஓ ஐயா! ஓ அம்மா! கேளுங்கள், என்னுடைய புருஷன்விதிவசத்தினாலே புஷ்கரராசாவுடன் தப்பிதமான சூதாடி ராஜ்ஜியமெல்லாம் அந்த ராசாவுக்குத்தோற்று நாங்கள் கெட்டுப்போனதால் கெட்டவர்கள் இவ்விடத்தைசேரலாகாதென்கிற மானத்தினாலே குரூரமானகாடுளில் நாங்களிருவரும் போகச்சே இரண்டு பொல்லாத பக்ஷிகள் வந்து ராசாவினுடைய வஸ்திரத்தை யபகரித்துக்கொண்டு போச்சுதுகள். அதின்பிறகு விசாரப்பட்டுக்கொண்டு சகலத்திலும் ஏழையானோமென்று இருவரும் புடவையைக் கட்டிக்கொண்டு சுவாமியை நொந்து சோகமென்கிற கடலில்மூழ்கி எங்கேயாவது ஒரு பட்டணத்திலேபோக வெட்கப்பட்டு மலைக்குகைகளில்சஞ்சாரம் பண்ணுவோமென்று போகச்சே அங்கே வழிபிரிந்துபோகிறதைக்கண்டுஎன் புருஷர்என்னைப்பார்த்து நீ இந்தவழியேபோனால் உன் தாய்வீட்டுக்குப்போய்ச்சேரலாம், நீ என்னுடனே காட்டிலே வாசம்பண்ண மாட்டாய், கந்தமூலபலாதிகளைப் புசித்து நிர்வாகம் பண்ண மாட்டாய், புலி கரடி சிங்கம் காட்டானை இவைகள் முத



லான பயங்கரமான மிருகங்கள் மிஞ்சியிருக்கப்பட்ட இந்தக்காடுகளிலே பயப்படாமல் நின்று சஞ்சரிக்க மாட்டாய், என் பேச்சைத்தள்ளாமல் உன் தாய்தகப்பன்மார் அண்டையிலே போய்ச்சேர்ந்து பிள்ளைகளும் நீயும் சுகமாயிருங்கள் போவென்றார். நான் அவரைப்பிரியாமல் அவர் பின்னே காடுகளிலே நடந்து ஒருமரத்து நிழலிலே சேர்ந்து ஆரண்யத்திலே நான் சரீரமறந்து நித்திரைபோனேன். அந்தவேளையிலே ராஜா இவளுக்கு எத்தனையாகச்சொன்னாலும் நம்மைவிட்டுப்பிரியாது தன் தாய்வீட்டுக்குப்போகாள், ஆகையினாலே இங்கே விட்டுப் பிரிந்துபோனோமானால் தானேபோய்ச் சேருவாளென்று நினைத்து என்பரிதாபத்தைப் பொறுக்க மாட்டாமல் என் புடவையிலே ஒரு துண்டு கிழித்துக்கொண்டு அந்தக்காட்டில் என்னைவிட்டுப் பிரிந்து விட்டார். பிற்பாடு நான் விழித்துக்கொண்டு பார்த்தபோது என் பிராணநாயகரைக் காணாதபடியினாலே அவ்விடமெல்லாந் தேடி இனியில்லாத கன அவஸ்தைகளைப் பட்டுக்கொண்டு அலைந்து காட்டில் திரிகிறபோது அவ்விடத்திலே ரிஷிகளைக்கண்டு அவர்களைச் சரணமடைந்துஎன்மனதிலேயிருக்கிற துயரங்களையெல்லாம்அவர்களுடனே சொல்லித்துக்கித்து நின்றேன். அதற்கவர்கள் எனக்கு அபயஸ்தங்கொடுத்து நீ பயப்படவேண்டாமம்மா, உனக்கு குறைவுவாராதென்று ஞானதிருஷ்டியினாலே பார்த்து சனீஸ்வரன் மாய்கையினாலே இப்படியவஸ்தைவந்தது, இனிமேல் சிறிது நாளையிலே அவருக்கு தயவு வரப்போகிறது, நீயும் உன்புருஷனும்உன் பிள்ளையுங்கூடி சுகமனுபவிக்கப்போகிறீர்களென்று சொல்லி, இனிமேல் ஒண்டியாய்க் காட்டிலே திரியவேண்டாம், சுபாகுமகாராஜா பட்டணம் போய்ச்சேரென்று சிறிது தூரம்என்னை அழைத்துக்கொண்டுவந்துவழியை காண்பித்துபோகச்சொன்னார்கள், அந்தமார்க்கமேபுறப்பட்டு சுபாகுமகாராசாபட்டணஞ்சேர்ந்துஅங்கே சிறிய தாயாரிடத்தில் இருந்தேனம்மாவென்று தமயந்திதேவி சொன்னாள், இதைக்கேட்டு அவளுடைய தாய் தகப்பனும் வாய்விட்டுப்புலம்பி மகளைக்கட்டிக்கொண்டு அதிக விசாரத்துடனே சொல்லுகிறார்கள், ஓ அம்மா! நவகண்

டங்களும் ஆளுகிற நளமகாராஜாவுக்குப் பட்டபுதேவியாக நீயிருந்தும் கடைசியில் இந்த வேஷமானயே மகளே, உன்தோழிமாரெல்லோருஞ்சுகமாயிருக்கிறார்களே, உன் தலையிலே பிரம்மதேவன் இப்படிஎழுதினானேஉன்னுடைய ஆபத்துகளை எங்கள் கண்ணினாலேபார்க்கலாச்சுதே, உன்னை இப்படி வைத்துக்கொண்டு எப்படிநாங்கள் பார்க்கப்போகிறோம் மகளே, நல்ல புண்ணியவான்கள்கர்ப்பத்திலே நீ பிறவாமல்மகாபாவிகளாகிய எங்கள் கர்ப்பத்திலே ஏன்பிறந்தாய்மகளேயென்று சொல்லிப் பிறகு அந்த தமயந்தியைப்பார்த்து அவள் தாயார் சொல்லுகிறாள், அம்மா! உன் பிள்ளைகளிவ்விடம்வந்த நாள் முதற்கொண்டு உன் தகப்பனார் கொலுச்சாவடிக்குப் போகிறதேயில்லை, என்னேரமும் பிள்ளைகளைப் பார்த்துக்கொண்டு சோகத்திலே யிருக்கிறார், பிள்ளையில்லையென்று ஒரே துக்கமாயிருந்த எங்களுக்கு முனீஸ்வரர் கொடுத்தும் இப்படியலைச்சலாச்சுதே மகளே யென்று கிலேசப்பட்டுக்கொண்டிருக்கச்சே வீமராஜா அவள் துக்கத்தைத்தேற்றி ஆதரித்தார். தமயந்திதேவி தன்பிள்ளைகளைப்பார்த்துப் பின்னுந் துக்கிக்கிறபோது அவளை அவள் தமயனானதபனாபிவந்து கிலேசம்தீரத்தேற்றினான்.

இரண்டாவது சுயம்வரஞ் சாட்டியதாக
நளபதியை வருவித்தல்.

பிற்பாடு வீமராஜா தன் மருமகனான நள்ச்சக்கரவர்த்தியைத் தேடநினைத்துப் பிராமணரை யழைப்பித்து தமயந்தியண்டைக்கு அனுப்பிவைத்தார். தமயந்தியும் அந்தப்பிராமணர்களுக்குத்தெண்டனிட்டு அவர்களுடனேசொல்லுகிறாள், ஓ சுவாமி! நீங்கள் சலியாமல் என் பிராணநாதரைத்தேடவேணும், அதென்னவென்றால், அவர் முன்போல காந்தியுடனே யிரார், மாறுவேஷமர்க எங்கேயாவது இராஜாக்கள் வீடுகளில் சமையல் செய்துக்கொண்டிருப்பார். அவரை தாங்கள் அடையாளம் பிடித்து காணுகிறதுமெத்தப்பிரயாசையாயிருக்கும், பட்டணங்களிலே வீதித் திண்ணைகளின் மேலே படுத்திருப்பார், நீங்களங்கேபோய்ஒண்டியாயிருக்கப்பார்த்து அவரண்டையிலே நின்று நீங்கள் சொல்லவேண்டியதென்னவென்றால், ஐயையோ அந்தநளமகாராஜா தன் பெண்சாதியைக் காட்டிலே விட்டுப் பிரிந்துபோனதுமல்லாமல் அவள் கட்டியிருந்த புடவையிலேயும் பாதி கிழித்துக்கொண்டு அனாதியைப்போலகாட்டிலே விட்டுப் போய்விட்டார் என்று இந்தப்படி விகடமான வார்த்தைகளாகச் சொல்லுங்கள் அதன்பிற்பாடு அதற்கு மனம்பொறுக்காமல் எதிர்வார்த்தை சொல்லுவார், அவரைக் குறிப்யாய் பார்த்துக்கொண்டு அந்தப்பட்டணத்தின் பெயரையும் விசாரித்துக்கொண்டுசீக்கிரமாக வாருங்கள், அதன் பிற்பாடு நடக்கவேண்டிய காரியங்களைச் சொல்லுகிறேன், ஓ சுவாமிகளே! என்பேரிலே கிருபாகடாக்ஷம்வைத்துப் போய்வாருங்கள், நான் தங்கள்வயிற்றிலே பிறந்த பாவனையாகப் பார்த்து நீங்கள் நடப்பிக்கவேண்டியது, நானறியாதவள், நீங்கள் சகலசாஸ்திரமும் அறிந்தவர்கள், உங்களுக்கு நான் சொல்லத்தக்கினது ஒன்றுமில்லை, உங்களுக்கும்எங்களுக்கும்பேதமில்லாதிருக்கிறபடியினாலே நான் மனம் விட்டுச் சொன்னேன். இந்தவார்த்தைகளை உங்கள் மனதிலே வைத்து நீங்கள் போய்வர வேணுமையாவென்று தமயந்திதேவி வெகு உபசார வார்த்தைகள் அந்தப் பிராமணர்களுக்குச் சொல்லியனுப்பினாள். அந்தப்படியேஅந்தப்பிராமணர்களும் அவ்விடம்விட்டு புறப்பட்டு சகல தேசங்களிலும் தேடப்போனார்கள், அதிலொரு பிராமணன் தமயந்திதேவி சொற்படிக்கு சில பட்டணங்களிலே இராஜசபையிலேபோய் தமயந்தி சொன்னபடியே சொல்லிக்கொண்டு கடைசியிலே அயோத்தியாபுரி பட்டணஞ் சேர்ந்து ரிதுபர்னமகாராசா சபையிலே போய் நின்று சொல்லுகிறான்.



நளபதியை தேடப்போன பிராமணன் சபையில்
நிந்தித்துப் பேசினது.

ஓராஜேந்திரா! நிடதபுரத்தையாளும் நளமகாராஜா செய்த அக்கிரமத்தை நீர் கேளும், அதென்னவென்றால் தம்முடைய பெண்சாதியாகியதமயந்திதேவி ஆரண்யத்திலே நித்திரைபோகிற சமயத்தில் அவளையறியாமல் அவள் கட்டியிருக்கிற புடவையிலே நாலுமுழங்கிழித்துக்கொண்டு அவ்விடத்திலே தனியேவிட்டுப்பிரிந்து எங்கேயோ போய்விட்டார், அந்தப் பதிவிரதா

சிரோன்மணியானவள் நித்திரைதெளிந்துகண்ணைத்திற
ந்துபார்க்கிறபோது அண்டையிலிருந்த தன்புருஷனைக்
காணமல் காடுகள் செடிகளெல்லாந் திரிந்து தேடித்
திகைத்துஎங்குங்காணமல்தெய்வாதீனமாய் ஒருநிந்தை
யும் வராமல் தப்பித்துக்கொண்டு தாய்வீடு சேர்ந்து
அன்றுகட்டின புடவையும் விரிந்த கூந்தலுமாய் தாம்
பூலமர்ச்சிக்காமல் அழுக்கடைந்த சரீரத்துடனே கிலே
சப்பட்டுக்கொண் டிருக்கிருள், அப்படிக்கொத்த மகா
பதிவிரதாசிரோன்மணியை மனந்துணிந்து ஆரண்யந்
திலே அனியாயமாய் ஒண்டியாகவிட்டுப் பிரிந்துபோ
னதுமல்லாமல் அவள் கட்டியிருந்த புடவையிலேபாதி
கிழித்துக்கொண்டு போகலாமா? இராஜ்ஜியத்தில் இப்
படிக்கொத்த அநீதமுண்டோ? பெண்ணைப்பெற்றுஒரு
வரைத்தேடிக்கொடுக்கிறவர்கள் இப்படிப்பட்ட புருஷ
னைத்தான் தேடிக்கொடுக்கவேண்டும், பார்த்தீரோ ரா
ஜேந்திரரேயென்று கர்னகடூரமான வார்த்தைகளைச் சொ
ல்லிப் பின்னையும் அந்தப்பிராமணன் பல வசனங்கள்
சொல்லுகிருன், ஓ ரிதுபர்னமகாராசரே! அந்தநளமகா
ராஜா தர்மசொரூபர், சகல தர்மங்களும் நீதிகளுமறிந்த
மகாபுருஷர் அவரே இப்படிச்செய்தால் இந்தலோகத்
தில் இது அபவாதமல்லவோ? அதற்காகிலும் பயப்
படாமல் தன்பெண்சாதியை ஒண்டியாகவிட்டுப்பிரிந்து
போனர், இதுவல்லாமலும் அந்தப்பெண்ணினுடைய
தாயுந்தகப்பனும்மருமகனைக்காணவேணு மென்று சில
பிராமணர்களைக்கொண்டு இந்தப்பூச்சக்கர மெல்லாந்
தேடுவித்தார்கள், அவர்கள் படுகிற துக்கத்தை என்ன
லே சொல்லிமுடியாது, இப்படி பெண்சாதியைப் பரத
விக்கவிட்டு எப்படி மனம் பொருத்திருக்கிருரோ? புலி
பசித்தால் புல்லைத் தின்னுமா? ஓ மகாராஜரேயென்று
அந்தப்பிராமணன் நிஷ்டூரமாகச் சொன்னதற்கு ரிது
பர்னமகாராசா அந்தப் பிராமணனைக் கும்பிட்டு ஒருவார்
த்தை சொல்லுகிருர், ஓ ஐயரே! நளமகாராசா என்ன
சாமான்யமானவரா, இந்தலோகமெங்கும் ஏகசக்ராதி
பதியாய் ஆண்டமகாராசாவாச்சுதே அப்படிப்பட்டவரு
க்கு ஊழ்வினைப்பயன் வந்துநேர்ந்தால் அவரென்ன
செய்வார், நீங்களவரை இப்படி நிந்திக்கலாமா? முன்



செய்தவினை யாரைவிட்டது, எப்படிப்பட்டவர்களாலு
லும்தெய்வயத்தனத்தை தப்பித்துக் கொள்ளக்கூடாது,
நளமகாராசாசெய்த தர்மத்தினலே அவர்பெண்சாதிக்கு
ஒருநிந்தையும் வராமல் தன்தாய்வீடுபோய்ச் சேர்ந்தா
ளே, அதுவே அவருக்கு மகாபாக்கியமாச்சுது, அந்த
நளமகாராசா எந்த தேசத்திலே யிருக்கிருரோ நீங்கள்
சீக்கிரமாகப்போய் அவரைத்தேடி கண்டுபிடியுங்களென
அந்தப்பிராமணருக்கு ரிதுபர்ன மகாராசா சொல்லிய
னுப்பிவிட்டார். அருகிலிருந்த நளமகாராசா அந்த
வார்த்தைகளை யெல்லாங் கேட்டுக் கொண்டிருந்து
வெளியே புறப்பட்டுப்போகிற பிராமணனை மறித்து
நிறுத்தி அவனுடனே ஒரு வசனஞ் சொல்லுகிருர்.
ஓ பிராமணரே கேளும், நளமகாராசா வெகு அவஸ்
தையிலகப்பட்டுக்கொண்டு தன் பெண்சாதி தன்னுட
னேகூடக் காட்டிலே கஷ்டப்படாதபடிக்கி அவளு
டைய தாய்வீடு போய்ச்சேர்ந்து சுகப்படுவா ளென்
கிற யோசனையினலே விட்டுப் பிரிந்து போனபடியால்
அவர்பேரிலே குற்ற மென்ன? பெண்சாதியானவள்
புருஷனைசபைகளிலே இப்படி தூஷிக்கத்தகுமா?என்று
சொல்லி கிலேசப்பட்டுக்கொண்டு போய்விட்டார். அப்
போது பிராமணனும் தமயந்திதேவி சொன்னவார்த்
தையை நினைத்துக்கொண்டு நளமகாராசாவினுடைய
விகாரரூபத்தையுங் கண்டு சந்தோஷப்பட்டு வெகுவேக
மாய் விதர்ப்பபுரிக்குவந்து வீமராசாவைகண்டு ஆசீர்
வாதம்பண்ணித் தான் நளச்சக்கரவர்த்தியைஎங்குந்தே
டிக்காணமல் ரிதுபர்னமகாராசாபட்டணத்தில் தேடப்
போனவிடத்தில் நடந்த சங்கதிகளொன்றையும் விடா
மல் சொல்லக்கேட்டு வீமராசா அந்த பிராமணனைதன்
குமாரத்தியிருக்கின்ற இடந்துக்கழைத்துக் கொண்டு
போய்விட தமயந்தியும் அந்த பிராமணனுக்கு நமஸ்
காரம்பண்ணி நீர் போனவிடத்திலே புதுமையாகிய
வார்த்தைகள் ஏதாகிலுமுண்டானல் தெரியச்சொல்லு
மென்று தமயந்திகேட்க, அந்தப்பிராமணன் சொல்லு
கிருன், ஓ அம்மா! தமயந்திதேவியே! நான் அநேக
ராச்சியங்களெல்லாம் போய் சபைகளிலே நீ சொன்ன
படியே சொல்லியும்பார்த்தால் யாரும் மறுத்துச்சொன்

னவர்களில்லை, பின்னையும் காடுகளிலே வால்மீகர், அகஸ்தியர், கண்ணுவர், விஸ்வாமித்திரர், வதிஷ்டர், கௌதமர் முதலான முனீஸ்வரர்களுடைய ஆச்சிரமங்களிலே போய்த்தேடிக்காணாமல் கடைசியில் அயோத்தியாபுரிக்குப்போய் அங்கே ரிதுபர்னமகாராசாவைக் கண்டு அவர் சபையிலே நீ சொன்னவார்த்தைகளையெல்லாஞ்சொல்லித் திரும்பிவருகிறபோது ஒரு மனிதன் கூனன்போலவும் வளைவு சரீரமும் கருத்தமேனியுமாய் வெகு கோபத்துடனேவந்து என்னைமறித்துக்கொண்டு முகத்தைப்பார்த்து சற்று நிதானித்து, ஓ ஐயரே! அந்தப்பெண் காட்டிலேவாதைப்படமாட்டாளென்றும்தன் தாய்வீடு போய்ச் சேர்ந்தால் சுகமாயிருப்பாளென்றும் அந்த நளமகாராசா எண்ணி அவளைவிட்டுப் பிரிந்து போனார், பெண்சாதியானவள் ராசசபையிலே இப்படி தன்புருஷனை அவமானப்பேச்சு பேசுவிக்கிறது நல்லதாயென்று சொல்லித் திரும்பிப்போனார், இதுதான் சமாச்சாரமென்று அந்தப்பிராமணன்சொன்னவுடனே, தமயந்திதேவி சந்தோஷப்பட்டு அவர் தன் புருஷரேயென்று நிச்சயம் பண்ணிக்கொண்டு தன் தகப்பனாருடனே சொல்லுகிறாள், ஓ என்பிதாவே! என்புருஷனைத் தேடப் பிராமணரை யனுப்பிவைத்தபோது அவர்களுடனே நான் சொன்னதாவது, நீங்கள்போய் ராசசபைகளிலே நளமகாராசாவை தூஷணமாக நிந்தித்துச் சொல்லுங்கள் அதற்குப்பிரதியுத்தரம் யார்சொல்லுகிறார்களோ அவர்களை நன்றாகப்பார்த்துக்கொண்டு அந்தப்பட்டணத்தின் பெயரையும் அந்த ராசன் பெயரையும் கேட்டுக்கொண்டு வாருங்களென்று சொல்லியனுப்பினேன், அப்படியேயவர்களில் இவர்மாத்திரம் அயோத்தியாபுரிக்குப்போய்ச் சேர்ந்து ரிதுபர்ன மகாராசா சபையிலே சொன்னபோது அதற்குப் பிரதியுத்தரஞ் சொன்னபுருஷரே நளமகாராஜாராகவேணும், அவரல்லாமல் வேறொருவரானால் அந்த வார்த்தைகளைச் சொல்லார், ஆனபடியினாலே நாமிப்போது செய்யவேண்டியதென்னவென்றால் நான்சொல்லுகிறேன், ஐயா! நம்முடைய புரோகிதரையும் பின்னையுந் தெரிந்தவர்கள் சிலரையும் அழைப்பித்துவேதசாஸ்திரங்களைப்பார்க்கச்




சொன்னால் அவர்கள் பார்த்துச் சொல்லுவார்கள், அதைக்கேட்டு ஆட்களையனுப்பிவைப்போம், பிராமணரை யனுப்பிவையுமையாவென்று தன் தகப்பனாருடனே தமயந்திசொல்லத் தன் பெண்சொன்ன வார்த்தையை வீமராஜாகேட்டு வெகு சந்தோஷத்துடன் அப்படியே சகல சாஸ்திரங்களையறிந்த பெரியோர்களான பிராமணர்களை யழைப்பித்து அவர்களைச் சாஸ்திரம் பார்க்கச்சொல்லி வீமராஜா உத்திரவு பண்ணினான். அந்தப்படிக்கு பிராமணாள் சாஸ்திரங்களைப் பார்த்து நவகண்டங்களுமாளப்பட்ட நளமகாராஜா வருவார், நீங்கள் சிந்தனைப்படத் தேவையில்லை, ஓ வீமராஜரே! அனுப்பிவைக்கத்தக்க மனிதரை நீரனுப்பிவையும், இப்போது நல்லவேளையாயிருக்கிறதென்று பிராமணாள்சொல்ல அப்படியே அந்தப் பிராமணர்களிலே ஒருவரைக் குறித்து தன் பெண்ணைப்பார்த்து இந்தப் பிராமணனிடத்தில் நீசொல்லத்தக்க விசேடங்களையெல்லாஞ் சொல்லியனுப்புமென்று சொல்ல அப்படியே தமயந்தியும் அந்தப்பிராமணர்களுக்கெல்லாந் தெண்டனிட்டு அவர்களுக்குவேணுமென்கிற திரவியங்களைக்கொடுத்து சோடசவுபசாரங்களும் பண்ணித் தன் தகப்பனார் குறித்தபிராமணரைமாத்திரம் நிறுத்தி மற்றப் பிராமணர்களை யெல்லாம் அவரவர்கள் ஸ்தானங்களுக்கனுப்பிவிட்டு குறித்தபிராமணனுக்குவேணுமென்கிறதிரவியங்களைக்கொடுத்து அந்தப் பிராமணனைக்கிட்ட வரவழைத்துக்கொண்டு தமயந்திமிகவும் பரிதாபப்பட்டுச் சொல்லத்தொடங்கினாள்.

### தமயந்திக்கு இரண்டாவது சுயம்வரம் நாட்டியதாய் ரிதுபர்னமகாராஜனுக் கறிவித்தல்.

ஓ சுவாமி! ரிதுபர்னராஜாவண்டைக்குப்போய் வீமராஜா தன்மருமகனான நளமகாராஜாவை ஆள்களையனுப்பி எங்கெங்குந் தேடவிட்டு அவர் எங்குந்தேடிக் காணாதபடியினாலே வீமராஜா தன் பெண்ணுக்கு இரண்டாவது சுயம்வரம் நாட்டுவித்தாரென்று சொல்லும், அதுமுகாந்தரமாய் ரிதுபர்னமகாராஜா இங்கே வருவார், அவர் பிறகே என் புருஷனும் வருவார், அப்போது பிள்ளைகளை அவரண்டைக்கனுப்பிவைத்து அப்

போது நடக்கிற சாடையை தெரிந்துக் கொள்ளலாம் என்று அந்தப் பிராமணனுக்குச் சொன்னவுடனே, வீமராஜா தன் பெண் சொன்னவார்த்தைக்கு மெத்த சந்தோஷப்பட்டு இதுவே நல்லயோசனையென்று சம்மதித்து அந்தப்பிராமணனையழைத்து சகல யோசனைகளுக்கும் வாய்ச்சாலகத்துக்கும் சபையோகியத்துக்கும் நீரே மற்றொருத்தருமில்லை, ஆனபடியினாலே நீரே போகவேணுமென்று வீமராஜா சொன்னவுடனே, அந்தப்பிராமணன் மகாபாக்கியம், அப்படியே நான்போய்வருகிறேனென்று விடைபெற்றுக்கொண்டு பிரயாணமாய்ப்புறப்பட்டு அயோத்தியாபுரி பட்டணஞ்சேர்ந்து ரிதுபர்னராசாவைக்கண்டு அவராலே ஆதரணை செய்யப்பட்டு அவர் சபையிலேயிருந்து சமஸ்தமான பேருங் கேட்க ஒருவார்த்தைசொல்லுகிறான், ஓ ரிதுபர்னமகாராசரே கேளும், சகல சனங்களும் கேட்கச் சொல்லுகிறேன் ஏகசக்ராதிபதியாகிய நளமகாராசா தன்னுடைய பூர்வ கர்மவசத்தினாலே புஷ்கரராசாவுடனே சூதாடித் தன்னுடைய ராச்சியமெல்லாந் தோற்றுத் தன கனவஸ்து வாகனங்களுந்தோற்று திக்கில்லாதவன்போல பெண் சாதியுந்தானும் வனவாசம்போய் அந்தப் பெண்சாதியை அனியாயமாய்க் காட்டிலே விட்டு எங்கேபோனாரோ தெரியாது, அந்தப்பெண் மகா பதிவிரதாசிரோன்மணியானபடியினாலே காடுகளெல்லாந்தேடிக்காணாமல் பிரலாபித்துக்கொண்டு தன்தாய்வீடு வந்து சேர்ந்தாள், கேளும் ரிதுபர்னமகாராஜரே! அந்தவீமராசா அவராலேயானமட்டும் இந்த பஞ்சசதகோடி பூமண்டலங்களிலெல்லாம் ஆள்களைவிட்டுத்தேடச் செய்வித்து காணாதபடியினால் வீமராஜா மகாவிசாரப்பட்டுத் தன் மகள் என்ன குற்றம் பண்ணினாளென்று நளமகாராஜர் அந்த கோரமான காட்டிலே தனியேவிட்டுப் போனார்? என் மகள் அவருக்கேதோ குற்றஞ் செய்திருக்கிறப்போலே தோணுதென்று மிகவுஞ் சிலேசப்பட்டு எங்கள் ராசா கடூரமான கோபத்துடனே தன்மகளைச் சிறையிலே வைத்து மூன்று வருஷமாய்க் காத்திருப்பாரோ? அந்த நளமகாராசாசெய்த காரியங்களுக்கு எங்கள்ராசா இரட்டிப்பாகச்செய்தால் அவரை யார் கேட்கிறவர், இப்போ



தந்தத் தமயந்திக்கு இரண்டாவது சுயம்வரஞ் சாற்றுவித்திருக்கிறது, நீரிந்தக்ஷணமே வரவேணுமென்று சொன்னவுடனே ரிதுபர்னமகாராசா அந்த வார்த்தைகளைக்கேட்டு ஆச்சரியமா யிருக்குதென்று மிகவுஞ்சந்தோஷப்பட்டு அவ்விடத்திற்குப் போகவேணுமென்று மனதிலே நினைத்தான், அப்போது பிராமணன் சொன்ன வார்த்தைகளைக் கேளாததுபோல் கேட்டிருந்த நளமகாராசா அண்டையிலே யிருந்து கேட்டுத்திடுக்கிட்டு ஓ ஓ! இனிமேல் பெண்களை எப்படி நம்பலாமென்று வெகுவாகத் துக்கித்துக் கொண்டிருக்கச்சே அந்த ரிதுபர்னமகாராசா மாறுவேஷமா யிருக்கிற நளமகாராசாவைப் பார்த்துச் சொல்லுகிறான், ஓ வாகுகா! நீ கேட்டாயோ, இன்று வந்த பிராமணன் தமயந்திக்கு மறுபடியுஞ் சுயம்வரம் அவள் தகப்பனார் சாட்டிவைத்தாரென்று சொன்ன சேதியைக் கேட்டோம், ஒருவேளை அந்தப்பெண் நமக்ககப்படும்போற்காணுகிறது ஆனபடியால் நான் சீக்கிரமாகப்போகவேணும், இவ்விடத்திற்கும் அவ்விடத்திற்கும் அநேகதூரமிருக்கிறபடியால் நாம் சீக்கிரமாக எப்படிப்போவோம்? நானுன்னையே நம்பினேன், நீபோய் சீக்கிரமாக நம்முடைதேரில் குதிரையைக் கட்டிக்கொண்டுவா அவ்விடம் போனால் எப்படியும் அந்தப்பெண் நமக்ககப்படுமென்று சொல்லக்கேட்டு, அந்தநளராசா முகங்கோணாமல் ஓ மகாராசரே! நீரின்றையத்தினம் அந்தப் பட்டணம் போய் சேருகிறதற்கு சமுசயப்படுவானேன், நான் கொண்டுபோய் விடுகிறேனென்று சொல்லிக் குதிரை லாயத்திற்குப்போனார். அங்கே முன்னே நளச்சக்கரவர்த்தியினிடத்திலே இருந்த பௌஷியனென்கிறவன் நளமகாராஜாவைப்பார்த்து ஒருவார்த்தை சொல்லுகிறான்.

ஓ வாகுகா நீ அறியாயோ, வீமராசா அந்தப்பதிவிரதாசிரோன்மணிக்குஇரண்டாவதுசுயம்வரஞ்சாட்டுவிக்கிறதும் அந்த நளமகாராசா தேசம்விட்டுப் போனதும் அவரைச்சேர்ந்தவர்கள்இராச்சியமெல்லாங்காணாமல் புறத்தியாரைச் சேவிக்கிறதும் இப்படியெல்லாம் பிர்மதேவன் கற்பித்திருக்கிறபோது நாமென்ன செய்யப் போகிறோம், நம்மிட கோரிக்கை என்றைக்கு ஈடேறப்

போகிறதென்று வெகுவாய் துக்கப்படுகிற பௌஷியன் வார்த்தையை நளமகாராசாகேட்டுத் தெரிந்துதன் கண்களிலே நீர் புரள அதைத் துடைத்துக்கொண்டு நம்மைச்சேர்ந்தவர்களெல்லாம் அங்கங்கே சேர்ந்துக் கஷ்டப்படுகிறதும் பெண்சாதி பிள்ளைகளை விட்டுப் பிரிந்து இப்படி விகாரரூபமாக கஷ்டப்படுகிறதும் அந்த தமயந்திக்கு இரண்டாவது சுயம்வரஞ் சாட்டுவித்தார்களென்ற சேதிகேட்கிறதும் வெகு நன்றாயிருக்கிறது, ஈஸ்வரன் இப்படியெல்லாம் நடப்பிக்கிறபோது நாமென்னசெய்யப்போகிறோம்,வந்தவைகளையெல்லாம் அனுபவித்தே தொலைக்க வேணுமென்று சொல்லி நளமகாராசா தைரியசாலியானதினால் துக்கத்தை விட்டுக் குதிரை லாயத்திற்குப்போய் அங்கேயிருக்கின்ற உத்தம அஸ்வங்களிலே தன் மனதுக்குச்சரியான நாலு அஸ்வங்களைப்பொறுக்கி அதற்குத் தக்க காணமும் புல்லும் வைத்துபர்வதம்போன்றநவரத்தினகசிதமான இரதத்திலேகட்டி கொடிகுடைகளையுங்கட்டி சகல ஆயுதங்களையும் நிரப்பிச் சகல சிங்காரங்களும் பண்ணிக்கொண்டு வந்து ராசா முன்னே ரதத்தை நிறுத்தினார். அதைப் பார்த்து ரிதுபர்ணமகாராசர் புன்சிரிப்புக்கொண்டு ஒரு வார்த்தை சொல்லுகிறான், ஓ வாகுகா! மெத்தயிளைத்து வீங்கலாயிருக்கிற குதிரைகளை தேரிற்கட்டினாய், நல்ல குதிரைகள்லாயத்திலில்லையா? நான் அந்தப்பெண்ணைக் குறித்துப்போகிறது உனக்கு இஷ்டமில்லையோவென்று கேட்டதற்கு வேறு ரூபமாயிருக்கிற நளமகாராசாசொல்லுகிறார், ஓ மகாராசரே, இந்தக்குதிரை எப்படியிருந்தாலுந் தண்ணீர்வேண்டாது, இரவும்பகலும் வேசாருயில்லாமல் வழிநடக்கும், அந்தவேடிக்கையை இன்றைக்கு நீங்கள் பார்க்கப்போகிறீர்களென்று சொன்னதற்கு அந்தரிதுபர்ணமகாராஜா சந்தோஷப்பட்டு நல்லதென்று சம்மதித்து திவ்வியமாகிய வஸ்திராபரணங்களைச் சிங்காரித்துக்கொண்டு பிராமணர்களாசீர்வதிக்க நல்ல சுபமுகூர்த்தத்தில் ரிதுபர்ண மகாராசா இரதத்தின்பேரிலேறிக்கொண்டு அதிக வேகத்துடனே வாகுகனை குதிரைகளை ஓட்டச்சொல்லி உத்திரவளித்தான்உடனேஉருமாறியிருக்கிற நளமகாராஜாவும் அந்தரதத்திலேறி குதி



ரைக் கயிறுகளைதட்டி தேரை மனோவேகமாய் நடத்தினான். அப்படிரதம்ஓடுகிறபோது ரதவேகத்தை ரிதுபர்ண மகாராசா பார்த்து ஆச்சரியப்பட்டு வாகுகனை மெச்சிக் கொண்டாடினான். அப்போதுபார்க்கிறபேர்கள் சூரிய பகவானுடையசாரதியான அருணன் எந்தவிதமாக சூரியன் ரதத்தை நடத்துவானோ அப்படிப்போல இவன் நடத்துகிறானென்று மிகவும் ஆச்சரியப்பட்டதுமல்லாமல் அந்தக் குதிரையுடையமனதும் நன்றாயறிந்தவனானபடியால் அந்தக்குதிரைகளுக்கு ஆயாசம்வரவொட்டாமல் அதிகவேகமாய் உல்லாசத்துடனே குதிரைகளை யதட்டித் தேரைநடத்தினான். அத்தேரும் சூரியன் ரதத்தைக் காட்டிலும் அதிவேகமாய் ஓடுகிறபோதுவழியிலே ரிதுபர்ணமகாராசாவின் மேலே போட்டிருந்த உத்தரீயம் அந்தரதத்தின் அதிர்ச்சியால் நழுவிக் கீழே விழுந்தது, அதை ராசா திரும்பிப்பார்த்து வாகுகனையழைத்து ஓ வாகுகா! என்னுடைய உத்தரீயம் நழுவிக் கீழே விழுந்தது, அதையெடுக்கவேணும் சற்றேதேரை நிறுத்தென்றான். அதுகேட்டு நளராசா புன்சிரிப்புக் கொண்டுசொல்லுகிறான்கேளும்ராசனே, இப்போது நீரென்னையழைத்துதேரை நிறுத்தென்று சொன்னதற்குள் உம்முடைய உத்தரீயம் விழுந்தயிடத்திற்கு மூன்று யோசனை தூரங்கடந்து ரதம்வந்துவிட்டதையா, இனியெங்கேயெடுக்கிறதென்றுவாகுகன் அந்தராசாவுக்கு சந்தோஷம் பிறக்கத்தக்கதோர் விநோதமாகப் பேசிக்கொண்டு ஒரு ஆயாசமு மில்லாமலும் குதிரைகளுக்கும் ஆயாச மில்லாமலும் தனக்கு பசிதாகமிளைப்பில்லாமலும் நளமகாராசா சாதுரியனானபடியினாலே ரிதுபர்ண மகாராசா தேரை ஓயாமல் நடத்திக்கொண்டு சகல தேசங்களையுந்தாண்டி விதர்ப்பதேசத்திற்குச் சமீபமாய் வருகிறபோது ரிதுபர்ண மகாராசா அந்த ரதவேகத்தை நன்றாகப் பார்த்துக்கொண்டுவந்து அதிக சந்தோஷப்பட்டு சொல்லுகிறான், ஓ வாகுகா! நீ மெத்த சமர்த்தன், உன்னுடைய சமர்த்தை. இத்தனை நாளும் நானறியாமற்போனேன், இன்றுதானறிந்தேன், குதிரைகளுடைய யிருதயத்தை யறிகிறவித்தை எனக்குத் தெரியச்சொல்லும், நானொரு வித்தையைத் தெரியச்

சொல்லுகிறேன் சாவதானமாய்க் கேளென ரிதுபர்ன மகாராஜன் சொல்லத்தொடங்கினன்,ஓவாருகா! அதோ தான்றிவிருக்ஷம் விஸ்தாரயாய்த்தழைத்து பூக்கள், காய்கள், நிறைந்து வெகுவேடிக்கையாக விருக்கிறது பார்த்தாயா, அந்ததான்றிமரத்தின்பேரில் நானிங்கிருந்து ஓரஸ்திரம்விடுகிறேன், அதுபோய் இலைக்கொரு துவாரந்தப்பாமற்துளைத்துப்போடும், அதைப்பார்த்துவரலாமென்றான். அதைக்கேட்டு நளமகாராசாவும் தேரை நிறுத்தி தாழவிருந்து ரிதுபர்னராஜாவை அஸ்திரம் விடச்சொல்ல அவனுந் திவ்யாஸ்திரத்தை யபிமந்திரித்து தன்னுடைய வில்நாணியில் தொடுத்துவிட்டான், அந்த அஸ்திரஞ் ஜிவ்வென்றெழும்பிப்போய் தான்றிமரத்திலிருக்கப்பட்ட இலைகளிலொன்றாகிலுந் தப்பிப்போகாமல் துளைத்துப்போச்சுது, அப்போது நளராசா அந்தத் தான்றிமரத்தண்டை வந்து பிர்மாண்டமட்டும் வளர்ந்திருக்கிறதையும் பார்த்து இலைகளெல்லாந் தப்பாமற் துளைப்பட்டிருப்பதையும் பார்த்து மிகவுமாச்சரியப்பட்டு இது மகா பெரிதான வித்தையென்று சொல்லிக்கொண்டு நிற்கச்சே, அந்தரத்திலே சனிபகவான் நளராசாவுக்குமாத்திரம் பிரத்தியக்ஷமாகவந்து எதிர்நின்று நளபதியேவாரும், என்றவுடனே நளராசாவும் அவரண்டையில் வந்துநிற்க, அந்தச்சமயத்தில் கார்க்கோடகனும்வந்து முன்னேகடித்தவிடத்திலே கடித்து விஷத்தை வாங்கிக்கொண்டு போனான், அப்போது நளபதிக்கு பெரியபாரம் இறங்கினாற் போலாச்சுது, சரீரமாத்திரங் கருப்பாயிருந்தது, பிறகு சனிபகவான் நளபதியைப்பார்த்து துக்கித்து அவனுக்கு மிருதுவாகச் சில வார்த்தைகள் சொல்லுகிறார்.

நளபதிக்கு சனீஸ்வரன் வரங்கொடுத்தல்.

ஓ மன்மத சொரூபரே! ராசசேகாரே, சற்குண விருக்ஷம்போன்ற புண்ணியபுருடரே, சகலஜனங்களுந் துதிக்கப்பட்டவரே, ராஜ கூட்டங்களென்கிற நக்ஷத்திரங்களுக்குள்ளே சந்திரனைப்போல விளங்கப்பட்டவரே, அகண்டிதவீரபாக்கிரமரே, ஓ நளமகாராசரே, உம்முடைய பெண்சாதியும் நீரும் ஒரு புடவையைக் கட்டிக்கொண்டுகாடுகளிலேயலையச்செய்துஉம்மையும்வெருக்குவித்து என்னுடைய பலத்தினாலே அனேக மாய்கைகள் பண்ணி உம்மைசேவித்த ராசாவுக்கேஉம்மைசுயம்பாகியாகச்செய்வித்துவெகுவாகபிரயாசைப்படுத்தி நான் வெகு பொல்லாத அபகீர்த்திக்குள்ளானேன், அதேனென்றால் பதிவிராதா சிரோன்மணியாகிய தமயந்தி தேவி சுயம்வரத்திலுன்னை வரிக்கவும் நீயவளைக் கலியாணம் பண்ணிக்கொண்டதற்கு நான் மனம்பொறுக்காமல் அனியாயத்திற்குட்பட்டு அந்த பாக்கியவதியையும் உன்னையும் வெருக்குவித்து வெகுவாக நானலையப்பண்ணி வெகுகஷ்டத்திற்குள்ளாக்கினேன் என்னை நீர் கோபித்துக்கொண்டு சபிக்கவேண்டாம், என்பிழைகளையெல்லாம் மன்னித்து தயவுபண்ணி கார்க்கவேணும் ஓ நளபதியே! விருதாவிலும்மை அலையப்பண்ணினேன், பாவத்துக்குப் பாத்திரனாகினேன், சகலராலும் நிந்திக்கலானேன், உம்முடைய குணானுபவங்களுக்கு மெச்சினேன், நீர் வேணுமென்கிற வாத்தைக்கேளும் கொடுக்கிறேனென்று சொன்னதற்கு நளபதி ஆனந்தப்பட்டு சூரியகுமாரனான சனிபகவானுக்கு பத்திவினயத்துடனே தெண்டஞ் செய்து ஒருவார்த்தை சொல்லுகிறான்.



ஓ மகானுபாவராகிய சனிபகவானே! நீரென்ன எனக்குப்பிரத்தியாரா, நீர் சூரியபகவானுடையகுமாரர், நான் சூரியவங்கிஷத்து ராஜா உமக்கும் எனக்கும் பேதமேது, நீர் பண்ணின அபகீர்த்தியங்களுக்கெல்லாம் நான்மனம்பொறுத்தேன்,எல்லாம்பகவத்சங்கற்பத்தினாலல்லவோ இதுவரையிலும் நடந்துவருகிறது, அதை நம்மாலே என்ன செய்யகூடும்.

கச-வது கலி நீங்கும் அத்தியாயம்.

நளச்சரித்திரத்தை பாராயணஞ் செய்கிறவர்களைத் தொடுவதில்லையென்று நளபதிக்கு சனீஸ்வரர் வரங்கொடுத்தது

ஆகையினாலே நீரென்பேரிலே கிருபைபண்ணி ரக்ஷியும், பரமபுருஷரான சனீஸ்வரரே! நீர்வரந்தருகிறேனென்கிறபடியினாலே ஒரு மனு கேட்டுக்கொள்ளுகிறேன், அதென்னவென்றால், உங்களுடைய தயவினா

லே எனக்கொன்றுங் குறைவில்லை, இனிமேல் இந்தப்
பூலோகத்திலே என்னுடைய சரித்திரத்தை சொன்ன
வர்களையும் சொல்லக் கேட்டவர்களையும் என்னுடைய
கீர்த்தியை எழுதிப் படித்தவர்களையும் புகழ்ந்தவர்களை
யும் நீர் தயவுபண்ணி பீடிக்காமலிருக்கவேணும், இந்த
தான்றிமரத்துநிழலிலே நின்றவர்கள் பேரில் கிருபை
பண்ணவேண்டாம், ஓ சனிபகவானே! இந்தவரந்தான்
எனக்குக் கொடுக்கவேணுமென்று கேட்டதற்கு சனிபக
வான் சந்தோஷப்பட்டு நளமகாராஜாவைப் பார்த்துச்
சொல்லுகிறான், ஓ சத்தியசந்தனரே! இப்போது நீர்
கேட்டவரப்படியே நான் கொடுத்தேனாகையால் என்
றைக்கும் உம்மை நான் மறக்கிறதில்லை, உம்முடைய
கீர்த்தியைப்புகழ்ந்து கொண்டாடினவர்களுடைய ஆயு
ளும் போகபாக்கியங்களும் அபிவிர்த்தியாய்த் தைரிய
முடையவர்களாய்சுகமாயிருக்கக்கடவர்கள், இதற்குச்சந்
தேகமில்லை, சமுத்திரங் கரைபுண்டாலும் நக்ஷத்திரங்க
ளெல்லாம் உதிர்ந்துபோனாலும் நவக்கிரகங்கள் கதி
தப்பி நடந்தாலும் மகம்மேருகிரி யசைந்திட்டாலும்
என்னுடைய வாக்கியந் தப்புகிறதில்லை, இது சத்திய
வசனமென் றெண்ணிக்கொள்ளும், ஓ நளமகாராஜரே!
நீர் சீக்கிரத்திற்போய் புஷ்கராராஜாவைக் கெலித்து
உம்முடைய இராச்சியம் முதலியவைகளை வாங்கிக்
கொண்டுஉம்முடைய பெண்சாதியையும் பிள்ளைகளையும்
பந்துக்களையுங்கூடி சுகமாய் இராச்சியபரிபாலனம்பண்
ணக்கடவீரென்று குளிர்ந்தமனதுடனே நளமகாராஜா
வுக்கு சகல வரமுங்கொடுத்து அவருக்கு புலப்படாமல்
அந்தரத்தியானமாய் மறைந்துபோய்விட்டார். சனிபக
வான் அந்த மரத்தின்கீழே நின்றபடியினாலே அன்று
முதற்கொண்டு அந்த விருக்ஷத்திற்குக் கலிவிருக்ஷமென்
றும் பெயர் வழங்குகின்றது, சகலமுமறிந்த பெரியோர்
கள் அந்த மரத்துநிழலிலே போகார்கள், நிழலைச் சுற்
றிக்கொண்டு போவார்கள். அப்பால் நடந்தகதையைச்
சொல்லுகிறேன், சாவதானமாகக்கேளும் அந்த நள
மகாராஜா சனிபகவான்கையிலே வரம்வாங்கிக்கொண்டு
மலை சுமந்துவந்தவனுக்கு மலையைஎடுத்துவிட்டாலெத்
தனை சந்தோஷம் பிறக்குமோ அவ்வளவு சந்தோஷத்



துடனே நளமகாராசா அதிகவேகமாகவே நடந்துவந்து
ரிதுபர்ன மகாராசாவுடனே சொல்லுகிறான், ஓமகா
ராசரே! எல்லாந் தப்பாமல் தொளைத்திருக்கிறதுகள்,
அதை யுற்றுப்பார்த்தபடியினாலே இத்தனைநேரஞ் செ
ன்றதென்று சொல்லி, இது அபூர்வமானவித்தை இந்த
வித்தையை எனக்கு தயவுபண்ணிச் சொல்லும், நானு
மக்கு அஸ்வயிருதயத்தையறிகிற வித்தையைச் சொல்
லிக்கொடுக்கிறேனென்று சொல்லி, அஸ்வயிருதய மறி
கிற வித்தையை விபரமாய் ரிதுபர்ன மகாராஜாவுக்குச்
சொல்லி அவராலே பாணப்பிரயோகம் பண்ணுகிற
வித்தையைத் தானறிந்துகொண்டு எப்போதும்போல
இரதத்தின்பேரி லேறி இரதத்தை நடத்திக்கொண்டு
விதர்ப்பபுரிக்குச் சமீபமாக ரதம் வரச்சே அந்தரதம்
வருகிறசத்தம் தமயந்திதேவிகேட்டு இப்படி பூமியதிரத்
தக்கதாக இரதம் நடத்துகிற சாமார்த்தியம் என் புருஷ
ருக்கேயல்லாமல் பின்னையொருவர் தரமாயென்று மன
தில் நினைத்து உப்பரிகைமேலேறி அந்த ரதவேகத்தை
பார்த்துச் சந்தோஷப்பட்டு தன்னுடையபுருஷனேயெ
ன்று நிதானித்துக்கொண்டு தனக்குள்ளே ரிஷிகள் சொ
ன்ன மூன்றுவருஷமாச்சுதென்று தெரிந்துக்கொண்ட
வளாய் உப்பரிகைவிட்டிறங்கி அந்தப்புறத்துக்குள்ளே
போனாள். அந்த ரிதுபர்ன மகாராசர் வருகிற சேதி
வீமராஜாகேட்டு மந்திரி பிரதானிகளுடனேகூட எதிர்
கொண்டுபோய் தேர்விட்டுக்கீழேயிறங்கி ஒருத்தருக்கொ
ருத்தர் வந்தனம் பண்ணிக்கொண்டு திரும்பவும் ரதத்தி
லேறி நடத்திவந்து விதர்ப்பபுறஞ் சேர்ந்தார்கள். தன்
னரண்மனையிலே தானே விடுதிக ளமர்த்திவைத்தார்,
நளமகாராஜா குதிரைகளை யவிழ்த்துக்கொண்டு தண்
ணீர் குடிப்பித்து உடம்பையெல்லாம் தட்டிக்கொடுத்து
காணமும் புல்லும்வயிறு நிறையப்போட்டு குதிரை
லாயத்திலே கொண்டுபோய்க் கட்டிப்போட்டு பூமியிலே
யிருக்கிற தேசாதிபதிகள் சுயம்வரத்திற்கு இன்னம்ஏன்
வந்துசேரவில்லை, நாளைவருவார்களோ என்னமோ
வென்று மனதிலெண்ணிக் குதிரைலாயத்திலே தானே
நளமகாராசாயிருந்தார்.

## நளபதியிடம் தமயந்தி தாதிகளையனுப்பிப் பரிசோதித்தல்.

இப்படியிருக்கத் தமயந்திதேவி பாங்கிமார்களில் புத்திசாலியா யிருக்கிற ஒருபாங்கியை யழைத்து ரிதுபர்னமகாராஜாவினுடைய சாரதியின் விசேஷங்களைச் சொல்லி அவள் பிறகே சில பாங்கிமார்களையுங் கூட்டி அனுப்பிவைத்தாள். அவர்களையும் அந்த பாங்கி தன்னோடுகூட்டிக்கொண்டு குதிரை லாயத்திலேயிருக்கிற நளமகாராசா வண்டைக்குப்போய் விகாரரூபமாயிருக்கிறதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு ஒருவார்த்தை சொல்லுகிறாள், ஓ புண்ணியபுருஷரே! நீரிப்படி யிளைத்திருப்பானேன், மூன்றுவருஷமாய் ரிதுபர்ன மகாராசாவண்டையிலே சேவித்துக்கொண்டிருந்தவர் நீரல்லவா, உமக்கிந்தரூபம் பிறந்தபோதே வந்ததா? நடுவாந்தரத்தில் வந்ததா? அல்லது சமர்த்தரான சாரதிகளுக்கு இப்படிப்பட்ட ரூபந்தான் உண்டாயிருக்குமோ? ஆம் ஆம், சூரியனுடைய ரதசாரதிக்கும் இப்படிப்பட்ட ஊனமானரூபமிருக்கிறதென்று சாஸ்திரங்களில்சொல்லக்கேட்டிருக்கிறேன், அதற்குச் சரியாயிருக்கின்றது, அல்லாமலும் எங்கள் ராசாவின் பிரியமருமகரான நளமகாராசாவரவில்லையென்கிற யோசனையினாலே அவரை வரவழைக்கிற நிமித்தியமாய் எங்கள் தமயந்திக் கிரண்டாவது சுயம்வரமென்று பேருண்டாக்கி இந்த ரிதுபர்னமகாராசா மட்டுந்தான் வந்தார், எங்கள் மகாராசா வாராமற்போனார், ஐயா எங்கள் பெண்ணை நளமகாராசா காட்டில் விட்டுப்போனவர் மறுபடியும் வெட்கத்தினாலே, திருப்பவும் அவளண்டைக்கு எப்படிபோவோமென்று நினைத்து அங்கேதானேயிருக்கிறாரோ என்னமோ தெரியாது, அல்லவென்று ஓரிடத்திலே தான் போய் ஒளித்திருந்தாலும் சிறிதுநாளைக்குப் பிற்பாடாகிலும் போய் அந்தப்பெண்பேரில் தயவுபிறந்து வரத்தேவையில்லையா? என்றுசொல்லிப் பின்னாலேவந்த பாங்கிமாரைப்பார்த்து தலைமையாகவந்த பாங்கி சொல்லுகிறாள், ரிதுபர்னமகாராசரண்டையிலே நளமகாராஜா இருக்கிறாரென்று நம்முடைய ராஜாவுக்கு முனீஸ்வரர் சொல்லக்கேட்டு, நளமகாராசா வரவேணுமென்று அந்த



ரிதுபர்னமகாராஜாவை அழைப்பித்தார், ஓ ஓ பார்த்தீர்களோ அந்தநளமகாராஜா வராமலிருக்கிற மோசம், இன்னம் அவருடைய சேதியைக் கேளுங்கள், நீங்களறிந்திருக்கவேணும் அந்தநளமகாராஜருக்குநம்முடைய பெண்ணான தமயந்தி பெண்சாதியானால் அவள்பேரிலே எவ்வளவும் ஆசையில்லாமல் காட்டிலே விட்டுப்போவாரா? அவள் தன் புருஷன் கொடுத்துப்போன பாதி வஸ்திரத்தையே இன்னம் கட்டிக்கொண்டு தரையிலேபடுத்து, உண்ணாமலும், நல்ல புடவை யுடுக்காமலும், நித்திரை பண்ணாமலும் அழுக்குடம்புடனே இருந்துகொண்டு அவளலைகிறாளே, அவளுக்கு அவர் பேரிலே ஆசையிராதா? நளமகாராஜா ரிதுபர்னமகாராசாபிறகே ஏன் வரவில்லை, நம்முடைய பெண்மீதில் அவருக்கென்னகோபமோ தெரியவில்லையே, அவரிங்கேயிருந்தால்குற்றஞ்சொல்லுவார்களா நம்மிடஅரண்மனையில் வந்து சுகமாயிராரா? இங்குமங்குமலைவானேன், தம் அரண்மனை, தன்ராச்சியம், தன் அம்மான், மைத்துனன், மாமியார், பெண்சாதி, பிள்ளைகள் இப்படியாகயிருக்கச்சே அவரெப்படி வேறுபண்ணலாம், அந்தநளமகாராசா இனியாகிலும் வாராரோ, நம்முடையபெண்ணின் கலிதீராரோ, நம்பினபேரை ரக்ஷியாரோ? ஓ பெண்களே, நாமறிய அந்த நளமகாராஜருக்கு நம்முடைய பெண் ஒரு தப்புஞ்செய்ததில்லையே, ஆனாலும் அந்த பெண்ணின் தப்பை உங்களுக்கு நான் தெரியச்சொல்லுகிறேன் கேளுங்களென்று தலைமையாக வந்த பாங்கி சொல்லுகிறாள், அதென்னவெனில், முன்னே சுயம்வரகாலத்தில் தேவர்களையாலையிடாமல் அவருக்குமாலையிட்டது ஒரு தப்பு, பிறகு அவர் காட்டில்விட்டுப்போனதற்கு அங்கேயிராமல் தாய்வீடு சேர்ந்தது ஒரு தப்பு, அவரைப் பிரிந்தபிற்பாடு பிராணனைப் போக்கடித்துக்கொள்ளாமல் இதுவரையில் சரீரத்தை நிறுத்தினது ஒருதப்பு, இந்த தப்புகளையெல்லாம் பிள்ளைகளையாகிலும் பார்த்துப் பொறுத்துக்கொண்டு இங்கேவராமல் தனக்குச் சரியானவிடத்திலே ஏன் திரிகிறார்? இப்படிக்கொத்த கோபம் எங்கேசெல்லும், ஓஓ பாங்கிமார்களே இந்த அனியாயத்தை எங்கேயாகிலும் கண்டீர்களோ

சொல்லுங்கள், பிள்ளைகளைப்பெற்று, இராச்சியத்தையாண்டு நவகண்டசக்கரவர்த்தியென்று பேரும்பிரதிஷ்டையுமுண்டாய்ச் சகல நியாயங்களுமறிந்த நளபதி கேட்டு புன்சிரிப்புகொண்டு அவர்களுக்குத் தெரியும்படிக்கு நிஷ்டூரமாய் அவளுடனே ஒருவார்த்தைசொல்லுகிறார், ஓ பெண்களே, இத்தனை நேரமாய் நீங்கள் என்னுடனே சொல்லுகிறதென்ன, அதென்னாலேயாமோ? நான் ஒரு ராஜாவிடத்திலே சேவித்துக்கொண்டிருக்கிற ஊழியக்காரன், என்னாலே எந்தக்காரியமும் நடவாது, அல்லாமலும் அந்த நளமகாராஜா உங்கள் பெண காட்டிலே கஷ்டப்படாமல் தன் தாய்வீடுபோய் சேருவாளென்று விட்டுப் பிரிந்துபோனால் நீங்களவரைப் பேயனாக்கித்தூறுகிறீர்கள், உங்கள் பெண்ணுக்கு அவர் உபகாரம்பண்ணினால் உங்களுக்கது அபகாரமாய்த் தோன்றினது, ஆனாலென்னவாச்சுது அவரையழைக்கிறயோசனை ரிதுபர்ணமகாராஜருக்கே தெரியும், இந்த வார்த்தைகளையெல்லாம் அவருடனே போய்ச் சொல்லுங்கள், உங்கள் பெண் அவரண்டைக்குத்தானல்லவோ சொல்லியனுப்பிவைத்தாள், நீங்கள் புத்தியில்லாமல் என்னைக்கேட்டீர்கள் அப்படி கேட்கலாமோ போங்களென்று சொன்னதற்கு அந்த தாதிமார்கள் அவ்விடம் விட்டுத் திரும்பிவந்து, தமயந்தியிடம் குதிரைலாயத்துக்குப் போனவிடத்திலே நடந்த சேதிகளெல்லாஞ்சவிஸ்தாரமாகச்சொன்னார்கள், அதுகேட்டு தமயந்திதேவி சிரித்து அவர்களைப்பார்த்துச் சொல்லுகிறாள், ஓஓ பாங்கிமார்களே, தப்புகளெல்லாம் நம்மிடத்திலிருக்கச்சே அவரைச்சொல்லுவானேன், அவர் ரிதுபர்னமகாராசரண்டையிலே சுயம்பாகியும் சாரதியுமாயிருக்கிறதை நானறிந்து சொல்லியனுப்பினதும்ஒரு தப்பிதமல்லவோ, அவரென்பாக்கியவசத்தினாலேகேட்டு மனதிலே நிறுத்தாமல் என்பேரிலே குற்றமாய் சொன்னார், அதுவுங்களுக்குத் தெரியுமா? அவர் மகாசாமார்த்தியரானபடியினாலே உங்கள்பேச்சுக்கிடங்கொடாமல் இப்படி சொல்லியிருக்கிறார், அதினாலே ஒரு குறைவுமில்லை, நீங்களின்னமொருதரம் அவரண்டைக்குப் போய் அவர் சமைக்கிற விதங்களையெல்லாம் பார்த்து



வாருங்களென்று சொன்னாள். அப்படியே அவர்களும் நல்லதென்று திரும்பவுங் குதிரை லாயத்துக்குப்போய் அவ்விடத்திலே நளமகாராசருடைய சமையல்வேலைகளையெல்லாம் பார்த்திருந்து வந்து தமயந்தியுடனே சொல்லுகிறார்கள், கேட்டாயோ அம்மா, அவ்விடத்து விநோதங்களையும் உச்சிதங்களையும் நாங்களெங்கேயுங் கண்டதில்லை, அதேனெனில் அவர் போசனமும் பதார்த்தங்களும் சமைக்கிறநேர்த்தியும் நாங்களென்னவென்று சொல்லப் போகிறோம், பானைகள் அடுப்பின் பேரில் வைத்தால் தண்ணீர் ஊற்றுப்போலே சுரக்கிறது, அவர்சமைக்கிற காய்கறிகள்வாசனை ஊரெல்லாஞ் சூழ்ந்துகொள்ளுகிறது அனேகவிதமானபதார்த்தங்கள் வெகுஉச்சிதமாக சமைக்கிறார், அவரைப்பார்த்தால்இருளைப்போலே சரீரங் கறுத்திருக்கிறார், அந்த மர்மம் உனக்குத்தெரியுமல்லாமல் எங்களுக்குத் தெரியாதம்மா, பெரியவர்களுடைய ஆசீர்வாதத்தினாலேயும் உன் தகப்பனார்செய்த தபோபலத்தினாலேயும் உன் நோன்பு பலத்தினாலேயும் அவர் உன் புருஷரே யாகவேணுமம்மா, என்றவுடனே தமயந்தியும் யோசனைபண்ணி பின்னுஞ் சொல்லுகிறாள். ஓ பாங்கிகளே இன்னமொருதரம்போய் வாருங்கள், சமைக்கிற சாதமும் பதார்த்தங்களும் உபசாரமாகக்கேட்டு வாங்கிவரவேணும், வாங்கிவந்தீர்களானால் அதைச் சாப்பிட்டுப்பார்த்து எல்லாஞ் சொல்லுகிறேன் போங்களென்றாள். அவர்களும் நல்லதென்று நளபதியண்டைக்குப்போய் கேட்கிறார்கள். ஓ சாரதி சிரேஷ்ட புண்ணியரே! உம்மைப்பார்த்தால்எங்களுக்கு வெகு சந்தோஷமாயிருக்கிறது, எங்கள் வார்த்தையைக் கேட்டு எங்கள்பேரில்தயவுபண்ணி நாங்கள்கோறிவந்த அலுவலை அட்டி பண்ணாமல் நடப்பிக்க வேணும், அதென்னவென்றால் சொல்லுகிறோம்கேளும், எங்கள் வீட்டில் சாதமுங் கறிகளுமில்லாமல் உம்மைக் கேட்க வரவில்லை, உம்முடைய தயவினாலே வேண்டிய பதார்த்தங்களிருக்கிறது, அவைகளை நாங்கள் எத்தனைநேர்த்தியாகச் சமைத்தாலும் அதுகளை வேண்டாமல் எங்கள் பெண் தண்ணீருஞ் சாதமும் மூன்று வருடமாகச் சாப்பிடுகிறாள், இப்போது நீர் சமைக்கிற இந்தச் சாதமுங்

கறிகளும் வெகுநேர்த்திபோலிருக்கிறது, அதில்கொஞ்சம் சாதமுங் கறிகளுங் கொடுத்திரானால் சாப்பிடுவாள் போலிருக்கிறது திவ்விய வாசனையுடனே யிருக்கிற சாதமுங் கறிகளும் மெத்தப் பிரீதியாகக் கேட்கிறாள், உம்முடைய கைசாதமுங் கறிகளும் சாப்பிட்டு வெகுநாளாச்சுதாம், சாதமுங் கறியுந் தயவுபண்ணுமையா வென்ன அதற்கு நளபதி நகைத்து, ஓ பாங்கிமார்களே! இச்சாதமுங்கறிகளும் எங்கள் பெண் கேட்கிறாளென்று நீங்களருமையாகக் கேட்கவேணுமோ, நீங்கள் கேட்டால் இல்லையென்று சொல்வேனே, நானப்படிச்சொல்லுகிறதில்லை, என்னிடத்தி லுண்டான பதார்த்தங்கள் எவர்களிச்சையாகக் கேட்கிறார்களோ அவர்களுக்கு எவ்வளவாகிலும் இல்லை யென்னாமல் கொடுக்கச்சொல்லியுங் கொடாமற்போனால் பரமசண்டாளனென்றுந் தருமசாஸ்திரத்தில் முறையிடுகின்றது. ஆகையால் நீங்கள் கொண்டுபோங்களென்று சொல்லி வண்டகசாலைக்குப் போய் தட்டுகளிலே நல்லசாதமுங் கறிகளும் வைத்துக் கொண்டு வந்து தாதிகள் கையிற் கொடுத்து போங்களென்று சொல்லி யனுப்பி வைத்தார். அவர்கள் சந்தோஷத்துடனே அதை வாங்கிக்கொண்டுபோய் தமயந்திதேவிகையிற் கொடுத்தார்கள். அந்த அம்மாள் அதை வாங்கிச் சாப்பிட்டு தன் புருஷனென்று தெரிந்து, இனி பிள்ளைகளை யவரண்டைக் கனுப்பவேணுமென்று நிதானித்து தன் பெண்ணையும் பிள்ளையையு மழைப்பித்து அவர்களுக்குச் சில வார்த்தைகளைக் கற்றுக்கொடுத்துத் தாதிகள் பிறகே கூட்டி யனுப்பி வைத்தாள். அவர்களுங் குதிரை லாயத்திற்குப்போய் நளபதி யண்டையிலே நின்றார்கள்.

### நளபதி பிள்ளைகளைக்கண்டு துக்கித்தல்.

பிள்ளைகளைக்கண்டு நளபதி மிகவுந் துக்காக்கிராந்தனாய் ஆழ்ந்த துக்கசாகரத்தில் மூழ்கிச் சகிக்கமாட்டாமல் பிள்ளைகளைக் கிட்டவழைத்து மார்போடணைத்து மடியிலெடுத்து வைத்துக்கொண்டு சரீரமெல்லாங் கையால் துடைத்து உச்சியைமுகந்துமுத்தமிட்டுக்கொண்டு தாராளமாய் கண்களில் தண்ணீருதிர்த்தார். அதுகண்டு பாங்கிமார்களுந் துக்கித்து இப்படி இவர்களைக்கண்டு



அழுவானேன் ஓ சாரதி சிரேஷ்டரேயென்று கேட்க, நளபதி அவர்களைப்பார்த்து கம்மின குரலுடனே ஒரு வார்த்தை சொல்லுகிறார், என் பிள்ளைகளைப் பிரிந்து அநேக நாளாச்சுதானபடியால் அந்த நினைப்புவந்து கண்களில் தண்ணீர் சொரிந்தேன், இப்படி ஒருவரைச் சேவிக்கிறது ஒரு பிழைப்பா? நான் பிள்ளைகளைப் பார்த்து ஏழுவருடமாச்சுது, என் கர்மவசத்தினால் பெண்சாதி பிள்ளைகளை விட்டு ஒருவரிடத்திலேபோய் சேவித்துக்கொண்டிருந்தேன், ஒருதரமாகிலும் போய்ப் பார்க்கக்கூடவில்லை, நானிப்படி என் வயிறுவளர்த்துக் கொண்டு பிழைக்கிறேன், இந்தப்பிள்ளைக்கு ஏதாகிலுங் கொடுப்போமென்றால் எனக்கு வீடிங்கில்லை, ஆகிலும் இதோ கொஞ்சம் கற்கண்டு கொடுக்கிறேன் வாங்கிக் கொள்ளுங்களென்று பிள்ளைகள் கையிற்கொடுத்து முத்தமிட்டு போங்களப்பாவென்றுசொன்னபோது பாங்கிமார்களவரைப் பார்த்துச்சொல்லுகிறார்கள், ஓ மகோத்தம சத்தியசந்தனரே! இப்பிள்ளைகள் நளபதியினுடைய பிள்ளைகள், இதுகளும் அப்படித்தான் தகப்பனை விட்டுப் பிரிந்திருக்கிறதுகள், அந்த ராஜா இப்பிள்ளைகளையும் பெண்சாதியையும் விட்டுப்பிரிந்து பரதேசம் போகலாமா? இது அவருக்கு நன்றாயிருக்கிறதா? அவர் தானெப்படி சகித்துக்கொண் டிருக்கிறாரோ தெரியவராது, எத்தனை கல் நெஞ்சானாலும் இப்பிள்ளைகளைப் பார்த்தவுடனே நெஞ்சு கரைந்து நீராயுருகிப் போகாதோ, இப்படி எத்தனை நாளென்று இப்பிள்ளைகள் தகப்பனைவிட்டுப் பிரிந்திருக்கும் நீர் சொல்லும், இம்மட்டுக்கும் அவர் வராமற்போனால் இப்பெண் பிராணனை வைத்திருக்கமாட்டாள், பிற்பாடு இப்பிள்ளைகள் திக்கில்லாமலலைந்துபோம், இனி யார்முகத்தைப்பார்க்கப்போகிறதுகள், நவகண்டமும் ஆளப்பட்ட நளபதியினுடைய பிள்ளைகள் இப்பூமியி லென்னபாடுபடத் தலையிலெழுதியிருக்கிறதோ தெரியவராது, லோகோத்தமராயிருக்கப்பட்ட இப்பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட பிரயாசங்கள் வந்தது நீர் பார்த்தீராவென்று பாங்கிமார்கள் சொன்னவுடனே நளபதிக்கு மேலும்மேலுந் துக்கம்வந்து விசனித்து தாராளமாகக் கண்ணீர் தாரை

தாரையாகச்சொரிய அழுது குரலுங் கம்மிப்போய் கைகால்களசைந்து பூமியைப் பார்த்துக்கொண்டிருந்தார். அதைக்கண்டு பாங்கிமார்களுஞ் சகிக்கமாட்டாதவர்களாய் அப்பிள்ளைகளை யழைத்துக் கொண்டுபோய் தமயந்திதேவி யண்டையிலேவிட்டுப் போனவிடத்தில் நடந்த சேதிகளையெல்லாம் சவிஸ்தாரமாகச் சொன்னார்கள். அதுகேட்டு தமயந்தி இனி நாம்சும்மாயிருக்கப் போகாதென்று சொல்லித் தன் தகப்பனாரை யழைத்து இந்தச் சேதிகளையெல்லாம் ஆதியோடந்தமாகச் சொல்லி தன்புருஷனை வெளிப்படுத்தவேணுமென்று சொன்னதற்கு வீமராஜாவும் வெகு சந்தோஷத்துடனே நல்லதம்மாவென்று சொல்லி மந்திரிகளையழைத்து ஓ மந்திரிகளே! ரிதுபர்னமகாராசாவண்டைக்குப்போய் எங்கள் ராசா உங்களுடைய தேர்ப்பாகனைப் பார்க்கத் தக்கதாக அழைத்துக்கொண்டு வாருங்களென்று சொல்லியனுப்பினார். நல்லதென்று அவர்களும் ரிதுபர்ன மகாராஜ ரண்டைக்குப்போய் நமஸ்காரம் பண்ணிச் சொல்லுகிறார்.

நளபதி வீமராசாவின் மந்திரிகள் அழைக்க சபைக்கு வந்தது.

ஓ இராஜேந்திரரே! நீங்கள் அயோத்தியாபுரிபட்டணம் விட்டுப் புறப்பட்டு விதர்ப்பபுரத்திற்கு இத்தனை சுருக்காய் உங்கள் அரசர் வந்ததற்கு எங்கள் ராஜா மெச்சி சந்தோஷப்பட்டு அத்தேரையோட்டிவந்த சாரதி எப்படிக்கொத்தவனோ அவனைப் பார்க்கவேணுமென்கிற யோசனையாலும்முடைய சாரதியை எங்களிராஜா வரவழைத்து கொண்டுவரச் சொன்னார், தயவுபண்ணி உங்கள் சாரதியை யனுப்பி வையுமென்று சொல்ல, அதைக்கேட்ட ரிதுபர்னமகாராசா யோசனைபண்ணி, நம்முடைய சாரதியுடனே அவருக்கென்ன வார்த்தை யிருக்கிறது, ஏதாகிலும் நமக்குச் சொல்லியனுப்பவோ என்னமோ தெரியாதென நினைத்து அந்த க்ஷணத்திலே தானே வாகுகனை யழைத்து, இவர்கள்பிறகே நீபோய் வீமராஜாவைக்கண்டு வார்த்தை சொல்லப் போவென்றனுப்பிவைத்தார். அவர் நல்லதென்று மாறுவேடங் கொண்டிருக்கிற அந்த நளமகாராஜாவும் மந்திரிகள்



பிறகே போகிறபோது அந்தப்பட்டணத்து ஜனங்களெல்லாம் அவ்வார்த்தையைக்கேட்டு மனதிலே சந்தோஷத்தை யடைந்து அங்கங்கே கும்பல் கும்பலாய் கூடி ஒருத்தருக்கொருத்தர் ஓஓ தங்கையென்று கூப்பிட்டு தங்களுக்குத் தோன்றினபடிக்குச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். எப்படியென்றால், பார்த்தாயோ அம்மா, மகாபதிவிரதா சிரோன்மணியான தமயந்தியை இராஜாதிராஜராகிய நளமகாராஜா காட்டிலே விட்டுப் பிரிந்து எப்படிப்போய்விட்டார், தேவேந்திரன் முதலான தேவர்களை வரிக்காமல் அவர்கள் சொரூபத்தையும் பாராமல் திரஸ்கரித்து அவரை அவள் மாலையிட்டதற்கு அவர்பண்ணின மரியாதைபார்த்தாயோ அம்மா, கர்மவசத்தினாலே இராச்சியம்போனாலுமென்ன, தன் மாமனார் வீடுவந்து சேர்ந்து சுகமாயிராமற் பயங்கரமான காட்டிற்கு ஏன்போனார், வெளிகளெல்லாந் திரிந்தலைவானேன், என்று இப்படி சொல்லிக்கொள்ளுகிற பேரும், ஆதியிலே சிறிதுபேர் ஓ தங்கையே, தேவர்கள் கூட ஊழ்வினைப்பயனைத் தப்பித்துக்கொள்ளார்கள், முன்னே அனேக இராஜாக்கள் பதியிழந்து, நிதியிழந்து அலையவில்லையா அப்படி ஊழ்வினையால் பிரயாசைப்பட்டவர்கள் கணக்கில்லையே, அரிச்சந்திரனைப் போலொத்தவர் என்ன பிரயாசைப்பட்டார், அப்படிப்போல நளமகாராஜாவுக்கு இப்படிக்கொத்த பிரயாசை வந்ததென்றும், ஒருத்தி இவருக்கு அம்மான் வீடு வேறும் தன்வீடு வேறுமாகப்பார்க்கலாயா, இங்கேவந்திருந்தால்தாழ்ச்சியென்னவென்றும் அந்தத்தமயந்தி காட்டிலே தன்புருஷனைக்காணாமல் ஜீவனை விடப்போகச்சே ரிஷீஸ்வரர் கண்டு ஓ அம்மா நீயேன் ஜீவனை விடுகிறாய், மூன்று வருடத்திலே உன் புருஷனும் நீயும் கூடிச் சுகமாய் எப்போதும்போல இராஜ்ஜியமாளப்போகிறீர்களென்று அபயாஸ்தங்கொடுத்தபடியினாலே தப்பிவந்தாள். அவளைக்கண்ணிலேகண்டோம், ரிஷீஸ்வரர்சொன்ன தவணையும் இன்றுடனே சரியாச்சுது, நளமகாராஜா இதுவரைக்கும் வராமற்போனால் பெரியோரான ரிஷி வாக்கு தப்பிப்போகாதா, இதோ வரப்போகிறார் பார்க்கப்போகிறீர்களென்று ஆதியில் தமயந்தியைப்பார்த்து என்றும்

உன்னைப்பிரியேனென்ற நளமகாராசர் பேச்சு தப்பிப்போச்சுதல்லவா, இப்படி பண்ணலாமா? கடவுளுடைய கிருபையால் இப்போது நளமகாராஜா வந்தால்தான் தமயந்தி பிழைப்பாள், இல்லாவிட்டால் அந்தப்பெண்ணைக் கண்களில் பார்க்கமாட்டோம், ஒருவேளை அவர் வாராமற்போனால் அவள் ஜீவனைவிட்டால் அவள்ஸ்திரீஹத்தி தோஷம் அவள் தகப்பனுக்கோ, அல்லவென்று இருவரையும் இசைவித்த அன்னப்பட்சிக்கோ தெரியாது, அந்தப்பெண்கொலை ஒவ்வொருத்தரைச்சுற்றுமேயொழிய விருதாவாய்ப் போகமாட்டாது, விஷமருந்துகள் ஆயுதங்கள் இப்படிக்கொத்த பொல்லாத வஸ்துக்களையெல்லாம் அவள் கண்ணில் காணமல் ஒளித்து வைத்திருக்குது, குளங்கள், கிணறுகள், துரவுகள் இவைகளண்டையிலேயுஞ் சேவகரைக் காவல் வைத்திருக்கிறது, அவளுடையதாயுந்தந்தையும் அத்தனைஎச்சரிக்கையுடனே யிருக்கிறார்கள். இத்தனைக்குந் தப்பிக்கொண்டு அவள் ஜீவனைவிட்டால் உடனேயவள் தாய்தந்தையுஞ் ஜீவனை விடுவார்கள். அவர்களுடனே தமயந்தியினுடைய தமையனும் ஜீவனைவிடுவான், அப்புறம் தெய்வயத்தனமெப்படியோ, ஜனங்கள் செய்த பாக்கியமென்னமோ தெரியாதென்றும் இப்படி பலவிதமாகப் பட்டணத்திலுள்ளபேர்களெல்லாம் ஒரே பேச்சாய் பேசிக்கொள்ளுகிறதை நளமகாராஜா தனது காதுகளிலே நாராசங்காய்ச்சி விட்டாற்போல கேட்டு விசனப்பட்டுக்கொண்டுவீமராஜாவண்டைக்குவந்துகைகுவித்து நின்று ஓ சுவாமி! தேவரீர் இந்தவேளையிலேன் அழைப்பித்தீர்? என்னாலே என்னகாரியம் நடக்கவேண்டியது. அதைச் சொல்லும் நான்போகவேணுமென்று நளமகாராஜா கேட்டார். அதைக்கேட்டுவீமராஜாபுன்சிரிப்பு கொண்டு தானிருந்த சிங்காதனத்தை விட்டிறங்கி அந்த உருமாறிய நளமகாராஜாவுக்கு வேறொரு நவரத்தின சிங்காதனம் போடுவித்து அதில் அவரையிருமென்று சொன்னார். அப்போது நளமகாராஜா வீமராஜாவைப்பார்த்து ஓ சுவாமி! தேவரீர் இப்படிக்கொத்த மரியாதைகளெல்லாம் பண்ணலாமோ? நானென்ன சம்மந்தியா? யாப்பிள்ளையா? நானுமக்குச் சரியானராஜாவா? நானொரு



ராசாவினுடைய ரதசாரதி, எனக்குச் சிங்காதனம் என்னத்திற்கு, ஏதாகிலுஞ்சொல்லவேண்டிய விசேஷமுண்டானால் சொல்லியனுப்பிவிடுங்கள், ரிதுபர்னமகாராசா ஒண்டியாயிருக்கிறார், சுயம்வரமென்று இன்றையதினம் வெகுதூரம் வந்தோம், சரீரம் மெத்த வேசாரியிருக்கிறது செலவு கொடுங்கள் நான் போகிறேனென்று சொல்லித்திரும்பினார்.

### ௧௫-வது தேவியைக் கண்ணுற்ற அத்தியாயம்.
### தமயந்தி பிள்ளைகளை விட்டு நளபதி பாதத்தில் விழுந்து கதறியது.

அந்த நளமகாராஜாவின் மாறுரூபத்தை தமயந்தி தேவி பார்த்து இப்படியும் வாய்த்ததோ வென்றழுகிற பரிதாபத்தை நளமகாராசா பார்த்து ஓராஜரே என்னை நீரேனழைப்பித்தீர், இந்தப்பெண் ஏனழுகிறது, இதென்ன காரணம்? எனக்குச் சீக்கிரமாகச் செலவுகொடும், நான் போகிறேனென்று தீவிரப்படுகிறபோது தமயந்தி தேவி அதிக விசாரத்துடனே உருமாறியிருக்கிற தன் புருஷனண்டையிலே வந்து வெகுவாகப் புலம்பி அழுகிறபோது அதுகண்டு நளமகாராஜாவும் அதிகரோஷமுந் துக்கமும் மேலுண்டாய்த் தமயந்தியைப் பார்த்து ஒருவார்த்தை சொல்லுகிறார்.

ஓ பெண்ணே பாக்கியவதி, உன் மனதிலேயுண்டான விசனமெல்லாந் தீரத்தக்கதாக உன் தகப்பனார் இரண்டாவது விவாகம்பண்ணச் சுயம்வரஞ் சாட்டி வைத்தாரே இனியேன் விசனப்படுகிறாயென்று விரோதமாய்க் கர்னகடூரமானவார்த்தைகளைச்சொல்லி இந்தப் பேச்சுகள் நான் சொல்வதினாலே உன் தகப்பனாருக்கு கோபமாயிருக்குமோ வென்று சொன்னதினாலே இவரே நளமகாராசா வென்று நிச்சயமாயறிந்துக்கொண்டு இரண்டு பிள்ளைகளையும் உருமாறியிருக்கிற நளமகாஇராஜா மடியிலே வைத்துக் கையைப்பிடித்துச் சிங்காதனத்தின் மேல் உட்காரவைத்துப் பின்பு பிள்ளைகளைப் பார்த்து கிலேசப்பட பிள்ளைகளும் கோவென்றழத் தபனுபியென்கிறமைத்துனனும்வந்தழ இப்படியாக கிலேசப்படுகிறபோது வீமராஜா நளமகாராஜாவைப்பார்த்து ஓ நளமகாராஜரே! நானென்ன புத்தியில்லாதவனோ?

ரிதுபர்ணமகாராஜர் அண்டையிலேயிருக்கிறசேதியைக்
கேட்டு உம்மை இங்கே வரவழைக்கிற நிமித்தம் இந்த
யத்தனம்பண்ணினதேயல்லாமல்வேறொன்றில்லை, அப்
படி நான் நிச்சயமாய் சுயம்வரம் சாட்டிவைத்தால் இந்
நேரம் ஐம்பத்தைந்து தேசத்து ராஜாக்களெல்லாரும்
வந்திரார்களா? எவர்களாகிலும் இங்கே வந்திருக்கிறா
ர்களா? நீரதை நன்றாக விசாரியும், ஓ ராஜசேகரரே,
நீரறியாதயோசனை நானென்ன சொல்லப்போகிறேன்,
இந்தக்காரியம் நான் செய்ததில்லை, என்ன தகப்புகளிரு
ந்தாலும் மன்னித்து என் பேரில் தயவு வையுமென்று
வீமராசா வேண்டிக்கொள்ள, நளமகாராசா அழுகிற
பிள்ளையை யெடுத்து ஆதரணைபண்ணிப் பிறகு தலையெ
டுத்து தமயந்திதேவியைப் பார்த்து குசோத்தியமாக
ஒருவார்த்தை சொல்லுகிறார்.

ஓ பெண்ணே! இராசபத்தினியே, ஆண்பிள்ளைக
ளுக் காபத்துவருகிறது மெத்த அருமையல்ல, ஆபத்தி
னாலே நளமகாராசாதான் எங்கேயோ போய்விட்டா
னே, அந்த நளமகாராசா வரவேணுமென்கிற பிரதிக்
கினை என்ன, அவனுக்குச் சரியானவரில்லையோ, நள
மகாராசா உன்னைக் காட்டி லொண்டியாய்விட்டுப் போ
னானே, அப்படிப்பட்ட பகையாளியின்மேல் ஆசை
இனி உனக்கென்னத்திற்கு? மனதிற்குச் சம்மதியான
பேரை நானழைத்து வரமாட்டுவேன், நளமகாராசா
நானென்று உன் தகப்பனார் என் பேரில் நிசஞ்சொல்
லுகிறார், நானிப்படிக்கு அருபியானால் அந்தநாளையிலே
நீ சேருவாயா? நீ காட்டிலே இலைகளுங் காய்களுந்
தின்று செடி நிழலிலே நிற்கமாட்டாயென்றுஉன்னையுன்
தாய்தகப்பன் வீட்டுக்கு நளமகாராசா போகச்சொன்
னால் போகமாட்டேனென்று பின் தொடர்ந்ததால் வே
ண்டாமென்று உனக்கு வழிகாட்டி உன் தாய்வீடுபோய்
சேரென்று விட்டுப்போனால் அதுவே பெரிய தப்பாக
எண்ணி இத்தனை சுருக்காகக் கலியாணத்திற்கு நீ எத்
தனம் பண்ணினால் இனி அவருக்கு வெட்கமில்லையா,
அவரும் உன்னைப்போல வேறே பெண்சாதிக்கு எத்த
னம்பண்ணி ஆளனுப்பக் கண்டோம், ஓ பெண்ணே,
உன் புருஷன் அப்படியல்லவென்று உனக்கு தப்பிதந்



தான் செய்திருந்தாலும் உன்பிள்ளைகளைப்பார்த்தாவது
பொறுக்கவேண்டாமா? ஆனாலென்னவாச்சுது, நான்
வழக்கு சொல்லவந்தேனோ, இல்லை, இல்லை, உன்தகப்
பனார் என்னைப்பார்த்து நீ தான் நளமகாராசாவென்று
சொல்லச்சே எனக்கு நகைப்பு வருகிறதென்று சொன்
னவுடனே, தமயந்திதேவியும் அந்தநளமகாராசாவுடைய
சீலையும் ஒத்துப்பார்த்து கிழித்திருக்கிற அடையாளத்
தையுங்கண்டு ஓ மகாராஜாவே! இந்தச் சீலையுடனே
என்னைப்பார்க்கிலும் அதிக துக்க மனுபவித்தீரோ
என்று தமயந்தி முகத்திலே யறைந்துகொண்டு நின்ற
நிலையிலிருந்துவெட்டிச்சாய்த்தமரம்போல நளமகாரா
ஜாபாதத்திலே தொப்பென்று விழுந்துகோவென்றலரி
பெருங்களைப்பட்டுத் தேறி முன்னிருந்த இருப்புகளைச்
சொல்லிப் புகழ்ந்து துக்கம் பொங்கிப் பொங்கிவர நள
மகாராஜா முகத்தைப்பார்த்துச் சொல்லுகிறாள், ஓ ரா
ஜேந்திரா! என் கண்மணியானவரே! நானப்படிக்கொ
த்த அற்பபுத்தியாக நினைக்கவில்லை, அப்படி நினைத்
தால் நரகத்துக்கேதுவாக வேறு கலியாணம் பண்ணிக்
கொள்ள நினைப்பேனோ, எவ்விதமாகிலும் வரவேணு
மென்று அப்படிக்கொத்த வாக்கைப் பிறப்பித்தேன்,
அல்லவென்று இந்த யத்தனம்பண்ணவேணுமென்று
நிஜமாய் நினைத்தேனேயானால் இப்படி இந்தவேஷத்
துடனே இருப்பேனோ? என்மனதில் வேறொருத்தரை
கலியாணம் பண்ண நினைத்ததேயில்லை, இதற்கு சாக்ஷி
யாக பூமிதேவி, ஆகாயவாணி, அக்கினி, வாயு, சூரியன்.
சந்திரன் அஷ்டதிக்குப்பாலகர், முதலான தேவர்கள்
இவர்களறியாத தொன்றுமில்லையே, ஓ ராஜேந்திரா!
நானுனக்கு வஞ்சனை, துரோகம், நினைத்ததுண்டானால்
பிராமணனைக்கொன்றவனும்புருஷத்துரோகம் பண்ணி
னவளும் பொன் திருடினவனும் கோள்சொல்லுகிறவ
னும் வழிகாட்டிப் பறித்துக்கொண்டு வதை செய்தவ
னும் பொய்சாக்ஷி, மண்ணோரஞ்சொன்னவனும் தெய்
வத்துரோகம் பண்ணினவனும் கோஹத்தி, சிசுஹத்தி
முதலிய மகாபாதகங்களைப் பண்ணினனும் போகிற
கதியிலே ஸ்ரீ மகாவிஷ்ணுவறிய நான் போகக்கட
வேன், நீங்கள் நினைக்கவேண்டுவதில்லை, சகல நியாய

மூஞ் சம்பூரணமாக அறிந்திருக்கப்பட்ட தேவரீர் என்னிடத்திலிப்படி சந்தேகப்படலாமோ? இந்தக்ஷணத்திலேதானே நான் தேவர்களுமறிய அக்கினியிலே புகுந்து வெளிப்பட்டு உமது மனதுகலக்கந் தீர்ந்தபிற்பாடு உமது கிருபைக்குப் பாத்திரை யாகிறேனென்று சொல்லி அதிக துக்கத்துடன் பூமியில விழுந்து புலம்ப, அப்போதந்த கோரமான துக்கத்தைப்பார்த்து வீமராஜா பெண்சாதியும் வீமராஜாவும் தபனுப்யென்கிற தமயந்தியின் தமயனும் புலம்பினுர்கள். அதைப்பார்த்து நளமகாராஜாவும் கண்களிலே கண்ணீரைத் தாரை தாரையாய் உதிர்த்து கிலேசப்பட்டார்.

தமயந்திபேரிலுண்டான சந்தேக நிவர்த்திக்காக பிர்மா விஷ்ணு பரமசிவன் பிரசன்னமானது.

அப்போது தமயந்தி பிரார்த்திக்க பிர்மா விஷ்ணு முதலான சகல தேவர்களுடன் ரிஷபவாகன ரூடராய் பரமசிவன் பிரசன்னமாய் ஆகாய வீதியிலே நின்று நளமகாராசாவைக் கூப்பிட்டு எல்லோரும் ஒரேவார்த்தையாகச் சொல்லுகிறுர்கள் ஓ நளமகாராசரே எங்களுடைய வார்த்தையைக்கேளும் உம்மைப்போலொத்த சத்திய சந்தனர்களானபேர்கள் இப்படிக்கொத்த நினைவு நினைக்கிறது தகாது உம்முடைய பெண்சாதியான தமயந்திதேவி மகாபதிவிரதையாச்சுதே இந்தப் பெண்பேரிலே நீர் இப்படிப்பட்ட வார்த்தை சொல்லவேண்டாம் இதோ பார்த்திரா சநீஸ்வரன் தன் கெர்வமெல்லாமடங்கி வெட்கப்பட்டிருக்கிறுன் அதோ கார்க்கோடகன் வுனக்குவந்த தீங்கெல்லாம் பார்த்துப் பூர்வரூபத்தை வெளியாக்க காத்திருக்கிறுன் வுனதுகிலேசத்தை விட்டுவிடும் இந்தத் தமயந்திதேவி அந்தக்காட்டிலே பிராணனைவிட அனேகவிதமாக நினைத்தாள் நாங்கள் பாதுகாத்து ரட்சித்து இன்று ஒப்புவித்தோம் இனிமேல் உம்முடைய பெண்சாதியும் பிள்ளைகளும் நீரும் சுகசீவிகளாய் முன்னே இருந்தாற்போலே சகல தர்மங்களையும் பரிபாலனம் பண்ணிக்கொண்டு அபிவிருத்தியாயிருங்கள் கடைசியிலே நீரும் உம்முடைய பெண்சாதியுஞ் சுவர்க்கலோகம் வந்துசேருவீர்கள் இப்போது பூர்வரூபத்தைத் தரியுமென்று சகல தேவர்களுஞ் சொல்லக்கேட்டு நளமகாராசா ஆனந்த பரவசனுகிச் சரீரம் புளகிக்க அதிகநேரம் தோத்திரம்பண்ணினுன்.



நளபதி பூர்வரூபம் தரித்தல்.

கார்க்கோடகன் வந்து நளமகாராசாவினுடையசரீரத்தில் யிருக்கிற விகுர்தரூபத்தை வாங்கிக்கொண்டு போனுர், அப்போது நளமகாராசா தான்கட்டிக்கொண்டிருக்கிற பாதி புடவையுடனே களங்கமில்லாமல் சூரியனைப்போல் பூர்வரூபம் தரித்தார் அப்போது தமயந்தி நாயகனைக் கண்குளிரப்பார்த்து பயபக்தி விசுவாசத்துடனே நமஸ்காரஞ்செய்தாள், தேவர்கள் புஷ்பமாரி வருஷித்து இருவருஞ் சுகஜீவிகளாக யிருக்கக்கடவீர்களென்று ஆசீர்வாதம்பண்ணி தங்கள் ஸ்தானங்களுக் கெழுந்தருளினுர்கள்.

நளபதியை ரிதுபர்னமகாராசா வணங்கி மனுகேட்டுக்கொண்டது.

அந்தநேரத்தில் ரிதுபர்ன மகாராசா இந்த பூர்வோத்திரமெல்லாங் கேட்டு வெகு ஆச்சரியத்துடனே வந்து ஏகசக்ராதிபதியான நளமகாராஜாவுக்குத் தெண்டஞ் சமர்ப்பித்து நின்று சொல்லுகிறுன், ஓ நளமகாராசரே! உம்மை நானித்தனைநாளு மறியாமல் கொஞ்சமான பேச்சுகளை பேசிக்கொண்டிருந்தே னதனுலே யனேகதோஷங்களெனக்கு வந்து நேர்ந்தது நானென்ன செய்யப்போகிறே ஞகையால் சகல நியாயங்களுமறிந்த வுமக்கு நான் சொல்லவேண்டியது என்னவிருக்கிறது நீங்கள் மகானுபாவர் தருமசொரூபர் ஆகையினுல் நானேதாவது தப்புசெய்திருந்தால் அதை மன்னித்து என்பேரிலே தயவு வையுங்களென்று வெகுவாய்த் தோத்திரம் பண்ணுகிற ரிதுபர்ன மகாராசாவைப் பார்த்து நளமகாராசா சந்தோஷித்து ஓ இராசேந்திரரே நீரிப்படி யனேகவிதமாக இதவுவசனங்கள்சொல்லவேண்டாம் நீர் மகா சற்சனர் தருமசொரூபர் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனர் உம்முடைய தயவினுலே என்னுடைய விரதம் உம்மாலே நிறைவேறினது நீர் மகாபுண்ணிய புருஷரென்று சொல்ல ரிதுபர்ன மகாராசர் நளமகாராசாவிடத்தில் விடைபெற்றுக் கொண்டு அயோத்தியாபுரிக்குப் போனுர்.

### ௧௬-வது அரசாட்சி அத்தியாயம்.

பிற்பாடு வீமராசா மருமகனுக்கு விலையில்லாத பூஷணங்களைக் கொடுத்து சந்தோஷம் பண்ணிவைத்தான், பிறகு பெண்சாதி பிள்ளைகளுந் தானும் ஏகமனதுடையவர்களாய் ஆனந்தத்துடனே யிருந்தார்கள்.

நளபதி புஷ்கரராசாவுடன் சூதாடல்.

இப்படி சிலநாள் சென்றபிறகு மாமனார் கையிலே சிலவு வாங்கிக்கொண்டு தானுந் தன்பெண்சாதியும் பிள்ளைகளுமாய் இரதமேறி மகாவேகத்துடனே நிடதபுரத்திற்குப்போய் புஷ்கரராசாவைக்கண்டு நளமகாராசா ஒரு வார்த்தை சொல்லுகிறார். ஓ புஷ்கரராசனே! நீர் மகா ஐஸ்வரியசம்பன்னர் வீராதிவீரர்என்னுடனே நீர் கபடசூதாடி என் பாக்கியமெல்லாம் பரித்துக் கொண்டு என்னை ஊரிலேயிருக்க வொட்டாமல் துரத்திவிட்ட மகாராசர் நீராகையால் இன்னமொருதரம் என்னுடனே சூதாடவேணுமென்கிற ஆசையினாலே வந்தேனென்பேரில் தயவுபண்ணி வாருமென்றழைக்கிற நளமகாராசாவைப் பார்த்து புஷ்கரராசா நகைத்துச் சொல்லுகிறான், ஓ நளமகாராசரே! முன்னே என்பாக்கிய வசத்தினாலே நானும்முடனே சூதாடி சகல பாக்கியங்களையுங் கெலித்தேன் நீரும்முடைய கர்மவசத்தினாலே இராச்சியத்தை யெனக்குத் தோற்றுவிட்டு பரதேசியாய்ப் |போய்விட்டீர் இப்போது திரும்பவும் சூதாடவேணுமென்று வந்தீரே என்னவஸ்துவைப் பந்தயமாக வைத்து ஆடப்போகிறீரென்று கேட்டவுடனே நளமகாராசா வெகு ரோஷத்துடனே சொல்லுகிறார்.

ஓ புஷ்கரராசாவே! சூதாடுகிறதற்காக பந்தயம்என் பெண்சாதியைவைத் தாடவந்தேன் நீர் யோசனைபண்ணாமல் சீக்கிரமாக சூதாடவாருமென்று அதிககோபத்துடனே நளமகாராசா சொல்லுகிறதை கேட்டுநகைத்து அந்தட்சணமே சாரையும்பலகையுமழைப்பித்தார். அப்போது நளமகாராசன் சனீஸ்வரனை நினைத்து வெகு சாக்கிரதையாக உபாயத்தினாலே சூதாடி அரண்மனைகளாஸ்தான மண்டபங்கள் ரதகஜ துரகபதாதிகள் சகலமும் வரிசை வரிசையாகக் கெலித்து புஷ்கரராசாவைக் கோமணாண்டியாக்கி மகாரோஷத்துடனே புஷ்கரராசா



வைப் பார்த்துச் சொல்லுகிறார், ஓ புஷ்கரராசனே! சற்றாகிலும் தயைதாட்சண்ணிய மில்லாத மனதுடையவனே அந்த நாளையிலே நீர் மாயச்சூதாடி என் ராச்சியத்தைப் பறித்துக்கொண்டு வெளியிலே ஓட்டி விட்டீரே இப்போது என்னைக்கெலிக்க எம்மாத்திர மனிதன் உமக்கு நிற்க இடமில்லாமற் போச்சுது பார்த்தீரா எப்படிப்பட்ட சமர்த்துள்ளவனானாலும் இந்த லோகத்திலே நல்லதும் பொல்லாததும் அனுபோகம் பண்ணவேண்டியது ஆருக்குங் கர்வமாகாது மூன்று நாள் தனியே நானும் என்பெண்சாதியும் அன்னபானாதிகளில்லாம லிருந்தபோது பட்டணத்து ஜனங்களை எங்களண்டைக்கு ஒருவரையும் வரவொட்டாமல் கட்டுப்படுத்தி வைத்தீரல்லவா எங்களுக்கு சனிபகவான் மாய்கையால் ஆபத்துவந்தால் நீரிப்படி பண்ணலாமா அவாளவாள் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி நடக்குமென்று நளமகாராசா இதமான வார்த்தைகளைச் சொல்லி அந்த புஷ்கரராசாவுக்குத்திவ்வியமான வஸ்திராபரணங்களும் வெகுமதி கொடுத்து அவன் பட்டணத்திற்கு அனுப்பிவைத்தார் அவனுஞ் செலவு பெற்றுக்கொண்டு தன் பட்டணம் போனான். பிற்பாடு நளமகாராசா தன் பட்டணமெல்லா மலங்கரிக்கச்சொல்லி குடிகளுக் காக்கியாபித்தார். அப்படியே அவர்கள் சமஸ்தமானதுகளும் நவரத்தின கசிதமான தேவேந்திரனுடைய அமராவதி பட்டணம்போலே எங்குஞ் சிங்காரஞ் செய்தார்கள். அதைப்பார்த்து நளமகாராசா ஆனந்தத்தோடு தமயந்தியையும் பிள்ளையையுங் கூட்டிக்கொண்டு நல்ல சுபமுகூர்த்தத்தில் அரண்மனைக்குள்ளே பிரவேசித்து அனேக பிராமணர்களுக்குத் திருப்தியடைய சுவர்னதானம் வஸ்திராபரணங்களுங்கொடுத்து போசனஞ்செய்வித்து வெகு சந்தோஷத்துடனே பட்டந்தரித்து இராச்சியத்தை ஆண்டுக் கொண்டிருந்தான். அப்போது மந்திரிபிரதானிகள் பந்து ஜன ஜனங்கள் மற்றுமுண்டான பேர்களுமாகக் கிலேசப்பட்டுச்சொல்லுகிறார்கள்,இராசபோகதேவேந்திராஜசுவாமி உம்மைக் காணாமல் சூரியனைக் காணாத தாமரைமலர் போல் எங்கள் சரீரம்வாடி மதிமயங்கிமனிதர்களுடைய

தாரதம்மிய மரியாதையில்லாத புஷ்கரராசாவைச் சேவித்து அவன்கையில் அநேகம் பாடுகள்பட்டோம், ஆகையால் எங்களை வுங்கள் கிருபையினாலே பாதுகாத்து இரட்சிக்கவேணு மென்று வெகுவாகப் பிரலாபித்துச் சொன்ன மந்திரி பிரதானிகள் மற்றுமுண்டான பேர்களெல்லாரையும் நளமகாராசா பார்த்து குஞ்சிரிப்புடனே சில வார்த்தை சொல்லுகிறார்.

ஓஓ மந்திரி பிரதானிகளே கேளுங்கள் அந்தநாளையிலே சனிபகவான் நம்மிடபேரிலே சினங்கொண்டு இப்படி வெகுமாய்கைகள் பண்ணினார். அதை நானே யறியாமற்போனேன் நாங்கள் பண்ணின கருமத்தை நாங்களே யனுபவித்தோம் நீங்கள் வீணாகக் கிலேசப்படுவானேன் அவரவர் பிரமதேவன் விதிப்படிக்கு அனுபவிக்க வேணுமே யல்லாமல் தப்பித்துக்கொள்ளக்கூடாதே நீங்களனைவரும் லோகநாதனாகிய ஸ்ரீமந் நாராயணமூர்த்தியை அல்லும்பகலும் வேண்டிக்கொண்டிருந்தபடியால் அந்த பகவான் எங்கள் பேரிலே தயவுவைத்துக் காப்பாற்றினாரதனால் நாங்களெப்போதும்போல் திரும்பவும் இராச்சியத்தைக் கெலித்துக் கொண்டு உங்கள் முகத்தைப்பார்த்தோம் இனிமேல் நீங்கள் எக்காரியத்திற்கும் பயப்படவேண்டாம் உம்முடைய காரியங்களில் அதிகசாக்கிரதையாக நடந்துகொள்ளுங்கள் போங்களென்று சொல்லி தாம்பூலங் கொடுத்து நளமகாராசா அவர்களை யாதரணை பண்ணினான். அந்தவேளையிலே அங்க-வங்க-கலிங்க-காஸ்மீர-காம்போஜ-மலையாள மகத-நேபாள-பப்பர-பாஞ்சால முதலான ஐம்பத்தைந்து தேசத்து ராசாக்களு மவரவர் ரதகஜதுரகபதாதிகளுடனேயும் பதினெட்டுவகை மேளவாத்தியங்களுடனேயும் காணிக்கையெடுப்பித்துக் கொண்டுவந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம்பண்ணி ராசகூட்டங்களெல்லாம் தாங்கள் கொண்டுவந்த காணிக்கைகளைச் செலுத்தி நிற்கிறபோது நளமகாராசா அவர்களைப்பார்த்து ஆதரணைபண்ணி ஓ ஓ இராசகூட்டங்களே நீங்கள் மகானுபாவர் உங்களை எத்தனை நாளைக்குப் பிற்பாடு காணக்கிடைத்தது நீங்கள் உட்காருங்களென்று சொல்லி நளமகாராசா அவர்களுக்குத் தக்கசிங்காதனம்



போட அவர்கள் வுட்கார்ந்துக்கொண்டு வெகுவாய்த் தோத்திரம்பண்ணினார்கள். அப்போதுபுட்கராசா இவனையுமிருக்கவொட்டாமல் துரத்திவிடவேணுமென்கிறதால் வெகு சந்தோஷமும் வந்து இத்தனைரோஷமுள்ளவர் தானே செய்தீர்களாவென்று தேவரீர் நினைக்கப் போகிறீர் உம்முடைய ஆக்கினைக்குப் பயந்திருந்தோமென்று சொன்ன வார்த்தைகளை நளமகாராசா கேட்டு சிரித்து இராசக்கூட்டங்களைப் பார்த்து ஒருவார்த்தை சொல்லுகிறார். ஓ இராசாக்களே அந்த புஷ்கரராசா நமக்குத் துரோகம் பண்ணினாரென்று அவரை நான் தண்டிப்பானேன் அவனவன்செய்த பாவ கருமங்களை அவனே யனுபவிக்க வேண்டாமோ அப்போது வஞ்சனைபண்ணின புஷ்காராசா இப்போதுவஞ்சனைப்பண்ணமாட்டுவானோ விதிவசத்தை யாரால் தள்ளக்கூடும் மகா யோகீஸ்வரர்களையும் விடாதென்று தாம்பட்ட பாடுகளையெல்லாஞ் சொல்லிக்கொண்டிருக்கச்சே அப்போது பௌஷியனென்கிற சாரதி அந்த நளபதியின் பாதத்தில் தொப்பென்று விழுந்து வெகுவாகப் பிரலாபித்துச் சொல்லுகிறான், ஓ சுவாமி! தேவரீரிடத்தில் ஊழியம்பண்ணிக் கொண்டிருக்கிறபோது பயபக்தியுடனே உங்களாக்கினைக்குட் பட்டிருந்தேன் என்னுடன் ஒருவார்த்தையாகிலும் சொல்லாவற் போனீர்களே உங்களுடைய பிள்ளைகளை அழைத்துக்கொண்டுபோய் விதர்ப்பபுரத்திலே விட்டுவந்து உங்களைத்தேடிக் காணாமலயோத்தியாபுரிக்குப் போயிருந்தேன் ரிதுபர்னமகாராசா உங்களுடைய விருத்தாந்தங்களை யெல்லா மறிப்து அவர்வெகுவாய் விசாரப்பட்டு பார்த்தையா பௌஷியனே நளமகாராசா நம்மைச் சேவித்துக்கொண்டிருந்தார் அது நாமறியாமற்போனோம் நீயும் சொல்லாமற் போனாய் அந்த நளபதியின் கையிலே நான் வெகு வேலைகள் செய்துகொண்டேனென்ற ராசாவிடத்திலே நான் சேர்ந்து தேவரீரெப்போது வெளிப்படுவீரோவென்று சொன்ன பௌஷியனைப்பார்த்து நளபதி குஞ்சிரிப்புகொண்டு சொல்லுகிறார், ஓ பௌஷியனே ஸ்ரீமகாவிஷ்ணுவினுடைய கிருபையினால் நவகண்டங்களுமாளும்படிக்கு எப்போதும்போலே நமக்குச்சித்தித்தது

நீ புண்ணியபுருஷன் உனக்கொரு தாட்சியும் வராதென்று பௌஷிகனைநோக்கி வந்த ராசாக்களுக் கெல்லாம் தனகனவஸ்து வாகனாதிகள் அபரிமிதமான வெகுமானங்கள் கொடுத்து சகல ராசாக்களையும் அவரவர் தேசங்களுக்கனுப்பிவிட்டு பெண்சாதிபிள்ளைகளுடன் கூடிச் சுகித்து யாகயெக்கிய ஓமங்கள் தருமங்களைச்செய்து தருமார்த்தமாக குடிகள் கையில் பத்திலொரு கடமை வாங்கிக்கொண்டு அவர்களுக்கு ஒரு சிந்தனையுமில்லாமல் இரட்சித்து மாதமும்மாரிபெய்யச் சகல தானியங்களையும் விளைவித்துத் தாய்தகப்பனைப்போல் அந்தப்பட்டணத்து செனங்களை யெல்லாம் போஷித்துக்கொண்டு மகாகீர்த்தி பிரதிஷ்டையுட னிராச்சிய பரிபாலனஞ் செய்துக் கொண்டிருந்தார்.

பிருகுதச்சமுனிவர் தருமராசருக்குத் தேறுதலைசொல்லி
தன திருப்பிடஞ் சேர்ந்தது.

கேட்டீரோ தர்மநந்தனரே நீரும் அந்த நளச்சக்கிரவர்த்தியைப்போல சகல தேவர்களும் ரிஷிகளுங் கொண்டாட தருமமார்க்கந் தப்பாமல் ஒரு சிந்தனையுமில்லாமல்சுகஜீவிகளாக இராச்சியபரிபாலனம்பண்ணிக்கொண்டு சுகமாக யிருக்கப்போகிறீர் இனி விசாரத்தைவிட்டு குரூரகர்னனை துரியோதனன் மாதா பிதா குரு பரட்டன் சிநேகிதர் பந்துக்கள் புத்திர பவுத்திரர்களுடனே கூடி யிறந்து போகக்கடவதென்று ஆசீர்வாதம் பண்ணி பிருகுதச்ச முனீஸ்வரர் தருமராசாவிடத்தில் விடைபெற்று மற்றுமுண்டான சீஷர்களுடனே கூடத் தமது ஆச்சிரமத்துக்கு யெழுந்தருளினார்.

நளச்சரித்திரங்கேட்ட மகிமையால் கலி நீங்கிப்
பஞ்சவர்கள் அரசாட்சிபெற்றது.

தருமராசாவும் வீமன் அருச்சுனன் நகுலன் சகாதேவன் திரௌபதை மற்றுமுண்டான பேர்களுடனே கூடப் பன்னிரண்டு வருஷம் வனவாசம்பண்ணி ஒரு வருஷம் அக்கியாதவாசம்பண்ணி துரியோதனன் பாதி ராச்சியங்கொடுக்க ஒப்பாமற்போனபடியினாலே கோபத்துடனே ஏழக்ரோணி சேனைகளைக் கூட்டிக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சகாயத்தினால் பதினொரு அக்ரோணிசேனைகளுடனே கூடியுத்தத்திற்குவந்த துரியோதனனை பதினெட்டு நாளைக்குள்ளே அவனுடைய புத்திர மித்திராதிகளுடனே மடித்து ஒரு சிந்தனையுமில்லாமல் நல்ல சுபமுகூர்த்தத்திலே அஸ்தினாபுரத்தில் பிரவேசித்து பட்டங்கட்டிக்கொண்டு அஸ்வமேத முதலான அனேக யாகங்களையுஞ்செய்து திரிலோக நாயகனைப் போல் ராச்சியபரிபாலனம் பண்ணிக்கொண்டிருந்தார். வைசம்பாயனர் ஜெனமேஜயனுக்குச் சொன்னபடியே சூதபுராணிகர் சவுனகாதிமகாரிஷிகளுக்குச் சொன்னார்.



இப்படியாக முனிசிகாமணியாகிய வேதவியாசரைத் தோத்திரஞ்செய்து வைசம்பாயனர் ஜெனமேஜெய மகாராசனுக்கு சொன்ன ஐந்தாம் வேதமாகிய பாரதக்கதையிலே சாரமா யிருக்கப்பட்ட நளச்சக்கிரவர்த்தி கதையைக் கீர்த்திச்சுவாமியான ஸ்ரீ ஹரிக்கு அனந்தமான தண்டஞ்செய்து சொல்லுகிறார். இந்தக்கதையை ஆசந்திரார்க்கமாகப் பூலோகத்திலே சகலரும் பூண்டுக் கொள்ளுகிற பூஷணங்களில் ஒரு பூஷணமாக நளபதக்கமென்று ஒப்பத்தக்கது. இந்த நளபதிகதை யார் படித்தாலும் யார் கேட்டாலும் யாரெழுதினாலும் யார் ஒருவருக்குச் சொன்னாலும் யாரொருவர் அந்த நளமகாராசாவை நினைத்தாலும் அவர்களை யிந்தப் பூமியிலே நவக்கிரகங்கள் குரூரஞ்செய்பார் கலிபுருஷனும் அணுகான் சகலமான தேவர்களுஞ் சந்தோஷப் படுவார்கள் சுபமுண்டாம்.

நளச்சக்கிரவர்த்தி கதை

...ற்று.

223241
D31,8 ... N26

திருமகள் ... பிரஸ், சென்னை:—1926.

# கண்ணுசாமியம்

என்னும்

## வைத்தியசேகரம்

[வாலேயந்திர படங்களுடன் விலை ரூபா 1—8—0.]

ஆயுள்வேத அபிவிருத்தியையும், ஜீவகாருண்ணியத்தையும் முன்னிட்டு வெளிப்பட்ட "சிகிச்சாரத்நதீபம்" என்னும் வைத்திய நூலின் ஆசிரியராகிய வைத்தியவித்வன்மணி கண்ணுசாமிப் பிள்ளையவர்கள் தமது பெயர் உலகில் எக்காலத்தும் நிலைபெறுமாறு பரமரகசியமாக தான் கையாண்டுவந்த பல அரியபெரிய பாகங்களையெல்லாம் சூர்ணம், மாத்திரை, லேகியம், எண்ணெய், தைலம்,கிருதம், பற்பம், செந்தூரம், ஆக்கிராணம் முதலியவைகளை அணிவகுத்து வெண்பா, விருத்தம், அகவல் முதலியவற்ரு லியற்றி ஆசிரியர் கருத்து வேறுபடாம லிருக்கும்பொருட்டு ஆங்காங்கு உரையுடன் கைபாகம், செய்பாகம், சித்திரவிளக்கம் முதலியவற்ருல் எளிதில் உணரும்படிஎழுதியுள்ளார். இத்தகைய நூல் ஒவ்வொரு வைத்தியர்களுக்கும் மிக்க உதவியாக இருக்கும் என்பது சத்தியம்.

## பெரிய வைத்திய சில்லரைக்கோர்வை

[விலை ரூபா 1 8 0 மேற்படி உயர்ந்த கிளேஸ் கடிதம் 2 8 0.]

இது பதினெட்டு சித்தர்களால் திருவாய்மலர்ந்தருளப்பெற்ற மானிடர் வாழ்க்கையின் மதிநூலாகும். மனிதருக்குற்ற பலவியாதிகளின்றும் நீங்கிசுகமடையுமாறு அம்மகான்கள் அருளிய சிகிச்சா முறைகளடங்கிய 120-கோர்வைகளையும் ஒன்ருகத்திரட்டியாவருக்கும் பயன்படும்படி அச்சிட்டு காலிகோ பைண்டு செய்திருக்கிறது.

அறுபத்துநான்கு படங்களடங்கிய

## தேவீ பராக்கிரமம்

கிரிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்
சங்காடு. இரத்தினவேலுமுதலியார் இயற்றியது.
விலை ரூபா 1—8—0.

சமஸ்தலோக காரண பூதையாய் ஐம்பெருந்தேவர்க்கு உற்பத்தி லயஸ்தானமாய் பிரம்மேந்திராதிகட்குஎய்து மிடுக்கணைகளைத்தும் அவரவர் இஷ்டசித்தியருளும் கருணாநிதியாய் விளங்கும் சர்வலோக மாதாவாகிய பராசக்தியின் லீலாவிபூதிகள் தேவீபராக்கிரம மெனப்படும். இந்நூலைத் தமிழில் தெள்ளியநடையில் இயற்றி அவ்வற்புதங்களை நேரிற்கண்டாற்போல விளக்கத்தக்க அறுபத்துநான்கு திருவுருவப் படங்கள் அமைத்து முக்யமான இடங்களில் வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய வடநூல் மேற்கோளுந் தமிழ்நூல் மேற்கோளுங்காட்டி இருக்கின்றனை. இதை வாசிப்பதனுல் தேவியின் பிரபாவத்தை உணருமாறு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டியிருக்கின்றபடியால் ஸ்திரீ, புருஷர்கள் யாவரும் வாசித்தல்நன்று.

**B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்,**
புஸ்தக வியாபாரிகள், ஜார்ஜ் டவுன், சென்னை.